# பாரதியின் நைட்டிங்கேல்



சுபா

# பாரதியின் நைட்டிங்கேல்

## 1

அன்றைக்குக் காலை கண் விழித்த வினாடியில் இருந்து பாரதியை அந்த எண்ணம் விரட்டிக் கொண்டிருந்தது. பேசாமல் தற்கொலை செய்துகொள். நிரம்பி வழிந்த பஸ்ஸில் பயணம் செய்யும்போது குதித்து விடலாமா என்று யோசித்தாள்.

செயல்படுத்தவில்லை.

பஸ்ஸில் இருந்து முண்டியடித்த கூட்டத்தைப் பிளந்து கொண்டு இறங்கினாள். பிளாட்ஃபாரத்தில் ஏறினாள். திரும்பி நின்று பஸ்ஸை வெறித்துப் பார்த்தாள்.

தில்லிப் பேருந்துகள் ரொம்ப மோசம்.

இடத்தை விட்டு அசையாத கண்டக்டர்கள். விசில் கேட்கும் முன்பே, படிக்குக் கீழே பத்துப் பேர் இருப்பதை ரியர் வ்யூ கண்ணாடியில் பார்த்தும் கூட சர்ரென்று பஸ்ஸைக் கிளப்பிவிடும் டிரைவர்கள்.

சுட்டுப் பொசுக்க வேண்டும் இவர்களை.

உன் கோபம் என்னை என்ன செய்ய முடியும் என்று புகையை முகத்தில் கக்கி விட்டுப் பஸ் புறப்பட்டுப் போனது.

பாரதி மெல்ல நடந்தாள். ஒரு மருந்துக் கடை கண்ணில் பட்டது. உள்ளே நுழைந்து பேகான் ஸ்ப்ரே வாங்கி சீல் உடைத்து கடகடவென்று வாயில் சரித்துக் கொள்ளலாமா என்று நினைத்தாள்.

'அவசரப்படாதே' என்று உள் மனம் எச்சரிக்கை செய்தது.

சாலையில் அலங்கோலமாய் விழ நேரிட்டு, பத்திரிகைக் காரர்கள் அதைப் படம் எடுத்து, அந்தப் படம் நியூஸ் பிரிண்டு களில் மறுபடி, மறுபடி, மறுபடி, மறுபடி பதிந்து அச்சாகி, 'தில்லிச் சாலையில், இளம் பெண் மரணம்' என்று தில்லி முழுக்க வினியோகம் ஆகும். வேண்டாம் அவசரப்படாதே பாரதி. நீ புதுமைப் பெண் அல்லவா? புதுமையான முறை யில்தான் உன் மரணம் நிகழ வேண்டும்.

இன்னொரு பேருந்து சாலையில் கடந்தது. வழிய, வழிய, தொங்கத் தொங்க மக்கள். உள்ளே ரொட்டித் துண்டுகளுக்கு நடுவே நசுக்கப்பட்ட பாலாடைக் கட்டி போல் ஆண்களுக்கு நடுவே நசுங்கிய சூரிதார் பெண்கள்.

அந்தப் பெண்களை ஆண்கள் இடுப்பில் கிள்ளுவார்கள். அப்படியே மேலே அழுந்துவார்கள். ஆண்களுக்கு அதைத் தவிர, வேறு எதிலும் ஆர்வமே இல்லையா? ஓவியம், எழுத்து, ஆபீஸ் வேலை, அக்கா - தங்கை கல்யாணம், அம்மாவுக்கு மருந்து என்று எவ்வளவு கடமைகள் இருக்கும்.



அத்தனையும் பஸ்ஸில் ஏறியவுடன் மறந்து போகுமா? அல்லது குடி போதையில் பிரச்னைகளைத் தள்ளி வைக்கிற மாதிரி பஸ்ஸில் ஏறியவுடன் சொந்தப் பிரச்னைகளை மறக்க இந்த மாதிரியான சில்லறை விஷயங்களில் கவனம் பதிக் கிறார்களா?

பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த நாட்களில் சீனுகூட அப்படித்தான் நடந்து கொண்டிருப்பானோ? சேச்சே! சீனு அப்படியெல்லாம் இல்லை. சீனுவிற்கு அப்படிப்பட்ட அசிங்கங்கள் எதுவும் கிடையாது.

பாரதி பஸ்ஸில் ஏறி வெகு நாட்கள் ஆகிவிட்டன. ஸ்கூட்டர்தான். முன்னால் உட்கார்ந்திருக்கும் சீனுவின் தோளில் ஒரு கையும், இடுப்பில் ஒரு கையுமாய் இழைந்து கொண்டு, அவனிடமிருந்து வீசும் மெலிதான ஷேவிங் லோஷன் வாசனையை நுரையீரல்களில் நிரப்பிக் கொண்டு, அவன் காதருகே கிசுகிசுப்பாய் பேசிக் கொண்டு போய்த் தான் பழக்கம்.

இப்போது அவன் இல்லை.

இனிமேல் எப்போதும் அவன் கிடையாது.

அவன் நினைவே வரக்கூடாது என்பதற்காகத்தானே கனாட் ப்ளேஸிலேயே இறங்கிக் கொண்டாள். அவன் நினைவு அவளை கயிற்று முனையில் கட்டி ஊசலாட்டக் கூடாது என்பதற்காகத்தானே இன்றைக்கு ஆபீஸ் போனாள்.

திரையை ஊடுருவும் சூரிய வெளிச்சம் போல, அத்தனை முன்னேற்பாடுகளையும் தகர்த்துக் கொண்டு அவனுடைய சிரித்த முகம்.

லேசாகக் குளிரியது. தில்லியில் குளிர் என்பது சீனுவின் அன்பைப் போல். தில்லிக் குளிரும் உடலை விறைக்கச்

செய்யும். அளவு இருக்கும். அவனுடைய அன்பும் மூச்சைத் திணற வைக்கும் அளவு வெள்ளமாய்ப் பொழியும்.

ஐயோ, ஐயோ. எதற்கு மறுபடி மறுபடி சீனு, சீனு, சீனு என்று நிற்கும்போதும், உட்காரும்போதும், படுக்கும்போதும், உண்ணும்போதும், குளிக்கும்போதும் தவம் செய்கிறேன்.

வேண்டாம். சீனு இல்லை. எவ்வளவு உருகினாலும், எவ்வளவு நினைத்தாலும், எவ்வளவு கடுமையாகத் தவம் புரிந்தாலும் இனி சீனு இல்லை. அவன் விலகி விட்டான்.

பாரதி சீனுவை விலக்க சூழ்நிலையில் கவனம் செலுத்தினாள்.

மூலைக்கு மூலை சிவப்பு, அம்பர், பச்சை என்று சிக்னல் மாறி, மாறி கண்ணாமூச்சி ஆடியது.

வயது வித்தியாசம், ஆண் - பெண் வித்தியாசம் இல்லாமல் மக்கள் மோதிக் கொண்டு, உரசிக் கொண்டு, பாய்ந்து கொண்டு இருந்தார்கள்.

நடந்தாள். அவள் கையைப் பிடித்து இடித்து விடுகிற மாதிரி கோட் போட்ட ஒருவன் எதிர்ப்பட்டு அவள் வழியை மறித்தான். தில்லியில் பிச்சைக்காரர்கள் கூட கோட் போடுவார்கள்.

“ஆக்ரா மே தாஜ்மஹால் தேகியே. மதுரா மே தர்ஷன் கிஜியே... பக்வான் ஸ்ரீக்ருஷ்ண கோ... ஸிர்ஃப் தீன்ஸோ ருப்யா... ஏக் ஹீ தின் மே” என்றான்.

பாரதி விலகிக் கொண்டாள். முன்பாக இருந்திருந்தால் சீனுவின் கையைப் பிடித்து நிறுத்தியிருப்பாள்.

“போகலாமா?” என்று கண்ணாலேயே கேட்டிருப்பாள்.

“எத்தனை முறை பார்த்தும் அலுக்காத அந்தக் காவிய நினைவுச் சின்னத்தை மறுபடியும் ஒரு தடவை முழுநிலவின்



வெளிச்சப் பரப்பு வெளிச்சத்தில் பார்க்கிற மாதிரி புறப்பட்டிருப்பார்கள்.

இப்போது முடியாது.

பாரதியின் முகத்தைப் பார்த்து, இவள் ஒத்து வரமாட்டாள் என்று கேட்டவனுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அடுத்த ஆளைத் தேடிப் பாய்ந்தான்.

பாரதி நடந்தாள்.

எதிரில் பதினைந்து ஏக்கரா பரப்பிற்கு வட்டமாய்ப் புல்வெளி அங்கங்கே அதன் நரம்பு மண்டலம் பொத்துக் கொண்டு தண்ணீர் ஊற்றுகள்.

செயற்கையான உந்துதலில் வானை நோக்கி பீய்ச்சியடிக்கப்பட்டு உண்மையைத் தேடி பூமிக்கே திரும்பும் தண்ணீர்க் கயிறுகள், வர்ண விளக்குகளில் அவற்றின் நாட்டியம்.

எல்லாம் மாயம்.

திடீரென்று கரைந்து விட்ட சீனுவைப் போல.

சீனு... இப்படி செய்யலாமா சீனு?

என்னை மட்டும் இப்படித் தவிக்கவிட்டுப் போகலாமா சீனு?

அதெப்படி சீனு? அவ்வளவு நன்றாக ஸ்கூட்டர் ஓட்டுவீர்களே. அன்றைக்கு மட்டும் எப்படி அந்த ராட்சஸ பஸ்ஸில் வலுவில் போய் மாட்டினீர்கள்?

பின்னால் நானும்தான் உட்கார்ந்திருந்தேன். என்னைப் பத்திரமான இடத்திற்குத் தூக்கியடித்து விட்டு அந்தக் கடவுள் உங்களை மட்டும் ஏன் அப்படி பலிவாங்க வேண்டும்?

நினைப்பே அவள் உடம்பை நடுங்க வைத்தது.

எத்தனை ரத்தம்!

அந்தக் கடைசி கணங்களில் கால்களை மட்டும் இரண்டு முறை உதைத்துவிட்டு ஓய்ந்து போனானே - எப்படி இருந்திருக்கும் அவனுக்கு அந்த வினாடியில்.

அவனுடைய முகத்தில் அவளிடம் ஏதோ சொல்லத் துடித்து இயலாமல் போன வேதனை இருந்ததே. என்ன சொல்ல ஆசைப்பட்டிருப்பான்?

நீயும் என்னோடு வந்துவிடு என்றா?

தன்னிச்சையாய் பாரதியின் கண்களில் கண்ணீர் மொட்டுக்கள்.

புல்வெளியில் உட்கார்ந்திருந்த மக்களைப் பார்த்தாள்.

வேஷ்டி, ஜிப்பா, பான்ட், சட்டைகள். மூடிய தலைப்புகள். முன் வகிட்டு குங்குமங்கள். சூரிதார்கள். சல்வார்கள். அரை டிராயர்கள்.

வாய் நிறைய பாப்கார்னும் சிரிப்புமாய்ப் பொங்கிக் கொண்டு...

அந்த மக்களைப் பார்க்கும்போது, அவர்களின் மகிழ்வைக் கவனிக்கும்போது பொறாமையாய் இருந்தது.

எதற்காக இந்த ஆரவாரம்? எதற்காக இந்த மகிழ்ச்சி? நீங்களும் ஒரு நாள் என்னைப் போல் துக்கப்படத் தான் போகிறீர்கள் என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

சே, நேரே வீட்டுக்குப் போயிருக்க வேண்டும்.

ஆஃபீசிலும் அவளை யாரும் விட்டு வைக்கவில்லை.

ரூமுக்குப் போவதற்குள் மிஸஸ் மீராபாய் பார்த்து விட்டாள். கலகலவென்று யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவள், சட்டென்று அடங்கிப் போய் இவளைப் பார்த்து நடந்து வந்தாள்.



''இன்னைக்கு வேலைல ஜாய்ன் பண்றியா பாரதி?''

வெறுமையாய் தலையை மட்டும் ஆட்டினாள் பாரதி.

''ஐ'ம் வெரி சாரி பாரதி. ஆண்டவனுக்கு கருணையே இல்லை. உனக்கு என்ன இருபத்தெட்டு வயசிருக்குமா? ஆஃப்டர் ஆல் ட்வெண்ட்டி எய்ட்... அதற்குள் இப்படி ஆக வேண்டுமா?''

''ப்ளீஸ் லீவ் மீ'' என்றாள் பாரதி. சடாரென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு அறைக்கு நடந்தாள்.

அறை வாசலில் போர்டு தொங்கியது.

'மிஸஸ் பாரதி ஸ்ரீனிவாசன். ப்ரோக்ராம் எக்ஸிக்யூடிவ்.'

பாரதி ஸ்ரீனிவாசன்... பாரதி ஸ்ரீனிவாசன்... பாரதி ஸ்ரீனிவாசன்.

ஸ்ரீனிவாசன் விடாமல் துரத்திக் கொண்டேயிருந்தான்.

அறைக்குப் போன பிறகும் ஹரிஹரன், ராமகிருஷ்ணன், சதுர்வேதி என்று ஒவ்வொருத்தராய் வந்து அவளைப் பார்த்துவிட்டு, ஒவ்வொரு தடவையும் வருந்திவிட்டு, மறுபடியும் மறுபடியும் மறுபடியும் ஸ்ரீனிவாசனை கூப்பிட்டு அவள் முன் நிறுத்தி விட்டுப் போனார்கள்.

இதோ இந்த நிமிஷம் கூட எதிரில் ஒவ்வொரு அசைவும் ஏதோ ஒரு கோணத்தில் ஸ்ரீனிவாசனை வலுக்கட்டாயமாய் அவள் நினைவுக்குக் கொண்டு வர...

பாரதியின் கால்கள் தானாக கஸ்தூரிபா மார்கில் அடி மேல் அடியாக எடுத்து வைத்து வந்திருந்தது.

நாயர் மெஸ்ஸிலிருந்து நட்ராஜ் எட்டிப் பார்த்தான். சிரித்தான். ஞாயிறுக்கு ஞாயிறு சீனுவுடன் போய்ப் பழக்கம். இரண்டு மூன்று வாரமாய்க் காணோமே என்று சிரிக்கிறான் போலும். பதிலுக்கு சிரிக்கத் தோன்றவில்லை.

சிரித்தால் கண்ணில் நீர்தான் முதலில் வரும்.

விடு விடுவென்று நடந்தாள்.

பிரும்மாண்ட அபார்ட்மெண்ட்ஸ் கட்டிடங்கள் எதிர்ப் பட்டன. 'ஏ' ப்ளாக்கை நெருங்கினாள். தொம்மென்று மார் பில் வந்து மோதிய பந்தை சிரிப்பில்லாமல், விளையாடிக் கொண்டிருந்த குழந்தையிடம் திருப்பினாள்.

நல்லவேளை, லிஃப்ட் கீழேயே இருந்தது. யாரும் வரு வதற்குள் போய்விட வேண்டும். பரபரவென்று நுழைந்து பட்டனைத் தட்டி ஆணையிட்டாள்.

மேலே லிஃப்ட் நின்று வெளியேறுகையில், மிஸஸ் பல்பீர்சிங் எதிரே வந்தாள். பாரதியைப் பார்த்ததும் அவள் முகத்தில் ஒரு மேகம் கவிந்தது.

''பஹன்'' என்றாள் நா தழுதழுக்க. பாரதி ஆதரவாய் அவள் கையைப் பற்றிக் கொள்ள, மிஸஸ் பல்பீர்சிங் விம்மத் தொடங்கினாள். எந்த ஜாதி, எந்த மதம் என்றால் என்ன? மனிதர்கள், அவர்களின் உணர்வுகள். பாரதி மெல்ல கையை விடுவித்துக் கொண்டாள். தன் அப்பார்ட் மெண்ட்டை நோக்கி நடந்தாள்.

ஹால் வெறுமையாய் இருந்தது.

நாற்காலி. சோஃபா, மோடா என்று வெறும் ஜடப் பொருட் கள். கதவைத் திறந்த அம்மா கூட உடனே உள்ளே போய் விட்டாள்.

பாரதி கைப்பையை மேஜை மீது விட்டெறிந்தாள். பாத்ரூமில் நுழைந்து குளிர்நீரை முகத்தில் அடித்துக் கொண் டாள்.

படுக்கையறையில் நுழைந்தாள்.

கட்டிலில் அருண் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். சீனுவின் தம்பி கையில் ஏதோ புத்தகம். ஸிட்னி ஷெல்டனாயிருக்கும்.



இல்லையென்றால் ஜெஃப்ரி ஆர்ச்சர். எத்தனை நாளைக்குத் தான் அவனும் துக்கத்தை பூசிக் கொண்டு, இயல்பிலிருந்து மாறுபட்டு மரத்துப் போன முகத்தோடு உட்கார்ந்திருக்க முடியும்?

சீனு செத்துப் போனது அருணுக்கும், பலமான அடிதான். பட்டவுடன் அதீதமாய் வலித்தாலும், காலப்போக்கில் ஆறி, மறந்து விடக்கூடிய ஒரு வலி.

பாரதியைப் போல் அவனுக்கு ஊமைக் காயமில்லை. உள்ளிருந்து கொண்டு குடைந்து குடைந்து வேதனையளிக் கும் வலி இல்லை.

''இப்பத்தான் வரீங்களாண்ணி?''

புத்தகத்தை மடியில் கவிழ்த்துக் கொண்டு கேட்டான்.

''ஆமாம்'' என்றாள், டவலால் முகத்து ஈரத்தை ஒத்திக் கொண்டே...

''ஆபீஸ்ல ரொம்ப டைட் வேலையா?''

''அதெல்லாம் இல்லப்பா.''

''உங்களைப் பாத்தா ரொம்ப டயர்டா இருக்கு?''

அதற்கு பாரதி பதில் சொல்லவேயில்லை.

அம்மா அறைக்குள் நுழைந்தாள்.

''சாப்பிடறியா பாரதி.''

''வேண்டாம்மா...!'' என்றாள். ''காலைல சாப்ட்டது தானே?'' என்றாள் அம்மா விடாமல்.

''வேண்டாம்னா விட்டுட்டேம்மா. மனசு சரியில்லே...''

''ஆபீஸ்ல யாராவது எக்குத் தப்பா பேசினாங்களா அண்ணி?''

''ஐயோ... என்னைக் கொஞ்ச நேரம் சும்மா விடுங்களேன்.''

"கொஞ்சம் காப்பியாவது சாப்பிடறியா?"

"ம்." என்றாள்.

அம்மா கொடுத்ததை மௌனமாய் வாங்கிக் கொண்டாள். மடக் மடக் என்று தொண்டையில் சரித்துக் கொண்டாள்.

அந்தச் சூழ்நிலையில் அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. இறுக்கமாய் இருந்தது. வெளிக் குளிரே பரவாயில்லை போலிருந்தது.

"நான் கொஞ்ச நேரம் மேலே போய்ட்டு வரேன்" பொதுப் படையில் சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து படியேறினாள்.

மொட்டை மாடி வான்வெளியாய்ப் பரந்திருந்தது. தரை சில்லென்று இருக்க, படுத்து ஆகாயத்தை வெறித்தாள்.

மின்னியும், மின்னாமலும் ஏராள நட்சத்திரங்கள், நடுவில் ராஜா மாதிரி நிலா ஓடிக் கொண்டேயிருந்தது. பஞ்சு பஞ்சாய் பொதி மேகங்கள். ஓடும் நிலாவுக்கு சாமரம் வீசிக் கொண்டே பின் வாங்கின.

சீனு இருந்தால் இன்னும் என்னென்னவோ கற்பனை செய்திருப்பான். அந்த நட்சத்திரத்தையெல்லாம் சேர்த்துப் பாரு, யானை மாதிரி தெரியலை? இந்த பக்கம் பாரு ஒரு வேட்டைக்காரன் மாதிரி தோணலை?"

பாரதிக்கு சீனுவின் கை அவள் இடுப்பில் புரண்டிருப்பது மட்டும்தான் அப்போது தெரியும். வேறொன்றும் தெரியாது.

இப்போது நட்சத்திரங்களை சேர்த்துப் பார்த்தால் சீனுவே ஸ்கூட்டரில் ஆரோகணித்திருப்பது போல் தோன்றிற்று. 'பாரதி, பாரதி' என்று அவன் கூப்பிடுவது போலிருந்தது. பாரதி இங்கே பாரேன். இந்தப் பரந்த ஆகாயத்தில் நான் மட்டும் தனியே இருக்கிறேனே... நீயும் வாயேன்.'

பாரதி விருட்டென்று எழுந்தாள்.



'வருகிறேன் சீனு' என்றாள் நட்சத்திரங்களைப் பார்த்து.

காலையிலிருந்து விரட்டிக் கொண்டிருந்த தற்கொலை எண்ணம் உச்சத்துக்குப் போக, மொட்டை மாடியின் விளிம் போடு ஒட்டியிருந்த பாதுகாப்பு சுவரை நெருங்கினாள்.

ஒரு காலை எடுத்து சுவருக்கு அந்தப் பக்கம் போட்டாள்.

தொண்ணூறு அடிகளுக்குக் கீழே பூமி பசியுடன் அவளை 'வா' என்று கூப்பிட்டது.

## 2

பாரதி அடுத்த காலையும் எடுத்து மொட்டை மாடி சுவரின் மீது வைத்த நேரம், பின்னாலிருந்து குரல் வந்தது.

"அம்மா."

திடுக்கிட்டுப் போனாள் பாரதி.

"அம்மா" மறுபடியும் குரல் வந்தது. இந்த முறை குரல் கொஞ்சம் பக்கத்தில் கேட்டது.

பாரதி அவசரமாய் வெளியே போட்ட கால்களை உள் ளுக்கு இழுத்துக் கொண்டாள். அரையிருட்டில் பானு நின் றிருந்தது தெரிந்தது.

இவளை எப்படி மறந்தேன்? பாரதி வெட்கப்பட்டாள். வேதனைப்பட்டாள்.

மூன்று வயது பானு. அப்படியே சீனுவின் சின்னப் பதிப்பு. அந்தப் பரந்த நெற்றி. புருவங்களுக்கு மத்தியில் கொஞ்சம்

போல பள்ளம் விழுந்து அப்புறம் தீர்க்கமாய் எழுந்த மூக்கு. சின்னச் சிவப்பான உதடுகள். அடி உதட்டுக்குக் கீழே மோவாயில் இருந்த சின்னக்குழி... அப்படியே சீனுதான்.

"ஏம்மா நீ இங்கே வந்தே? உனக்குக் குளிரலை?"

பாரதிக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. பானுவை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். தலையை மெல்லக் கோதி விட்டாள்.

"அம்மா, எனக்கொரு கதை சொல்லும்மா. பாட்டி கிட்டே கேட்டேன். மாடிக்குப் போ, அம்மாகிட்ட கேளுன்னு சொல் லிட்டாங்க..." என்றது விலகிக் கொண்டு.

அம்மா கதை சொல்வாள் என்ற எதிர்பார்ப்பு அந்தச் சின்னக் கண்களில் மின்னியது.

"இங்கே வா" பாரதி அவளை அருகே அழைத்தாள். இழுத்து மடியில் இருத்திக் கொண்டாள். அதன் பிஞ்சுக் கன்னத்தில் தன் இதழ்களை மெல்லப் பதித்தாள். லேசாய் பவுடர் வாசம் வந்தது. கொஞ்சமாய் மிளகு ரச வாசம். குண்டுக் கண்களைச் சுற்றி மையின் பளபள. நெற்றியில் சின்ன செஞ்சாந்துப் பொட்டு. தோள் வரை ஊசலாடும் இரட்டைப் பின்னல்கள்.

"அப்பா சாமிகிட்டே போனாருன்னு சொன்னியே. எப்போ வருவாரும்மா?"

என்ன பதில் சொல்வது? மீளாத மரணத்தைப் பற்றி இந்தச் சிறிசுக்கு என்ன விளக்கம் கொடுப்பது?

"வந்துடுவாருடா."

"போம்மா... நீ தெனம் இதையே சொல்றே. பாட்டி கிட்டே கேட்டா பாப்பா மாதிரி அழுவறாங்க... அப்பா எனக்கு என் னம்மா வாங்கிட்டு வருவாரு?"



"மூவிங் ட்ரெயின் ஃப்ளையிங் ராக்கெட்..."

"ராவ் மாமா வீட்டுல இருக்கே, அந்த மாதிரியா?"

"ஆமாம்... நீ அம்மாவுக்கு ரைம்ஸ் சொல்லிக் காட்டலியே இன்னிக்கு?"

"எனக்குத் தூக்கம் வருது... மூவ்மெண்ட்ஸ் இல்லாம சொல்லட்டா?"

"சரி... சொல்லு."

பானு எழுந்து நின்று கொண்டாள். சின்னச் சின்ன கை கால்களை அசைத்து ஆரம்பித்து, சோர்ந்து உட்கார்ந்து கொண்டு மீதியைச் சொன்னாள்.

"பாபா ப்ளாக்ஷீப் ஹேவ் யூ எனி வுல்.

யெஸ் ஸார் யெஸ் ஸார்."

இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்குத்தான் இதே வரிகளைத் திணித்துத் திணித்து குழந்தைகளை மெஷின் களாக்கப் போகிறார்கள்? கேட்டால் ஹிந்தியில் நாலு வரி பாடும். தமிழ், வீட்டு மழலையோடு சரி. வகுப்பில் கிடை யாது. இதற்கு சுந்தரத் தமிழ் தெரிய வேண்டாமா? சீனுவைப் போல் நினைத்த மாத்திரத்தில் கவிதை புனைய கைவர வேண்டாமா?

பானு ரைம்ஸ் முடித்த நேரத்தில் கதை கேட்காமலேயே அம்மாவின் மடியில் தூங்கிப் போய் விட்டாள். பாரதிக்கு பானுவைப் பார்க்கும்போது பாவமாய் இருந்தது. நாளைக்கு யாராவது 'அப்பா எங்கே?' என்று கேட்டால் 'சாமிகிட்டே' என்று சொல்லும். இன்னும் எத்தனை நாளைக்கு?

கொஞ்சம் விஷயம் புரிய ஆரம்பித்தால் மனசு என்ன பாடு படும்? முகத்தை நினைவில் வைத்துக்கொள்ள முடியாத வயதில், மசமசவென்று ஏதோ ஒரு நினைவாய்ப் பதிந்து விட்ட அப்பாவை எப்படி எண்ணிப் பார்க்கப் போகிறாள்?

சீனுவின் நண்பர்களும், அலுவலகத் தோழர்களும் இந்த குழந்தையைப் பார்க்கும் போதெல்லாம் 'த்சு, த்சு' என்று பரிதாபம் காட்டிக் கொண்டிருந்தால்... ஆரம்பத்திலிருந்தே பானுவிற்கு அநாதையாகி விட்ட உணர்வு வரக்கூடும்.

அந்த ஒரு அவலம் பானுவிற்கு நிகழ்ந்து விடக்கூடாது.

பாரதி தூங்கும் குழந்தையை சுமந்து கொண்டு தன் போர்ஷனுக்குத் திரும்புவதற்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டாள்.

வீட்டில் அவளுக்காக விளக்குகள் எரிந்து கொண் டிருந்தன.

எல்லோரும் காத்திருந்தார்கள்.

எல்லோரும் என்றால் மாமியார், அவளை ஒட்டி மாமனார். கதைப் புத்தகத்தை இன்னும் பிரியாத மச்சினன் அருண், பாரதியின் அம்மா, அப்பா.

''நீங்கள்லாம் இன்னும் தூங்கலை?''

''பேச வேண்டிய விஷயம் முக்கியமா இருக்கறப்போ தூக்கம் எப்படி வரும் பாரதி?'' என்றாள் மாமியார், சோஃபா வின் ஒயர்ப் பின்னல்களை நீவிக் கொண்டே.

பாரதி புருவங்களை உயர்த்தி ஆச்சரியம் காண்பித்தாள். ''பேசணுமா?''

''என்ன பாரதி நீ, நாளன்னைக்கு நாங்க ஊருக்குத் திரும்பலாம்னு இருக்கோம்னு சொல்லலை?'' இந்த முறை மாமனார். நிரந்தர வெற்றிலைக் காவிப் பற்கள். சற்று நீண்டு விட்ட முன் முகவாய்.

''டிக்கட்லாம் அருணை விட்டு ஏற்பாடு பண்ணிடலாம்னு சொன்னீங்களே?'' என்றாள் பாரதி.



''ஒண்ணரை டிக்கெட் எக்ஸ்ட்ராவா வாங்கலாம்னு ஆசைப்படறாங்க எங்கம்மா'' என்றான் அருண். ''நீங்களும், பானுவும் எங்க கூட வரீங்க...''

''ஆமா பாரதி'' என்று விட்ட இடத்தில் பிடித்துக் கொண் டாள் மாமியார்.

''ஏன் தயங்கறே...? தெனம் பஸ்ஸைப் பிடிச்சு ஆயிரம் தடியன்களோட போராடிக்கிட்டு நின்னு ஆபீஸ் போற வேலைல்லாம் இனிமே வேண்டாம். எங்களோட கிளம்பி கிராமத்துக்கு வந்துடு... வீட்டுக்குப் பின்னாலேயே ஜம்னு காவிரி ஓடுது... அந்தத் தண்ணில போய் விழுந்தா போதும், நம்ம துக்கம் அத்தனையும் கரைஞ்சு போயிடும். என்ன சொல்றே?''

''காவிரித் தண்ணிலேர்ந்து கரையேறரப்ப அத்தனைக் கவலையும் மறுபடியும் வந்து முதலை மாதிரி பிடிச்சிருமே அத்தை.''

''என்ன ஆய்டிச்சுன்னு இப்படிச் சலிச்சுக்கறே நீ? நாங்க இல்லை, ராஜா மாதிரி இருந்தவனை. எமனுக்கு தாரை வார்த்துக் கொடுத்திட்டு?''

''ஆடுதுறை எனக்கு சரிப்பட்டு வராதுன்னு தோணுது... பானு இருக்கா. எங்கம்மா இருக்காங்க... அப்பாவுக்கு வேற பார்வை கொறைஞ்சிக்கிட்டே வருது...''

''பைத்தியம், அவங்களைல்லாம் அநாதரவா விட்டுட்டு நீ மட்டும் வான்னா சொன்னோம்? அவங்களும் கடைசி காலத்தில் நிம்மதியா கூட வந்து இருக்கட்டுமே...''

''எனக்கென்னவோ சரின்னு சொல்லத் தோணலை... சுயமா சம்பாதிச்சாதான் சங்கடமில்லாம செலவு செய்ய முடியும்... பானுவுக்கு என்னென்னவோ சொல்லித் தரணும்... சீனு ஆசைப்பட்டபடி அவளை பிள்ளைக்கு பிள்ளையாகவும்

வளர்க்கணும். பொண்ணுக்குப் பொண்ணாகவும் வளர்க்க ணும்னு ஆசைப்பட்டிட்டிருக்கேன்...''

''அண்ணி...''

''சொல்லு அருண்...''

''ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு பிடிவாதம் கூடாது... நான் ஒரு ஆம்பிளை இல்லே? உங்களையும், பானுவையும் உக்காத்தி வச்சு சோறு போட்டு ராணி மாதிரி வச்சுக்க மாட்டேன்?''

''நீ வந்து அடிக்கடி எங்களைப் பார்த்திட்டுப் போயேன் அருண்... திருச்சி எங்கே இருக்கு? ராத்திரி ரெயில்ல ஏறி கண்ணை மூடினா காலைல மெட்ராஸ்ல கொண்டு வந்து விட்டுடும்...''

''மெட்ராஸா? என்ன சொல்றே பாரதி நீ?'' என்றார் பாரதியின் அப்பா. பழுதான தன் கண்களை இன்னும் இடுக்கிக் கொண்டு.

''ஆமாப்பா... நான் டிரான்ஸ்ஃபருக்கு அப்ளை பண்ணப் போறேன்... பானு தமிழ்நாட்டுல வளர்ந்தாத்தான் சீனு வோட ஆசைங்கள்லாம் நிறைவேறும்.''

உடனே அங்கு ஒரு மௌனம் கவிந்தது.

அருண் புத்தகத்தை மூடிவிட்டு, ஓடும் நிலாவை வேடிக்கைப் பார்க்க, பால்கனிக்குப் போய் விட்டான். அம்மா புடவைத் தலைப்பால் கண்ணை ஒற்றிக் கொண்டு பாத்ரூம் பக்கம் நடந்தாள்.

பாரதி படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

கூப்பிட்டுப் பார்த்து சலித்துப் போன மாமியாரும் மாம னாரும் ஆடுதுறைக்கு மூட்டை கட்டி விட்டார்கள். அருண் திருச்சிக்குப் போய் விட்டான். வேலையில் சேர்ந்திருப்பான்.



பாரதிக்கு அவர்கள் வந்தது, இருந்தது பேசியது, போனது எல்லாமே ஒரு கனவாய் மனதில் பதியாமல் விலகி விட்டது.

யோசித்துப் பார்த்ததில் அவர்களோடு போகாமல் இருந் ததே புத்திசாலித்தனம் என்று தோன்றிற்று.

சின்ன ஊர். போகையில் வருகையில் ஊர்ப் பெண்கள் முகத்தில் எட்டு வண்டி அனுதாபத்தை தேக்கி வைத்து அவளைப் பார்ப்பார்கள். ஊர் விசேஷங்களுக்கு ஒதுக்கி வைத்து காயப்படுத்துவார்கள்.

அந்த மாதிரி பார்வைகளுக்கு நடுவில், அந்த மாதிரி பேச்சுக்களுக்கு நடுவில் அவளால் இருக்க முடியாது. தாங்காது.

அநாவசியமாய் யார் யாருக்காகவோ ஏன் என் இயல்பு களை மாற்றிக் கொள்ள வேண்டும்? பானு இருக்கிறாள். அம்மா இருக்கிறாள். அப்பா இருக்கிறார். அவர்களுக்காக அர்த்தத்துடன் வாழ்வதுதான் புத்திசாலித்தனம்.

அதற்கப்புறம் பாரதி பஸ்ஸை வெறுக்காமல் ஆபீஸுக்குப் போகப் பழகிக் கொண்டாள். மீராபாயுடன் சிரித்துப் பேசி னாள். அரட்டை அடித்துக் கொண்டே காண்டீனுக்குப் போய் சாப்பிட்டு விட்டு, ஜர்தா சேர்க்காமல் ஸ்வீட் பீடா போட்டுக் கொண்டாள்.

வீட்டுக்கு வந்ததும் ஆயாசம் தீரக் குளித்துவிட்டு பானு விளையாடுவதை ரசித்தாள். 'நேரமாச்சு, வாடா ஹோம் ஒர்க் செய்யலாம்' என்று. அதையும் இழுத்துக் கொண்டு உட்கார்ந்து ஏ, பி, ஸி, டி பழக்கினாள். குழந்தை மறந்து விடப் போகிறதே என்று தனியாய் தமிழும் சொல்லிக் கொடுத்தாள்.

அஜ்மல்கான் ரோடில் பானுவைக் கூட்டிக் கொண்டு மேலிருந்து கீழ் நடந்தாள். நடந்தபோது சீனு நினைவுக்கு வந்தான்.

போன வருஷத்து ஒரு கோடை நாளில் அவனோடு இதே அஜ்மல்கான் ரோடில் நடந்தபோது...

இருள் சாம்பலாய்ப் பூத்துக் கொண்டிருந்தது. அங்கங்கே விளக்குகள் தட்டி எழுப்பப்பட்ட நேரம்.

டில்லி வெயில் ஊமை வெயில். தாகம் ஆளை அடித்துப் போடுமே தவிர உடம்பில் ஒரு முத்து வியர்வைக் கூடக் கண்டதில்லை. ஆனால் அன்றைக்கு என்று வானில் ஏராள மேகங்கள் குவிந்திருக்க, உடம்பு முழுக்க வியர்வை ஊற்றுகள். சீனு வினோதமான காரியம் ஒன்று செய்தான்.

இன் பண்ணியிருந்த சட்டையை சட்டென்று உருவி வெளியே எடுத்தான். பட்டன்களை விலக்கினான். கழற்றி வெற்றுடம்போடு குறுக்கில் இரண்டாய் மடித்து தோளில் போட்டுக் கொண்டான்.

மார்பு ஏக்கராவாகப் பரந்திருக்க, டாலர் வைத்த தங்கச் செயின் மார்பின் கரேலென்ற முடிச் சுருள்களில் புரண்டது.

"இது என்ன வேஷம்?" என்று கேட்டாள் பாரதி.

"கொஞ்சம் ஃப்ரீயா இருக்கலாமேன்னுதான் பாரதி..." என்றான் ஸ்ரீனிவாசன்.

"ஃப்ரீயா இருக்கலாமேவா. ஃப்ரீயா காட்டலாமேவா...?"

"எப்படி வேணா வச்சுக்க... நான் இப்ப இந்த ரோடுல போற பொம்பிளைங்களை எப்படி வச்ச கண் வாங்காம பாக்கறேன். அதுங்களும் என்னைப் பார்த்திட்டுப் போகட்டுமே" என்று கண்டித்தான். பாரதி செல்லமாய் செலுத்திய குத்தை சிரித்துக் கொண்டே இடுப்பில் வாங்கிக் கொண்டான்.

பாரதியின் கையைக் கோர்த்துக் கொண்டு அவன் ஒட்டகம் போல் அன்று நடந்தபோது, அவளுக்குப் பெருமையாய் இருந்தது.



'இந்த ஆண்மகன் என்னுடையவன்...' என்று போகிற வருகிறவர்களைக் கூப்பிட்டு பீற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

அன்றைக்கு, அவன் கையைப் பற்றிக் கொண்டு நடந்த போது, சுதந்திரமாய் எந்தப் பொறுப்புமில்லாமல், சந்தோஷத் துள்ளலாய் நடந்தது எப்படி? இன்றைக்கு சகல பொறுப்பு களுடனும், தோளில் திமிறும் பாரங்களுடனும், அன்று தான் நடந்தது போல் நடக்கும் பானுவின் கையைப் பற்றிக் கொண்டு பத்திரமாய் நடப்பது எப்படி?

ஒற்றை ஆள் எல்லாவற்றையும் மாற்றி எழுதி விட்டான்.

பாரதி ஆபீஸ் போய் சேர்ந்ததும், மேஜை டெலிபோன் கூப்பிட்டது.

"குட்மார்னிங், எஸ்.டி.யின் பி.ஏ. பேசுகிறேன். உங்களைப் பார்க்க வேண்டுமாம்" என்றது மறுமுனைக் குரல்.

எஸ்.டி. - ஸ்டேஷன் டைரக்டர். எதற்காகக் கூப்பிட்டு விடுகிறார்?

முதல் நாள் ரெகார்டிங்கில் நடந்த தவறு அவர் வரை எட்டியிருக்குமா? பாரதி டாய்லெட் போனாள். கண்ணாடி யில் பார்த்து கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொண்டாள்.

ஸ்டேஷன் டைரக்டர் அறைக்குள் நுழைந்தாள். பதட்டமான 'குட்மார்னிங்' சொன்னாள்.

ஸ்டேஷன் டைரக்டர் கண்ணாடியை சரி செய்து கொண்டு நிமிர்ந்தார். ஆங்கிலத்தில் பேசினார்.

"மேடம், மேலிடத்திலிருந்து ஆர்டர்கள் வந்துவிட்டன. நாளையிலிருந்து நீங்கள் இங்கே வேலைக்கு வர வேண்டாம்."

# 3

"என்ன சார் சொல்கிறீர்கள்? பாரதி பதறினாள். "நான் வேலைக்கு வர வேண்டாமா?"

"ஆமாம்." என்றார் ஸ்டேஷன் டைரக்டர், சாவதானமாக. "நீங்கள் தானே மெட்ராஸிற்கு டிரான்ஸ்ஃபர் கேட்டிருந்தீர்கள்? உத்தரவு வந்துவிட்டது." தன் சஸ்பென்ஸை தானே ரசித்துச் சிரித்தார். "விஷ் யூ ஆல் தி பெஸ்ட்" என்றார்.

நூறாயிரம் பூக்கூடைகளைத் தலையில் கவிழ்த்தது போலிருந்தது பாரதிக்கு.

"எங்களையெல்லாம் மறந்துவிட மாட்டீர்களே?" என்று கேட்டாள் மிஸஸ் மீராபாய்.

புன்சிரிப்பாய் சிரித்துவிட்டு மௌனமானாள்.

வீட்டிற்குக் கொஞ்சம் இனிப்பு வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

'பானு, நாம சொந்த ஊருக்கே போறோம்டா கண்ணு' என்று முத்தமாரி பொழிய வேண்டும்.

அடுத்து வந்த நாட்கள் வெகு மும்முரமாய் இருந்தன. வேண்டாத சாமான்களை விலை பேசி தள்ளுவதிலும், அவசியமானதை அதிகம் சிதைக்காமல் பாக் செய்வதிலும் நேரம் போயிற்று.

புறப்படும் நாள்.

அம்மா பூஜையறையில் விளக்கேற்றிக் கொண்டிருந் தாள்.



பானு பாட்டியின் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். பாரதியும் பெட்டிக்குள் போகுமுன் கடைசி பூஜையை வாங்கிக் கொண்டிருந்த தெய்வப் படங்களைப் பார்த்து கும்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மா" என்று அழைத்தாள் பானு.

"என்னடா?"

"இப்படி உக்காரேன்."

"எதுக்கு?"

"உக்காரேன், சொல்றேன்."

பாரதி அந்த ஆணைக்கு பயந்தவள் போல் போலி மரியாதையுடன் தரையில் உட்கார்ந்தாள்.

"இந்தாம்மா."

பானு குங்குமச் சிமிழை நீட்டினாள்.

பாரதி திகைத்துப் போய் அம்மாவைப் பார்த்தாள். அம்மா கண் மூடி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தாள்.

"இது எதுக்கு பானு?"

"குங்குமம்மா... நெத்தியில வச்சுக்க... நீ டெய்லி மறந்து போயிடறே..."

"இப்ப வேண்டாம்டா கண்ணு..." பாரதி தயங்கினாள்.

"வச்சுக்கம்மா..." பானுவே கட்டை விரலை சிமிழில் நுழைத்து பாரதியின் நெற்றியில் வைத்து விட்டாள். "பாட்டி வச்சிக்கறாங்க. நான் பொட்டு வச்சுக்கலைன்னாலும் திட்ட றாங்க. நீ மட்டும் வச்சுக்காம இருக்கலாமா? ஆசை ஆசை."

"என்னடி இது?" என்று கண் விழித்து பாரதியின் அம்மா பதறினாள்.

"எதும்மா?" என்றாள் பாரதி.

''உனக்குப் புரியலையா? குழந்தைக்கு என்ன தெரியும்?''

''குழந்தைக்கு தெரியாதும்மா.... சுமங்கலின்னா என்ன, அது இல்லைன்னா என்னன்னு ,எதுவுமே தெரியாது... இப்பவே அதும் மனசில இந்த வக்கிரத்தையெல்லாம் ஏத்தணுமா? சீனு போகறதுக்கு முன்னால நான் வச்சுக்கிட்ட குங்குமம்தானே... இருந்திட்டுப் போகட்டும்...''

''அம்மா கண்ணாடி வேணுமா?'' பானு குறுக்கில் புகுந்தது.

''நீ பொட்டு சரியா வச்சிருக்க இல்லே?''

''ஓ.''

''அது போறும். கண்ணாடில நான் பாத்துக்க வேண்டாம்.''

குழந்தையையும் அள்ளிக் கொண்டு பாரதி எழுந்தாள்.

''அப்பா எங்கேம்மா?'' என்று அம்மாவிடம் பாரதி கேட்டாள்.

''டாக்ஸி எடுத்திட்டு வரப் போயிருக்கார் பாரதி...''

''என்னம்மா நீ... பார்வை சரியா இல்லைன்னு சொல் லிட்டிருந்தாரில்ல..... தனியா ஏம்மா அனுப்பிச்சே?''

''நான் எங்கே அனுப்பிச்சேன்? வீட்டுல இருக்கற ஒரே ஆம்பிளை அவர்தானே பாரதி?''

''இல்லம்மா...'' என்று நினைத்துக் கொண்டாள் பாரதி. 'என் பானுவை பெண் குழந்தையா மட்டும் நான் வாளர்க்கப் போறதில்ல... ஒரு பையனாகவும் தான் வளர்க்கப் போறேன்.'

வாசலில் வந்து டாக்ஸி ஹாரன் கொடுத்தது.

சென்னை பிடித்திருந்தது. ஊர் மட்டுமில்லை. டெலி போனிலும், நேரில் பார்க்கும் மனிதர்களிடமும் சரளமாய்ப் பேசும் தமிழ் பிடித்திருந்தது. ஆங்கிலமும், ஹிந்தியுமே பேசி மறந்திருந்த நாக்கில் இனிப்பு தடவியது போல் தமிழ்



அகலமாய்த் திறந்த ஜன்னல் வழியே சுதந்திரமாய் நுழையும் கடல் காற்று பிடித்திருந்தது. கண்களை சற்று நிமிர்த்திப் பார்த்தால், 'முயற்சி செய், முயற்சி செய்' என்று சதா கரை யோரம் வந்து மந்திரம் சொல்லும் நீல அலைகள் தெரிந்தது. வெயிலின் பளபளப்பில் தேய்த்து வைத்த பாத்திரம் போல் மினுமினுக்கும் மணல் பரப்பு கவர்ச்சியாய் இருந்தது.

டெலிபோன் விடாமல் அடிக்க, எடுத்து காதில் பொருத்திக் கொண்டாள்.

''மிஸஸ் ஸ்ரீனிவாசன் ஹியர்'' என்றாள்.

''நமஸ்காரம்மா'' என்றது மறுபக்கத்துக் குரல். பணிவாய். ''பாஷ்யம் பேசறேம்மா'' பாரதி நெற்றி சுருங்கினாள். பாஷ் யமா? யாரென்று தெரியவில்லை.

''சொல்லுங்க...'' என்றாள் இயந்திரமாய்.

''நாளைக்கு எனக்குக் காலைல ரெகார்டிங் போட்டிருக் கும்மா'' என்று பாஷ்யம் தொடர்ந்தார். ''ஆனா அர் ஜெண்ட்டா பெங்களூர் வரைக்கும் போவற வேலை ஒண்ணு வந்திடிச்சிம்மா. திங்கக்கிழமை மெட்ராஸ் திரும்பிடுவேன். ரெகார்டிங்கை தள்ளி வச்சுக்க சௌகரியப் படுமான்னு கேக்கலாமின்னுதான்...''

'ஓ, வயலின் வாசிக்கும் பாஷ்யமா?'

''ஒரு நிமிஷம் லைன்லேயே இருங்க'' என்றாள் பாரதி. கன்னத்துக்கும், தோளுக்குமாய் ரிஸீவரை அழுத்திக் கொண் டாள். ரெகார்டிங் ரிஜிஸ்டரை எடுத்துப் புரட்டினாள்.

''சரி... திங்கக்கிழமை வாங்க... காலைல பதினோரு மணிக்கு முடியுமா?''

''வந்திடறேம்மா... ரொம்ப நன்றிம்மா...''

ரிஸீவரை வைத்துவிட்டு ரெகார்டிங் ரிஜிஸ்டரில் மறு நாளில் அந்த நிகழ்ச்சியை சுழித்து திங்களுக்கு மாற்றினாள்.

"உனக்குப் புரியலையா? குழந்தைக்கு என்ன தெரியும்?''

"குழந்தைக்கு தெரியாதும்மா.... சுமங்கலின்னா என்ன, அது இல்லைன்னா என்னன்னு எதுவுமே தெரியாது... இப்பவே அதும் மனசில இந்த வக்கிரத்தையெல்லாம் ஏத்தணுமா? சீனு போகறதுக்கு முன்னால நான் வச்சுக்கிட்ட குங்குமம்தானே... இருந்திட்டுப் போகட்டும்...''

"அம்மா கண்ணாடி வேணுமா?'' பானு குறுக்கில் புகுந்தது.

"நீ பொட்டு சரியா வச்சிருக்க இல்லே?''

''ஓ.''

"அது போறும். கண்ணாடில நான் பாத்துக்க வேண்டாம்.''

குழந்தையையும் அள்ளிக் கொண்டு பாரதி எழுந்தாள்.

''அப்பா எங்கேம்மா?'' என்று அம்மாவிடம் பாரதி கேட்டாள்.

"டாக்ஸி எடுத்திட்டு வரப் போயிருக்கார் பாரதி...''

''என்னம்மா நீ... பார்வை சரியா இல்லைன்னு சொல் லிட்டிருந்தாரில்ல.... தனியா ஏம்மா அனுப்பிச்சே?''

"நான் எங்கே அனுப்பிச்சேன்? வீட்டுல இருக்கற ஒரே ஆம்பிளை அவர்தானே பாரதி?''

''இல்லம்மா...'' என்று நினைத்துக் கொண்டாள் பாரதி. 'என் பானுவை பெண் குழந்தையா மட்டும் நான் வளர்க்கப் போறதில்ல... ஒரு பையனாகவும் தான் வளர்க்கப் போறேன்.'

வாசலில் வந்து டாக்ஸி ஹாரன் கொடுத்தது.

சென்னை பிடித்திருந்தது. ஊர் மட்டுமில்லை. டெலி போனிலும், நேரில் பார்க்கும் மனிதர்களிடமும் சரளமாய்ப் பேசும் தமிழ் பிடித்திருந்தது. ஆங்கிலமும், ஹிந்தியுமே பேசி மறந்திருந்த நாக்கில் இனிப்பு தடவியது போல் தமிழ்



அகலமாய்த் திறந்த ஜன்னல் வழியே சுதந்திரமாய் நுழையும் கடல் காற்று பிடித்திருந்தது. கண்களை சற்று நிமிர்த்திப் பார்த்தால், 'முயற்சி செய், முயற்சி செய்' என்று சதா கரை யோரம் வந்து மந்திரம் சொல்லும் நீல அலைகள் தெரிந்தது. வெயிலின் பளபளப்பில் தேய்த்து வைத்த பாத்திரம் போல் மினுமினுக்கும் மணல் பரப்பு கவர்ச்சியாய் இருந்தது.

டெலிபோன் விடாமல் அடிக்க, எடுத்து காதில் பொருத்திக் கொண்டாள்.

''மிஸஸ் ஸ்ரீனிவாசன் ஹியர்'' என்றாள்.

"நமஸ்காரம்மா'' என்றது மறுபக்கத்துக் குரல். பணிவாய். "பாஷ்யம் பேசறேம்மா'' பாரதி நெற்றி சுருங்கினாள். பாஷ் யமா? யாரென்று தெரியவில்லை.

''சொல்லுங்க...'' என்றாள் இயந்திரமாய்.

''நாளைக்கு எனக்குக் காலைல ரெகார்டிங் போட்டிருக் கும்மா'' என்று பாஷ்யம் தொடர்ந்தார். ''ஆனா அர் ஜெண்ட்டா பெங்களூர் வரைக்கும் போவற வேலை ஒண்ணு வந்திடிச்சிம்மா. திங்கக்கிழமை மெட்ராஸ் திரும்பிடுவேன். ரெகார்டிங்கை தள்ளி வச்சுக்க சௌகரியப் படுமான்னு கேக்கலாமின்னுதான்...''

'ஓ, வயலின் வாசிக்கும் பாஷ்யமா?'

''ஒரு நிமிஷம் லைன்லேயே இருங்க'' என்றாள் பாரதி. கன்னத்துக்கும், தோளுக்குமாய் ரிஸீவரை அழுத்திக் கொண் டாள். ரெகார்டிங் ரிஜிஸ்டரை எடுத்துப் புரட்டினாள்.

''சரி... திங்கக்கிழமை வாங்க... காலைல பதினோரு மணிக்கு முடியுமா?''

"வந்திடறேம்மா... ரொம்ப நன்றிம்மா...''

ரிஸீவரை வைத்துவிட்டு ரெகார்டிங் ரிஜிஸ்டரில் மறு நாளில் அந்த நிகழ்ச்சியை சுழித்து திங்களுக்கு மாற்றினாள்.

ரிஸீவரை எடுத்து, பூஜ்யத்தைச் சுழற்றி, அனுமதி கிடைத்ததும், வெளி எண்ணை சுழற்றினாள்.

''ஹலோ, ரேடியோ ஸ்டேஷன்லேர்ந்து பேசறோம்... பக்கத்து வீட்டுல மிருதங்கம் வாசிக்கறவரு ராஜதுரைன்னு ஒருத்தர் இருப்பாரே, கொஞ்சம் கூப்பிட முடியுமா?''

ராஜதுரையிடம் மறுநாளிலிருந்த ரெகார்டிங் திங்களுக்கு தள்ளிப் போய்விட்டதை சொன்னாள்.

சுறுசுறுப்பாய் அவளுடைய நாட்களை ஆக்ரமித்த வேலைகள் வெகுவாய்ப் பிடித்திருந்தாலும், வீட்டில் காத்திருக்கும் பானுவின் நினைவு அவளை முடுக்கிக் கொண்டே இருந்தது.

பானுவுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியது நிறைய இருந்தது.

கர்நாடக சங்கீதமென்றால் சீனுவுக்கு உயிர். அதை கைவரப் பண்ண வேண்டும். நாலு பாவங்கள் காட்டும் நாட்டிய வித்தையை கற்றுக் கொடுக்க வேண்டும். காண்பதையெல்லாம் கான்வாஸில் தீற்றக்கூடிய ஓவியம் சொல்லித் தர வேண்டும்.

எல்லாம் பதினைந்து வயது வரைதான்.

அதற்கப்புறம் முழு மூச்சாய் இன்ஜினீயரிங் படிப்பு.

பானுவை வயிற்றில் சுமந்த நாட்களில் சீனு அவளையே சுற்றிச் சுற்றி வந்ததை நினைத்துக் கொண்டாள்.

''நம்ம பையனுக்கு என்ன பேர் வக்கலாம் பாரதி?''

''பையன்னு யார் நிச்சயம் பண்ணினாங்க? பொண்ணா இருந்திட்டா...?''

''பையன்தான்... நீ வேணாப் பாரேன்.''

''சரி... கிரிதரன்னு பேர் வப்போம்.''

''ஓல்ட் டைப்.''



''மாடர்னா நீங்க சொல்லுங்களேன், பார்ப்போம்.''

''ஹரி பிரசாத்.''

''ஆஹா ரொம்ப மாடர்னான பேரு... அடுத்த சென்ச்சுரில வக்கற பேரு.''

''ஏய் கேலி பண்ணாத... ரெண்டு பேருக்கும் பொதுவா கிரிபிரசாத்னு வச்சிடுவோம். ஓகே?''

அப்புறம் தினம் கலர்க் கலராய்ப் பையனைப் பற்றிக் கனவுகள். 'கேந்திரிய வித்யாலயால சேர்க்கப் போறேன்' என்றான். 'இண்டியாலயே பெஸ்ட் இன்ஜினீயரா ஆக்கப், போறேன்' என்றான்.

பெண் குழந்தையாய்ப் பிறந்தபோது, ஏமாற்றமாய்ப் போயிற்று. கொஞ்ச நாளைக்குத்தான்.

குழந்தை பூவாய் மலர்ந்து அவன் முகம் பார்த்து சிரித்தபோது, பரவசப்பட்டுப் போனான். அவன் தலை மயிரைக் கொத்தாய்ப் பிடித்து மடியில் தள்ளிக் கொண்டு கொஞ்சித் தட்டிக் கொடுத்த நேரங்களில் இன்பத்தின் உச்சங்களை நுகர்ந்தான்.

இரண்டே வருடங்கள்.

வெறும் ஆபீஸர் ஸ்ரீனிவாசன் டெவலப்மெண்ட் ஆபீஸராய் முன்னேறினான்.

பாரதிக்கு ஆல் இண்டியா ரேடியோவில் ப்ரோக்ராம் எக்ஸிக்யூட்டிவாய் செலக்ட் ஆகி பழுப்புப் பேப்பரில் ஆர்டர் டைப் ஆகி வந்தது. கஸ்தூரிபா மார்க் அபார்ட்மெண்டில் ஒரு ஃப்ளாட் அவளுக்கென்று ஒதுக்கப்பட்டது.

அதெல்லாம் பழைய கதை.

எதிர்பார்த்த கிரிபிரசாத் பிறக்காவிட்டால் என்ன? பானுவை சீனுவின் இஷ்டப்படி இன்ஜினீயராய் உருவாக்கினால் போயிற்று.

சீனு... சீனு... சீனு...

ஆரம்பத்தில் அவன் நினைவுகளில் இடறியபோது துக்கமாய் இருந்தது. ஆனால் இப்போது அதுவே சந்தோஷ மாய் இருந்தது.

தினப்படி இயல்புகளில் மறந்து போகாமல், அவன் நினைவு மறைந்து போகாமல், நிமிஷத்திற்கொரு தடவை மிஸஸ் ஸ்ரீனிவாசன் மிஸஸ் ஸ்ரீனிவாசன் என்று அழைக்கப் பட்டபோது நிறைவாய் இருந்தது.

போன் மணி திடீரென்று அடித்து நினைவுக்கு கொண்டு வந்தது.

"பாரதி நான் அப்பா பேசறேன்."

"என்னப்பா?"

"நீ சொன்ன ஸ்கூல்ல பானுவை சேர்த்துக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க பாரதி... மார்ச் மாசம் வரைக்கும் வெயிட் பண்ணணுமாம்..."

"அப்படியா? நானே வரேம்ப்பா..."

போனை வைத்தபோது விஜயா சுந்தர் அறைக்குள் நுழைந் தாள். பெக்ஸ் என்று செல்லமாய் அழைக்கப்படும் இன் னொரு ப்ரோக்ராம் எக்ஸிக்யூட்டிவ்.

"வாட் பாரதி? எனி ப்ராப்ளம்?"

பாரதி சொன்னாள்.

"எந்த ஸ்கூல்?"

"கேந்த்ரிய வித்யாலயா..."

"நான் போன் செய்து பாக்கறேன் இரு..." விஜயா போனில் போன மாதம் ரேடியோவுக்காக அந்த ஸ்கூல் மாணவர்களை வைத்து செய்த ஸ்பெஷல் நிகழ்ச்சியைப் பற்றி நான்கைந்து



வார்த்தைகள் பேசிவிட்டு, மெல்ல பாரதியின் பிரச்னையைத் தொட்டாள்.

போனை வைத்தாள். பாரதியின் பக்கம் திரும்பினாள்.

"நேரில் வரச் சொன்னாள் அந்தப் பிரின்ஸ்பால். கிடைத்து விடும்... வா..."

கிடைத்து விட்டது.

தினமும் ஸ்கூல் பஸ் வந்து கூட்டிப் போனது. மாலையில் கொண்டு வந்து வாசலிலேயே விட்டது.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி காலண்டர் தாள்கள் கிழிந்தன.

டிசம்பர் மாதம்.

பனி போர்த்திய சென்னை நகரத்தில் சீஸன் சபாக்களில் ஸ்பீக்கர்கள் வழியே சங்கீதம் கசிந்து கொண்டிருந்தது.

மியூஸிக் அகாடமியில் பாரதிக்கு ட்யூட்டி.

காதுகளில் பொருத்திய பெரிய இயர்போன்கள் வழியே டேப்பில் பதிவாகும் சங்கீதத்தை பாரதி கவனித்துக் கொண் டிருந்தாள்.

மேடையிலிருந்த வித்வானின் கானம் அவள் நரம்புகளில் புகுந்து மீட்டிக் கொண்டிருந்தது.

ஒரு 'என்ன தவம் செய்தனை?' இவ்வளவு தூரம் அவளை உணர்ச்சிக் குவியலாக்கி ஆட்டுவிக்கக் கூடும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அவளையறியாமலேயே கண்களில் நீர் திரண்டிருந்தது. கன்னங்கள் வழியே இறங்கி, மார்பில் சொட்டு சொட்டாய் உதிர்ந்தது.

கச்சேரி முடிந்ததும், கரகோஷம்.

கூட்டத்தைப் பிளந்து கொண்டு அவர் காரை நெருங்கும் நேரம், பாரதி அவரை வழிமறித்துக் கும்பிட்டாள்.

''நீங்க... உங்களை ரேடியோ ஸ்டேஷன்ல பார்த்திருக் கேனே?''

''ஆமாம்... உங்ககிட்ட ஒரு ஆப்ளிகேஷன்.''

''சொல்லுங்கோம்மா...''

''என் டாட்டருக்கு நீங்க பாட்டு சொல்லித் தரணும்...''

''குழந்தைக்கு எவ்வளவு வயசு இருக்கும்? காலேஜ் போயிண்டிருக்கா?''

''இல்ல... இப்பத்தான் நாலு நடக்குது...''

''நாலு வயசா! இன்னும் பத்து வருஷம் கழிச்சு அழைச் சிண்டு வாங்கோ... நான் நர்ஸரி ஸ்கூலுக்கெல்லாம் பாடம் நடத்தறதில்ல...''

சட்டென்று காரில் ஏறினார். கதவுகள் மூடின. கார் பறந்தது.

பாரதி அதிர்ந்து நின்றாள். கொஞ்ச நேரம்தான்.

'நாளைக்கு என் பொண்ணைத் தேடிக்கிட்டு அத்தனை சபா செக்ரட்டரியும், வந்து நிக்கற மாதிரி பானுவுக்கு பாட்டு சொல்லித் தரேன்...'

''மேடம்'' அவளை வெகு நெருங்கி ப்ரொடக்ஷன் அஸிஸ்டெண்ட் கூப்பிட்டார்.

''வீட்டுலேர்ந்து போன் வந்தது... உங்க அப்பா பாத்ரூம்ல வழுக்கி விழுந்துட்டாராம் மேடம்... பலமான அடியாம்... உங்களை உடனே புறப்பட்டு வரச் சொன்னாங்க.



# 4

பாரதி வீடு போய்ச் சேர்ந்தபோது, அவள் அப்பா சாய்வு நாற்காலியில் ஒரு அசவுகரியமான கோணத்தில் படுத்திருந் தார். தலையில் நெற்றியை மறைத்து ஒரு அவசரமான கட்டு. வெள்ளைத் துணியில் மெல்ல மெல்ல ரத்தச் சிவப்பு பரவிக் கொண்டிருந்தது.

அம்மா வாய்விடாமல் அழுது புடவைத் தலைப்பை நனைத்துக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா ஆச்சு?''

''பாத்ரூம்ல பக்கெட் உருண்டு கெடந்தது பாரதி. அதைத் தாண்டி கால் வைக்கப் பார்த்து வழுக்கி விழுந்திருக்கிறார்'' என்று அடுத்த ஃப்ளாட் கதிரேசன் மெல்லிய குரலில் சொன்னார்.

''பானு எங்கேம்மா?''

''உள்ளே தூங்கிட்டிருக்கா.''

''முதல்ல ஒரு டாக்சியோ, ஆட்டோவோ எடுத்துக்கிட்டு வாம்மா'' என்றார் கதிரேசன். ''நர்ஸிங்ஹோமுக்கு எடுத்துக் கிட்டுப் போய் தையல் போடணுமான்னு பாரு. நெறைய ரத்தம் போய்ட்டா அப்புறம் வயசான காலத்துல ரொம்பக் கஷ்டம்'' என்று அடுத்த ஃப்ளாட் கதிரேசன் மிகவும் கவலைப் பட்டார்.

பாரதி புறப்பட்டாள்.

வாழ்க்கை என்றால் இனிப்பும், கசப்பும் இணைந்தது தான் என்ற உண்மை அவளுக்கு ஒவ்வொரு நாளும் புரிந்து கொண்டிருந்தது. இந்த வாழ்க்கையை, உட்கார்ந்து 'ஏன் இப்படி ஆகிவிட்டது?' எதனால் இப்படி நடந்து கொண்டிருக் கிறது?' என்று ஆராய்வதைக் காட்டிலும் வாழ்க்கையை அது இட்டுச் செல்லும் பாதையிலேயே சென்று அதனோடு போராடுவதுதான் சரியான வழி என்று தோன்றியது அவளுக்கு.

அடையாறில் போக்குவரத்து அதிகம் இல்லாத ஒரு ட்வெண்டிஃபோர் அவர்ஸ் க்ளினிக்கில் அப்பாவைப் பரி சோதித்த இளம் டாக்டர் அப்பாவிற்கு உடனடியாக ஒரு ஊசி போட்டான். காயத்தைப் பரிசோதித்து விட்டு, ''ப்ளீடிங் நிக்க மாட்டேங்குதே. இவருக்கு ஷுகர் இருக்கா?'' என்று கேட்டு விட்டு நர்ஸை அழைத்தான்.

''ஸிஸ்டர், டிரஸ் பண்ணி விடுங்க'' என்று சொல்லி விட்டு அவனுடைய ஏ.ஸி. ரூமில் போய் உட்கார்ந்து, ஒரு ப்ரிஸ்க்ரிப்ஷன் ஷீட் முழுக்க மருந்துகளின் பெயர்களாக எழுதி பாரதியிடம் நீட்டினான்.

''எந்தெந்த வேளைக்கு என்னென்ன மருந்துன்னு எழுதி யிருக்கேன் மேடம். ரெகுலரா குடுங்க. மூணு நாள் கழிச்சுக் கூட்டிட்டு வாங்க. ஸார் உங்களுக்கு என்ன வேணும்?''

''அப்பா.''

''வெரிகுட். பேரு?''

''சுந்தரேசன்.''

''வயசு?''

''செவன்டி.''

அந்த டாக்டர் ப்ரிஸ்க்ரிப்ஷன் பேப்பரில் மேலே பெயரை யும், வயதையும் எழுதி அவளிடம் நீட்டினான்.

''டூ ஹண்ட்ரட் ரூப்பீஸ்...''



பணத்தைக் கொடுத்துவிட்டு அப்பாவைக் கூட்டி வர உள்ளே நுழைந்தவள் அப்பாவையும் அவருடைய தலையில் போடப்பட்டிருந்த கட்டையும் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டுப் போனாள்.

அவர் தலையில் கட்டப்பட்டிருந்த கட்டு மூளை ஆப்ப ரேஷனுக்குப் பிறகு போடப்படும் கட்டு போல் அவ்வளவு பெரிதாக இருந்தது. அவருடைய கண்கள் இரண்டையும் அந்தக் கட்டு ஏறக்குறைய மறைத்து விட்டிருந்தது.

''என்னப்பா இது?''

அப்பா பதில் எதுவும் சொல்லாமல் சிரித்தார்.

பாரதி அப்பாவுக்கு என்று டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டைப் பார்த்தாள்.

பன்னிரண்டு மாத்திரைகளின் பெயர்கள். அப்பா இது வரை இவ்வளவு மருந்துகள் சாப்பிட்டதே இல்லை. அந்த மருந்துகளுக்கு ஆகும் செலவு பற்றி அவள் கவலைப்பட வில்லை. இவ்வளவு மருந்துகள் என்றால் அப்பாவிற்குப் பட்டிருக்கும் அடி எவ்வளவு சீரியஸாக இருக்க வேண்டும் என்றுதான் அவள் உள்ளம் நினைத்தது.

அப்படி நினைத்துப் பார்த்தாலே பகீர் என்றது.

வீட்டுக்கு வந்தவுடன் முதல் வேலையாக பக்கத்து போர் ஷன் கதிரேசனைப் போய்ப் பார்ப்பது என்று தீர்மானித்தாள்.

ஆட்டோவிலிருந்து அப்பாவைக் கைத்தாங்கலாக இறக்கிக் கூட்டி வந்தாள்.

அப்பாவை அந்தக் கோலத்தில் பார்த்து விட்டு அம்மா பதறிப் போனாள்.

''பாரதி... என்னம்மா இது... ஏன் இவ்வளவு பெரிய கட்டு போட்டிருக்கு? அப்பாவுக்கு என்னவாம்?''

''அம்மா, பதறாதே. அப்பாவுக்கு ஒண்ணும் இல்லை. அங்க இருக்கற நர்ஸ் போட்டுவிட்ட கட்டு இது. டாக்டர்

ஒண்ணும் பயப்பட வேண்டாம்னு சொல்லியிருக்காரு'' என்று அப்பாவை அழைத்துப் போய்க் கட்டிலில் படுக்க வைத்தாள்.

''நான் கதிரேசன் சாரைப் போய்ப் பார்த்துட்டு வரேன்'' என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு, வெளியேறி கதவை மூடிக் கொண்டாள்.

கதிரேசன் சார் தபால் துறையில் வேலை செய்பவர். மத்திய அரசாங்கத்தில் வேலை செய்பவர்களுக்காக அந்தக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதனால் கதிரேசன் சாரும் அங்கே அவருக்கு ஒதுக்கப்பட்ட ஃப்ளாட்டில் குடியிருந்தார். அவருக்குத் திருவல்லிக்கேணியில் ஒரு வீடு இருந்தது. அங்கே அவருடைய மூத்த மகன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் தனிக்குடித்தனம் நடத்திக் கொண்டிருப்பதாக அம்மா சொல்லி பாரதிக்குத் தெரியும்.

''வாங்க பாரதி மேடம்'' என்றார் கதிரேசன்.

''முதல்ல உங்ககிட்ட ஒண்ணு சொல்லலாமா?''

''என்ன மேடம்?''

''இந்த மேடம். சார் எல்லாம் இங்கிலீஷ்காரங்ககிட்டேர்ந்து நம்மகிட்ட ஒட்டிக்கிட்ட விஷயம். என்னை மேடம்னு சொன்னா என்னைப் பத்தடி தள்ளி வைக்கிற மாதிரி அர்த்தம். வாம்மா பாரதின்னு சொன்னா உங்களோட பொண்ணை உங்க வீட்டுக்குக் கூப்புடற மாதிரி அர்த்தம்.''

''உக்காரும்மா பாரதி.''

பாரதி புன்னகைத்தாள். கதிரேசன் முகத்தில் நிச்சயம் மகிழ்ச்சி. பாரதி உட்கார்ந்தாள்.

''என்னை அப்படின்னா சார்னு கூப்பிடுவியா? இல்லை தமிழ் வாத்தியாரைக் கூப்புடற மாதிரி வாங்கையா, போங்கையான்னு கூப்புடுவியா?''



''எங்க ஊர்ல எல்லாம் ஒருத்தருக்கொருத்தர் ஒறவு மொறை வச்சித்தான் கூப்புடுவோம். டெல்லிக்குப் போய் எல்லாம் மறந்து போச்சி. இந்தி, இங்கிலீஷ்னே நாளை ஓட்டியாச்சி. அதனால நான் உங்கள வாய் நெறைய மாமான்னு கூப்புடப் போறேன்.''

கதிரேசன் நெகிழ்ந்து போனார்.

''உக்காரும்மா'' என்று மறுபடி வற்புறுத்தினார். அவள் தடுக்கப் பார்ப்பதற்குள் கதிரேசன் மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே போய் விட்டார்.

பாரதி அந்த ஹாலைச் சுற்றிலும் பார்த்தாள். சுவரில் ஒரு பொட்டு அழுக்கு இல்லை. வழவழப்பான சுவரில் கண்ணை உறுத்தாத ஒரு நிறம். அதில் மாட்டப்பட்டிருந்த சித்திரப் பலகை. மிகவும் மென்மையாய் நூல் போல புகை வழங்கிக் கொண்டிருந்த இரு ஊதுபத்திகள்.

''வாம்மா பாரதி'' என்று சொல்லிக் கொண்டே கதிரேசனின் மனைவி உள்ளிருந்து வெளிப்பட்டாள். பாரதி எழுந்து கொள்ளப் பார்த்தாள்.

''சேச்சே... எதுக்கு எழுந்துக்கிட்டு உக்காரும்மா.''

''இது என் ஒய்ஃப் அழகம்மை. அழகுன்னு நான் கூப்புடுவேன்'' என்றார் கதிரேசன்.

அழகம்மையின் முகத்தில் சொல்லவொணா ஒரு நாணம். பாரதி அழகம்மையின் முகத்தைப் பார்த்தாள். அழகம்மைக்கு ஓரளவு வயதாகி இருந்தாலும் பெயருக்கு ஏற்ற மாதிரி நல்ல அழகி. நெற்றியில் ஒரு சாந்துப் பொட்டு. பவுடர் ஒற்றல். மூக்கில் ஒரு மின்னல். சில பெண்களுக்கு மூக்குத்திதான் முகத்திற்கு அழகு. இவளுக்கும் அப்படித்தான் இருந்தது. கொஞ்சம் அகலமான செழுமையான முகம். கண்கள் அகலமாக இருந்தன. முத்துச் சிப்பி ஒன்று பிளந்தது போல

இமைகள். தலை முடியைப் பின்னலிடாமல் அப்படியே வாரிப் படர விட்டு ஒரே ஒரு பாண்ட் போட்டிருந்தாள்.

''என்னம்மா அப்படிப் பாக்கறே? சாப்பிடு'' என்றாள் அழகம்மை.

அப்போதுதான் அழகம்மை கொண்டு வந்திருந்த தட்டு தன் முன் இருந்த டீப்பாயில் வைக்கப்பட்டிருந்ததை பாரதி கவனித்தாள்.

அதில் ஒரு ஜாங்கிரி. கூடவே முறுகலாய் ஆவி பறக்க இரண்டு தோசைகள் இருந்தன. சட்னி மிளகாய்ப் பொடி. எண்ணெய். சின்னக் கிண்ணத்தில் சாம்பார்.

''நான்... நான்...''

''எல்லாம் அப்புறமாப் பேசிக்கலாம். மொதல்ல சாப் பிடும்மா. தோசை சூடு ஆறிப் போய்ட்டா நல்லா இருக்காது. சாப்பிடு.''

தோசையிலிருந்து எழுந்த மணம் அவளது வெட்கத்தை உதற வைத்தது. மவுனமாகச் சாப்பிட்டாள்.

''இன்னொரு தோசை...''

''ஐயோ. வேணாம்.''

''எதுக்கு வெக்கப்படணும்? என்னவோ சாப்பிடறதப் போய்த் திருட்டுக் காரியம் பண்ற மாதிரி நெனைச்சிக்கிட்டு?''

''இல்ல. எனக்கு நெஜமாவே போதும். இப்பப் போய் ராத் திரிக்கு சமைக்கணும்! நேரம் ஆய்டிச்சி. கொழந்தை எழுந்தா அவளுக்கு ஏதாவது கலக்கிக் கொடுக்கணும்.''

''அப்ப, சரி. காபி குடிக்கலாம் இல்ல?''

''ம்.''

காபி வந்தது. காபியில் ஒரு தனி மணம் இருந்தது. டெல்லியில் யாருக்கும் காபி போட வராது. சென்னை தான்



காபியின் உண்மையான சுவையை அவளுக்கு மறுபடி பழக்கப்படுத்தியது.

''அப்பாவுக்கு எப்படி இருக்கும்மா?''

''அதைப்பத்திதான் பேச வந்தேன். எனக்கு இந்த டாக்டர் மேல திருப்தி வரல. ஒரு பெரிய ஷீட் முழுக்க மருந்தா எழுதிக் குடுத்திருக்காரு. அப்பா இவ்வளவு மருந்தை சாப் பிட்டதே இல்ல. நர்ஸ் அவருக்குப் போட்டு விட்டிருக்கிற கட்டைப் பாத்தா எனக்குப் பயமா இருக்கு. எதுக்கும் இன்னொரு டாக்டர் கிட்ட போய் காமிக்கலாம்னு தோணுது. அதான் இந்தப் பக்கம் யார் நல்ல டாக்டர்னு கேட்டுட்டுப் போலாம்னு வந்தேன்.''

''நான் அப்பவே சொல்லியிருப்பேன். நம்ம டாக்டர் அந்த நேரத்தில வந்திருக்க மாட்டாரு. அப்பாவுக்கு ரத்தப் போக்கு இருந்ததாலதான் மொதல்ல பக்கத்துல இருக்கற ஏதாவது ஒரு நர்ஸிங் ஹோமுக்குப் போயிடலாம்னு தோணிடிச்சி. பரவா யில்லை. அந்த மருந்தையெல்லாம் வாங்க வேணாம். இங்க பக்கத்தில அடையாறுல நரசிம்மன்னு ஒரு டாக்டர் இருக் காரு. நல்ல அனுபவம். அவர் டயக்னைஸ் பண்ற அழகே தனி. அனாவசியமா மருந்து எல்லாம் எழுத மாட்டாரு. ஊசி போட மாட்டாரு. சிம்பிள் வைத்தியமா இருக்கும். ஆனா அவர் கிட்டே ஒரே ஒரு பிரச்னைதான்.''

''என்ன மாமா?''

''காசே வாங்க மாட்டாரு. மிஞ்சிப் போனா பத்து ரூவா சார்ஜ் பண்ணுவாரு. இங்கே இருக்கறவங்களுக்கெல்லாம் நூறு, இருநூறுன்னு வாங்கினா, டாக்டருங்க மேல ஒரு நம்பிக்கையே வரும்'' என்று சொல்லிச் சிரித்தார் கதிரேசன்.

''இல்ல. எனக்கு அப்படிக் கெடையாது. பகட்டுல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. எளிமை எனக்குப் பிடிக்கும். அனுபவத்தைவிட நல்ல டீச்சர் யாருமே இல்லன்னு

சொல்லுவாங்க. எனக்கு அந்தக் கருத்து ரொம்பப் பிடிச்ச கருத்து.''

''அப்ப அந்த டாக்டர்கிட்ட நாம சாயங்காலம் ஏழு மணிக்கு மேலே போலாம்.''

டாக்டர் நரசிம்மன் வாடகைக்கு இருந்த கட்டிடமே மிக எளிமையாக இருந்தது. காத்திருக்க நான்கைந்து மடக்கு நாற்காலிகள். ஆச்சரியத்திலும் ஆச்சரியம் டாக்டரின் க்ளினிக் வாசலில் வரிசையாய் கார்கள் காத்திருந்தன.

நான்காவது ஆளாக டாக்டர் அப்பாவைப் பார்த்தார்.

''என்ன இது கட்டு? இவ்வளவு பெரிசா? யார் போட்டு விட்டது? எது மோதியிருக்கு? ஏதாவது ரோட் - ரோலர் வந்து இடிச்சிட்டுப் போய்ட்டதா என்ன?''

டாக்டர் சிரிக்காமல் கேட்டார். ஆனால் பாரதிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''பாத்ரூமில் வழுக்கி விழுந்துட்டார் டாக்டர்.''

''இந்த வயசில வழுக்கி விழுந்துட்டாரா? அப்ப பாத்ரூம் க்ளீனா இல்லேன்னு அர்த்தம். அதான மெட்ராஸ். ஃப்புல்லா ஃப்ளாட் சிஸ்டமா வந்திருக்கே. வெயில், காத்து எதுவுமே நொழையாத ஒரு சின்ன இடுக்குதான் இப்பல்லாம் பாத்ரூம். அது எப்படி வழுக்காம இருக்கும்? அதிலயும் மார்பிள் போட்ட பாத்ரூமா இருந்தா இன்னும் விசேஷம். ப்ளீச்சிங் பவுடர், ஆசிட்னு எதையும் போட்டுத் தேய்க்கக் கூடாதுன்னு சொல்லிடுவான். எப்படி வழுக்காம இருக்கும்?''

பேசிக் கொண்டே கட்டைப் பிரித்துப் பார்த்தார்.

''இட் ஈஸ் நத்திங். சின்னக் காயம்தான். ப்ளீடிங் இல்லை. ஒண்ணும் இல்ல. இப்படியே காத்தாட விட்டுட்டா நல்லது. பேர் என்ன சார்?''



அப்பா பேரைச் சொன்னார்.

''வயசு?''

அப்பா அதையும் சொன்னார்.

''இப்ப எப்படி இருக்கு உங்களுக்கு?''

''ஒண்ணும் இல்ல. ஐம் கொயட் ஆல்ரைட். பாரதி தான் என்னை இங்க கூட்டிட்டு வந்தாத்தான் ஆச்சுன்னு ஒத்தைக் கால்ல நின்னுட்டா. நான் ரெகுலரா செக் - அப் பண்ணிட்டுத்தான் இருக்கேன். பிபி இல்லை. ஷுகர் இல்ல. எவ்ரிதிங் ஈஸ் நார்மல்...

''அப்ப எதுக்கும்மா அப்பாவை ட்ரபிள் பண்ணி அனாவசியமா இங்க கூட்டிட்டு வந்திருக்கே?''

''இல்ல டாக்டர். ஒரு பாலி கிளினிக் போயிருந்தேன். அவசரத்துக்கு அதான் திறந்திருந்தது. அந்த டாக்டர் ஒரு ஊசியைப் போட்டுட்டு இந்த மருந்தையெல்லாம் சாப்பிடணும்னு எழுதிக் குடுத்திருக்காரு. அப்பா இவ்வளவு மருந்தை சாப்பிட்டதே இல்ல. சாப்பிடலாமா, கூடாதான்னும் தெரியல. அதான் உங்ககிட்ட காட்டிட்டுப் போலாம்னு...''

''ஐயையோ. எவன் அது இவ்வளவு மருந்தை எழுதிக் குடுத்தான்? அத்தனையும் பாய்ஸன். கிழிச்சி எறிம்மா இந்த ஷீட்டை. அப்பாவுக்குக் கண்ல காட்ராக்ட் வளந்திருக்கு. அது மெச்சூர் ஆய்ட்டதுன்னா ஆப்பரேட் பண்ணி எடுத்துடலாம். மெச்சூர் ஆகலேன்னாதான் கொஞ்சம் வெயிட் பண்ணனும். ஆபரேஷன் ஆயிட்டா பாத்ரூம்ல வழுக்கி விழ மாட்டார். நல்லவேளை, மருந்தை வாங்காம இருந்தியே. ஒரு சின்ன அடிக்குப் போய் இவ்வளவு ஆர்ப்பாட்டமா? ரப்பிஷ். யூ மே கோ! சார் உங்க பொண்ணுக்கு உங்க மேல பிரியம் ஜாஸ்தி. அதான் பயந்துட்டா. யூ ஆர் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட். நான் ஒரு கண் டாக்டரைச் சொல்றேன். அவரைப் போய்ப் பாருங்கோ. ஹானஸ்ட் மேன். என்ன?''

''ஓ யெஸ்'' என்று அப்பா எழுந்தார்.

''எவ்வளவு டாக்டர் கொடுக்கட்டும்?''

''டோண்ட் வேஸ்ட் மணி. நான் இப்ப என்ன பண்ணிட்டேன்? மருந்துகூட எழுதிக் குடுக்கலையே. அதுக்குப் போய்ப் பணமா? நான் என்ன ,வக்கீலா என்ன? பேசினதுக்கெல்லாம் பணம் வாங்கறதுக்கு?''

''இல்ல டாக்டர். கன்ஸல்டேஷனுக்கு வந்திருக்கேன். நீங்க ஏதாவது வாங்கிக்கிட்டாத்தான் மனசு சமாதானம் ஆகும்.''

''ஓகே. டென் ரூப்பிஸ்.''

பாரதி ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை வெளியே எடுத்தாள். அதைக் கொடுத்தால் டாக்டரை அவமதித்த மாதிரி ஆகிவிடும் என்று தோன்றியது. அதனால் அதை உள்ளே வைத்து விட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டையே எடுத்து நீட்டினாள்.

நிறைந்த மனதுடன் டாக்டர் வீட்டில் இருந்து வெளியே வந்தாள்.

அப்பாவிற்கு ஒன்றுமில்லை. மறுநாளே அவர் பழையபடி தன் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கி விட்டார்.

பாரதி அலுவலகம் போனாள். விஜயா சுந்தர், பாரதியின் மேல் மிகவும் பிரியம் வைத்துப் பழகினாள். என்ன காரணத்தாலோ பாரதியை அவளுக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. காபிக்குப் போக வேண்டுமென்றாலும் பாரதிகூட வர வேண்டும். மதியம் சாப்பாட்டிற்கு என்றாலும் பாரதி அவளுடன்தான் சாப்பிட வேண்டும்.

சாப்பிட்ட பிறகு ஒரு அரை மணி நேரம் ஓய்வு இருக்கும். பாரதி வேலையைச் செய்ய நாற்காலிக்குப் போக வேண்டும் என்று சொல்லுவாள்.



விஜயா சுந்தர் பாரதியை விடமாட்டாள்.

''இப்ப அங்க போய் உக்காந்து என்ன சாதிக்கப் போறே? அதே ரெகார்டிங்தான். யாரைக் கூப்புட்டுப் பேசச் சொல்ற துங்கற யோசனைதான். இருக்கவே இருக்கு ஆபீஸ். இங்க கொஞ்ச நேரம் எங்கூடப் பேசினா கொறைஞ்சா போய்டும்?''

''போகாது.''

''பின்ன பேசிக்கிட்டிருப்போம் வா.''

''சரி. என்ன பேசலாம்?''

''வாழ்க்கைல எவ்வளவோ விஷயம் பேசறதுக்கு இருக்கு. சரி கொஞ்ச நேரம் ஜாலியாப் பேசலாமா?''

''ஜாலியான்னா?''

''புருஷன் - பொண்டாட்டி விஷயம்தான். லைஃப் இன்ட்ரெஸ்டிங்கா இருக்குன்னா அதுக்கு ஃபாமிலி லைஃபும் ஒரு காரணம். ஃபாமிலி லைஃப்னா எதைச் சொல்றேன்னு தெரியுதா?''

''ம்'' என்றாள் பாரதி கொஞ்சம் தர்ம சங்கடமாக உணர்ந்து.

''ஏன் வெக்கப்படறே? ஒனக்கும் கல்யாணம் ஆய்டிச்சி. எனக்கும் கல்யாணம் ஆய்டிச்சி. இதுல வெக்கப்பட என்ன இருக்கு? நான் சாயங்காலம் வீட்டுக்குப் போனவுடனேயே அன்னைக்கு சுந்தருக்கு மூடு இருக்கா இல்லையான்னு தெரிஞ்சுடும். சுவாமி படத்துக்கு மல்லிகைப்பூ மாலை போட்டிருந்தா சுந்தருக்கு மூடு இருக்குன்னு அர்த்தம். அன்னைக்கு ராத்திரி யாரும், எதுவும் பேசிக்காமலேயே...'' விஜயா சுந்தர் வாக்கியத்தை முடிக்காமலேயே சிரித்தாள். ''சப்போஸ் எனக்கு மூடு இருக்கு. அவர்கிட்ட சொல்லணும்னு வெச்சிக்கோ. எப்படித் தெரியுமா சொல்லுவேன்? கிச்சன்ல ஒரு ஊதுவத்தி ஏத்தி வெச்சிடுவேன். அவ்வளவுதான்

சுந்தருக்குப் புரிஞ்சிடும். அப்புறம் என்ன? ராத்திரி கச்சேரி தான். அன்னிக்குன்னு பார்த்து சந்தன சோப்பு போட்டுக் குளிச்சிட்டு, கொஞ்சம் பவுடர் அடிச்சிக்கிட்டு புதுசா மொடமொடன்னு ஒரு காஞ்ச நைட்டியை மாட்டிக்கிட்டு - ரூமுக்குப் போய்ட்டா அவ்வளவுதான். கொஞ்ச நேரத்தில் நைட்டியே கிழிஞ்சிடும்.''

பாரதிக்கு சிரிப்பு வந்தது. அவள் முகம் அதைத் தெரிவித்தது.

''நாள் சரியில்லை. ரெட் சிக்னல் ஆரம்பிச்சிருக்குன்னு வெச்சிக்கோ. என்ன பண்ணுவேன் தெரியுமா? மூட்டைப் பூச்சி மருந்து அடிச்சிடுவேன். மூக்கை அந்த ஸ்மெல் தொட்டுட்டாலே போறும். சுந்தருக்குத் தெரிஞ்சிடும். ஃப்ரெண்ட்ஸோட நைட் ஷோவுக்குப் போய்டுவாரு. இல்லையா சீட்டு. இல்லையா பீர். ஒரு நாள் என்னாச்சின்னா நான் ஆபீஸ்லேர்ந்து சீக்கிரம் போய்ட்டேன். பரபரன்னு மூட்டைப் பூச்சி மருந்து அடிச்சி வெச்சிட்டேன். ஐயாவுக்கு அன்னைக்கு செம மூடு வர்றப்பவே மல்லிகைப்பூ. சாமிக்கு ஒரு முழம். எனக்கு ரெண்டு முழம். அன்னிக்குப் பார்த்து அவருக்கு ஜலதோஷம். அதனால மூட்டைப் பூச்சி மருந்து அடிச்சிருக்கறத அவரால கண்டு பிடிக்க முடியல. மல்லிகைப் பூவை சாமி படத்துக்கு மாட்றாரு. என்னைப் பார்க்கறாரு. நான் மூட்டைப் பூச்சி மருந்தை அடிச்சிருக்கேங்கறதை சைகையிலே சொல்றேன். வீட்ல அவருடைய அம்மா, அப்பா, என் மச்சினன், அப்புறம் என் பையன் எல்லாம் இருக்காங்க. வாய் தெறந்து எப்படி சொல்றது? அவருக்கு ஜலதோஷம்னு வேற எனக்குத் தெரியாது. நைட் சீக்கிரம் சாப்பிட்டு, சீக்கிரம் வெளியே போய்ட்டு, ஒரு சிகரெட் பிடிச்சிட்டு, பீடா போட்டுக்கிட்டு எனக்கும் ஒரு பீடா வாங்கிட்டு வந்து... ஒரே அமர்க்களம். நான் நேரே கிச்சனுக்குப் போய் மூட்டைப் பூச்சி மருந்து அடிக்கிற ஸ்ப்ரேயரைக்



கொண்டு வந்து அவர் மூஞ்சிக்கு நேரக் காட்டினதுக்கு அப்புறம்தான் எல்லாம் கன்ட்ரோல் ஆச்சி...''

பாரதி கண்ணில் நீர் துளிர்க்கச் சிரித்தாள்.

''ஒன்னைப் பத்தி சொல்லவே மாட்டேங்கறியே பாரதி... ரொம்ப அழுத்தக்காரியா இருக்கியே... நான் ஒன்னை விட ரெண்டு மூணு வயசுப் பெரியவ. நானே சொல்றேன். நீ சொல்லக்கூடாதா? உங்க வீட்ல எப்படி?''

பாரதி மென்மையான குரலில் சொன்னாள்.

''போன வருஷம் டெல்லில நடந்த ஒரு ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட்ல சீனு செத்துப் போய்ட்டாரு.''

விஜயா சுந்தரின் முகம் பேயறைந்தது போல் மாறியது.

''ஐ'ம் ஸாரி பாரதி. ஐ'ம் ஸாரி. வெரி வெரி ஸாரி. உன்கிட்ட என்னென்னவோ பேசிட்டேன். ப்ளீஸ். என்னை மன்னிச்சிடு.''

பாரதி அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''இப்ப என்ன நடந்து போச்சின்னு இவ்வளவு பதறிப் போறே விஜயா? ஒண்ணும் ஆயிடல. எங்கிட்ட நீ மன்னிப்பு கேக்க வேண்டிய அவசியமே இல்ல. கம். லெட் அஸ் கோ.''

அன்று மாலை நான்கு மணி சுமாருக்கு பானுவின் ஸ்கூலில் இருந்து ஃபோன் வந்தது. வேனில் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் குமார் பேசினான்.

''அம்மா. பாப்பா ரொம்ப அடம் பிடிக்குதும்மா. அதை வீட்ல கொண்டு போய் விடக்கூடாதாம். உங்க கிட்ட கொண்டாந்து வுடணுமாம். என்னம்மா செய்யறது?''

''கொண்டு வந்து விடு'' என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தபோது அறை வாசலில் பரபரப்பாய் இங்குமங்குமாய் வேலை செய்பவர்கள் எல்லாம் ஓடிக் கொண்டிருந்தது கண்ணில் பட்டது.

எதற்காக இவர்கள் எல்லாம் இந்த ஓட்டம் ஓடுகிறார்கள்?

பாரதி சஸ்பென்ஸ் தாங்காமல் எழுந்து வெளியே வந்தாள்.

"என்ன சக்திவேல்?" என்று பியூனைக் கேட்டாள்.

"பாம் வெச்சிருக்காங்களாம்மா. யாரோ ஒருத்தன் போன் பண்ணியிருக்கான். போலீஸுக்கு போன் போட்டாச்சு. அவங்க வராங்க. நாய் வருது. நீங்க எல்லாம் ரூம்ல இருக்காதீங்க. வெளில வந்துடுங்கம்மா. கிரவுண்டுக்குப் போய்டுங்க. எதையும் இப்ப யோசிக்காதீங்க. வந்துடுங்கம்மா" என்று கத்திக் கொண்டே ஓடினான் அவன்.

பாரதிக்கு பகீரென்றது.

ஐயையோ. பானுவை வேறு இங்கே கூட்டி வரச் சொல்லி விட்டோமே. பாரதி போனில் அவசர அவசரமாக மறுபடி ஸ்கூலைத் தொடர்பு கொள்ளப் பார்த்தாள். தொடர்பு கிடைக்கவில்லை. ரிசீவரை விட்டெறிந்து விட்டு பதைக்கும் நெஞ்சுடன் வாசலை நோக்கி நடந்தாள் பாரதி.

## 5

**வா**சலில் பரபரப்பு அதிகமாக இருந்தது. காம்பவுண்ட் கேட் அருகே இருந்த காபினில் இருந்த காக்கிச் சட்டைக்காரன் ஒரு போலீஸ் அதிகாரியின் முன்னால் நடுங்கிக் கொண்டு நின்றிருந்தான். வானொலி நிலையத்திற்குள் யார் உள்ளே நுழைவதாக இருந்தாலும் அவனைத் தாண்டித்தான் உள்ளே நுழைய வேண்டும். உள்ளே நுழைபவர் யாராக



இருந்தாலும் தகுந்த காரணங்கள் இருந்தால்தான் உள்ளே நுழைய முடியும்.

வானொலி நிலையம் ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி என்பதால் இவ்வளவு முன்னேற்பாடுகள். அதைத் தவிர வானொலி நிலையத்தின் வரவேற்புப் பகுதியில் இருக்கும் வரவேற்பாளர். உள்ளே நுழையும் எவரும் அவர் முன்னால் இருக்கும் குறிப்பேட்டில் கையெழுத்துப் போடாமல், யாரைச் சந்திக்க வந்திருக்கிறார் என்ற விவரமெல்லாம் சொல்லாமல் உள்ளே நுழைய முடியாது. அந்தக் குறிப்பேட்டுடன் வரவேற்பாளரும் இன்னொருவரும் போலீஸ் அதிகாரியின் முன்னால் நின்று கொண்டிருந்தார்கள்.

போலீஸ் ஜீப் ஒன்று உள்ளே நுழைந்து நிற்க, அதிலிருந்து இரண்டு நாய்கள் குதித்து இறங்கின. நாய்களைப் பிடித்துக் கொண்டு அதன் ட்ரெய்னர்கள் கூடவே இறங்கினார்கள். நாய்கள் நிலையத்திற்குள் நுழைந்தன. ட்ரெய்னர்கள் நாய்க் கயிறுகளுடன் தத்தம் நாய்களுக்கு ஆணையிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார்கள். ஏற்கனவே நிலையத்திற்குள் இன்னும் இரண்டு நாய்கள் எங்கே வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறதென மோப்பம் பிடித்துக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்கள்.

பாரதிக்கு அந்தக் காட்சி கொஞ்சம் புதிதாக இருந்தது. புதுதில்லியில் இருந்தபோது எங்கெங்கோ வெடிகள் வெடித்ததாகச் செய்தி படித்திருக்கிறாள். அங்கே வானொலி நிலையத்தில் இப்படி ஒரு அனுபவம் அவளுக்கு நேர்ந்தது இல்லை.

வானொலி நிலையத்தில் வேலை செய்பவர்கள் எல்லாம் கட்டிடத்திற்கு வெளியே வந்து நின்றிருந்தார்கள். ஒரு புல்வெளியில் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ரெகார்டிங்கிற்காக வந்திருந்த பாடகர்களும், வாத்தியக்காரர்களும்

தத்தம் வாத்தியக் கருவிகளுடன் வந்து வெளியே நின்றிருந்தது. கொஞ்சம் வேடிக்கையாகக்கூட இருந்தது. ஒரு வித்வான் தனது தலைமுடியை அவிழ்த்துக் கோதி விட்டு வானொலி நிலையத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

பாரதிக்குத் திடீரென்று பானுவின் ஞாபகம் வந்தது. நல்லவேளை, பானு இன்னும் வரவில்லை. அவள் இதற்குள் வந்து கட்டிடத்திற்குள் நுழைந்திருந்தால் அது வேறு பெரிய பிரச்னை. 'பானுவிற்கு என்ன ஆகிவிடுமோ, என்ன ஆகிவிடுமோ?' என்று எண்ணி எண்ணியே இதயம் துடித்துக் கொண்டிருக்கும்.

வாசலைப் பார்த்தாள். ஸ்கூல் வேன் வந்து நின்றது. அதன் கதவு திறந்தது. பானு இறங்கினாள். பாரதி கையசைத்துக் காட்டினாள். பானுவுடன் இறங்க இருந்த குமார் பாரதியைப் பார்த்துச் சிரித்தான்.

''பாப்பாவைக் கொண்டு வந்து உங்ககிட்ட விடட்டுமாம்மா?'' என்று கேட்டான்.

பானு அந்த நேரத்தில் அங்கே வருவதை பாரதி விரும்பவில்லை. ஆனால் வேண்டாம் என்று சொன்னால் பானுவின் முகம் வாடிப் போகும். பிடிவாதம் அதிகரிக்கும்.

அவளாலும் பானுவைக் கூட்டிக் கொண்டு உடனே வீட்டுக்குப் போவது என்பது இயலாத காரியம்.

''அம்மா, நான் உங்ககிட்ட வரப்போறேன். வரட்டுமா?'' என்று பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கிய பானு அங்கிருந்து குரல் கொடுத்தாள்.

''வா'' என்றாள் பாரதி. ''குமார். நீ வரவேண்டியதில்லை. நான் பாத்துக்கறேன்'' என்றாள்.

ஸ்கூல் பஸ் புறப்பட்டுச் சென்றது.



பானு அவளை நோக்கி நடந்து வரத் தொடங்கினாள்.

வானொலி நிலையத்திற்கு நேர் எதிரில் ஒரு காபி ஷாப் இருந்தது. கான்டீன் காபி அலுத்துப் போகும் நாட்களில் அந்த காபி ஷாப்பிற்குப் போய் மக்கள் காபி குடித்து விட்டு வருவதுண்டு. சில சிறப்பு விருந்தினர்கள் வந்தாலும் அவர்களை அழைத்துக் கொண்டு காபி ஷாப்பிற்குப் போய் வருவார்கள்.

விஜயா சுந்தர் காபி ஷாப்பில் இருந்து வந்து கொண்டிருந்தாள். பாதி சாலையைக் கடந்து போக்குவரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளுடன் ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான். விஜயா சுந்தரைத் தேடி வந்தவனாக இருக்கலாம். விஜயா சுந்தரும், அவனுமாக சாலையைக் கடந்தபோது, விஜயா சுந்தர் பானுவைப் பார்த்தாள்.

''ஹாய் பானு'' என்றாள்.

பானு நின்று திரும்பிப் பார்த்தபோது அந்த விபரீதம் நடந்தது.

பானுவிற்குச் சற்று தள்ளி, வாட்ச்மேன் காபினுக்கு அருகில் இருந்த காம்பவுண்ட் சுவருக்கு அருகில் 'டமால்' என்று ஒரு வெடியோசை கேட்டது. வாட்ச்மேன் இருக்கும் மரக் காபின் அப்படியே உதிர்ந்து விழுந்தது. தரை நடுங்கியது. அதிர்ச்சியில் பானு அப்படியே மேலே தூக்கி எறியப் பட்டாள்.

பாரதி பார்த்தாள். வெடி ஓசை அவள் காதைச் செவிடாக்கி விடுவது போல் இருந்தது. கற்கள் பறந்தன. புகை சூழ்ந்தது. இத்தனைக்கும் இடையே பானு தூக்கி எறியப்படுவதைப் பார்த்தாள்.

ஒரு கணத்தில் மனம் தில்லியில் தன் கண்ணெதிரே பஸ்ஸின் சக்கரத்திற்கு அடியில் மாட்டி நசுங்கிய சீனுவை

எண்ணியது. அடுத்த கணம் அங்கே நடந்த விபரீதம் உறைத்தது.

''பானூ...'' என்று அலறிக் கொண்டே முன்னால் ஓரடி எடுத்து வைத்தவள், ''அம்மா போகாதீங்கம்மா... வேணாம்மா'' என்று யாராலோ தடுக்கப்பட அப்படியே மயங்கிச் சரிந்து விழுந்தாள்.

பானு மேலே எழுவதை விஜயா சுந்தர் பார்த்தாள். அவளுடன் வந்து கொண்டிருந்த இளைஞனும் பார்த்தான்.

சாலையில் என்ன வந்து கொண்டிருக்கிறது என்று கவனிக்காமல் அந்த இளைஞன் பானுவை நோக்கிப் பாய்ந்தான்.

அந்த நேரத்தில் ஒரு அரசு பஸ் வேகமாக வந்து கொண்டிருந்தது. ஸ்டாப்பிங்கில் நின்று கொண்டிருந்த இன்னொரு பஸ், கண்டக்டரின் டபிள் விசிலால் ஆக்ரோஷமாகப் புறப்பட்டது.

வெடிக்கும் ஓசை கேட்டவுடன் பஸ் டயர்தான் வெடித்து விட்டதென இரண்டு பஸ்களின் டிரைவர்களும் சடாரென்று பிரேக்குகளை அழுத்தினார்கள்.

அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த அத்தனை வண்டிகளும் 'கீய்ங்க்' என்று டயர் தேய ப்ரேக் போட்டு நின்றன. ஒன்றிரண்டு இடித்துக் கொண்டன.

ஆனால் அந்த இளைஞன் அவற்றையெல்லாம் கவனிக்காமல் பாய்ந்து வந்தான். ஒரு சைக்கிள்காரனை மோதித் தள்ளினான். ஒரு சைக்கிள் ரிக்ஷாவின் முன் சக்கரத்தை வானொலி நிலைய காம்பவுண்டிற்குள் தள்ளினான்.

கீழே விழப்போன பானுவை இரு கைகளாலும் ஏந்தினான்.

இத்தனையும் இரண்டே இரண்டு விநாடிகளுக்குள் நடந்து முடிந்து விட்டன. ஒலிம்பிக்கில்கூட இந்த வேகத்தில் எதுவும் நடைபெற்றிருக்க முடியுமா என்பது சந்தேகமே.



பானுவின் கையில் வெடித்துச் சிதறிய கல் ஒன்று தாக்கி இருந்தது. அந்தக் கல்லும், வெடித்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியும் சேர்ந்து அவளை உயரத் தூக்கி வீசி இருந்தன. பானு கண்களை மூடி இருந்தாள். கையில் ரத்தம் வழிந்தது. மயங்கி இருந்தாளா, இல்லை இறந்து விட்டாளா என்று அந்த இளைஞனுக்குப் பதைப்பாக இருந்தது.

"சிவா... ஓடி வாங்க. ஓடி வாங்க. இன்னும் ஏதாவது வெடிச்சிரப் போவுது'' என்று வானொலி நிலையத்தில் யாரோ குரல் கொடுத்தார்கள்.

சிவா, கையில் ஏந்திய பானுவுடன் உள்ளே ஓடினான்.

''ஐயோ, குழந்தையை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போகணும். உடனே ஒரு வண்டியை எடுங்க. யாராவது ஒரு போலீஸ் ஆபீஸர் கூட வந்தா நல்லது. ஹாஸ்பிடல்ல கேள்வி கேக்க மாட்டாங்க'' என்று கத்தினான் சிவா.

வெளி விழாக்களுக்காக ரெகார்டிங்கிற்குச் செல்லும் வேன் ஒன்று புறப்பட்டு சிவாவின் அருகில் நிற்க சிவா, பானுவுடன் அந்த வேனில் ஏறினான்.

அந்த வெடிகுண்டு அப்படி ஒன்றும் சக்தி வாய்ந்த வெடிகுண்டு இல்லை என்று போலீஸ்காரர்கள் தீர்மானத்திற்கு வந்தார்கள்.

வானொலி நிலையத்தின் காம்பவுண்ட் சுவருக்கு வெளியே ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் தொழிற் கருவிகள் எல்லாம் வைக்கப்பட்ட பை ஒன்றில் அந்த வெடி குண்டும் வைக்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

செருப்பு தைப்பவனைக் காணவில்லை. வெடிகுண்டு எப்போது அதில் கொண்டு வந்து வைக்கப்பட்டது என்ற விவரம் கண்டு பிடிக்கப்பட முடியவில்லை. போலீஸ்காரர்கள் தீவிர விசாரணையில் இறங்கி விட்டார்கள். ரேடியோ ஸ்டேஷ

னுக்குள் எந்த குண்டும் இல்லை என்று நாய்களின் மோப்ப சக்தியும், வெடிகுண்டைக் கண்டு பிடிக்கும் பரிசோதனைக் கருவியும் சேர்ந்து தீர்மானம் செய்தாகி விட்டது.

ஆனால் பாரதியின் வாழ்க்கைதான் மிகப் பரிதாபத்திற் குரியதாக மாறிவிட்டது.

## 6

ஆஸ்பத்திரியில் பானு கண்களை விழித்தாள். பக்கத்தில் உட்கார்ந்திருந்த பாரதிக்கு பானு கண்களை விழிப்பதைப் பார்த்த பின் தான் உயிர் வந்தது. பாரதியின் மயக்கம் தெளி விக்கப்பட்டதும், அவள் மார்புச் சேலை விலகியது தெரி யாமல் அரற்றியதும், விஜயா சுந்தர் அவளைத் தேற்றி, பாண்டிச்சேரியில் இருந்து புதிதாக மாற்றல் ஆகி வந் திருக்கும் அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் டைரக்டர் சிவசுப்பிர மணியன்தான் பானுவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போயிருக்கிறான் என்று சொன்னதும், ஆஸ்பத்திரியிலிருந்து சிவா போன் பண்ணிப் பானுவிற்கு ஒன்றுமில்லை என்று சொன்னதும், பானுவின் தாத்தா, பாட்டிக்குத் தகவல் போனதும், எல்லோரும் ஆஸ்பத்திரி நோக்கிப் போனதும் எப்படியோ நிகழ்ந்த நிகழ்வுகள். எழுவது, சாப்பிடுவது போல அவையெல்லாம் வெகு தன்னிச்சையாக நடந்து விட்டன.

இப்போது அதெல்லாம் முக்கியமில்லை.

பானு கண் விழித்து விட்டாள்.

அதுதான் முக்கியம்.



பாரதியின் கன்னங்களில் கண்ணீர் சரம் சரமாய் இறங் கியது. துக்கத்தின் உச்சமும், இன்பத்தின் உச்சமும் ஒன்று என்பது போல் பானு கண்களைத் திறந்தது பாரதிக்கு இன்பத்தின் உச்சமாகத் தோன்றியது.

அதனால் அவள் கண்களில் இருந்து நீர் வழிந்தது.

'கடவுளே நன்றி. முருகா நன்றி. வெங்கடாஜலபதி நன்றி. ஐயப்பனே நன்றி. சிவனே நன்றி. விநாயகனே நன்றி.'

பாரதி சற்று நேரம் கண்களை மூடியிருந்தாள். இதயத்தின் படபடப்பு மெல்ல மெல்லக் குறைந்து நிதானத்திற்கு வந்து கொண்டிருந்தது.

''அம்மா'' என்றாள் பானு.

பாரதி கண்களைத் திறந்தாள். அப்படியே பாய்ந்து பானுவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

பானுவின் இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்த மிட்டாள்.

''ஐயோ; பானு... பானு... எப்படிம்மா இருக்கே? வலிக் குதா? இல்லையே? பயந்துட்டியா? இல்லையே? நான் துடிச்சிப் போய்ட்டேன்டா ராஜாத்தி. நீ மட்டும் செத்துப் போயிருந்தேன்னு வச்சிக்க... நானும் உயிரோட இருந்திருக்க மாட்டேன். செத்துப் போயிருப்பேன். நீ பொழைச்சிட்டே. என்னைப் பொழைக்க வச்சிட்டேடா கண்ணம்மா. என்ன வேணும் கண்ணம்மா? ஒனக்கு என்ன வேணும் சொல்லு... நான் தரேன்... நான் இருக்கேன்டா ராஜாத்தி. ஒன்னை எப்படி யாவது காப்பாத்திடணும்னுதாண்டா உயிரைக் கையில பிடிச்சிக்கிட்டு இருந்தேன். என்ன வேணும்டா சொல்லுடா கண்ணம்மா.''

''எனக்கு அப்பா வேணும்மா'' என்றாள் பானு.

பாரதி தலையில் ஒரு கூடை நிறைய நெருப்பை அள்ளிக் கொட்டிய மாதிரி இருந்தது. என்ன சொல்கிறாள் இவள்!

''பானு'' என்றாள் பாரதி, பரிதாபமாக.

''நான் எப்படிம்மா இங்க வந்தேன்? இது ஆஸ்பத்திரி மாதிரி இருக்கு?''

''மாதிரி இல்ல பானு ஆஸ்பத்திரியேதான். நீ அம்மாவைத் தேடிட்டு வந்தே இல்ல? அப்ப வந்து ஒரு பாம் வெடிச்சிருச்சி. ஒம்மேல ஏதோ கல்லு வந்து மோதி அப்படியே நீ பறந்து போய்ட்டே. நீ கீழ விழாம ஒரு அங்க்கிள் உன்னைக் கையில பிடிச்சிட்டாரு... ஆனாலும் நீ மயக்க மாய்ட்டியா. அதனாலத் தான் ஒன்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வந்துட்டோம்.''

''நான் மேல பறக்கலம்மா.''

''மேலே தூக்கி எறிஞ்சிரிச்சி.''

''ஐயோ, அதுகூட இல்லேம்மா.''

''பின்னே?''

''என்னை மேலேருந்து யாரோ தூக்கினாங்க! என் கை ரெண்டையும் புடிச்சி மேலே தூக்கி விட்டாங்க.''

''ரொம்ப பயந்து போயிருக்க பானு. அதான் இப்படியெல் லாம் பேசறே. யாரு ஒன்னை மேலேருந்து தூக்க முடியும்? அந்த பாம் வெடிச்சது. அந்த ஷாக் உன்னை அப்படியே தூக்கி எறிஞ்சிடுச்சி. நீ கீழ விழுந்துட்டே. விழறதுக்குள்ளே ஒரு அங்க்கிள் உன்னை அப்படியே கைல பிடிச்சிட்டாரு. அது போகட்டும். என்ன சாப்பிடறே சொல்லு! ஹார்லிக்ஸ்? போர்ன்விடா? காம்ப்ளான்?''

''கை வலிக்குதும்மா.''

பாரதி பானுவின் கட்டுப் போட்டிருந்த கையைப் பார்த் தாள். நல்லவேளை எலும்பு முறிவு எதுவும் இல்லை. சதையைக் கிழித்திருந்தது. எலும்பில் மோதி விழுந்திருக்



கலாம் என்று டாக்டர் யூகித்திருந்தார். அதனால் வலி இருக்கும் என்று பெயின் கில்லர் ஊசியெல்லாம் போட்டு விட்டார். கையில் போடப்பட்டிருந்த கட்டை மீறி கை வீங்கியிருந்தது தெரிந்தது.

மெல்ல வருடி விட்டாள்.

''சீக்கிரமே சரியாப் போய்டும்டா கண்ணு'' என்றாள் ஆறுதலாக.

''அம்மா.''

''என்னம்மா?''

''இன்னிக்கு ஸ்கூல்ல எனக்கு ரொம்ப அவமானமாப் போய்டிச்சிம்மா.''

''ஏம்மா?''

''ஒவ்வொரு கேர்ள்ஸ்கிட்டயும், பாய்ஸ்கிட்டயும் மிஸ் வந்து 'வாட் இஸ் யுவர் ஃபாதர்'னு கேட்டாங்கம்மா. ஒவ்வொருத்தியும் 'மை ஃபாதர் ஈஸ் அன் இன்ஜீனியர்', 'மை ஃபாதர் ஈஸ் எ டாக்டர்'னு சொல்லிட்டிருந்தா. அவர்களுக் கெல்லாம் என்ன ப்ரவுடுங்கறே. மிஸ் என்னை கேட்டாங்க, 'வாட் இஸ் யுவர் ஃபாதர்'னு. நான் என்னம்மா சொல்றது. 'மை பாதர் ஈஸ் நத்திங்'னு சொல்லிட்டேன். எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்கிறாங்கம்மா. எனக்கு ஒரே ஷேம் ஷேமாப் போய்டிச்சி... அழுகை, அழுகையாக வந்தது. அழக்கூடா துன்னு நீ சொல்லியிருக்கேதானே? அதனால நான் அழல...''

பாரதிக்கு அழுகை வந்தது. குழந்தை முன்னால் அழுதால் அது பானுவை சித்ரவதைப்படுத்துகிற மாதிரி என்று தோன்றியது. அதனால் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கண்ணில் பொங்கிய கண்ணீரை மகள் அறியாமல் சுண்டி விட்டுத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா என்னைப் பாரும்மா.''

''என்னடா? ஒனக்கு பசிக்கலே? ஒரு டம்ளர் ஹார்லிக்ஸ் கரைச்சித் தரேனே.''

''போம்மா. எப்பப் பார்த்தாலும் சாப்பாடு. ஹார்லிக்ஸ், காம்ப்ளான். ஒனக்கு என்னைப் பார்த்தா வேற எதுவும் பேச ணும்னு தோணாதா?''

''நீ எதுக்கு இன்னிக்குப் போய் அம்மாவைப் பார்க்கணும்னு வந்தே?''

''அதான் சொல்ல வந்தேன். அதுக்குள்ளே நீ ஹார்லிக்ஸ் குடிக்கறியான்னு கேக்கறியே?''

''சரி. சொல்லு. நீ சொல்லி முடிக்கிற வரைக்கும் அம்மா எதுவும் கேக்க மாட்டேன்.''

''அப்புறம் ஸ்கூல்ல என்ன ஆச்சி தெரியுமா? மிஸ் மத்த கேர்ள்ஸைப் பார்த்து 'கேர்ள்ஸ், கீப் கொய்ட்'னு சொல்லிட்டு என்னைப் பார்த்து, 'பானு, வேர் ஈஸ் யுவர் ஃபாதர்'னு கேட்டாங்க. நீதானே சொன்னே. அப்பா சாமிகிட்டப் போயிருக்காருன்னு. அதனால நான் மிஸ் கிட்டக்க, 'மை ஃபாதர் ஹாஸ் கான் டு ஹெவன் டு மீட் தி காட்'னு சொன் னேம்மா. மிஸ் சைலன்டா ஆயிட்டாங்க. ரேவதி தான் எனக்குப் பக்கத்தில உட்காந்திருக்கா. அவ என் காதுல வந்து 'உங்கப்பா செத்துப் போய்ட்டாரா? செத்துப் போனாத்தான் சாமிகிட்ட போய்ட்டதா சொல்லுவாங்க. இனிமே அப்பா திரும்பி வரமாட்டாங்கடி பானு'ன்னு சொல்லிட்டாம்மா. ரேவதி, கூவதி; ஏம்மா, நீ சொல்லு... அப்பா திரும்பி வருவாரா மாட்டாரா? நான் நாளைக்கு ஸ்கூலுக்கு எங்கப்பா வோட வரேன்டின்னு சொல்லிட்டு வந்திருக்கேன். அப்பா எங்கேம்மா. அவர் வருவாருன்னு சொன்னியே. எப்ப வருவாரு. நீ ஆபீஸ்லேர்ந்து வீட்டுக்கு வரும்போது அப் பாவைக் கூட்டிக்கிட்டு வரணும்னு சொல்றதுக்காகத்தான் நான் ஒன்னைப் பார்க்கணும்னு சொன்னேன் எனக்கு டாடி



வேணும். இப்பவே வேணும். இல்லாட்டா சொல்லு. நானும் சாமிகிட்டயே போய்டறேன். டாடியைக் கூட்டிட்டு வந் துடறேன். சொல்லும்மா. ஐ வான்ட் மை டாடி மம்மி ஐ வாண்ட் மை டாடி...''

பானு அழத் தொடங்கினாள்.

பாரதியால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. பானு கண்ணெதிரில் அழக்கூடாது என்று நினைத்தும் கட்டுப் படுத்த முடியாமல் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

இந்த மாதிரி ஒரு நிலையில் அவளை வைத்த கடவுளின் மேல் கோபம் கோபமாக வந்தது.

கடவுளே... என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?

கடவுளே... பானுவை எப்படி சமாதானப்படுத்துவேன். 'சாமி கிட்டப் போய்டறேன்' என்று பானு சொல்லுமளவுக்குப் போய் விட்டாளே.

சீனு... இப்படி நான் அல்லாட வேண்டும் என்றுதான் எங்களை விட்டுப் போய் விட்டீர்களா, சீனு.

உங்கள் பெண் சொல்வதைக் கேட்டீர்களா சீனு...

சீனு... ப்ளீஸ்.. என்னைக் காப்பாற்றுங்களேன்.

''ஏய் பாரதி... என்ன இது சின்னக் குழந்தைதான் ஏதோ தெரியாமல் சொல்கிறது என்றால், நீயும் ஏன் இப்படி புலம்புகிறாய்?'' என்று ஒரு குரல் கேட்டது.

அந்தக் குரல் பானுவின் குரல் போலவும் இருந்தது. ஓர் ஆணின் குரல் போலவும் இருந்தது.

யார்? யார் அது?

பாரதி திடுக்கிட்டுப் போய் பானுவின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

பானு பாரதியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் ஒரு மாதிரி இறுகிப் போயிருந்தது. முகத்தில் அங்கங்கே வேதனைக் கோடுகள்.

''பானு... என்னம்மா ஆச்சி ஒனக்கு?'' என்று பதைத்துப் போய் பாரதி கேட்டாள்.

பானு பதில் சொல்லவில்லை.

அங்கே விநோதமான ஒரு விவகாரம் பாரதியின் கண் முன் நடந்தது.

பானு மயக்கத்திலிருந்து கண் விழித்தபோது இரவு மணி ஏழு. ஆஸ்பத்திரி அறையில் பொருத்தப்பட்டிருந்த குழல் விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியே வராந்தா தெரிந்தது. வராந்தாவைத் தாண்டி பரந்த மைதானம். அந்த ஆஸ்பத்திரியின் அமைப்பு அப்படி இருந்தது.

ஜன்னல் வழியே ஆகாயத்தின் நட்சத்திரங்கள் தெரிந்தன. நிலவு இல்லை. அடர்த்தியான மேகங்களுக்கிடையே அது எங்கோ காணாமல் போய் இருந்தது.

வெளியில் இருளின் ஆதிக்கம் நிகழ்ந்து கொண்டிருந்த அந்த நேரத்தில், ஆஸ்பத்திரியில் பானு அறைக்குள் இருந்த விளக்கு சட்டென்று அணைந்தது.

''பானு... பயப்படாதே பானு...'' என்றாள் பாரதி.

விளக்கு அணைந்தது அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது. நெஞ்சில் ஏனோ படபடப்பு கூடியது. என்னவோ நடக்கப் போகிறது என அவளது உள்ளுணர்வு அவளுக்குச் சொல்லியது.

திடீரென காற்று ஜில்லென்று அடிக்கத் தொடங்கியது. மழை ஈரத்தைச் சுமந்து வரும் காற்று ஈரப்பதத்துடன் இருக்குமே. அது போலத்தான் இந்தக் காற்றும் மலைப் பிரதேசப் பனிக்காற்று போல் ஊசிக்குத்தலாய் ஜில்லென்று இருந்தது.



பானு இருந்த கட்டிலில் இருந்து 'ஹஔர்ரய்ங்' என்று ஓர் உறுமல் கேட்டது.

''பானு... பயப்படாதே... இதோ மெழுகுவர்த்தி ஏத்திட றேம்மா'' என்று பாரதி தட்டுத் தடுமாறி எழுந்து கொண்டாள். ''சிஸ்டர் சிஸ்டர்'' என்று உரக்கக் கத்தினாள்.

''யாரும் வரமாட்டாங்க பாரதி'' என்று மறுபடி குரல். ஐயோ பானுவின் குரல் ஏன் இப்படி இருக்கிறது. அவளுடைய குரல் எவ்வளவு இனிமையாக இருக்கும்! இது அவளுடைய குரலாகவும் இல்லாமல், ஒரு வளர்ந்த ஆண் மகனின் குரலாகவும் இல்லாமல் இரண்டுங்கெட்டானாக ஏன் இருக்கறது. ஏன் பானு 'பாரதி' என்று பெயர் சொல்லி அழைக்கிறாள்? ஒரு நாளும் குழந்தை இப்படி நடந்து கொண்டதே இல்லையே.

''பானு... பானு...'' என்று அழைத்தாள். பதிலில்லை. மறுபடி ஒரு ஹஔங்காரம்.

பாரதி எழுந்து மேசையருகே ஓடினாள். மேசையின் முனை அவள் இடுப்பு எலும்பை மோதியது. வலித்தது. அபரிமிதமான வலி. அவள் காலின் சுண்டு விரல் ஒன்றை கட்டில் காலில் மோதியது. அதுவும் உயிர் போகிற மாதிரி வலித்தது.

பாரதி பொறுத்துக் கொண்டாள். என் செல்லத்திற்கு என்னவோ ஆகிவிட்டது. என் கண்மணிக்கு ஏதோ நேர்ந்து கொண்டிருக்கிறது. பானு... பானு... மூளை கீளை புரண்டு விட்டதா? ஹெமரேஜ் ஏதாவதா?

பாரதி மேசை டிராயரை இழுத்தாள். அதில் இருந்த மெழுகுவர்த்தி கடகடவெனப் புரள்வது கேட்டது. தீப்பெட்டி உட்

புறத்திலிருந்து முன் பக்கத்திற்குத் தேய்த்துக் கொண்டு வருவது கேட்டது.

அவள் கை டிராயரில் நுழைந்து மெழுகுவர்த்தியைப் பற்றியது. தீப்பெட்டியை எடுத்தது. பாரதியின் கைகள் அவளையறியாமலேயே நடுங்குவது தெரிந்தது.

சே, என்ன நடுக்கம் இது? எதற்கு இந்த நடுக்கம்? பானுவிற்கு ஒன்றுமில்லை. ஒன்றுமேயில்லை. பயப்படாதே. நடுங்காதே. பயப்படாதேடி பாரதி.

பாரதி தீக்குச்சியை உரசினாள். ஜ்வாலை நீலமாக எரிந்தது. பின் சிகப்பாக மாறியது. மெழுகுவர்த்தியின் திரியில் தீயைப் பொருத்தினாள்.

சட்டென்று ஒரு கொத்துக் காற்று அறைக்குள் சத்தத் துடன் நுழைந்தது.

'உஷ்ஷ்' என்று பாம்புச் சீறலாய் காற்றின் சத்தம் கேட்டது. அது ஜன்னலில் இருந்து பயணம் செய்து கொண்டே வந்த மாதிரி 'உஷ்' சத்தம் ஜன்னலருகே தொடங்கி, டாப்ளர் எஃபக்டில் உஷ் சத்தத்தின் சுருதி மறி கொஞ்சம் கொஞ்ச மாய் அதிகரித்து அவளை நெருங்கியது.

அவளைக் காற்று நெருங்கியது.

உஷ்ஷ்ஷ்ஷ்...

மெழுகுவர்த்தி அணைந்தது.

காற்று அவளைக் கடந்து மறுபடியே ஜன்னல் வழியே வெளியேறியது. அப்போதுதான் பாரதி இன்னொன்றைக் கவனித்தாள்.

காற்றில் என்னவோ ஒரு விதமான கெட்ட நாற்றம் கலந்திருந்தது. அடிபட்டு, பாதி உடல் காணாமல் போய், மீதி உடல் வீட்டு ஹாலில் கிடத்தட்டப்பட்டிருந்த போது,



சீனுவின் உடலில் இருந்து அந்த நாற்றம் வீசியதை பாரதி உணர்ந்திருக்கிறாள். உறைந்து போன ரத்தமும், கூழாகி அழுகிப் போன சதையும், கிருமிகளால் தாக்கப்பட்டு வீசிய நாற்றம். அதே துர்நாற்றம் இப்போது காற்று கடந்த போதும்.

''பானு... பானு...'' என்றாள் பாரதி. பதட்டம், கையாலா காத்தனம், பயம் எல்லாமே அந்தக் குரலில் கலந்திருந்தன.

ஒரே ஒரு சிரிப்புச் சத்தம் மட்டும் கேட்டது. அதே மாதிரி இரண்டுங்கெட்டான் குரலில்.

பாரதியின் முதுகுத் தண்டில் ஜிலீரிட்டது. அவளது தண்டு வடத்தின் அடிப்பகுதியில் அந்த ஜிலீர் தொடங்கி சர சரவென மேலேறி மூளையைத் தாக்கியது.

மரண அவஸ்தை. இன்பமும், வேதனையும் பாதிப் பாதி யாகக் கலந்ததொரு உணர்வு.

பாரதி ஓடினாள். ஜன்னல் கதவைச் சாத்தினாள். கொக்கி போட்டாள். இருட்டில் அந்த அளவு அவளுக்குப் பழக்கம் வந்திருந்தது. மறுபடி மெழுகுவர்த்தியை ஏற்றினாள்.

இந்த முறை ஜன்னலினுள் நூல் போன்ற இடைவெளியின் ஊடே காற்று பேய்த்தனமாக உள்ளே போக முயற்சி செய்தது. 'ஜூம்', 'ஜூம்' என்று அறைக்குள் சத்தம். டபடபவென்று எதுவோ அடித்துக் கொள்ளும் சத்தம். காற்றில் கம்பியில் க்ளிப் போட்டு உலர்த்தப்பட்ட துணி அடித்துக் கொள்ளுமே அது போல. ஏதோ ஒரு நாய் திடீரென ஊளையிட்டது. அதன் ஊளையிடும் ஒலி பாரதியின் ஒவ்வொரு நரம்பிலும் நுழைந்தது. அவள் மிரளவில்லை. பருந்தின் பிடியில் இருந்து குஞ்சைக் காப்பாற்ற, தன் சிறகுகளை இரும்புத் திரைகளாகப் பயன்படுத்தும் தாய்க்கோழியின் நிலையில் அவள் இருந்தாள்.

மெழுகுவர்த்தியை ஏற்றி விட்டாள்.

திரி பெரிதாக எரிந்தது. அதை உள்ளங்கையால் பொத்தி, காற்று அந்த ஜோதியைக் கலைக்காத வண்ணம் பாதுகாத்துத் திரும்பி, பானுவின் பக்கம் சுடரை நீட்டினாள்.

''பானூ ஊ ஊ ஊ'' என்றாள் ரகசியமான குரலில். நெஞ்சம் பதைபதைக்க.

பானு கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அவள் உடல் குளிர்பதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த உரித்த கோழி போல் விறைத்து இருந்தது. இறந்து போன சவத்தின் உடலில் ரிகர் மார்ட்டிஸ் செட் ஆனது போல் இருந்தது.

பானுவின் கண்கள் பாரதியை உற்று நோக்கின.

அந்தக் கண்கள் இருட்டில் நடக்கும் வண்டி மாடுகளின் கண்கள் வெளிச்சம் பட்டுப் பளபளவென மின்னுவதைப் போல் மின்னின.

''பானு... பானு...'' என்றாள்.

''நான்தான் பாரதி.''

''நான்தான்னு சொன்னா என்ன அர்த்தம்? பானு... என்னடா கண்ணு. என்ன பண்ணுது ஒனக்கு?''

''பானுவுக்கு ஒண்ணும் பண்ணல பாரதி. கவலைப் படாதே. குண்டு வெடிச்சபோதுகூட நான்தான் பானுவை மேல தூக்கிக் காப்பாத்தினேன். ஒனக்கு அது கூடத் தெரி யலையா?''

''யார் நீ? யாரு? யாரு?''

''நான்தான் பாரதி. நானேதான். வேற யாரா இருக்க முடி யும்னு நெனைக்கறே? பானுவை எப்படித் தூக்கினேன்னு காட்டட்டுமா?''



பாரதி அப்படியே உறைந்து போய் பார்த்துக் கொண் டிருந்தாள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்த குழந்தை பானுவின் கைகளை யாரோ பிடித்து உயர்த்திய மாதிரி உயர்த்திக் கொண்டன.

பானு அப்படியே கட்டிலில் இருந்து எந்த ஆதாரமும் இல்லாமல் மேலே எழத் தொடங்கினாள்.

அவள் கைகள் மேலே உயர்ந்தன. அவள் கால்கள் அப் படியே கீழே தொங்கின. பானுவின் கண்கள் அகல விரிந்தன. ஆயிரம் ஊசிகள் உடலெங்கும் குத்தும்போது உணர்ந்து அனுபவிக்கும் வேதனை அந்தப் பால் வடியும் முகத்தில் தெரிந்தது. பானுவின் வாய் '0' போல் வட்ட வடிவமாகப் பிளந்தது. முகத்தில் இருந்த ரத்தமெல்லாம் வடிந்து பானுவின் முகம் வெளிறிப் போய் இருந்தது. அவள் உடல் முழுக்க நடுக்கம் ஊடுருவி இருந்தது. பானுவின் கை விரல்கள் அப்படியே அறையின் மேற்கூரையைத் தொட்டன. அவள் கால்கள் அப்படியே அந்தரத்தில் தொங்கின.

பாரதியின் இதயம் வெடித்து விடும் நிலைக்கு வந்து விட்டது.

பானுவின் வாயில் இருந்து மறுபடி அந்தச் சிரிப்பு உதிர்ந்து வழிந்தது.

''பானு'' என்று அலறிக் கொண்டே, கட்டில் விளிம்பில் நெற்றியை மோதிக் கொண்டு கீழே விழுந்தாள் பாரதி.

மெழுகுவர்த்தி அணைந்து அவள் கையில் இருந்து நழுவி உருண்டது. அணைந்த திரியில் இருந்து எழுந்த புகை, அறையில் ஏற்கனவே இருந்த ஒருவித நாற்றத்துடன் கலந்து வினோத மணத்தால் அறையை நிரப்பியது.

# 7

பாரதி கண்விழித்தபோது அவளும் ஒரு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்ததை உணர்ந்தாள். தலை வலித்தது. உடம்பெல்லாம் ஒரு உருளையில் கொடுத்துப் பிழியப்பட்டதைப் போல மிகவும் களைப்பாக உணர்ந்தாள்.

சற்று நேரத்திற்கு அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன ஆயிற்று? எங்கே இருக்கிறோம்? எதற்காகக் கட்டிலில்? ஏன் தலையில் வலி? உடும்பு ஏன் ராட்சதக் கையால் அடி வாங்கினது போல் இப்படி ஒரேயடியாகத் தொய்ந்து போயிருக்கிறது? ஒன்றும் என்றால் ஒன்றுமே புரியவில்லை.

அதன் பிறகுதான் திடீரென நினைவிற்கு வந்தது.

பானு!

ஐயோ குழந்தை பானு!

அப்படியே கட்டிலில் மேலே உயர்ந்தாளே. கைகளால் அறைக் கூரையைத் தொட்டாளே. அவள் முகம் சித்ரவதையை அனுபவிக்கிற மாதிரி வேதனை நெருப்பைக் கொட்டியதே. முகத்தில் இருந்த ரத்தத்தையெல்லாம் யாரோ உறிஞ்சிக் குடித்துவிட்ட மாதிரி ஒரேயடியாக வெளிறிப் போய்த் தெரிந்ததே.

பானு... என்ன ஆயிற்று பானு...

சடக்கென கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். தன்னைச் சுற்றிலும் பார்த்தாள். பக்கத்து கட்டிலில் பானு தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது மார்புக்கூடு சீராக இறங்கி ஏறிக்



கொண்டிருந்ததைப் பார்த்த பின்தான் அவள் மனம் ஓரளவு அமைதிப்பட்டது.

ஓரளவுதான். மற்றபடி அவள் மனதில் ஒரு பெரும் திகில் பரவி இருந்ததை அவளால் உணர முடிந்தது.

சுற்றிலும் பார்த்தாள்.

காலை நேரம். விடிந்து இருந்தது. அப்படியானால் நேற்று இரவு முழுவதும் இப்படியே மயங்கி விழுந்து கிடந்தாளா?

வெளியே மைதானத்தில் இருந்த ஒரு மரத்தில் கூடு கட்டியிருந்த பறவைகள் **சிக்**, சிக் என்றும் குக், குக் என்றும் சிட், சிட் என்றும் **தத்தம்** பிராந்திய மொழியில் பேசிக் கொண்டிருந்தன. என்ன**வோ** ஒரு பறவை மட்டும் சங்கீத சாதகம் போல் வினோதமாக 'ஙீ' என்று நீளமாகப் புல்லாங்குழல் இசையாக இழுத்துக் கொண்டிருந்தன.

"அம்மா."

அந்தக் குரல் பாரதியை ஒரு முறை தூக்கி வாரிப் போட்டது. பானுதானே அழைத்தாள்? பானுதான்! அப்பாடி... கடவுளே நன்றி.

அவள் குரல் பழையபடி அதே மழலையுடன் இருந்தது.

"பானு" என்றாள் பாரதி.

அப்படியே பாய்ந்து சென்று அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"ஒனக்கு என்ன ஆச்சிடா கண்ணு?" என்று கேட்டாள் பாரதி.

"எனக்கா? எப்ப?"

"நேத்து ராத்திரி, நேத்து ராத்திரிதான்?"

"எனக்கு ஒண்ணுமே ஆகலையேம்மா. நீதான் திடீர்னு கீழே விழுந்துட்டே. தொப்புன்னு நீ விழுந்த சத்தம் கேட்டது.

நான் தூங்கிட்டிருந்தேன். கண்ணு முழிச்சிப் பார்த்தா ஒன் தலையில் அடிபட்டு ரத்தம் வந்துக்கிட்டிருந்தது. உடனே நான் போய் சிஸ்டரைக் கூட்டிட்டு வந்தேன். பாட்டிக்கும், தாத்தாவுக்கும் போன் பண்ணிச் சொன்னேன். நீ எனக்கு என்னவாவது ஆயிடுமோன்னு பயந்து பயந்து மயங்கி விழுந்துட்டேன்னு டாக்டர் சொன்னார்மா. ஒனக்கு ரெஸ்ட் வேணும்னு சொல்லி ஒரு இன்ஜெக்ஷன் போட்டாரு. நல்லாத் தூங்கிப் போய்ட்டே. பாட்டியும், தாத்தாவும் இங்க வந்து உன்னைப் பார்த்துட்டுத் திரும்பிப் போனாங்க. ஏம்மா கவலைப்படறே? எனக்கு ஒண்ணும் ஆகாது.''

பாரதி அவள் சொன்னதைக் கேட்டு திகைத்துப் போனாள். தகப்பன் சுவாமி போல் பானு அவளுக்கு ஆறுதல் சொல்கிறாள். அப்படியானால் நேற்று இரவு தான் கண்ட காட்சி எல்லாம் கனவா? தன்னுடைய மனம் தான் அப்படி அனாவசியக் கற்பனைகளை எல்லாம் வளர்த்துக் கொண்டிருக்கிறதா?

''ஏய் பானு... ராத்திரி கரன்ட் போச்சே. அப்ப ஏன் நீ என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டே?''

''மம்மி'' என்றாள் பானு ஆச்சரியமாக. ''எப்ப அம்மா கரண்ட் போச்சி? நான் எங்க உன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டேன்? ஏதாவது கனவு கண்டியா?''

கனவாகத்தான் இருக்க வேண்டும். பானுவிற்கு ஒன்றும் ஆகி விடக்கூடாது என்ற ஆதங்கத்தில் மனம் தன்பாட்டிற்கு என்னென்னவோ டிராகன் சித்திரங்களை எல்லாம் வரைந்து பார்த்திருக்கிறது.

''அம்மா.''

பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்த பாரதி சிலிர்த்துப் போய்த் திரும்பினாள்.



''என்ன பானு?''

''பசிக்குதும்மா'' என்றாள் பானு.

பாரதி ஆபீஸை மறந்து விட்டாள். ஆஸ்பத்திரி பாத்ரூமிலேயே குளித்து உடைமாற்றிக் கொண்டாள். கண்ணாடியில் பார்த்தபோது நெற்றியின் பக்கவாட்டில் இருந்த பிளாஸ்திரி கொஞ்சம் உறுத்தலாக இருந்தது. பானு அந்தரத்தில் மிதந்து செல்வதைப் பார்த்துத் திகிலடைந்து மயங்கி விழுந்ததில் எங்கேயோ மோதி ஏற்பட்ட காயமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவளுடைய ஒரு பக்க மனது அடித்துச் சொன்னாலும், இன்னொரு பக்கம் பானு அப்படியெல்லாம் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொன்னதை நம்பியது. எதுவோ மனித சக்திக்கு மீறிய விஷயம் ஒன்று நடந்து விட்டது என்று நினைத்துக் கொள்ளும் மனதிடம், அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை என்று சொன்னால் ஆறுதலாகத் தானே இருக்கும்?

எந்த பானு அந்தரத்தில் மிதந்ததாக அவள் நினைத்தாளோ அதே பானு அப்படி ஒன்றும் நேரவில்லை என்கிறாள். படுத்து எழுந்து பார்த்தால் பாரதி மயங்கி இருப்பதைக் கண்டதாகச் சொல்கிறாள்.

குழந்தைக்கு எவ்வளவு பொறுப்புணர்வு? அவளே போய் நர்ஸை அழைத்து வந்திருக்கிறாள். அவளே போய் போன் செய்து அம்மா, அப்பாவை வரவழைத்திருக்கிறாள்.

குழந்தைக்குப் பசிக்கிறது என்றாளே.

பாத்ரூமில் இருந்து வெளிப்பட்டு ஆஸ்பத்திரி கான்டீனுக்குப் போகலாம் என்று நினைத்த நேரத்தில் கதிரேசனும், அழகம்மையும் வந்து விட்டார்கள்.

''அழகக்கா, மாமா'' என்றாள் பாரதி, ஏனோ தெரியவில்லை. அவளை அறியாமல் கண்களில் நீர் பொங்கியது.

ஆறுதல் இன்றித் தவிக்கும் மனதிற்கு ஒரு சுமை தாங்கியாக அவர்கள் தோன்றினார்கள்.

''பாரதி, ஒண்ணும் ஆகாது. பானுவுக்கு ஒண்ணுமே இல்லை. எதுக்கு அனாவசியமா பயப்பட்டு மயங்கி எல்லாம் விழறே. பார். நெத்தில அடி. நிறைய ரத்தம் போயிருந்ததுன்னு நேத்து அம்மா வந்து சொன்னாங்க. பைத்தியம், பைத்தியம், தைரியமா இரு. நாங்க எல்லாம் இருக்கோம்'' என்று அழகம்மை அவள் கைகளைப் பற்றி ஆறுதல் கூறினாள். கதிரேசன் பாரதியின் முதுகைத் தட்டி வருடிக் கொடுத்தார்.

எட்டு, ஒன்பது மாதங்களாக அவர்கள் குடும்பத்துடன் இல்லாத அன்யோன்யம் இவ்வளவு சீக்கிரம் இரண்டே நாட்களில் உருவானது பாரதிக்கு சந்தோஷம் கலந்த ஆச்சரியமாக இருந்தது.

யாராக இருந்தாலும் சரி, மனிதர்கள் உண்மையான அன்பிற்கு ஏங்கிக்கொண்டே இருக்கிறார்கள் என்று அவளுக்குத் தோன்றியது.

''மாமா. நீங்க உள்ளே போய் பானுகிட்ட பேசிக்கிட்டிருங்க. நான் கேண்டீனுக்குப் போய் ஏதாவது வாங்கிட்டு வரேன். பானுவுக்குப் பசிக்குதாம்'' என்றாள் பாரதி, அழகம்மையிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு.

''எதுக்கு கான்டீனுக்கும் இன்னொரு எடத்துக்கும்? அழகு இட்லி, தோசை எல்லாம் ரெடி பண்ணி ஹாட்பேக்ல கொண்டு வந்திருக்கா. ஃப்ளாக்ஸ்ல காபி இருக்கு. கான்டீன்ல கண்டதை வாங்கிக் குடுத்து கொழந்தை உடம்பைக் கெடுக்காதே... வா'' என்றார் கதிரேசன்.

''வா பாரதி. எங்களை வேத்து மனுஷங்களாய் பார்க்காதே. எங்க வீட்ல ஒரு விசேஷம், இல்ல அவசரம்னா நீ வந்து எடுத்துப் போட்டுக்கிட்டு செய்யமாட்டே? அது மாதிரி தானே இதுவும். வா...''



பாரதிக்குத் தொண்டையில் அடைத்தது.

பானு இட்லியை விரும்பிச் சாப்பிட்டாள். தோசையை அழகம்மையே விண்டு, விண்டு பானுவிற்கு ஊட்டினாள். பாரதியையும் வற்புறுத்தினாள்.

''அம்மா'' என்றாள் பானு.

அழகம்மையும், கதிரேசனும் போய் விட்டார்கள். அம்மா மதியச் சமையலை முடித்து எடுத்து வருவதாகச் சொல்லியனுப்பி இருந்தாள்.

அனேகமாக இன்றைக்கு மாலை டிஸ்சார்ஜ் என்று டாக்டர் சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

''என்ன பானு?''

''நேத்து ஒரு அங்கிள் என்னை கீழ விழாமப் பிடிச்சிக்கிட்டாரே... அவர் யாரு?''

''சிவா. பாண்டிச்சேரியிலேர்ந்து டிரான்ஸ்ஃபர் ஆகி வந்திருக்காரு. நேத்துதான் இங்க அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் டைரக்டரா ஜாய்ன் பண்ணியிருக்காரு. விஜயா சுந்தர் ஆன்ட்டி இல்லே? அந்த ஆன்ட்டியோட ஃப்ரண்டு. ரெண்டு பரும் இதே மெட்ராஸ்ல ஒண்ணா ஒர்க் பண்ணியிருக்காங்க.''

''அந்த அங்க்கிளை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கும்மா.''

''அப்படியா வெரிகுட்.''

''ஒனக்குப் புடிச்சிருக்கா?''

''ஓ யெஸ். பிடிச்சிருக்கே.''

''எதனால?''

''எதனாலன்னா என் பானு பாப்பாவை மேல இருந்து கீழ விழாம காப்பாத்தினார் இல்லையா, அதனால.''

"டாடிதான் குடும்பத்தைக் காப்பாத்துறவர்னு ரேவதி சொன்னாளே. அப்படின்னா சிவா அங்கிள்தானே என்னைக் காப்பாத்தினாரு. அவரை நான் டாடின்னு கூப்பிடவா மம்மி?"

சொல்லிவிட்டு, பானு பாரதியின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தாள்.

பாரதிக்குத் திக்கென்று இருந்தது. சின்னக் குழந்தைகளின் மனநிலை எப்படி எல்லாம் பாதிக்கப்படுகிறது?

"அப்படி எல்லாம் சொல்லக்கூடாது கண்ணா. நீ சிவாவை அங்க்கிள்ன்னுதான் சொல்லணும்."

"போம்மா நான் ஸ்கூலுக்கு டாடியைக் கூட்டிட்டு வரேன்னு சொல்லியிருக்கேன்னு சொல்லலை. நான் டாடியைக் கூட்டிட்டுப் போகலன்னா கேர்ள்ஸ் எல்லாம் என்னைக் கிண்டல் பண்ணுவாங்க. ஏன் சிவா அங்க்கிள் நல்லாத்தானே இருக்கார்? பார்க்க அழகாத்தானே இருக்கார்? என்னை வேற காப்பாத்தி இருக்கார் இல்ல? அவரை டாடின்னு சொன்னா ஒனக்கு என்ன? அங்க்கிள்னு சொல்றதுக்குப் பதிலா டாடின்னு சொல்லப் போறேன். அவ்வளவு தானே?"

அவளுக்கு என்ன பதில் சொல்வது. மேலும் மறுத்தால் நேற்றுப் போல் மறுபடி 'நானும் சாமிகிட்ட போறேன்னு' அவள் ஆரம்பித்தால் என்ன செய்வது என்று அவளுக்குக் கலக்கமாக இருந்தது. அப்படி அவள் சொன்ன பின்தானே அறையில் அப்படி ஒரு விபரீதம் நடந்ததாக அவளுக்குத் தோன்றியது.

பாரதிக்குக் கலக்கமாக இருந்தது. என்ன பதில் சொல்லி அவளைச் சமாளிப்பது என்று அவளுக்குப் புரியவில்லை.

பாரதி பதில் சொல்வதற்குள் அறைக்கதவு தட்டப்பட்டது. எழுந்து சென்று கதவைத் திறந்தாள் பாரதி.

அறைக்கு வெளியே விஜயா சுந்தர்.



கூடவே சிவா நின்றிருந்தான்.

பாரதியால் சிவாவைப் பார்க்க முடியவில்லை. பார்த்த ஒரு கண நேரத்திற்குள் அவன் முகம் அவள் மனதில் பதிந்து விட்டது.

அவன் முகத்தில் அப்பாவித்தனம். சீராக வெட்டி விடப்பட்ட மீசை. சுருளாக முன் நெற்றியில் வந்து தொங்கியபடி, சிவந்த உதடுகள். திருத்தமான மூக்கு. கருணை பொழிந்த கண்கள். அந்தக் கண்கள்தான் பாரதியைத் தடுமாற வைத்தன. சித்திரங்களில் பார்க்கும்போது இயேசுவிற்கும், விவேகானந்தருக்கும், ஓஷோவிற்கும், ரமணருக்கும் அப்படி ஒரு கண்கள் இயற்கையாகவே அமைந்திருப்பதைப் பார்த்திருக்கிறாள். உலகை யாதொரு வெறுப்பும் இல்லாமல், எவர் மேலும் குரோதம் இல்லாமல் இருப்பவர்களுக்கு அப்படி ஒரு கண்ணமைப்பு வந்து சேர்ந்து விடும் போலும்.

சிவாவிற்கும் அப்படித்தான் கண்கள் அமைந்திருந்தன.

"என்ன தெகைச்சிப் போய் நின்னுட்டீங்க. நாங்க உள்ளே வரலாமா மிஸஸ் பாரதி ஸ்ரீனிவாசன்?" என்று கேட்டான் சிவா.

கன்னத்தில் பளார் என்று ஓர் அறை விழுந்த மாதிரி தடுமாறிப் போனாள் பாரதி.

"ப்ளீஸ் கம் இன்" என்றாள்.

சிவா அந்த அறைக்குள் நுழைந்தான்.

அறையில் மாட்டப்பட்டிருந்த ஒரு தினசரி காலண்டர் திடீரென தாள்கள் பறக்கப் படபடத்து, ஆணியிலிருந்து பிய்த்துக் கொண்டு கீழே விழுந்தது.

# 8

காலண்டர் படபடத்துக் கீழே விழுந்தவுடன் பாரதிக்கு முதலில் எதுவும் புரியவில்லை. காற்று காரணமாக அது விழுந்திருக்கும் என்று நினைத்தாள்.

ஆனால் காற்று அப்படி ஒன்றும் பலமாக வீசவில்லை. பின் எப்படிக் காலண்டர் மட்டும் கழன்று விழுந்தது?

பாரதியின் இதயம் மறுபடி தடக், தடக் என்று அடித்துக் கொள்ளத் துவங்கியது. அவள் மனப் படபடப்பு முகத்தில் தெரியாதபடி தன் முகத்தை சாதாரணமாக வைத்துக் கொண்டு கீழே விழுந்திருந்த காலண்டரை எடுத்து ஆணியில் மாட்டினாள்.

''உக்காருங்க'' என்றாள்.

அறையில் இருந்த இரு நாற்காலிகளில் விஜயா சுந்தரும், சிவாவும் உட்கார்ந்து கொண்டார்கள்.

சிவா பானுவைப் பார்த்தான். அவள் கையில் இருந்த கட்டைப் பார்த்தான். அவன் முகத்தில் ஒரு பரிதாபம் தெரிந்தது.

"ஹலோ பானு... எப்படி இருக்கே?'' என்று கேட்டான் சிவா.

பாரதி பதைப்புடன் பானுவைப் பார்த்தாள். எங்கே அவள் சிவாவை 'டாடி' எனச் சொல்லிவிடப் போகிறாளோ என்று அவளுக்குக் கவலையாக இருந்தது.

பானு முதலில் பாரதியைப் பார்த்தாள். பாரதியின் கண்கள் மிதமான கோபத்தில் அகன்று இருப்பதைக் கண்டு பானு



அம்மாவின் மனதில் என்ன இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டாள்.

''நல்லா இருக்கேன் அங்க்கிள்'' என்றாள். ''ரொம்பத் தாங்க்ஸ்'' என்றாள் கூடவே.

''எதுக்கு?''

''நீங்க மட்டும் அந்த நேரத்துல வந்து காப்பாத்தாமப் போயிருந்தா என்ன ஆயிருக்கும்!''

''ஒண்ணும் ஆயிருக்காது. நான் இல்லன்னா வேற யாராவது வந்து ஒன்னைக் காப்பாத்தியிருக்கப் போறாங்க. இவ்வளவு சின்ன பாப்பாவை, பார்பி டால் மாதிரி இருக்கற ஒன்னைக் காப்பாத்தாம மத்தவங்க எல்லாம் எதுக்கு இருக்கணும் சொல்லு! ஆம் ஐ கரெக்ட் பானு டார்லிங்?'' என்றான் சிவா.

அவனுடைய உற்சாகப் பேச்சு பாரதிக்குப் பிடித்திருந்தது. தன்னைப் பற்றி ஒரு உயர்ந்த அபிப்ராயம் வைத்துக் கொண்டு, அந்த ஒரு மனநிலையுடனேயே மற்றவர்களுடன் பழகும் ஆண்களுக்கு நடுவில் சிவா மாறுபட்டுத் தெரிந்தான்.

பானுவிற்கும் அவனைப் பிடித்து விட்டது என்பது அவளது பார்வையிலேயே தெரிந்து விட்டது.

''இந்தா, ஒனக்காக வாங்கிட்டு வந்தது'' என்று சிவா காட்பரீஸின் 'பர்க்' பெட்டியை நீட்டினான். பெட்டி பெரிதாக இருந்தது. உள்ளே ஒரு டஜன் சாக்லேட் பட்டைகளாவது இருக்கும் என்று தோன்றியது.

''எதுக்கு இவ்வளவு?'' என்று தடுத்தாள் பாரதி.

''ம். சாப்பிடறதுக்கு. அதுல சாக்லேட் நெறைய இல்ல. ஒர்ரி பண்ணிக்க வேண்டாம். வெறும் வேஃபர்ஸ்தான் இருக்கும்.''

பானு பாக்கெட்டைப் பிரித்து ஒன்றை அவனிடம் நீட்டி னாள். இன்னொன்றை விஜயா சுந்தரிடம் கொடுத்தாள். பாரதிக்கு ஒன்று, தனக்கு ஒன்று என எடுத்துக் கொண்டாள்.

பானு தன்னிடம் இருந்த கம்ப்யூட்டர் செஸ் போர்டில் செஸ் விளையாடத் தொடங்கினாள். அவளது ஸ்கூல் பேகில் அது யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும். தனியாக வேனுக்காகக் காத்திருக்கும் நேரங்களில் எல்லாம் செஸ் விளையாடிக் கொண்டிருப்பாள்.

விஜயா சுந்தர் பேசினாள். சிவாவும் பேசினான். அவர் களின் பேச்சு பாரதிக்கு ஆறுதலாக இருந்தது.

சிவா சிரிக்கச் சிரிக்கப் பேசினான்.

பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் அவன் வேலை செய்தபோது அங்கே நடந்த வினோதமான நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொன்னான். ஒரு முறை ஒரு பெயிண்டரை பேட்டி எடுக்க வேண்டும் என்று சொல்லி புரொடக்ஷன் அஸிஸ் டெண்டிடம் ஒரு பெயின்டரைக் கூட்டி வரச் சொல்ல, அவன் ஒரு கார்ப்பெண்டரை கூட்டி வந்ததும், பேட்டி எடுக்க வந்தவர் கார்ப்பெண்டரை பெயின்டர் என நினைத்துக் கேள்விகள் கேட்டதும், கார்ப்பெண்டர் தன் தொழில் முறையி லேயே எல்லாவற்றுக்கும் பதில் சொன்னதும், அது ஒரு லைவ் புரோக்ராமாக இருந்தபடியால் பேட்டியில் நடந்த குளறுபடிகளை ஒன்றுமே செய்ய முடியாமல் போனதும் அப்புறம் கடைசியில் அறிவிப்பின்போது, கார்ப்பெண்டர் ஒருவரைப் பெயின்டராக நினைத்துக் கேள்விகள் கேட்டால் என்ன மாதிரி பதில்கள் வரும் என்ற புதுமையான பேட்டி ஒன்றை ஒலிபரப்பியதாகச் சொல்லி சமாளித்ததும், அந்த நிகழ்ச்சி பலத்த வரவேற்பு பெற்று இப்போது முழுக்க, முழுக்க அதே பாணியைப் பின்பற்றி ஒரு நிகழ்ச்சி ஒலிபரப் பாவது பற்றியும் அவன் சொல்லச் சொல்லச் சிரித்துச் சிரித்து



பாரதிக்கு கண்களில் கண்ணீர் துளிர்த்து விட்டது. வயிறு வலித்தது. அத்தனை நரம்புகளும் இழுத்துக் கொண்டன.

அவள் சிரிப்பதைப் பார்த்து சிவா சட்டென்று மவுன மானான். அவள் முகத்தையே சற்று நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

அவன் பார்ப்பதை பாரதி உணர்ந்தாள். அவள் சிரிப்பு அடங்கியது. இப்படி ஒரு நாள் அறிமுகத்திலேயே அவன் எதிரில் இவ்வளவு குலுங்கிக் குலுங்கிச் சிரித்ததற்காக அவள் மனம் வெட்கப்பட்டது. உடனே முகத்தில் நிலவை மேகம் மூடிய மாதிரி ஒரு சோகம் வந்து கவிந்தது.

''மிஸஸ் பாரதி'' என்றான் சிவா.

''ம்?'' என்றாள் பாரதி.

''சிரிக்கணும்னு தோணினா தாராளமா சிரிங்க. இது ஒண்ணும் 'லாஃபிங் புரொஹிபிடட்'னு போர்டு மாட்டின இடம் இல்லை.''

பாரதிக்கு மறுபடியும் பொத்துக் கொண்டு சிரிப்பு வந்தது.

''உம் மூஞ்சில இப்படி ஒரு சிரிப்பைப் பாக்கணுங் கறதுக்காகத்தான் நான் சிவாவை இங்க கூட்டிட்டு வந்தேன் பாரதி'' என்றாள் விஜயா சுந்தர்.

''என்ன சொல்றே நீ?'' என்று சிரிப்பு மாறாமல் கேட்டாள் பாரதி.

''எப்பவுமே எதையோ பறிகுடுத்த மாதிரியே இருக்கி யேன்னு எனக்கு ஒரே கவலையா இருந்தது. எனக்கு சிவாவைப் பத்தி நல்லாவே தெரியும். பேச்சுல சுவாரஸ்யம் அதிகம். படுத்திருக்கிற பொணம் கூட எழுந்து உக்காந்துக் கும்.''

''மிஸஸ் பாரதி'' என்றான் சிவா.

''என்ன?''

''உங்களை இனிமே வெறும் பாரதின்னு கூப்புடவா?''

மிஸஸ் பாரதி ஸ்ரீனிவாசனில் இருந்து ஏற்கனவே சிவா, ஸ்ரீனிவாசனை விட்டு விட்டு சும்மா மிஸஸ் பாரதி என்று அழைத்தபோது அவளுக்குக் கொஞ்சம் இழப்பாகத்தான் இருந்தது. இருந்தாலும் கூப்பிடுகிற எல்லோரும் நீட்டி முழக்கி பாரதி ஸ்ரீனிவாசன் என்று கூப்பிட முடியுமா என யோசித்துச் சும்மா இருந்து விட்டாள். இப்போது மிஸஸ் என்ற சொல்லையும் எடுத்து விட்டு வெறும் பாரதி என்று அழைக்கட்டுமா என்று கேட்கிறான். என்ன சொல்வது? பாரதி என்று கூப்பிட்டால் ஏதாவது தப்பா என்ன? உலகில் இருக்கும் அத்தனை பேரும் மிஸ், மிஸஸ் என்று இணைத்து தான் கூப்பிடுவார்களா? அப்படித்தான் அழைக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியுமா?

''கூப்பிடுங்களேன்'' என்றாள் பாரதி.

''தாங்க்யூ பாரதி. யூ லுக் ஸோ ஸ்மார்ட் அண்ட் யங்.''

இவ்வளவு நாட்களில் ஸ்ரீனிவாசனைத் தவிர வேறு யாரும் அவளுடைய உடல் அமைப்பைப் பற்றியும், இளமையைப் பற்றியும் வெளிப்படையாகப் பேசியதில்லை. ஒரு வேளை மற்றவர்கள் எல்லாம் மனதிற்குள் நினைத்துக் கொண்டார்களோ என்னவோ, சிவா வெளிப்படையாகச் சொல்லி விட்டான். அதில் என்ன தவறு இருக்கிறது என்று தோன்றியது.

பாரதி வெட்கமாய் ஒரு புன்னகை பூத்தாள்.

''தாங்க்ஸ்'' என்றாள்.

''ஏய் சிவா'' என்றாள் விஜயா சுந்தர் இடையில் நுழைந்து.

''என்ன?'' என்றான் சிவா.



''சொல்லேன்'' என்றாள் விஜயா சுந்தர் குறும்புச் சிரிப்புடன்.

''எதை...?'' என்று கேட்டான் சிவா.

''ஆமா. ஒண்ணுமே தெரியாது. எங்கிட்ட என்னவோ வீரமாப் பேசினியே. அதெல்லாம் ஒண்ணும் பயமே இல்லேன்னியே... இப்ப சொல்லேன்...''

''அது... வந்து... வந்து...'' என்று சிவா தயங்கினான்.

''என்ன சிவா?'' என்று கேட்டாள் பாரதி. தான் கூட அவனை உரிமையுடன் சிவா என்று அழைத்தது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

''ஒன்றும் இல்லை.''

''இல்லை. பரவாயில்லை. சொல்லுங்கள்.''

''நான் கொஞ்சம் வெளிப்படையாகப் பேசுபவன். என்னைத் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது.''

''இவ்வளவு தூரம் பீடிகை எல்லாம் போடுகிறீர்கள். விஷயம் என்ன சொல்லுங்கள்.''

''நேற்று காலையில் நான் டூட்டியில் ஜாய்ன் பண்ணினேன். காலையில் நீங்கள் ஆபீஸில் நுழைந்த போதே பார்த்தேன். அப்புறம் பதினோரு மணிக்கு எஸ்.டி. மீட்டிங் ரூமுக்கு நீங்கள் வந்தபோதும் பார்த்தேன். அப்போதே நான் தீர்மானம் பண்ணி விட்டேன்.''

''என்னவென்று?'' வார்த்தை வெளிவராமல் சிக்கியது பாரதிக்கு.

''உங்களை நான்... உங்களை நான்... உங்களோடு நான் கடைசி வரைக்கும் துணையாக இருக்க நீங்கள் சம்மதிப்பீர்களா?''

பாரதியின் நெஞ்சில் ஒரு கூர்மையான ஐஸ் கத்தி வந்து பாய்ந்த மாதிரி இருந்தது. இல்லாது போனால் ஒரு மலர் அம்பு வந்து பாய்ந்த மாதிரி இருந்தது.

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்தாள்.

பானு என்னவென்றால் சிவாவை 'டாடி' என அழைக் கட்டுமா என்று கேட்கிறாள்.

சிவா என்னவென்றால் கடைசிவரை துணையாக வரட் டுமா என்று கேட்கிறான்.

பாரதி எந்தப் பதிலும் சொல்வதற்கு முன் பானுவிடம் இருந்து ஒரு குரல் வெளிப்பட்டது.

'ஹுர்ர்ரங்க்.'

நேற்று இரவு பாரதி இருட்டில் கேட்ட அதே உறுமல்.

அந்த அறையில் ஒரு சூறாவளிக் காற்று நுழைந்து சுற்றியது. மைதானத்தில் இருந்த குப்பைக் காகிதங்களை எல்லாம் காற்று அள்ளி வந்திருந்தது.

காற்றில் ஒரு குளிர் தன்மை. ஒரு கெட்ட நாற்றம்.

''பானு...'' என்று கத்தினாள் பாரதி.

பானுவின் முகம் இறுகிப் போயிருந்தது.

''எழுந்திருடா'' என்ற குரல் வந்தது. பானு வாயைத் திறந்து பேசுகிற மாதிரியே தெரியவில்லையே. ஆனால் குரல் கேட்டது. பானுவின் குரலாகவும் இல்லாமல், ஆண் குரலாகவும் இல்லாமல் அந்தக் குரல் வினோதமாய்...

சிவா பானுவைப் பார்த்தான்.

பானு அவனைப் பார்த்துத்தான் 'எழுந்திருடா' என்று சொன்னாள் என்பதைப் புரிந்து கொள்ளவே அவனுக்கு இரண்டு வினாடிகள் பிடித்தன.



''பானு... பானு... என்னையா சொன்னே?'' என்று முகத்தில் திகைப்பு மாறாமல் கேட்டான் சிவா.

''உன்னைத்தான்டா, எழுந்திரு. கெட்அவுட்'' என்றாள் பானு.

பாரதிக்குப் பேசத் தோன்றவில்லை. பானு இவ்வளவு அநாகரீகமாக நடந்து கொள்ளக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவளை அடக்கினால், அது சிவாவின் கேள்விக்கு 'சம்மதம்' என்ற பதிலைச் சொன்ன மாதிரி ஆகி விடும். பானுவை அடக்காவிட்டால் அடிப்படை நாகரீகத்தைக் கூடக் கற்றுக் கொடுக்காமல் மகளை வளர்த்திருக்கிறாள் என்ற பெயர் அவளுக்கு வந்துவிடும்.

என்ன செய்வது என்று புரியாமல் பாரதி தவித்தபோது, ''பானு... என்னம்மா இது? எதுக்கு சிவாவைப் போய் கெட் அவுட்னு சொல்றே. நீ நல்ல பொண்ணாச்சே. ஒனக்கு மேனர்ஸ் இல்லாம பழகத் தெரியாதுன்னு எனக்கு நல்லாத் தெரியுமே...'' என்று விஜயா சுந்தர் இடையில் பேசினாள்.

''ஏய்... நீதானே இதில ப்ரோக்கர் வேலை பண்றே! யூ ஷட் அப்'' என்றாள் பானு.

பானுவிற்கு இப்படியெல்லாம் பேசத் தெரியுமா என்று மயக்கமாக இருந்தது பாரதிக்கு.

விஜயா சுந்தரின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''தப்பா எடுத்துக்காதே விஜயா. பானு என்னவோ சரி யில்ல. நேத்து நைட்டு இங்க ஒரு விபரீதம் நடந்தது. நான் அதை ஒங்கிட்ட சொல்லல. சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க. அதனால பானுவைத் தப்பா எடுத்துக்காதே.. ப்ளீஸ்... மிஸ்டர் சிவா... பானுவுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன். தயவு செய்து அவளைத் தப்பா எடுத்துக்காதீங்க.''

சிவா தர்மசங்கடமான நிலையில் இருந்தான்.

பாரதியிடம் என்ன சொல்வது என்று அவனுக்குப் புரியவில்லை. மறுமணம் என்கிற வார்த்தைக்கே பானுவிற்கு அர்த்தம் தெரியுமா என்று சந்தேகப்படும் அளவில் இருக்கும் ஒரு குழந்தை 'புரோக்கர்' என்ற வார்த்தையை எப்படி உபயோகப்படுத்த முடியும் என்று அவனுக்குப் புரியவில்லை.

சிவா எழுந்து கொள்ளலாம் என்று தீர்மானித்தான். இந்த இடத்தை விட்டு இப்போது விலகிவிட வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம் என்று முடிவெடுத்தான்.

அந்த நேரத்தில் அவன் முதுகில் யாரோ இரு கைகளையும் வைத்துத் தள்ளிவிட்ட மாதிரி ஓர் உணர்வு வந்தது.

தட்டென்று நாற்காலியில் இருந்து நான்கடி முன்னால் வந்து விழுந்தான். பின்னால் திரும்பிப் பார்த்தான். நாற்காலியின் பின்னால் நின்று கொண்டு அவனை யாரும் தள்ளிவிடவில்லை. நாற்காலியின் பின்னால் யாருமில்லை. பின் எப்படி இந்த மாதிரி நேர்ந்தது?

சிவா எழுந்தான். நாற்காலியை நெருங்கினான். உட்காரப் போனான்.

அறைக்குள் சின்ன சூறாவளி போல் காற்று. கூடவே ஒரு விதமான வாடை. சிவாவின் முடி அவன் தலையில் இருந்து பிய்த்துக் கொண்டு போகும் அளவுக்கு அப்படியே மேல் நோக்கி விறைத்தது. அவன் தலை முடியை யாரோ பற்றி இழுத்தார்கள். யாரோவா எதுவோவா.

சிவா தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதெனப் புரியாமல், தன் தலை முடியைப் பற்றி இழுத்துக் கொண்டான். அவன் தலைமுடி யாரிடமிருந்தோ, அல்லது எதுவிடமிருந்தோ விடுபட்டது.



விஜயா சுந்தர், சிவா திடீரென இப்படி நடந்து கொள்வது கண்டு அரண்டு போனாள். சிவா ஜோவியலாகப் பழகக் கூடியவன். நகைச்சுவை உணர்வு மிக்கவன். யாரிடமும் எதற்காகவும் கோபித்துக் கொள்ளாதவன். பின் ஏன் அவன் இப்படி திடீரென்று பித்துப் பிடித்த மாதிரி நடந்து கொள் கிறான்?

''சிவா... என்ன ஆச்சி உங்களுக்கு? ஏன் இப்படி ஹிஸ்டீரிகலா பிஹேவ் பண்றீங்க?'' என்று கத்தினாள் விஜயா சுந்தர்.

சிவா பதில் சொல்வதற்குள் அவன் உட்கார இருந்த நாற்காலி அப்படியே பின்னால் நகர்ந்தது. தானாக நகர்ந்த நாற்காலி தடதடவென தரையில் ஒரு பத்து முறையாவது அடித்துக் கொண்டு ஓய்ந்தது.

''விஜயா... சம்திங் சினிஸ்டர் இன் திஸ் ரூம்'' என்று கத்தினான் சிவா.

அவன் விழிகள் பிதுங்கின. அவன் கழுத்தில் யாரோ கை வைத்து அழுத்திய மாதிரி இருந்தது.

இக்கட்டான தருணங்களில் சிவா ராகவேந்திரரை மனதில் நினைத்துக் கொள்வது பழக்கம். ஒரு சோகம், துக்கம், துன்பம் எல்லாம் லேசாகிப் போன மாதிரி ஓர் உணர்வு வந்து சூழும் அவனை.

'இராகவேந்திரா... காப்பாற்று' என்று மனதில் அவனை அறியாமல் வேண்டிக் கொண்டான்.

பானு 'உய்ய்ய்' எவன்று வினோதக் குரல் ஒன்றை எழுப்பி, தன் கைகளை உதறிக் கொண்டாள்.

''எரியுதே... எரியுதே... டேய்... வெளியே போடா... ராஸ்கல்'' என்று கத்தினாள்.

கைகளை உதறுவதை நிறுத்திக் கொண்டு, கண்களால் சிவா உட்கார்ந்திருந்த நாற்காலியை முறைத்தாள்.

நாற்காலி அப்படியே பின்னால் நகர்ந்தது.

பக்கவாட்டில் குதித்துக் குதித்து இடம் மாறியது. சட்டென்று யாரோ அதன் இரு கால்களைப் பற்றி மேலே தூக்கிய மாதிரி மேல் எழுந்து பானுவின் பக்கத்தில் கட்டிலில் நின்றது.

விஜயா சுந்தர் அலறினாள். பாரதி மறுபடி மயக்கம் போட்டு விழுந்தாள்.

சிவா தொண்டை நரம்பு புடைக்க, ''டாக்டர்'' என்று அலறினான்.

ஆஸ்பத்திரி முழுவதும் அந்த அறை நோக்கி ஓடி வந்தது.

# 9

ஆஸ்பத்திரியில் இருக்கும் வார்ட் பாய்கள், நர்ஸ்கள், டாக்டர்கள் என்று அத்தனை பேரும் வந்து அறையில் நடப்பதை வேடிக்கைப் பார்த்தார்கள். நாற்காலி கட்டிலில் இருந்து கீழே இறங்கியது. டக், டக் என்று தரையில் தட்டிக் கொண்டே அது நகர்ந்தது, என்று எல்லாவற்றையும் வாய் பிளந்து பிரமிப்போடு பார்த்தார்கள்.

பானுவின் தலை கலைந்து, பின்னலின் ரிப்பன் ஒரு காகித அம்பு போல் வெளியே பறந்து விழுந்தது. அவள் முடி சூரியக் கதிர்கள் போல் பிரி, பிரியாய் தெரிந்தன. உதடுகள். கோணிக் கொண்டன. ஈரத்தில் நனைந்த கற்களைப் போல் அவளது கண்கள் தெரிந்தன. முகம் வெளிறிப் போய் சவ வெளுப்பாய் இருந்தது. பார்ப்பதற்கே பயமாக இருந்தது.



பாரதி மயங்கி இருந்தாள். விஜயா சுந்தர் மயங்கி இருந்தாள்.

சிவா திகைத்துப் போய் இருந்தான். விபரீத அனுபவத்தால் அவன் மனம், உடல் இரண்டுமே நடுங்கிக் கொண்டிருந்தன. இருந்தாலும் கொஞ்சம் தைரியமாக இருந்தான். இந்த நேரத்தில் தைரியத்தை இழப்பது பானுவை நட்டாற்றில் விடுவது போல் என்று அவனுக்குத் தோன்றியது.

பானுவின் மேல் ஏதோ ஒன்று விளையாடுகிறது. இது வரை ஆவி, பேய் போன்றவற்றில் நம்பிக்கை இல்லாமல் இருந்தவன், இப்போது கண்ணெதிரில் நடப்பதைப் பார்த்து விட்டு ஒன்றும் செய்யத் தோன்றாமல் பிரமித்து நின்றான்.

திடீரென்று அவனுக்குக் கையில் இருந்த ராகவேந்திரா உருவம் பதித்த மோதிரம் நினைவுக்கு வந்தது.

பானு கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தலையை மெத்தையில் மோதி, பின் அப்படியே மல்லாந்து தலையணையில் மோதிக் கொண்டிருந்தாள். இன்னும் ஒரு இன்ச் தள்ளி மோதினால் இரும்புக் கட்டிலின் விளிம்பில் மோதும் அபாயம்.

சிவா தன் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றி, பானு இருந்த திசையில் நீட்டினான்.

''ஸ்டாப் இட்... ஸ்டாப் இட்'' என்று கத்தினான்.

பானுவிடம் இருந்து 'வீய்ய்' என்று ஓர் இனம் புரியா ஒலி ஏற்பட்டது.

சிவாவின் நரம்புகள் அத்தனையையும் அந்த ஒலி ஊடுருவியது. சில அல்ட்ராசானிக் டெஸிபல்களில் ஒலிக்கும் ஒலியைக் கேட்டால் காது செவிடாகி விடும் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். படித்திருக்கிறான்.

இப்போது அது நேரில் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவன் காதின் செவிப்பறை ஈயின் இறகு போல் அடித்துக் கொண்டது. அவனுக்குப் புரிந்தது. காது ஜவ்வு கிழிந்து விடப் போகிறது என்று தோன்றியது.

அதற்குள் அந்த ஒலி நின்றது. பானு அப்படியே ஒரு முறை அந்தரத்தில் உயர்ந்து பொத்தென்று கட்டிலில் விழுந்தாள். அவள் நினைவு தவறியது.

அன்று மாலை செய்தித் தாள்களில் பானுவைப் பற்றிய செய்தி வந்தது. 'ஆவிப் பெண் பானு' என்று ஒரு பத்திரிகை தலைப்பிட்டிருந்தது. 'இருபதாம் நூற்றாண்டின் இன்னொரு அதிசயம்' என்று இன்னொரு பத்திரிகை சொல்லியிருந்தது. பானு கட்டிலில் கிடந்த படத்தை வெளியிட்டு, கூடவே ஆஸ்பத்திரி ஊழியர்கள் தாங்கள் பார்த்ததாகச் சொன்னதை, தத்தம் விருப்பம் போல கற்பனையைச் சேர்த்து ஒவ்வொரு மாலைப் பத்திரிகையும் செய்தி தந்திருந்தது.

மாலை ஆறு மணி சுமாருக்கு ஆஸ்பத்திரியில் மக்கள் க்யூ வரிசையில் நின்றார்கள். பானுவைத் தள்ளி இருந்து பார்த்து விட்டுப் போனார்கள். பார்த்த ஒவ்வொருவர் முகத்திலும் பயம். எங்கே பானு கட்டிலில் இருந்து திடீர் என எழுந்து தங்கள் மேல் பாய்ந்து விடுவாளோ என்ற பயம் அவர்கள் உள்ளங்களில் நிரம்பியிருந்தது பார்த்தாலே தெரிந்தது.

பாரதி தலை குனிந்து அமர்ந்திருந்தாள். விஜயா சுந்தர் வேதனை முகத்துடன் இருந்தாள். சிவா இல்லை. தான் இருந்தால் மறுபடி, பானு விபரீதமாக நடந்து கொள்ளப் போகிறாளோ எனப் பயந்து அவன் விலகி இருந்தான்.

ஆனால் அவன் விலகிப் போகுமுன், மயங்கிக் கிடந்த பாரதியின் கையைப் பற்றி அவளது விரலில் தன் விரலில் இருந்த ராகவேந்திரர் படம் பொறித்த மோதிரத்தைப் போட்டு விட்டுச் சென்றிருந்தது யாருக்கும் தெரியாது.



பாரதி தலை குனிந்தபடி அந்த மோதிரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சிவா தான் அந்த மோதிரத்தை அவளுக்குப் போட்டிருக்க வேண்டும் என அவள் யூகித்திருந்தாள். அவளுக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக சிவா அப்படி மோதிரம் போட்டிருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

ஆனால் அவள் மனம் பானுவிற்கு ஒன்றும் நேர்ந்து விடக் கூடாது என்று அடித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து விட்டார்கள். பானுவிற்கு உடலில் எந்தவிதமான நோயும் இல்லை. அவள் ஹிஸ்டீரிகலாக நடந்து கொள்வதால் ஒரு மனநல நிபுணர்தான் அவளைப் பரிசோதிக்க வேண்டும் என்ற குறிப்பை ஆஸ்பத்திரியில் எழுதிக் கொடுத்திருந்தார்கள்.

அம்மாவும், அப்பாவும் பானுவை ஒரு சைக்கியாட்ரிஸ்டிடம் கூட்டிப் போய்க் காட்ட வேண்டும் என்று வற்புறுத்தி ஒரு மனநல நிபுணரிடம் கூட்டிப் போய்க் காட்டினார்கள். அவர் பானுவை என்னென்னவோ கேள்விகள் கேட்டார். ஐ க்யூ டெஸ்ட் பண்ணினார். பானு நார்மலாக இருப்பதாகக் கூறி, அவள் நரம்புகளைச் சாந்தப்படுத்தும் ஒரு மாத்திரையை எழுதிக் கொடுத்தார்.

பானு எதனாலும் பாதிக்கப்படாதவளாக மிகச் சாந்தமாக, சாதாரணமாக இருந்தாள். அவளுடைய குழந்தைத்தனம் அவளிடம் இருந்து விலகவில்லை. பள்ளிக்கூடம் போனாள். தோழிகளிடம் இயல்பாய்ப் பேசினாள். அவளுடைய தோழிகள் எல்லாம் குழந்தைகள் என்பதால் பானு வினோதமாக நடந்து கொண்டதைக் கேள்விப்பட்டும் அதை மறந்து அவளிடம் எப்போதும் போல் பழகினார்கள்.

பானுவைப் பேட்டி எடுக்க வேண்டும் என்று வந்து பாரதியிடம் மன்றாடிய வார, மாத இதழ்கள் நிருபர்களை பாரதி திருப்பி அனுப்பி விட்டாள்.

ஏறக்குறைய பானு, பழைய பானுவாக மாறி விட்ட நிலைமையில் அவளைப் போய் கேள்விகள் கேட்டு அவள் மனதை அனாவசியமாகக் குழப்புவதை பாரதி விரும்ப வில்லை.

என்னவோ, குழந்தையின் நேரம் சரியில்லை. அதனால் பானு ஏதோ ஒரு மாதிரி நடந்து கொண்டு விட்டாள். இப்போது எல்லாம் சரியாகி விட்டது என்று அவளுக்கு ஒரு புறம் தோன்றியது. இன்னொரு பக்கம் சிவா அவள் விரலில் மாட்டி விட்ட மோதிரம்தான் அந்த மாதிரி பானுவை நடந்து கொள்ள விடாமல் பண்ணியிருக்கிறது என்றும் தோன்றியது.

பாரதி பழையபடி பானுவின் கவலை இன்றி ஆபீஸில் மூழ்கிப் போனாள். புரோக்ராம்கள் அவற்றுக்கான ஏற்பாடுகள் என்று நாட்கள் மலர்வதும் தெரியாமல், உதிர்வதும் தெரியாமல் நகர்ந்தன.

பத்திரிகைகள் ஒரு மாலை நேரத்திற்கும், காலை நேரத்திற்கும் தலைப்புச் செய்தி கிடைத்துவிட்ட திருப்தியில் மேலும் பானுவைப் பற்றிக் கவலைப்படாமல் அரசியல், திருட்டு, தீவிரவாதம் போன்ற அவலங்களை மென்று கொண்டிருந்தன.

சிவாவைப் பார்க்கும்போது பாரதியின் இதயம் லேசாக நெகிழ்வதை அவளால் மறுக்க முடியவில்லை. மிகக் கண் ணியமாக நடந்து கொண்டு விட்டான். அவளுக்கு அவன் மோதிரம் மாட்டி விட்டதை விஜயா சுந்தரிடம் கூடத் தெரி விக்கவில்லை. பாரதி அந்த மோதிரம் விரலில் இருந்தால் நிச்சயம் பிறர் கண்ணுக்குப் படும் என்று தன்னுடைய தங்கச் சங்கிலியில் கோர்த்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டாள்.



அவள் கைவிரலில் மோதிரம் இல்லாததைப் பார்த்து விட்டு சிவா அவளை ஒரு நாள் காபி குடிக்க அழைத்தான். பாரதியும் மறுப்பெதுவும் சொல்லாமல் கான்டீனுக்குச் சென்றாள்.

காபி வந்தது. அவள் குடித்தாள். ஆனால் அவன் குடிக்க வில்லை.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்க காபி குடிக்கலையா சிவா?'' என்று கேட்டாள் பாரதி.

''நான் காபி குடிக்க வரலை பாரதி.''

''பின்ன?''

''உங்களோட பேசணும்னுதான் வந்தேன்.''

''அப்படியா?'' என்றாள் பாரதி. என்னவோ சொல்ல வேண் டும் என்பதற்காக.

அவனிடம் தனியாகப் பேசுவதைத் தவிர்த்து வந்தாள். அனாவசியமான தர்ம சங்கடங்கள் வேண்டாமே என்பதற்காக.

''பாரதி, என்னை நீங்க தப்பா நெனைச்சிருக்கலாம்.''

''எதுக்கு?''

''அன்னைக்கு ஆஸ்பத்திரில நான் என் மனசைத் திறந்து சொன்னேன். நான் உங்களை என் வாழ்நாள் முழுக்க என் பக்கத்தில் உக்காத்தி வச்சிப் பார்க்கணும்னு ஆசைப்படறதா சொன்னேன். அதுக்கு நீங்க எதுவும் பதில் சொல்லலை. நீங்க பதில் சொல்றதுக்குள்ளே என்னென்னவோ நடந்து போச்சி, பானு ரொம்ப பெக்கூலியரா பிஹேவ் பண்ணா. அவளோட அப்பா மேல இருக்கற ஒரு பிரியத்தால என்னை உங்க கிட்டேர்ந்து விரட்டி விடறதுக்காக ஸப்கான்ஷியஸ் லெவல்ல இருந்து இப்படி 'பிஹேவ்' பண்ணுன்னு அவளுக்கு ஒரு ஆர்டர் கிடைச்சிருக்கும். அதனால பானு அப்படி நடந்

துக்கிட்டதா நான் நெனைச்சேன். ஆனா அன்னைக்கு நீங்க மயங்கி விழுந்துட்டீங்க. அவளோட பெக்கூலியர் பிஹேவியர் நின்னதே என் கைல இருந்த ராகவேந்திரர் மோதிரத்துக்குப் பயந்துதான்.''

பாரதி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''பானுவுக்கு ஸப்கான்ஷியஸ் லெவல்ல எந்த ஒரு தொந்தரவும் இல்ல. அமானுஷ்யமான ஏதோ ஒண்ணு அவ உடம்புல நொழைஞ்சி ஆட்டிப் படைச்சிரிச்சின்னு அதுக்கப்புறந்தான் எனக்குப் புரிஞ்சது. நான் உங்ககிட்ட என் ப்ரபோசலைச் சொல்லிட்டேன். உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கேன்னு சொன்னது ஒரு கன்னுக்குட்டித்தனமான காதலால இல்ல. நான் நல்லா யோசிச்சி என் மனசு இயல்பாவே உங்களை நாடினதை வச்சித்தான் அப்படிச் சொன்னேன். ஆனா அதுக்கப்புறம் நான் அதைப் பத்திப் பேச்சே எடுக்காததுக்குக் காரணம் இருக்கு. நீங்க பானுவோட எதிர்காலக் கவலைல இருக்கறப்ப நான் வந்து ஈன்னு ஈளிச்சிக்கிட்டு உங்க முன்னாடி நின்னா, உங்களுக்குப் புடிக்குமோ புடிக்காதோன்னுதான் நான் பேசலை. நான் அதபத்தி எதுவுமே பேசலைங்கறதால. பானுவுக்கு இப்படி ஒரு விபரீதம் நடந்ததாலத்தான் நான் உங்க கிட்ட கல்யாணத்தைப் பத்திப் பேசலைன்னு நீங்க நெனைச்சிடக் கூடாதேன்னு நான் இப்ப கவலைப்படறேன்.''

''சேச்சே. அப்படி எல்லாம் நான் நெனைக்கவே இல்ல சிவா! உங்களுக்கு ஏன் அப்படி ஒரு ஐடியா வந்தது?''

''நான் உங்க விரல்ல ராகவேந்திரர் படம் போட்ட மோதிரத்தை மாட்டினது உங்களோட நன்மைக்காகத்தான். அது இருந்தா பானு நார்மலாய்டுவான்னுதான் மாட்டி விட்டேன். எனக்கு உங்க மேல இருக்கற காதலை வெளிப்படுத்த நான் அப்படி மோதிரத்தை மாட்டி விடல... அதுவும் நீங்க மயக்கத்துல இருந்தப்ப.''



''அது எனக்குத் தெரியும் சிவா.''

''பின்ன எதுக்கு அந்த மோதிரத்தைக் கழட்டிட்டீங்க? அதுதான் காலைலேர்ந்து என் மனசைப் போட்டுக் கொடைகொடைன்னு கொடையுது.''

பாரதி சிரித்தாள். அது கான்டீன், பொது இடம். நான்கு பேர் பார்வையில் படும்படி இருக்கிறோம் என்ற உணர்வின் காரணமாக அவள் அடக்கமாகச் சிரித்தாள். இல்லா விட்டால் பலமாகச் சிரித்திருப்பாள்.

''ப்பூ இவ்வளவுதானா? நல்லா மூட் அப்செட் ஆனீங்க போங்க. நான் மோதிரத்தைக் கழட்டி வெச்சிட்டதா யார் சொன்னது? நீங்களா ஏதாவது நெனைச்சிக்கிட்டா அதுக்கு நானா பொறுப்பு? மோதிரம் விரல்ல இருந்தா, ஏது, எதுக்குன்னு கேட்பாங்க. இத்தனை நாள் இல்லாம எதுக்கு இந்த ராகவேந்திரர் மோதிரம்னு கேப்பாங்களேன்னுதான் நான் அதைக் கழட்டி செயின்ல கோத்துக்கிட்டிருக்கேன். இங்க பாருங்க.''

பாரதி கழுத்துச் சங்கிலியை புடவை மறைப்பில் இருந்து உருவிக் காட்டினாள். வெகு எச்சரிக்கையாக அவள் உருவிய போதும், பாரதியின் புடவை லேசாக விலகி, சிவாவின் பார்வை ஆண்களுக்கே உரிய இயல்புடன் அவளது மார்புப் பக்கத்தை ஒரு முறை பார்த்து விட்டு, நாகரீகம் காரணமாக விலகியது.

பாரதியை வெட்கம், அச்சம் இரண்டும் சேர்ந்து தவிக்க வைத்தது.

இது தவறா? இது துரோகமா? இது இயல்புக்கு மீறிய செயலா? இது வரவேற்பா?

ஒரு பெண் தன் துணையை இழந்து விட்டால் வாழ்க்கையின் இயல்புகளோடு இயங்க முடியாதா?

''ஐ'ம் ஸாரி பாரதி. எனக்கு இப்பத்தான் மனசு லேசாச்சு. எம்மேல உங்களுக்கு எந்தக் கோபமும் இல்லேங்கறதே எனக்கு சந்தோஷமா இருக்கு. பேரர் இங்க வாப்பா என்ன ஸ்வீட் இன்னைக்கு?''

''ஜாங்கிரி சார்.''

''ரெண்டு ப்ளேட். அப்புறம் ஒரு ஐம்பது கிராம் மிக்ஸர். அப்புறம் இன்னும் ரெண்டு காபி.''

''ஐயையோ, இது எல்லாம் எதுக்கு சிவா?''

''என் சந்தோஷத்தைக் கொண்டாட... மறுக்காதீங்க.''

பாரதி மறுக்கவில்லை. அவளால் மறுக்க இயலவில்லை. சிவாவைத் தப்பாக எண்ணத் தோன்றவில்லை. ஒவ்வொரு ஆணும் தனக்கென்று ஒரு பெண் துணையைத் தேடுவது என்பது வாழ்க்கையின் இயல்புகளில் ஒன்று. அந்த நியதிப் படி அவளுடன் கை கோர்க்க ஆசைப்படுவதை அவன் நாகரீகமாக வெளிப்படுத்தி இருக்கிறான்.

நாகரீகமாக மறுத்து விட்டால் அவன் விலகி விடப் போகிறான். நட்பு மட்டும் இடையில் நிலைக்கப் போகிறது. நட்புக்காக ஒரு ஜாங்கிரி சாப்பிடக் கூடாதா என்ன?

''ஓகே பாரதி. அப்ப நான் உங்க பதிலுக்காகக் காத்திருப்பேன்.''

''என்ன பதிலுக்காக?''

''கொழப்பாதீங்க. நான் சொன்னேனே. உங்களை என்னோட வாழ்க்கைத் துணையா இணைச்சிக்கணும்னு. அந்த பதிலுக்காக ஐ சின்ஸியர்லி லவ் யூ பாரதி.''

பாரதிக்கு சிலிர்த்தது. அவள் இதயம் ஒரு முறை புரண்டது.

நாகரீகமாக மறுத்து விடுவது என்று முடிவெடுத்திருந் தாலும் அவளால் அந்தப் பதிலை உடனே சொல்ல அவள் நாக்கு ஒத்துழைக்க மறுத்தது.



''இப்பப் பதில் சொல்ல வேணாம் பாரதி. நல்லா யோசிச்சி நிதானமா ஒரு முடிவை எடுங்க. ஓகேயா?''

''ஓகே.''

''அதுவரைக்கும் நாம நல்ல நண்பர்களாவே இருப்போம்.''

''ம்.''

''நட்புக்காக ஒரு தடவை என் கையைப் பற்றிக் குலுக்கி ஒரு தாங்க்ஸ் சொல்லக்கூடாதா?'' சொல்லிவிட்டு சிவா அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

அவள் தயங்கிக் கையை நீட்டினாள். அவன் கையைப் பற்றிக் குலுக்கினாள். பாரதியின் உறங்கிக் கொண்டிருந்த பெண்மை தூக்கம் கலைந்து எழுந்து அமர்ந்தது.

''தாங்க்ஸ்'' என்றாள் பாரதி தனக்குள் ஏற்பட்ட மாறுதலை உணராமல்.

அந்த நேரம் ஸ்கூலில் டிராயிங் நோட்டில் பூ படம் ஒன்றை வரைந்து கொண்டிருந்த பானு திடீரென்று எந்த உணர்வு தன்னை ஆட்கொண்டது என்று புரியாமல் ''டேய்... விடுடா அவளை... ஷீ ஈஸ் மை ஒய்ஃப்'' என்று கத்தினாள். பென்சில் முனையால் சித்திரத்தின் மேல் கன்னா பின்னா என்று கோடுகள் இழுத்து, நோட்டைக் கிழித்தாள்.



# 10



பாரதி தன் இருக்கைக்குத் திரும்பி வந்தவுடன் அவளுடைய மேசை தொலைபேசி அவளுக்காகக் காத்திருந்தது.

வேலு, "உங்களை எங்கெல்லாம் தேடறது? தாமு சொன்னான். நீங்க சிவா சார் கூடத்தான் எங்கயாவது ஸ்டூடியோவுல தனியா உக்காந்து பேசிக்கினு இருப்பீங்கன்னு நானும் தேடாத ஸ்டூடியோ இல்ல. என்னவோ அவசரமாம். உங்க பொண்ணு விஷயமாம். ஸ்கூல்லேர்ந்து போன்" என்றான் அவசரம் அவசரமாக.

அவன் பேச்சில் அவளைத் தேடுவதற்கான அவசியத்தை விடவும், அவள் சிவாவுடன் தனித்து ஸ்டூடியோவில் பேசிக் கொண்டிருப்பதைக் குத்திக் காட்டும் நோக்கம் தான் அதிகமாக இருந்தது.

பாரதிக்கு ஆத்திரம் வந்தது. கைக்கு அகப்படும் டேபிள் வெய்ட் இல்லை ஏதாவது ஒரு கட்டை என்று ஒன்றை எடுத்து அவன் முகத்தில் வீசி எறிய வேண்டும் போல் ஆவேசமாக இருந்தது.

ஆனால் ஸ்கூலில் இருந்து பானுவைப் பற்றிய செய்தி என்பதால் அவளால் வேலு மீதிருந்த ஆத்திரத்தை வெளிப் படுத்த முடியவில்லை. அதை விடவும் பானுவிற்கு என்ன என்ற பதைப்புதான் அதிகமாக இருந்தது.

"ஹலோ" என்றாள் ஃபோனில்.

"மிஸஸ் பாரதி?"

"யெஸ்."

"மேடம். நான் ஹெட்மிஸ்ட்ரஸ் பேசறேன். உடனே நீங்க ஸ்கூலுக்கு வாங்க. உங்க டாட்டர் ரொம்ப விபரீதமா என்னென்னவோ பேசறா! எங்களால கன்ட்ரோல் பண்ண முடியல."

பாரதியுடன் விஜயா சுந்தரும் ஸ்கூலுக்குப் புறப்பட்டாள். ஆசிரியைகளின் ஒய்வு அறையில் பானுவைப் படுக்க வைத்திருந்தார்கள். அவளைப் பள்ளிக்கூட பியூன்கள்



இரண்டு பேர் கட்டிப் போட்ட மாதிரி கைகளை வைத்து அழுத்திப் பிடித்திருந்தார்கள்.

பானுவின் மேல் சட்டையைக் காணவில்லை. அவள் முகம் இறுகியிருந்தது. கண்கள் அகன்றிருந்தன. மூச்சு வாங்கி அவள் மார்பின் எலும்புக் கூடு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

"ஐயோ... என் பானுவுக்கு என்ன ஆச்சி? ஏன் இப்படி சட்டையைக் கழட்டி இருக்கீங்க?" என்று பதறினாள் பாரதி.

"நாங்க சட்டையைக் கழட்டலம்மா. டிராயிங் ரூம்ல படம் போட்டுக்கிட்டிருந்தா. திடீர்னு, 'டேய் விடுடா... ஷீ இஸ் மை ஒய்ஃப்'னு கத்தியிருக்கா. அவ்வளவுதாம்மா. பானு, பானுவா இல்ல. வேற மாதிரி ஆய்ட்டா. அவளாவே சட்டையை அவுத்து டார், டாரா கிழிச்சிப் போட்டுட்டா. என்னென்னவோ உளறிக்கிட்டிருக்கா. எங்களுக்கு டாக்டரைக் கூப்பிடக்கூடப் பயமா இருந்தது. அதான் உங்களைக் கூப்பிட்டோம்" என்றாள் ஹெட்மிஸ்ட்ரஸ்.

'விடுடா அவளை... ஷீ ஈஸ் மை ஒய்ஃப்' என்று பானு சொன்னாளா?

என்ன இது? பானு ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்?

"டிராயிங் பீரியட் எத்தனை மணிக்கு? அவ எப்ப முதல்ல இந்த மாதிரி பிஹேவ் பண்ணினா?"

"சரியா மூணே முக்கால் இருக்கும் மிஸஸ் பாரதி."

மூன்றே முக்கால் நட்பு நாடி அவள் கரத்தை சிவா பற்றிய அதே நேரம். அந்த நேரம்தான் பானுவின் நடத்தையில் மாற்றம். அப்படி என்றால்... அப்படி என்றால்... கடவுளே...

சீனுதான் டெல்லி சாலையில் சட்டையை அவிழ்த்து விட்டு அவளோடு நடந்தவன். சட்டையை அதனால் தான் பானு கழற்றிக் கிழித்திருக்கிறாளா? சீனு... சீனு... நீங்களா

சீனு.... பானுவின் உடலில் வந்து நுழைந்து இத்தனை ஆர்ப்பாட்டமும் நடத்திக் கொண்டிருப்பது நீங்களா? இல்லை சீனு. நான் உங்களை மறக்க மாட்டேன். உங்களிடம் இருந்து விலக மாட்டேன். வேண்டாம் சீனு. பானு நம் குழந்தை. அவளுடைய வாழ்க்கையில் விளையாடாதீர்கள். ப்ளீஸ்...''

பாரதி பானுவை நெருங்கினாள்.

''பானு...''

பானு சட்டென்று தலையைப் பாம்பு வேகத்தில் திருப்பினாள். அவளது விரித்துப் போட்ட தலைமுடி பாரதியின் கண்களை, அவளது விழிப் படலத்தை உரசிச் சென்றது.

பாரதி பயந்து போனாள் 'வீல்' என்று அலறிக் கொண்டு ஓரடி பின் வாங்கினாள்.

''வா பாரதி. பயப்படாதே'' என்றாள் பானு. மூச்சிரைத்தது. அவள் முகம் ஆயிரம் ஊசிகளைக் குத்தினால் ஏற்படும் வலியை அனுபவிக்கிற மாதிரி மேடும் பள்ளமுமாய், சின்னச் சின்ன நரம்பு முடிச்சுகளுடன் தெரிந்தது. ரத்தம் வடிந்திருந்தது.

''பானு... கண்ணே... உனக்கு என்னம்மா ஆச்சி?'' என்று கையாலாகாத தன்மையில் கதறினாள் பாரதி. அவளது மேலாடை விலகி, சங்கிலி ஊசலாடியது. சங்கிலியில் கோர்த்திருந்த மோதிரம் பானுவின் முகத்திற்கு நேரே வந்து நின்றது.

''பாரதி ஏய்... அந்த சங்கிலியைக் கழட்டுடி...'' என்று ஆணை போன்ற குரலில் சொன்னாள் பானு.

பாரதி தன்னை மறந்து சங்கிலியைக் கழற்றினாள்.

''நான் சொல்றதைக் கேளு. இப்ப நான் யாரைப் பத்தியும் கவலைப்படலை. குண்டு வெடிக்கப் போவுது. அதைத் தடுத்து நிறுத்து...''



''நீ யாரு? யாரு சொல்லேன்.''

''நானாடி தங்கம்? ராசாத்தி, இப்பம் அதுவா முக்கியம் வெண்ணெ. ஐயோ குண்டு வெடிக்கப் போவுதே. மறக்காதே-மன்னிக்காதே. மீனாட்சி காப்பாத்துடி. சிவா விஷ்ணு.. சோமுவைக் காப்பாத்து. மவராசனைக் காப்பாத்து. மவராசனோடு மண்ணாப் போறவங்களைக் காப்பாத்து. போடி தங்கம். போலீசைக் கூப்புடு. கண்டாரவோளிப் பய மக்க குண்டை வெச்சிப்புட்டானுவ... காப்பாத்து...''

பானுவின் குரல் ஒரு கிழவனின் குரல் போல இருந்தது. அவள் நினைத்தது போல் அது சீனுவின் குரலாகத் தோன்றவில்லை.

''யார் நீ?''

''ஐயோ. நானே கெஞ்சிக் கூத்தாடி சீனுத் தம்பிய தள்ளிப் போவச் சொல்லிட்டு வந்திருக்கேன். யாரு நீ, யாரு நீன்னு என்னைக் கொடைஞ்சித் திங்கறியேடிம்மா. நேரமாச்சுடி... குண்டு வெடிச்சிரப் போவுது. போலீசைக் கூப்புடு. போடி தங்கம்... போடி...''

அவ்வளவுதான். பானு மயங்கி விட்டாள். இனி பானு விழிக்கும்போது மிக இயல்பாக இருப்பாள். நடந்தது எதுவும் அவளுக்கு நினைவில் இருக்காது. அவளிடம் எதுவும் சொல்லி. அவளை மேலும் பயமுறுத்தும் மனநிலையில் பாரதி இல்லை.

'போடி தங்கம். போலீசைக் கூப்பிடு...'

என்ன அர்த்தம் அந்த வார்த்தைகளுக்கு?

''நான் ஒரு போன் பண்ணிக்கலாமா?''

''ஓ யெஸ்.''

பாரதி ஒன்று, பூஜ்யம், பூஜ்யம் என்று நம்பர்களை விரலால் ஒற்றி எடுத்தாள்.

போலீஸ் கமிஷனர் மஃப்டியில் இருந்தார்.

''மேடம்... பதற வேண்டாம். நீங்க சொன்ன எதுவுமே எங்களுக்குப் புரியல. எங்கயோ குண்டு வெடிக்கப் போவுதுன்னு சொன்னீங்க. ஆனா, உங்க பொண்ணு மேல ஆவி வந்து அந்த மேட்டரைத் தெரிவிச்சதா சொல்றீங்களே. எப்படி நம்பறது? நீங்க வேற ரேடியோ ஸ்டேஷன்ல புரோக்ராம் எக்ஸிக்யூடிவா வேலை செய்யறதாச் சொன்னீங்க. சொல்லுங்க. உங்க டாட்டர் மேல ஆவி வந்து என்ன சொல்லிட்டுப் போச்சி? இன்னொரு தடவை சொல்லுங்க.''

பாரதி தவித்தாள். அவளுடைய வார்த்தைகளில் எந்த காவல் அதிகாரிக்கும் நம்பிக்கை இல்லை. ஆவி என்று சொன்னால் அவர்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டு, மனநலமில்லாத ஒருத்தியைப் பார்ப்பது போல் அவளைப் பார்க்கிறார்கள்.

''நான் பானு சொன்னதை அப்படியே இன்னொரு தடவை சொல்றேன்.''

''ப்ளீஸ்.''

''ரெகார்ட் பண்ணிக்கிட்டீங்கன்னா அதைத் திருப்பித் திருப்பிப் போட்டுக் கேட்டா உங்களுக்கு ஏதாவது தெளிவாத் தெரியலாம்.''

''அதை நாங்க பார்த்துக்கறோம். சொல்லுங்க மேடம்'' என்றார் கமிஷனர் பொறுமை இல்லாமல்.

*''நானாடி தங்கம்? ராசாத்தி, இப்பம் அதுவா முக்கியம் வெண்ணை. ஐயோ, குண்டு வெடிக்கப் போவுதே. மறக்காதே மன்னிக்காதே. மீனாட்சி காப்பாத்துடி. சிவா, விஷ்ணு... சோமுவைக் காப்பாத்து. மவராசனைக் காப்பாத்து. மவராசனோடு மண்ணாப் போறவங்களைக் காப்பாத்து. போடி தங்கம்.*



*போலீசைக் கூப்புடு. கண்டாரவோளிப் பய மக்க குண்டை வெச்சிப்புட்டானுவ... காப்பாத்து.''*

''அவ்வளவுதானா?''

''ஆமா சார்.''

''நீங்க சொல்ற மேட்டர் ஒண்ணுக்கொண்ணு சம்பந்தமில்லாம இருக்கே மேடம்.''

''ஆவி அவ்வளவுதான் சொல்லிச்சி சார்.''

''அகெய்ன் ஆவி பிஸினஸ்...''

''நான் சீரியஸாத்தான் சொல்றேன் சார். பப்ளிக் இன்ட்ரெஸ்ட்ல சொல்றேன். எனக்கும் புரியல. நான் சொல்லாமப் போய்ட்டு நாளைக்கு ஏதாவது நியூஸ் வந்தா அது லைஃப் லாங் என்னை உறுதிக்கிட்டே இருக்கும். அதனாலத்தான் சொன்னேன்.''

''அந்த ரெகார்டரை ப்ளே பண்ணு.''

பாரதியின் குரல் 'நானாடி தங்கம்?' என்று ஆரம்பித்தது.

''மறக்காதே மன்னிக்காதேன்னா என்னய்யா?''

''மறக்காதே. மன்னிக்காதே. பழிவாங்குன்னு அர்த்தம்னு எனக்குத் தோணுது சார்.''

''சோமுன்னு யாராவது வி.ஐ.பி. இருக்காங்களா?''

''இல்ல சார்.''

''ஓ.கே. சிவா விஷ்ணுன்னா ஒரு கோயில்னு எனக்குத் தோணுது. வீட்ல அடிக்கடி அந்தப் பேரைச் சொல்லிட்டிருப்பாங்க. நீங்க எதுக்கும் சிவா - விஷ்ணு கோயிலுக்கு ஒரு பாம் ஸ்க்வாடை அனுப்பி செக் பண்ணச் சொல்லுங்க. ஓ.கே. மேடம். நாங்க பாத்துக்கறோம். உங்க அட்ரஸைக் குடுத்துட்டுப் போங்க. ஏதாவது டவுட் வந்தா காண்டாக்ட் பண்

றோம். பை தி பை, சோமுன்னு உங்களுக்கு யாராவது வி.ஐ.பி.யைத் தெரியுமா?''

''தெரியாது சார்.''

''எங்களுக்கும் தெரியாது. அந்தப் பேர்ல ஏதாவது வி.ஐ.பி. இருந்தாத்தான் நாளைக்கு எங்களைப் போட்டு கொடை வாங்க. மீனாட்சின்னு யாரையாவது தெரியுமா?''

''எங்க மாமியாரோட அம்மா பேரு.''

கமிஷனர் பாரதியை முறைத்தார். பாரதியின் முகத்தில் சத்தியம் தவிர வேறு எதுவும் தென்படாதது கண்டு. இயல்பு நிலைக்கு வந்து ''நீங்க போகலாம்'' என்றார்.

பாரதி புறப்பட்டாள்.

அவள் மனம் பதைத்தது.

பஸ்ஸில் ஏறி வீட்டுக்குப் போக மனமின்றி ஆட்டோவை அழைத்தாள். ஆட்டோ புறப்பட்டது.

எங்கோ ஒரு வெடிகுண்டு வெடிப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

பாரதி ஆட்டோவில் போகும்போது தற்செயலாகத் திரும்பிப் பார்த்தாள்.

ஒரு வெள்ளை நிற அம்பாஸிடர் கார் அவள் ஆட்டோவின் பின்னால் வந்து கொண்டிருந்தது.

டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஆளின் முடி ஒட்ட வெட்டப்பட்டிருந்தது.

பாரதி பார்ப்பதை அறிந்ததும், அந்த ஆள் தலையைக் குனிந்து கொண்டு என்னவோ தேடுகிற மாதிரி ஒரு பாவனையில் ஈடுபட்டது பாரதிக்கு லேசான சந்தேகத்தை ஏற்படுத்தியது.

அந்த முன்னிரவு நேரத்தில் சாலையில் ஒருவன் போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்தான்.



பாரதி போஸ்டர் ஒட்டுபவனை மிக அசுவாரசியமாகப் பார்த்தாள். அவள் மனம் பானுவையும், சீனுவையும், சிவாவையும் மாறி மாறி நினைத்துக் கொண்டிருக்க, போஸ்டர் ஆசாமி போஸ்டரின் பின்புறம் கூழைத் தேய்த்துவிட்டு, போஸ்டரை சுவரில் ஒட்டினான்.

போஸ்டரில், இன்று முதல் சென்னை ஆண்டாள், தேவி ஸ்ரீதேவி, சுப்ரகீத் தியேட்டர்களில் 'மறக்காதே மன்னிக்காதே' என்ற திரைப்பட அறிவிப்பு வெளியாகி இருந்தது.

# 11

அந்தப் பயங்கரமான செய்தி முதலில் வானொலி நிலையத்தை வந்தடைந்தது. செய்தி கேட்டு பாரதி உறைந்து போனாள். திகைப்பிலிருந்து மீள அவளுக்குச் சற்று நேரம் பிடித்தது. விஜயா சுந்தர், சிவா என்று இருவரும் அவளை மாற்றி மாற்றி உலுக்கி எடுத்த பின்தான் 'ம், ம்' என்று சுய நினைவிற்கு வர முடிந்தது.

செய்தி இதுதான்.

மதுரையில் சிவா விஷ்ணு திரைப்பட அரங்கில் ஒரு சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்து இருபது பேர் பலி. தியேட்டரில் புதுப்படம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. படத்தின் பெயர்: மறக்காதே, மன்னிக்காதே. இறந்து போனவர்களில் ஒருவர் பெயர் சோமு. அவருக்கு வயது 22. இறந்து போன மற்றவர்களின் விவரம் பின் வருமாறு.

பானு தன்னிலை மறந்து உதடு துடிக்கத் துடிக்க பாட்டிலில் மாட்டிய ஈ தன் சிறகை அடித்துக் கொள்வதைப் போல பர்ர்ர் என்று வினோத ஓசை ஏற்படுத்திக் கொண்டே சொன்ன அனைத்தும் நடந்தேறி இருக்கிறது.

பானு சொன்னது என்ன?

'நானாடி தங்கம்? ராசாத்தி, இப்பம் அதுவா முக்கியம்? வெண்ணை. ஐயோ, குண்டு வெடிக்கப் போவுதே. மறக்காதே, மன்னிக்காதே, மீனாட்சி காப்பாத்துடி. சிவா விஷ்ணு சோமுவைக் காப்பாத்து. மவராசனைக் காப்பாத்து. மவராசனோடு மண்ணாப் போறவங்களைக் காப்பாத்து. போடி தங்கம். போலீசைக் கூப்பிடு. கண்டாரவோளிப் பய மக்க குண்டை வெச்சிப்புட்டானுவ. காப்பாத்து.'

'மீனாட்சி காப்பாத்துடி' என்றது மதுரையில் இருக்கும் பெண் தெய்வமான மீனாட்சியைக் குறிப்பிட்டு சொல்லியிருக்க வேண்டும். சிவா - விஷ்ணு என்று சொன்னது மதுரையில் இருக்கும் ஒரு தியேட்டரின் பெயரை. சோமு என்ற ஆள் வெடிகுண்டு விபத்தில் இறந்து போயிருக்கிறான் என்பதால் அவனைக் காப்பாற்றும் பொருட்டு, சோமுவின் அம்மாவின் ஆவியோ, பாட்டியின் ஆவியோ பானுவின் மூலம் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்க வேண்டும். 'வெண்ணை' என்ற சொல்லும், 'கண்டார வோளிபய மக்க' என்ற சொற்றொடரும் மதுரை மக்களின் வழக்கு மொழிச் சொற்கள்.

சிவாவும் மற்றவர்களும் பானு பேசிய பேச்சையும், நடந்ததையும் வைத்து இந்த மாதிரி ஒரு பொருள் என்று முடிவுக்கு வந்தார்கள்.

ஒரு சாதாரண பொதுமக்களுக்குத் தோன்றும் ஒரு பொருள் போலீசுக்குத் தோன்றாதா என்ன? போலீஸ் அப்படி எல்லாம் ஆராய்ந்ததா இல்லையா என்று தெரியவில்லை. ஆராய்ந்திருந்தால் மதுரையில்தான் குண்டு வெடிக்கப் போகிறது என்பதைக் கண்டு பிடித்திருப்பார்கள். குண்டு வெடிக்காமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்திருப்பார்கள். ஆனால் குண்டு வெடித்து விட்டதே. அப்படி எதுவும் செய்யவில்லை என்று தானே அர்த்தம்?



போலீஸ் துறையில் இந்த மாதிரியான புதிர்களை விடுவிக்க எவ்வளவு பயிற்சி பெற்ற மூளைகள் இருக்கும்! விட்டு விட்டார்களே.

பாரதிக்கு மிகவும் துக்கமாக இருந்தது.

பதினோரு மணிக்கு ஸ்டேஷன் டைரக்டருடன் தினப்படி நடக்கும் அலுவலகச் சந்திப்பில் மற்ற புரோக்ராம் எக்ஸிக்யூடிவ்களோடு உட்கார்ந்திருந்தபோது கூட அவளை அந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் துரத்திக் கொண்டிருந்தது.

பானு அந்த மாதிரி சொன்னவுடன் போலீசுக்குப் போனதோடு கடமை தீர்ந்து விட்டது என்று நினைத்தாளே. அதற்குப் பதிலாக பத்திரிகைகளுக்கு இந்தச் செய்தியைக் கொடுத்திருக்கலாமோ? ஒருவேளை பத்திரிகைகள் பானு சொன்னதைச் சொல்லியிருந்ததால் குண்டு வெடிக்காமல் இருந்திருக்குமோ!

மீட்டிங்கில் எஸ்.டி. என்ன பேசுகிறார் என்பதைக் கவனிக்காமல் அவள் தன்னுடைய சிந்தனைகளில் மூழ்கியிருந்தபோது போன் மணி அடித்தது.

''மேடம் பாரதி...''

எடுத்தாள்.

''ஹலோ'' என்றாள்.

''நான் கமிஷனர் பேசறேன். நீங்க உடனே என் ஆபீசுக்கு வாங்க.''

''எதுக்கு?''

''சில கேள்விகள் கேக்கணும்.''

''நீங்க இங்க வரக்கூடாதா? நான் உங்களைத் தேடிட்டு வந்து தகவல் சொன்னப்ப உதாசீனப்படுத்திட்டு இப்ப என்னை வரச்சொன்னா என்ன அர்த்தம்?''

''மிஸஸ் பாரதி, நீங்க உடனே இங்க வர்றீங்க. வாசல்ல வெள்ளை அம்பாஸிடர் ஒண்ணு காத்திட்டிருக்கு. உங்க

பொண்ணு பானு இப்ப என் கஸ்டடிலதான் இருக்கா. எம் முன்னாடி உக்காந்துகிட்டிருக்கா. போலீஸ்னா சில சமயம் முரட்டுத்தனமாவும் நடந்துக்கும்னு உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, நடந்துக்கும். அது கொழந்தையா இருந்தாலும் சரி, கிழவியா இருந்தாலும் சரி, புரியுதா?''

''ஐயையோ...''

''அப்புறம் ஐயையோ சொல்லலாம். பெட்டர் கம் குயிக்.''

பாரதியின் வெளிறிப் போன முகத்தைப் பார்த்து விட்டு அறையில் இருந்த அத்தனை பேரும், 'என்ன? என்ன?' என்று கேட்டார்கள்.

பாரதி சொன்னாள்.

''திஸ் ஈஸ் அட்ரோஷியஸ். சிவா. யூ கோ வித் ஹர். விஜயா மேடம், நீங்களும் மேடம் பாரதி கூட போங்க. விஷயம் ஏதாவது சீரியஸாப் போச்சின்னா நாங்க அத்தனை பேரும் உங்க பின்னாடி வரோம். வாட் நான்சென்ஸ் தே ஆர் டாக்கிங்?'' என்று ஸ்டேஷன் டைரக்டர் சீறினார்.

பானு கமிஷனர் நாற்காலியின் முன்னால் இருந்த டேபிளுக்கு அருகில் ஒரு குஷன் போட்ட நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். ஸ்கூல் யூனிஃபார்மில் பக்கத்தில் அவளுடைய புத்தகப் பை.

பானுவின் முகம் பயந்த மானின் முகம் போல இருந்தது.

பாரதியைப் பார்த்தவுடன் பானு ''அம்மா'' என்று கத்திக் கொண்டே எழுந்து ஓடி வந்து அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். விசித்தாள்.

''மம்மி, போலீஸ் அங்க்கிள் கண்ணைல்லாம் பெரிசு பெரிசாப் பண்ணிக்கிட்டு என்னை மொறைச்சி மொறைச்சிப் பாக்கறாரும்மா. என்னென்வோ கேள்வி எல்லாம் கேக்கறாரு. பாம் வெச்சது யாரு சொல்லுங்கறாரு. பாம் வெடிக்கப் போவுதுன்னு எனக்கு யார் சொன்னாங்கன்னு கேக்கறாரு.



எனக்கு ஏதுவுமே தெரியலம்மா. எதுவுமே புரியலம்மா. பயம்மா இருக்கும்மா. என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் டும்மா'' என்று பானு அவள் காலைப் பற்றிக் கொண்டு அழுதாள்.

பயத்தில் அவளுடைய கட்டுப்பாட்டை மீறி சிறுநீர் பெருகியது.

''கமிஷனர் சார், என்ன அட்ராசிட்டி இது?'' என்று கத்தினான் சிவா.

''மிஸ்டர், நீங்க யாரு?''

''நான் மிஸஸ் பாரதியோட கொலீக். கூட ஒர்க் பண்றேன்.''

''நீங்க அந்த ஃபாமிலியோட காட்ஃபாதர் இல்லையே?''

''கமிஷனர்?''

''ப்ளீஸ்.. போலீஸ்காரன் போலீஸ்காரன்தான். அவன் புத்தி சந்தேகப்படற புத்தி. ஆல் பர்வர்டட். வக்கிரமாத்தான் திங்க் பண்ணும். நீங்க ஏன் இதுல வரீங்க? உங்களுக்கும் மிஸஸ் பாரதிக்கும் நடுவுல ஏதாவது இல்லீகல் ரிலேஷன் ஷிப் இருக்கா. ஐ மீன் செக்ஸுவல்லி.''

''திஸ் ஈஸ் தி லிமிட் கமிஷனர். ஐ'ல் ஃபைல் எ ஸூட் அகைன்ஸ்ட் யூ...''

''ஷட் அப். அது அப்புறம்! இது என் ஆபீஸ். உங்களையும், மிஸஸ் பாரதியையும் கேள்வி எதுவும் கேட்காம அரஸ்ட் பண்ண முடியும். தடாவுலயோ, குண்டாஸ் ஆக்ட்லயோ போட முடியும். யூ கீப் கொயட். மேடம் எங்க கேள்விக்குப் பதில் சொல்லுங்க. பாம் ப்ளாஸ்ட் பத்தி இந்தக் கொழந்தை தானே தகவல் சொன்னதா சொன்னீங்க?''

''யெஸ்...''

''நாங்க கேட்டா அது எனக்கு எதுவுமே தெரியாதுன்னு அழுவுது. குழந்தைங்க பொய் சொல்லாது. அதுவும் இந்தக் கொழந்தையோட ஏஜ்ல அதுக்குப் பொய்னா என்னன்னே

தெரியாது. அப்படி இருக்கறப்ப குழந்தை சொன்னதுன்னு சொல்றதை எப்படி நம்ப முடியும்?''

''கமிஷனர் சார், அந்தக் கொழந்தை மேல என் ஹஸ்பெண்டோட ஆவி வந்து இதெல்லாம் சொல்லிச்சி.''

''ஆவி. உங்க ஹஸ்பெண்டோடது?''

''ஆமா கமிஷனர்...''

''நானாடி தங்கம்? ராசாத்தி, வெண்ணை. கண்டாரவோளி பய மக்கன்னுல்லாம் உங்க ஹஸ்பெண்ட் சொல்லுவாரா? எங்ககிட்ட எந்தப் பொய்யும் உதவாது. உண்மைதான் பேசணும். பீ கேர்ஃபுல்.''

''ஹஸ்பெண்டோட ஆவிதான் கொழந்தை மேல வந்துக்கிட்டிருந்தது. ஆனா பானு இந்த பர்ட்டிகுலர் மேட்டரைச் சொல்றப்ப யாரோ சோமுன்னு ஒருத்தரைக் காப்பாத்தணுங்கறதுக்காக சோமுவோட அம்மாவோட ஆவியோ என்னவோ வந்து சொல்லிச்சி.''

''ஷட்அப். கொஞ்ச நேரத்துக்கு முன்னால ஹஸ்பெண்ட்னு சொன்னீங்க. இப்ப யாரோ ஒரு சோமுவோட அம்மான்னு சொல்றீங்க. உண்மையைச் சொல்லலேன்னா உங்க கிட்டேர்ந்து உண்மையை வரவழைக்கறது எப்படின்னு எங்களுக்குத் தெரியும். கம் ஆன். கம் க்ளீன். குண்டு வெச்சது யாரு? இந்தச் சதிக்குப் பின்னால இருக்கறது யாரு? நீங்களா இல்லை இந்த சிவாவா? நீங்களே ஒத்துக்கிட்டா உங்களுக்குத் தண்டனை கம்மியா கெடைக்கும். இல்லைன்னா மாக்ஸிமம் பனிஷ்மென்ட் டெத் சென்டன்ஸ். தூக்கு தண்டனை வரைக்கும் போகும்.''

''ஐயோ, நான் என்ன பண்ணுவேன்? ஆவிதான் சொன்னது இன்ஸ்பெக்டர். கொஞ்ச நாளைக்கு முன்னால இந்தக் கொழந்தை ஆஸ்பிடல்ல அட்மிட் ஆயிருந்தப்ப



பெக்கூலியரா பிஹேவ் பண்ணினா. பத்திரிகைல எல்லாம் நியூஸ் வந்திருந்தது.''

''எங்களுக்குத் தெரியும். ஆனா தற்செயலா நடந்த ஒரு விஷயத்தை நீங்க இப்ப உபயோகப்படுத்திகிட்டிருக்கீங்க. மேடம், போலீசை அண்டர் எஸ்டிமேட் பண்ணாதீங்க. உங்க சரித்திரமே எங்களுக்குத் தெரியும். உங்க ஹஸ்பெண்ட் மிஸ்டர் ஸ்ரீனிவாசன் டெல்லி செக்ரடேரியட்ல வேலை பண்ணிட்டிருந்தாரு. அவர் ஒரு ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட்ல இறந்து போய்ட்டாரு. அது ஆக்ஸிடென்ட் இல்லை. வேணும்னு திட்டமிட்டு சதி பண்ணி உங்க ஹஸ்பெண்டைக் கொன்னுட்டாங்கன்னு உங்க மச்சினன் மிஸ்டர் அருண் ரிப்போர்ட் பண்ணாரு. கவர்மென்டே அவரைக் கொன்னுட்டதா அவருக்கு சந்தேகம். அதனால அரசாங்கத்தைப் பழி வாங்கறதுக்காக இப்ப ஜெலடினைக் கைல எடுத்துக்கிட்டிருக்காரு. உங்க வீட்ல எதுக்கு ஹாம் ரேடியோ கனெக்ஷன் வச்சிருக்கீங்க? கேட்டா மிஸ்டர் சீனிவாசனோட ஹாபியில அது ஒண்ணுன்னு சொல்லுவீங்க. நோ, ஹாம் மூலமா உலகம் முழுவதும் நீங்க யாரோட வேணும்னாலும் பர்சனலாப் பேசலாம். என்ன கான்ஸ்பிரஸியா இருந்தாலும் பண்ணலாம். உங்க மச்சினன் அருணும், நீங்களும் சேர்ந்துக்கிட்டு இந்த குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு ஹெல்ப்ஃபுல்லா இருந்திருக்கீங்க. உங்க வீட்டை நாங்க சர்ச் பண்ணியிருக்கோம். உங்களை ஃபாலோ பண்ணி உங்களைப் பத்தின மேட்டர் எல்லாம் கேதர் பண்ணியிருக்கோம். உங்களுக்கும் மிஸ்டர் சிவாவுக்கும் நடுவுல ஒரு அஃபேர் இருக்கிறது கூட எங்களுக்குத் தெரியும். வாட்ஸ் ஆல் தீஸ் திங்க்ஸ்? உண்மையைச் சொல்லுங்க. என்ன நடந்தது?''

பாரதியின் தலை சுழன்றது. இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இப்போதே செத்துப் போனால் நன்றாக இருக்கும் என்று தோன்றிய கணத்தில் அவள் மயங்கி விழுந்தாள்.

# 12

வானொலி நிலையத்தின் மற்ற ஊழியர்கள் அத்தனை பேரும் பாரதியைக் காப்பாற்ற கமிஷனர் ஆபீஸிற்கு வந்து விட்டார்கள்.

கமிஷனரை கேரோ செய்தார்கள்.

வானொலியின் செய்தி அறிக்கையில் பாரதியை போலீஸ் அவமானப்படுத்திய செய்தி ஒலிபரப்பாகியது.

கையாலாகாத காவல்துறை, பாரதியை நோக்கிக் குற்றம் சாட்டியதை பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதின.

கமிஷனர் இந்த மாதிரியான விளைவுகளை எதிர்பாராமல் ஆப்பை அசைத்துவிட்ட குரங்கின் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஹாம் ரேடியோவில் பாரதி யாருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளாதது உறுதி செய்யப்பட்டது. அருண் மதுரை வெடி குண்டின் போது கம்பெனி விஷயமாக ஹைதராபாத் சென்று ஒரு மாதம் முழுக்க பயிற்சியில் இருந்தது வெளிவந்தது.

ஒரு மனோதத்துவ நிபுணர் பானுவைப் பரிசோதித்து விட்டு, முதன் முதலாக அவள் அருகிலேயே ஒரு வெடி குண்டு வெடித்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக அவளது மூளை நலனும், மனநலனும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அதனால் சம்பந்தமில்லாமல் என்னென்னவோ உளறியதாகவும், அவளை ஒரு மனநலக் காப்பகத்தில் வைத்து சிகிச்சை கொடுத்தால்தான் பானு பழையபடி மாற முடியும் என்றும் சான்றிதழ் தந்தார். பானுவின் மனநோய்க்கு மருத்துவ ரீதியாக ஏதோ ஒரு பாரனாய்ட் என்று பெயர் சூட்டினார். பானுவின் மனநலம் சரியில்லை என்றால் அவளைக் கேள்விகள் எதுவும் கேட்க முடியாது என்று சிவா சென்று சந்தித்த



ஒரு வக்கீல் சொன்னதை வைத்து சிவாதான் பானுவிற்கு மனநோய் என்று ஒரு அரசாங்க மருத்துவரிடம் சான்றிதழ் வாங்கி வந்தான்.

போலீஸ் பாரதியை அதற்கு மேல் கேள்விகள் கேட்காமல் விட்டது. குண்டு வெடிப்பிற்குக் காரணம் கண்டு பிடிக்க மதுரை நோக்கி ஓடியது.

'பானுவிற்குப் பைத்தியம்' என்று காவல்துறை சொல்லியது.

வேறு வழியின்றி அவ்வளவு இழிவான ஒரு பேச்சை பாரதி கேட்க வேண்டி வந்தது.

பானு அரசாங்க மனநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.

வதந்திகள் ஏற்படுத்திய மனவேதனையைத் தாங்க முடியாமல் சிவா மறுபடி வேலை மாற்றம் பெற்று திருவனந்தபுரம் சென்றான்.

இப்போதெல்லாம் பானு கம்பி வலைகளால் ஆன தடுப்பிற்குப் பின்னால் எதையோ தொலைத்துவிட்ட வெற்றுப் பார்வையுடன் உட்கார்ந்திருக்கிறாள்.

சீனுவின் ஆவி அதன்பின் பானுவைத் தொந்தரவு பண்ணுவதில்லை.

ஒரு நாட்டியச் சுடராக, ஒரு சொல்லின் செல்வியாக, ஒரு பாடல் அரசியாக, ஒரு பொறியியல் துறை மேதையாக உருவாக வேண்டிய பாரதியின் நைட்டிங்கேலான பானு இப்படி கம்பித் தடுப்பிற்குப் பின்னால் இருப்பதைப் பார்த்து வேதனைத் தீயில் பாரதி வெந்து கொண்டிருக்கிறாள்.

அவளுக்கு யார் ஆறுதல் சொல்வது?

என்ன ஆறுதல் சொல்வது?

# கரன்சி வாசனை

## 1

வார்டன் அறையில் ஒரு தேசப்படம் இருந்தது. உலக உருண்டை இருந்தது. பழைய மேஜை. நாற்காலி. மூலையில் மண்பானை. மண்தட்டு மூடி. அதன்மேல் ஒரு எவர்சில்வர் டம்ளர். வார்டனின் அறைக்குள் நான் நுழைந்தேன்.

வார்டன் தலை குனிந்து என்னவோ எழுதிக் கொண்டிருந்தான். சின்னப்பையன். என் வயதுதான் இருக்கும். வார்டன்கள் என்ன எழுதுவார்கள் என்று எனக்குத் தெரியும்.

ஜெயிலில் எத்தனை கைதிகள்? அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் உணவுக்கு ஆகும் செலவு. ஜெயிலுக்கு சப்ளை பண்ணுவதற்கென்று கொத்தவால்சாவடியில் சில ஹோல்சேல் பார்ட்டிகள் இருக்கிறார்கள்.



காய்கறி, அரிசி, பருப்பு, உப்பு, மிளகு, கடுகு, காராமணி என்று யாவற்றையும் அவர்கள்தான் சப்ளை செய்வார்கள். வார்டன்களுக்கு அதில் கமிஷன் உண்டு. முன்னூறு கைதிகள் என்றால் முன்னூற்று ஐம்பது கைதிகள் என்று என்ட்ரி போட்டுக்கொள்வார்கள்.

சென்ட்ரல் ஜெயிலில் ஃப்ளோட்டிங் பாப்புலேஷன் அதிகம். அரசியல் காரணங்களுக்கு, அடிதடி காரணங்களுக்கு என்று கைதாகும் அநேகம் பேர் ஒன்றிரண்டு நாட்கள் தற்காலிகமாக வந்து தங்குவார்கள்.

தினம் ஒரு ஐம்பது பேர். அவர்களில் பெரும்பாலானோர் ஜெயில் சாப்பாட்டை சாப்பிட மாட்டார்கள். வீட்டிலிருந்து வரும் மட்டன் குழம்பும், சிக்கன் வறுவலும், சுறா புட்டும் தான். வார்டன்களுக்கும் அந்த வீட்டுச் சாப்பாடு பகிர்ந்தளிக்கப்படும். எனவே, வார்டன்களுக்கும், கைதிகளுக்கும் இடையே எப்போதும் ஒரு நல்லுறவு இருந்தபடி இருக்கும். அந்த நல்லுறவு வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாது. அதட்டலும், மிரட்டலும்தான் தெரியும்.

எனவே வார்டன்கள் கைதிகளுக்கு வீட்டுச் சாப்பாட்டை அனுமதித்து விட்டு, மளிகை வாங்கியதாக கணக்கு எழுதுவார்கள். அவர்களுக்கும் கமிஷன், கொத்தவால்சாவடி ஹோல்சேல் வியாபாரிகளுக்கும் லாபம்.

வார்டன்களை முறைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது என்று என் அனுபவத்தில் தெரிந்து வைத்திருக்கிறேன். புதிதாக ஜெயிலுக்கு வருபவர்கள் இந்த சூட்சுமம் எல்லாம் தெரியாமல் வார்டன்களிடம் தகராறு பண்ணுவார்கள். உரிமைக் குரல் எழுப்புவார்கள். அதிலும் குற்றமே செய்யாமல், யாரோ ஒருவனுடைய சுயநலத்திற்குப் பலியாகி, செய்யாத குற்றத்தைச் சுமந்து, இரண்டு வருடம், ஒரு வருடம் எனக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளே

வந்தடையும் அமெச்சூர் ஜெயில்வாசிகள் நிலைதான் ரொம்பப் பரிதாபம்.

அவர்கள் கோபக்காரர்களாக இருப்பார்கள். சமூகத்தைச் சுரண்டுபவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற எண் ணத்துடன் வந்து மாட்டிக் கொள்வார்கள்.

இங்கே நடக்கும் சில நடைமுறைகளைப் பார்த்து விட்டு திடுக்கிடுவார்கள். குற்றவாளிகளைத் திருத்துவதற்காக அமைக்கப்பட்ட ஜெயிலின் காவலர்களே இந்த மாதிரி சட் டத்திற்குப் புறம்பாக நடந்து கொள்வதா? கைதிகளைச் சுரண்டுவதா என்றெல்லாம் சிந்திப்பார்கள்.

அப்படிப்பட்ட சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில் சிந்தனாவாதி களை வார்டன்கள் உடனே இனம்கண்டு கொள்வார்கள்.

எப்படியாவது அவர்களுக்குக் காயடித்துவிட வேண்டும் என்று சமயம் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

லேசாக ஆட்டம் போட்டால், உள்ளே இருக்கும் இன் னொரு கைதியை விட்டு சீண்டிவிடச் சொல்லி, ஜெயிலின் உள்ளே இருக்கும் போது கலவரத்தை மூட்டி விடும் வகை யில், சண்டை போடப் பார்த்தான் என்று குற்றம் சாட்டி, அவனைத் தனியாக நான்கைந்து அஸிஸ்டன்ட் ஜெயிலர்கள் அழைத்துக் கொண்டு போய் லாடம் கட்டுவார்கள். ஏரோப் பிளேன் போஸில் மாட்டி அவனைக் கவனிப்பார்கள். அவ் வளவுதான். அவனுடைய சமூகக் கோபம் எல்லாம் குறைந்து விடும். மற்ற கைதி ஆடுகளோடு ஆடாக மாறி விடுவான்.

இன்னும் அவன் கொழுப்பு அடங்கவில்லையா,

அவனை கோர்ட்டுக்குக் கூட்டிப்போகிறேன் என்று சொல்லி வழியில் வேனில் இருந்து இறக்கி ஓடச் சொல்லிச்



சுட்டு விடுவார்கள். தப்பி ஓடப் பார்த்தவனைச் சுட்டுச் சாகடித்ததாகச் செய்தி வரும்.

அதையும் மீறி சில கைதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு தடவை ஒரு அப்பாவி வார்டனை எரித்துக் கொன்றார்கள். உள்ளே நெருப்பு, புகை என்று ஒரே களேபரம். அதில் கைதி கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தப்பிக்கப் பார்த்தார்கள். நானும் தான் அந்தக் கூட்டத்தில் இருந்தேன்.

போலீஸ்காரர்கள் சுடத் தொடங்கினார்கள். எப்படியோ செய்திபோய் எப்படியோ ஆயுத உதவி வந்து எங்களில் சுமார் இருபது பேர் இறந்து போனார்கள். பேப்பர்களில் என்ன செய்தி வந்ததோ, தெரியாது.

அந்தக் கலவரத்திற்குப் பிறகு மாட்டு அடி. மரண அடி. கலவரத்தின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் என் முழங்கைச் சில்லு பெயர்ந்து விட்டது. தோள்பட்டையை ஒரு குண்டு பதம் பார்த்தது. கீழே விழுந்ததால் செத்துவிட் டேன் என்று சுடாமல் விட்டு விட்டார்கள்.

பிழைத்து விட்டேன். ஆனால் இடது கை இப்போது கூட உடம்பிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாதது போல் சில நேரங்களில் லொட, லொட என்று ஆடுகிறது.

என்ன செய்வது?

மனிதன் என்று பிறந்து விட்டாலே வலியோரை வாழ்த்தி, எளியோரைத் தாழ்த்தும் சமூகக் கோட்பாட்டிற்கு உட்பட்டவ னாகத்தான் ஆகவேண்டும். நானும் அப்படித்தான் ஆகிவிட் டேன். ஆடுகளோடு ஆடாக அவர்கள் என்ன சொன்னாலும் அடிபணிகிறேன். தனி ஒருவனாய் இருந்து கொண்டு உடல் பலத்தால் என்னைச் சுற்றி இருப்பவர்களை எதிர்த்து

ஜெயிப்பது கஷ்டம். என் மண்டை உடையும். ஆண்மை பறிபோகும். செத்துப் போவேன்.

அதை விட உயிர் வாழ்வது மகத்தானது. இன்பமானது. இந்த உலகில் எத்தனையோ கோடி இன்பங்கள் நான் அனுப விப்பதற்கென்று இருக்கும்போது உயிரைப் பறிகொடுப்பது முட்டாள்தனம்.

எனக்கு ஒரு லட்சியம் இருக்கிறது.

பணம் சம்பாதிப்பதுதானே என்று கேட்காதீர்கள். அது லட்சியம் இல்லை. பணம் வேண்டும்தான். மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்குப் பணம் இல்லாவிட்டால் ஒன்றும் செய்யமுடி யாது. எனக்கு கரன்ஸி வாசனை மிகவும் பிடிக்கும். கரன்ஸி வரவழைத்துத் தரும் சௌகரியங்கள் இன்னும் நிறையப் பிடிக்கும். அந்தக் கரன்ஸி வாசனையை, மோப்பம் பிடிக்கப் போய்த்தான் ஒவ்வொரு முறையும் இந்த நாய்த் தொழுவத் திற்கு அழைத்துவரப்பட்டு, பட்டியில் அடைக்கப்படுவது போல் அடைக்கப்பட்டு விடுகிறேன். இந்த முறை வெளியே போனால் சின்னச்சின்ன விவகாரங்கள் எல்லாம் இல்லை. மெகா. டீ.விகளில் கூட இப்போதெல்லாம் மெகா என்றால் தான் லாபம் அதிகமாம். அதனால் வெளியே போனபின் மெகாவாக, மாட்டாமல் என்ன செய்யலாம் என்பதைத் தீர்மானிக்கிறேன்.நீங்களும் என்னை விட்டு விடாதீர்கள்.என் கூடவே இருந்து எனது செயல்முறைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள். நாளைக்கு உங்களின் பேரக்குழந்தைகளுக்கு அல்லது உங்களது குழந்தைகளுக்கே கதை சொல்வதற்கு எனது சாகசம் கலந்த செயல்பாடுகள் எல்லாம் சுவாரசியமாக இருக்கும்.

எனது லட்சியம் பணம் சம்பாதிப்பது இல்லை.

அதை இங்கேயே இப்போதே சொல்ல மாட்டேன். லட் சியம் நிறைவேறாவிட்டால் நகைப்பிற்கிடமாகி விடுவேன்.



லட்சியம் நிறைவேறிய பின் நிச்சயம் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். ஓகே? இது சத்தியம்.

எனக்கு இன்று விடுதலை.

அதுதான் ஜெயிலர் அறைக்குள் நுழைந்து நின்றேன். நிற்க வைக்கப்பட்டேன். என்னை அழைத்து வந்த கன்விக்ட் வார் டன்கள் ஜெயிலரின் அறைக்கு வெளியே நின்றிருந்தார்கள்.

விடுதலை நாள் என்று தெரிந்திருந்தும் அன்றைக்கு நான் அதிகம் உழைத்திருந்தேன். வெளியே போய் ஏதாவது ஒரு தொழிலைத் தேடிக் கொள்வதற்கு முன் காலம் தள்ள வேண் டுமே. காசு வேண்டுமே! அதனால்தான் இந்த உழைப்பு. மேலும் கல் உடைத்தல், ஜெயில் வளாகத்திற்குள் சாலை போடுதல், சாலை செப்பனிடுதல் போன்ற வேலைகளைச் செய்தால் உடலுக்கு உடற்பயிற்சியும் கூட. கையில் கணிச மாகக் காசு வரும். தெரியும். பார்க்கலாம். என்ன செய்யலாம் என்று.

என் உடலில் இருந்து எழுந்த வியர்வை வாடை ஜெயி லரைத் தாக்கியது. நிமிர்ந்தார். என்னைப் பார்த்தார்.

சிரித்தேன். பதிலுக்கு மரியாதை நிமித்தம் கூட ஒரு சிரிப்பு இல்லை. விடுதலையாகிப் போகிறவனும் மனிதன்தானே? சிரித்தால்தான் என்ன? நாளைக்கு இந்த வார்டனே லஞ்ச ஊழலில் மாட்டிக்கொண்டு, இதே ஜெயிலுக்குள் வந்து உட்கார்ந்து கல் உடைக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

''என்ன?'' என்று கேட்டார். அதிகாரமான 'என்ன?'

''ரிலீஸ் சார்.'' என்றான் கன்விக்ட் வார்டன்களில் ஒருவன்.

என் ஜாதகம் புரட்டப்பட்டது. என் பழைய சட்டை, பேண்ட் திருப்பி அளிக்கப்பட்டது. நான் வேலை செய்ததற்கான சம்பளம் பண்ணி எடுத்து வைக்கப்பட்டது.

''வருகிறேன் சார்.''

"வராதே போ. இந்த இடத்திற்கு, சாவு வீட்டிற்கு எல்லாம் வருகிறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்பக் கூடாது."

"ரைட் சார். தாங்க்ஸ் சார்."

வெளியே வந்து விட்டேன்.

# 2

**சு**தந்திரக் காற்று. நீல ஆகாயம். பின்னணியில் பறந்த ஒரு சுதந்திரப் பறவை. தடதடத்து ஓடிய மின்சார ரயில். கதாநாயகன் சிறையில் இருந்து விடுதலை பெற்று வந்தால் வெள்ளித் திரையில் என்னென்ன காட்சிகளைக் காட்டுவார் களோ அவ்வளவு காட்சிகளையும் நான் பார்த்தேன்.

வெளியே வந்து விட்டேன். இன்னும் என்ன செய்வ தென்று தீர்மானிக்கவில்லை. என்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டேன். கசங்கிய சட்டை. உப்பு பூத்த பேன்ட். இந்தக் கோலத்துடன் எந்த இடத்தில் நுழைந்தாலும் நான் ஜெயிலில் இருந்த வந்தவன் என்பது சொல்லாமலேயே தெரிந்து விடும்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் எது இருக்கிறதோ இல்லையோ மனிதனுக்கு அல்ட ாப் வேண்டும். அலட்டல் வேண்டும். மிரட்டல் வேண்டும். இருப்பது ஒரு செட் துணி தான் என்றாலும் அதை அணிகிற விதத்தில் அணிய வேண்டும். அப்போதுதான் கொஞ்சமாவது மரியாதை.

முதலில் என்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அதன் பின்தான் மற்றவை பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.

நடந்தேன்.



எனது வாழ்க்கையின் தினப்படி அலுவல்கள், சில நிகழ்வுகள், சில சம்பவங்கள், சில துரத்தல்கள், சில தப்பித் தல்கள் ஆகியவற்றை பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கு வதற்கு முன் என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன்.

அம்மா, அப்பா வைத்த பெயர் மண்ணுச்சாமி. அம்மா என்னைச் செல்லமாக 'மண்ணாங்கட்டி' என்று அழைத்தது போன ஜன்மத்து நினைவு போல் மனதில் புகையாக எங்கோ ஒரு மூலையில் இருக்கிறது.

என் பெயர் மண்ணுச்சாமி. அதற்குப் பெயர்க் காரணம் இருக்கிறது.

நான் பிறப்பதற்கு முன் அம்மாவும், அப்பாவும் இணைந்து(!) பெற்ற ஐந்து குழந்தைகளும் (மூன்று ஆண், இரண்டு பெண்) தங்கவில்லை.

அதாவது இறந்து விட்டன.

வைசூரி, காலரா, டிப்தீரியா என்னும் ஆஸ்பத்திரி காரணங் களை அம்மாவும், அப்பாவும் நம்பத் தயாராய் இல்லை.

இது நிச்சயம் தெய்வக் குற்றம்.

பூமிமாதா பசி தாங்காமல் அவர்களுடைய 5 குழந்தை களையும் விழுங்கி விட்டதாக அம்மா, அப்பா நினைத்தார்கள்.

ஆறாவதாகப் பிறக்கப் போகும் நான் செத்துவிடக் கூடாது என வேண்டிக் கொண்டார்கள்.

எப்படி?

நான் பிறந்தவுடன், என்னை மண்ணில் புரட்டி எடுத்து, மண்ணுச்சாமி என்று பெயர் வைத்து, குழந்தையாகிய நான் மண்ணுக்குத்தான் சொந்தம் என்பதை மண்ணிடம் உறுதிப் படுத்தி விட்டால், அப்புறம் அந்தக் குழந்தையை மண் தின்னாது என்பது தொன்றுதொட்டு வரும் நம்பிக்கை.

அப்படித்தான் மண்ணுச்சாமி ஆனேன்.

போதும் போதாதற்கு என் மூக்கு வேறு குத்தப்பட்டு அதில் சின்னதாய் ஒரு தங்கக் கம்பி வளையம் மாட்டப்பட்டது.

வளரும் போது ஊரில் உள்ள சாதாரணப் பிள்ளைகள் போல் வளரவில்லை. எந்த ஒரு நண்பன் வீட்டிற்கு நுழைந் தாலும் அந்த வீட்டில் பரண், அல்லது வேறு ஒளிவிடங் களில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களைத் தேட்டை போட்டு விடுவேன்.

வெண்ணெய், முறுக்கு, லட்டு, அப்பம் என்று எதுவுமே என்னிடம் இருந்து தப்பியதில்லை. உப்புக் கண்டங்களைக் கூடத் திருடி வந்து வீட்டில் அம்மா இல்லாத சமயம் எண்ணெயில் விட்டுப் பொரித்துச் சாப்பிட்டு விடுவேன்.

நண்பர்களின் அம்மாக்கள் என் மேல் புகார் வாசித்த போது என் அப்பாவி அம்மா, திரேதாயுகத்து அல்லது துவாபரா யுகத்து கிருஷ்ணனே தனது வயிற்றில் பிள்ளையாய் வந்து உதித்திருக்கிறான் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

சின்ன வயதில் எனக்கு கரன்ஸி காகிதங்களின் மற்றும் கரன்ஸி நாணயங்களின் உபயோகம் தெரியாமல் இருந்ததால் தின்பண்டங்களுடன் திருப்தியானேன்.

சற்று வளர்ந்தவுடன் கரன்ஸி காகிதத்திற்கு உண்டான அபாரமான சக்தி தெரிந்து விட்டது. சில நாணயங்களைக் கொண்டு சிகரெட், பீடி போன்றவற்றை வாங்கலாம்.

ஒரு சில கரன்ஸி பேப்பர்களைக் கொண்டு விஸ்கி, பிராந்தி, ரம், கள் போன்றவற்றை வாங்கி அடித்துவிட்டு ஒரு மாதிரி கனவுலகில் மிதக்கலாம்.

மேலும் கரன்ஸி காகிதங்களுக்கான உபயோகங்களைக் கொஞ்சம் நாள்பட்டுத் தெரிந்து கொண்டேன்.



என் பள்ளித் தோழன் ஒருவன். முத்துக்காளத்தி என்று பெயர். அவன் அப்பா பெரிய பண்ணையார். நிறைய நிலங் கள் எல்லாம் வைத்திருந்தார்.அவரிடம் நிறைய வேலைக் காரர்கள் இருந்தார்கள். முத்துக்காளத்தியின் அப்பா போல் தெரியாது. தாத்தா போல் தெரியும். மீசை பெரிதாக இருக்கும். ஆனால் வெள்ளையாக இருக்கும். தலையில் சிக்கனமாக முடி. கிராப்தான். வகிடில் எண்ணெய் பளபளக்கும். ஒற்றை யடிப்பாதை போல் அந்த வகிடு முடியே இல்லாமல் பளபள வென்று, மினுமினுவென்று தெரியும். வகிடிற்குக் கொஞ்சம் தள்ளி இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் வரிசையாக நாற்று நட்ட மாதிரி வெள்ளை முடி தலையில் படியப்படிய வாரி விடப்பட்டிருக்கும்.

அந்த வஜ்ரவேலுவிற்கு பக்கத்து டவுனில் ஒரு சினிமா கொட்டகை வேறு சொந்தமாக இருந்தது. பகல், மாலை, இரவு என்று மூன்று ஷோக்கள். வேலைக்காரர்கள் கலெக் ஷனை ஏமாற்றாமல் இருக்க வேண்டும் என்பதற்காக வஜ்ர வேலு தினம் பன்னிரண்டு மணிக்கெல்லாம் பிளஷர் காரில் தியேட்டருக்குப் போய் விடுவார். ராத்திரி பதினோரு மணிக் குத்தான் வீடு திரும்புவார். முத்துக்காளத்தி என்னை அழைத் துக்கொண்டு போய் டவுன் தியேட்டரில் ஃபர்ஸ்ட் ஷோ விற்கு உட்கார வைப்பான். கடலை மிட்டாய், ஸ்ட்ராங் பப்பரமுட்டு, குச்சி ஐஸ் சகிதம் சினிமா. குச்சி ஐஸ் ஒரு மாதிரி ஆராஞ்சு வர்ணத்தில் இருக்கும். சப்பினால் வாயெல்லாம் ஆரஞ்சு நிறம் நெருப்பாகப் பற்றி கொள்ளும். உதடுகளில் கூடத் தீப்பிடித்து விட்ட மாதிரி தெரியும்.

முத்துக்காளத்திக்கு நான்தான் ரொம்ப நெருக்கம்.

ஒருநாள் உணவு இடைவேளையில் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்து வெட்டி வைத்த பாலாடைக்கட்டியை வாங்கிச் சாப்பிடுவதற்காக சாலையைக் கடந்த நேரம் வேகமாக வந்த அந்தக் காரை நாங்கள் இரண்டு பேருமே கவனிக்கவில்லை.

கடைசி வினாடியின் கடைசி கணத்தில் கவனித்தேன். பாய்ந்தேன். முத்துக்காளத்தியையும் இழுத்துக் கொண்டு. இருந்தும் முத்துக்காளத்தியைக் காரின் பின் பக்கம் புடைத் திருந்த மட்கார்ட் இடித்து வீசியது. முத்துக்காளத்தி வீழ்ந் தான். தட் என்று சத்தம் கேட்டது. எங்கும் அடிபடவில்லை. ஆனால் கண் மூடியிருந்தான். மயக்கமா, இல்லை செத்து விட்டானா?

''முத்து, முத்து'' என்று பதறினேன்.

கூட்டம் சேர்ந்துவிட்டது. கார் பத்தடி போவதற்குள் மடக் கப்பட்டு விட்டது. டிரைவர் கதவைத் திறந்து வெளியே இறங்கியவுடன் அறைபட்டான். உதடு கிழிந்து ரத்தம்.

இன்னொருவன் முகத்தில் குத்தினான். மூக்குத் தண்டு உடைந்து ரத்தம்.

''ஐயா.. அடிக்காதீங்கய்யா.. அடிக்காதீங்கய்யா'' என்று மெல்லிய ஹீனமான குரலில் சொல்லிக் கொண்டே, கைகள் இரண்டையும் உயர்த்தி கவசமாக வைத்தபடி முத்துக்காளத் தியை நெருங்கினான். அப்படியே அள்ளினான். காரின் பின் சீட்டில் படுக்க வைத்தான். நான் முன்புறம் ஏறிக்கொண் டேன்.

ஆஸ்பத்திரியில் முத்துக்காளத்தியைப் பரிசோதித்த டாக்டர், ''ஒன்றுமில்லை, அதிர்ச்சியில் மயங்கி இருக்கிறான். இன்னும் கொஞ்ச நேரத்தில் விழித்து விடுவான்'' என்று சொல்லி ஆறுதல் அளித்தார்.

முத்துக்காளத்தியின் மூச்சு சீராக வந்து கொண்டிருந்தது.

முத்துக்காளத்தியையும் என்னையும் ஏற்றிவந்த கார்க்கார ஆளைப் பார்த்து நன்றி சொல்லலாம் என்று திரும்பினால் அந்த ஆள் இல்லை.

வெளியே ஓடி வந்து பார்த்தேன். காரும் இல்லை. ஓடிப் போய்விட்டான். கோழை. அவன் மேல் கோபம் வந்தது.



எதற்காக ஓடிப் போகவேண்டும்? அவனுக்கு விழுந்த அடி சரிதான். இன்னும் அடிபடாமல் இருக்க வேண்டும் என்று ஓடிப் போய் விட்டானோ என்னவோ.

முத்துக்காளத்தியின் அப்பா வஜ்ரவேலு மகா, மகா கோபக் காரர். முத்துக்காளத்தியை ஒரு கார் டிரைவர் மோதிவிட்டான் என்று தெரிந்தால் அந்த டிரைவரின் தோலை உண்மையி லேயே உரித்து விடுவார்.

அது தெரிந்துதான் அந்தக் கார் டிரைவர் ஓடிப்போயிருக்க வேண்டும்.

அறைக்குத் திரும்பினேன்.

முத்துக்காளத்தி விழித்துக் கொண்டிருந்தான்.

'தாகமாக இருக்கிறது' என்று சைகை காட்டினான்.

குடிப்பதற்கு தண்ணீர் எடுத்துக் கொடுத்தேன்.

சட்டை மேலெல்லாம் சரித்துக் கொண்டு குடித்து விட்டு என்னைப் பார்த்துச் சிரித்தான்.

''என் உயிரைக் காப்பாற்றி விட்டாயடா மண்ணுச்சாமி. என் உயிர் உள்ளவரை உன்னை நான் மறக்க மாட்டேன்'' என்றான், என் கைகளைப் பற்றிக் கொண்டு.

ஏனோ, எனக்கு அந்த நேரம் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது.

டாக்டர் உள்ளே வந்தார். கூடவே ஒரு நர்ஸ். ஏறக்குறைய டாக்டருடன் ரெயில் பெட்டி மாதிரி ஒட்டிக் கொண்டு வந்தாள்.

முத்துக்காளத்தியின் நிலை பார்த்து சந்தோஷப்பட்டார்.

''அவ்வளவுதான் பையா. உனக்கு ஆயுள் கெட்டி நீ பிழைத்துக் கொண்டாய்'' என்று சொல்லி அவன் தோளைத் தட்டினார். நர்ஸும் சிரித்து அவன் தோளைத் தட்டிக் கொடுத் தாள்.

டாக்டர் என் பக்கம் திரும்பினார்.

"தம்பி. நீ நல்ல பையன். நல்ல வேலை செய்தாய். நான் டாக்டர். நோயாளிகள் குடுக்கும் பணத்தில்தான் நான் புவா சாப்பிடுகிறேன். இதோ இந்த மாதிரி நர்ஸ்களை வைத்துக் கொண்டிருக்கிறேன். (''ச்சீ.. என்னங்க நீங்க. சின்னப் பையன் கிட்டப் போய் இதெல்லாம் சொல்லிக்கிட்டு'' - நர்ஸ்) புரிகிறதா. அதனால் ஐம்பது ரூபாய் சார்ஜைக் கொடுத்து விட்டு உன் ஃபிரண்டை அழைத்துக் கொண்டு போ'' என்றார்.

ஐம்பது ரூபாயா?

ஐம்பது ரூபாய் எப்படி இருக்கும் என்று கூட எனக்குத் தெரியாது. ஐம்பது ரூபாய்க்கு எங்கே போவது?

முத்துக்காளத்தியின் அப்பா இந்நேரம் டவுன் தியேட்டரில் இருப்பார்.டவுனுக்குப் போக வேண்டும் என்றால் பஸ்ஸில் தான் போக வேண்டும். அதற்கும் காசு வேண்டும்.

முத்துக்காளத்தியின் அம்மாவிடம் போய்க் கேட்டு காசு வாங்கி வருவது என்று முடிவெடுத்தேன்.

"காளத்தி, நீ இங்கேயே ரெஸ்ட் எடு.நான் இதோ வந்து விடுகிறேன்'' என்று சொன்னேன்.

டாக்டரிடம், ''டாக்டர், நான் போய் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று அனுமதி கேட்டேன்.

டாக்டர் தலையசைத்தார்.

நான் வெளியே வந்தேன்.

முத்துக்காளத்தியின் வீட்டை நோக்கி ஓடினேன்.

சரியான பிற்பகல் நேரம் அது. முத்துக்காளத்தியின் வீடு பெரிய காம்பவுண்ட் சுவருக்கு உட்புறம் சின்ன அளவாய்த் தெரியும்படி தூரத்தில் அடங்கி இருந்தது.



காம்பவுண்ட் சுவரில் ஒரு மரகேட் பொருத்தப்பட்டிருந்தது. அதில் ஒரு சங்கிலிப்பூட்டு தெரிந்தது. அக்கம் பக்கம் யாரும் இல்லை. யாராவது இருந்தால் அழைத்து விஷயத்தைச் சொல்லிக் கதவைத் திறந்துவிடச் சொல்லலாம்.

சங்கிலிப் பூட்டு கேட்டின் உட்புறம் பூட்டப்பட்டிருந்ததால் வீட்டிற்குள்தான் ஆள் இருக்கிறது என்று தோன்றியது.

ஆபத்திற்கு ஒன்றும் தப்பு இல்லை என்று நான் மரகேட்டில் காலை வைத்து ஏறி எகிறிக் குதித்தேன்.

இந்த ஒரு விஷயத்தை ஏன் இவ்வளவு விரிவாகச் சொல்லுகிறேன் என்று உங்களுக்குத் தோன்றக்கூடும்.

காரணம் இருக்கிறது.

அந்த வீட்டில் என் கண் முன்னால் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சிதான் என் வாழ்க்கையையே திசை மாற்றி விட்டது. நான் இன்றைக்கு ஜெயிலில் இருந்து வெளியே வந்திருக்கிறேன் என்றால் அதற்கு அந்தப் பிற்பகல் நேரத்துச் சம்பவம் ஒன்றுதான் காரணம்.

அது ஒரு மாயவலையில் என்னைச் சிக்க வைத்த சம்பவம். பயமும், பரவசமும் கொடுத்த ஒரு சம்பவம். தித்திப்பும், திகிலுமாக அந்த சம்பவம் நிகழ்ந்த போது என்னையறியாமல் அதில் நான் சிக்கிக் கொண்டேன்.

முத்துக்காளத்தியின் வீட்டிற்கு நான் அந்த நேரத்தில் போயிருக்கக்கூடாது என்று பின்னாட்களில் நான் எவ்வளவோ முறைகள் நினைத்து நினைத்து வருத்தப்பட்டிருக்கிறேன்.

## 3

முத்துக்காளத்தி வீட்டு மரகேட்டைத் தாண்டிக் குதித்தேன்.

காலில் ஒரு கருவேலமுள் சர்ரக் என்று ஏறியது. எரிச்சலாக இருந்தது. முள் குத்திய இடத்தில் பவளத் துணுக்கு போல் ஒரு ரத்தத்துளி வெளிப்பட்டது.

துடைத்தேன். இன்னொரு பவளத்துளி.

சுற்று முற்றும் பார்த்தேன். காம்பவுண்ட் சுவர் ஓரமாக ஒரு எருக்கஞ் செடி வளர்ந்திருந்தது. நொண்டிய படி அதை நெருங்கினேன்.

ஒன்றிரண்டு இலைகளைக் கிள்ளினேன்.

காம்பின் அருகில் எருக்கம் பால் வெளிப்பட்டது. முள் குத்திய இடத்தில் அந்தப் பாலைச் சொட்டவைத்தேன். பின் எருக்கம் இலையின் பின்னால் திரிதியாய் மாவு போல் படர்ந்திருந்ததை ஒற்றை விரலால் நீவிச் சுரண்டி திரட்டி எடுத்து முள் குத்திய இடத்தில் அழுத்தினேன்.

ரத்தம் நின்று விட்டது.

வீட்டைப் பார்த்து நடந்தேன்.

குதிகாலில்தான் முள் குத்தியிருந்தது. எனவே அந்த இடம் கீழே படாமல் நடந்ததில் கொஞ்சம் விந்தி விந்தி நடக்க வேண்டியிருந்தது.

அந்தப் பாதை வீட்டை நோக்கிச் சென்றது.

செப்பனிடப்பட்டிருந்த மண்பாதை. பாதையின் இரு பக்கங்களிலும் குல்மொஹர் மரங்கள் வளர்ந்திருந்தன. ஒவ்வொரு மரமும் தீப்பற்றிக் கொண்டு விட்டது போல் ஆரஞ்சு நிறத்தில் பூக்கள் லட்ச, லட்சமாய்ப் பூத்திருந்தன. மரத்திற்குப் பாரமாகிப் போன பூக்கள் கீழே உதிர்ந்திருந்தன. என் காலடியில் அவை பட்டன. மெத், மெத் என்று மேகப் பொதிகளின் மேல் நடப்பது போலிருந்தது.

குல்மொஹர் மரங்களுக்கு அந்தப் பாதையின் இரு ஓரங்களிலும் காவல் காக்கும் வேலைதான். மற்றபடி இருந்த



இடத்தில் மாமரங்களும், பலாமரங்களும், வேப்பமரங்களும் வளர்ந்திருந்தன.

நிழலும், வெயிலுமாய் நிறைந்த அந்தப் பிரதேசத்தில் தங்கப்புள்ளிகளுடன் மான்கள் நடமாடியிருந்தால் கூட ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன்.

மான்கள் இல்லை. கொத்தாகப் பசுமாடுகள் உட்கார்ந்திருந்தன.

கண்களை மூடி அசைபோட்டுக் கொண்டிருந்தன.

முத்துக்காளத்தி அந்த ராஜ்யத்தில் இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்டிருப்பவன். எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி என்று தோன்றியது.

இவ்வளவு பெரிய இடத்தில் ஏன் ஆட்கள் இல்லை என்று தெரியவில்லை. கொஞ்சம் கழித்து உரைத்தது. பக்கத்து கிராமத்தில் அன்றைக்கு வாரச்சாந்தை.

எங்கள் ஊர் மக்கள் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுத்து விடுவார்கள். அந்த புனலூர் வாரச்சந்தையை மட்டும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

சந்தையில் சகாய விலையில் கிடைக்கும் ரவிக்கை, மாலை, வளையல், மஞ்சள் மற்றும் எல்லாமே ஊர்ப்பெண்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள். கூடவே முற அகலத்திற்கு அப்பளம். ரோஸ் நிறத்தில் கண்ணாடித்தாளில் சுற்றப்பட்ட ஐஸ்கட்டி.

சட்டென்று மண் பாதை முடிந்து வீடு துவங்கியது. இரு புறங்களிலும் ஓடுகள் சரிந்த ஒரு கூரை. அதன் கீழிருந்த சிமெண்ட் தரையில் சிவப்பான ரெட்-ஆக்ஸைட் எண்ணெய் பளபளப்புடன் தெரிந்தது.

அந்த இடத்தில் இருந்த கதவு லேசாகத் திறந்து இருந்தது. நான் கதவை அகலமாகத் திறந்து உள்ளே நுழைந்தேன்.

"தனம்மா" என்று அழைத்தேன்.

பதில் வரவில்லை.

தனம்மா என்பது முத்துக்காளத்தியுடைய அம்மாவின் பெயர். தனலட்சுமி. ஆனால் தனலட்சுமி முத்துக்காளத்தியின் சித்தி. வஜ்ரவேலுவின் மூன்றாவது மனைவி. முதல் மனைவி இறந்து போய், இரண்டாவதாக வந்த மனைவியான விசாலாட்சி முத்துக்காளத்தியைப் பெற்று விட்டு இறந்து போய் விட, முத்துக்காளத்தியை சீரும் சிறப்புமாக வளர்க்க வஜ்ர வேலு தேடிக்கொண்ட மூன்றாவது மனைவியின் பெயர்தான் தனலட்சுமி.

முத்துக்காளத்தியை தனம்மா என்று அழைக்கச் சொல்லிச் சொன்னதே அவள்தான், இந்த வாக்கியம் ஒழுங்காகப் புரிய வேண்டுமானால் இன்னொரு முறை படியுங்கள்.

முத்துக்காளத்தி மட்டுமல்ல, நானும் அவனுடைய சித்தியை 'தனம்மா' என்றுதான் அழைக்க வேண்டும் என்று எனக்கும் உத்தரவு.

வீட்டுக் கூடம் வெறிச்சிட்டு இருந்தது.

நடுவில் மாட்டப்பட்டிருந்த ஊஞ்சல் மட்டும் மிக லேசாக ஆடிக் கொண்டிருந்தது. காற்றிலா, இல்லை யாராவது உட்கார்ந்து எழுந்துவிட்டுப் போனதிலா என்று புரியவில்லை.

கூடத்தை அடுத்து இருந்த ஓர் அறைக்குள் நுழைந்தேன். ஸ்டோர் ரூம், டின்கள் அடுக்கப்பட்டிருந்தன. எண்ணெய்ப் பூச்சுடன் சில தகர டின்கள். வாழைத்தார் ஒன்று. அரியப் படாத பலாப்பழம். முறத்தில் காய்கறிகள். ஆள் யாரும் இல்லை. இன்னொரு அறை படுக்கை அறை. கட்டில் காலியாக, அகல மாக இருந்தது. மெத்தை கசங்காமல் இருந்தது. தலையணைக்குப் பக்கத்தில் 'தாது விருத்தி லேகியம்' என்று லேபிள் ஒட்டப்பட்ட ஏதோ ஒரு ப்ளாஸ்டிக் டப்பா. திறந்து



பார்த்தால் நெய்யும். தேனும் மணக்கும் ஒரு காப்பிப்பொடி நிறக் கலவை. அங்கேயும் யாருமில்லை.

வீட்டைத் திறந்து போட்டுவிட்டு இவர்கள் எல்லாம் எங்கே போய்விட்டார்கள். பின்னால் சமையல் அறை. காலி. அதற்குப் பின்னால் ஒரு குளியல் அறை. அதை அடுத்து ஒரு சின்ன அவுட் ஹவுஸ். அவுட் ஹவுஸ் பெரிய வீட்டில் இருந்து கோபித்துக் கொண்டு நின்றது போல் தெரிந்தது.

அதன் கதவும் திறந்திருக்க, அவுட்ஹவுஸின் உட்புறத்தில் இருந்து ஏதோ சன்னமான முனகல்.

பெண்ணின் முனகல் போல் இருந்தது. பயம் எடுத்து விட்டது. இவ்வளவு பெரிய திறந்த வீட்டில் ஏதாவது விபரீதம் நடந்து அதற்கு நான் சாட்சியாக இருந்துவிட நேருமோ என்ற பயம்.

இதயம் ஒலிம்பிக் வேகத்தில் துடித்தது.

மெதுவாக அவுட்ஹவுஸ் நோக்கி நடந்தேன்.

திடீரென யாவற்றையும் துறந்துவிட்டு அப்படியே பின் வாங்கி, ஓடிவிடலாமா என்று தோன்றியது. முத்துக்காளத்தி அங்கே ஆஸ்பத்திரியில் காத்துக் கொண்டிருப்பான்.

செலுத்தப்பட்டவனைப் போல் நடந்தேன்.

அவுட் ஹவுஸின் கதவு மூடப்பட்டு இருந்தது. ஆனால் ஜன்னல் ஒன்று திறந்து இருந்தது. அதன் வழியாகத்தான் முனகல் சத்தம் தப்பித்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

நான் ஜன்னலை நெருங்கினேன். முழங்காலுக்குக் கீழே பஞ்சடைக்கப்பட்ட மாதிரி கால்கள் தொய்ந்து போயிருந்தன. தொண்டை வறண்டு இருந்தது. வயிற்றில் அட்ரிலினோ, அமிலமோ சுரந்து ஒரு பயப்பந்து உருண்டு உருண்டு ரகளை செய்தது.

எட்டிப் பார்த்தேன்.

அந்தக் காட்சியை என் வாழ்நாள் உள்ளவரை மறக்கவே முடியாது. அவுட் ஹவுஸ் உள்ளே இருந்த கட்டிலில் தனம்மா படுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் மேல் ஒருவன் பரவியிருந்தான். வஜ்ரவேலுவின் உதவியாள் அவன். மலையாள தேசத்திலிருந்து வந்தவன். ஆயுர்வேத வைத்தியன் என்று அவனைப் பற்றி முத்துக் காளத்தி சொல்லுவான்.

ஆனால் அவனைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கும். நுனியில் வளைந்த செருப்பு, கையில் கோல், முகத்தில் கொடு வாள் மீசை, தலையில் பக்கவாட்டில் ஆண்டாள் கொண்டை போல் தலைமுடியை முடிந்து, சுருள் சுருளான முடிகள் நிறைந்த பரந்த அகன்ற மார்புடன் அவன் ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும், கிராமத்து எல்லையில் குதிரை மேல் உட்கார்ந்திருக்கும் உருட்டுக்கண் அய்யனார் எழுந்து பாரா வருவது போல் இருக்கும்.

அவன்தான் இப்போது தனம்மாவின் மேல் பரவியிருந் தான். அவன் செயல் என்னைப் பயத்தின் உச்சிக்குக் கொண்டு போய் உட்கார்த்தி வைத்தது.

அவன் தலைமுடி பிரிந்து தொங்கி அவன் முகத்தை அரைகுறையாய் மூடியிருந்தது. ஆனாலும் மயிர்க்கற்றை களின் ஊடே தெரிந்த அவன் முகம் அருள் வந்தவனைப் போல், ஆவேசம் வந்தவனைப் போல் இருந்தது. தனம்மா வின் முகமும் பார்க்கச் சகிக்கவில்லை. உதடுகள் கோணி இருந்தன. கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டிருந் தாள். நெற்றிப்பொட்டு கலைந்த இருந்தது.



என் வாயில் இருந்து ஒரு பயக்கூச்சல் வெளிப்பட்டது.

அவ்வளவுதான்.

அவர்கள் இருவரும் சட்டென்று விலகினார்கள். மலை யாள வைத்தியன்தான் என்னை முதலில் பார்த்தவன்.

என் கண்கள் அகன்று இருந்தன.

அவன் பார்த்த பார்வையில் இருந்த கோபம் கண்டு என் கண்கள் மேலும் அகன்றன.

அந்த இடத்தை விட்டு ஓடவேண்டும் போலிருந்தது.

கால்கள் நகர மறுத்தன. ஆணியடித்து தரையோடு தரை யாய் இணைக்கப்பட்ட மாதிரி தோன்றின.

தனம்மாவும் ஒருக்களித்து என்னைப் பார்த்தாள்.

''டேய் நில்லுடா'' என்று மலையாள வைத்தியன் குரல் கொடுத்தான்.

''ஐயோ. பயமாக இருக்கிறது'' என்று கத்தினேன்.

மலையாள வைத்தியன் இன்னும் சற்று எழுந்தான். கதவை நோக்கி நடந்து வரும் உத்தேசம் அவன் முகத்தில் தெரிந்தது.

நான் கூச்சல் போட வாய் திறந்தேன்.

தனம்மா எழுந்தாள். மலையாள வைத்தியனின் மார்பில் கை வைத்துத் தள்ளினாள். அவன் அப்படியே கட்டிலில் சரிந்தான்.

தனம்மாவை முறைத்தான்.

தனம்மா பயப்படவில்லை. பதிலுக்கு அவனை முறைத் தாள்.

''குழந்தை என்னவோ ஏதோ என்று பயந்து போயிருக் கிறது. நீ பாட்டுக்கு எழுந்து வாசல் பக்கம் போனால் அவன் கத்தி அக்கம் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருப்பவர்களை எல்லாம் எழுந்துவரச் செய்து விடுவான். தேவையா இது? விடு. நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டு தனம்மா எழுந்து வந்தாள்.

''பயப்படாதே மண்ணு'' என்றாள். கதவு திறந்து என்னை அணைத்து உள்ளே அழைத்துக் கொண்டாள். அவள் அணைப் பில் எனக்கு மூச்சு திணறியது. இரண்டு வித வியர்வை வாசனையுடன் அவள் இருந்தாள்.

எனக்குப் பிரமிப்பாக இருந்தது தனம்மாவை அவ்வளவு வெளிப்படையாகப் பார்த்ததுதான். ஒரு பக்கம் மூச்சு திணறி னாலும் இன்னொரு பக்கம் என் உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு வினோத உணர்வு. பூச்சி ஊருகிற மாதிரி, பூ ஊருகிற மாதிரி, தேன் வழிகிற மாதிரி, ஐஸ் கட்டி நழுவுகிற மாதிரி. ஐயோ, அந்த உணர்வை எப்படிச் சொல்லிப் புரிய வைப்பேன்?

என்னை அருகில் உட்கார வைத்துக் கொண்டாள்.

''எங்கே வந்தாய்?'' என்று மென்மையாகக் கேட்டாள்.

''தனம்மா.. தனம்மா...'' என்று மலையாள வைத்தியனைப் பார்த்தேன். அவன் இன்னும் என்னை முறைத்துக் கொண் டிருந்தான். அவனுக்கு மட்டும் சுதந்திரம் இருந்தால் என் கழுத்தைத் திருகி, தரையில் குழி வெட்டிப் புதைத்து விடுவான் என்று எனக்குத் தோன்றியது.

''ஏய். வைத்தியா. உன் வைத்தியம் என்ன என்று தெரி யாமல் குழந்தை பயப்படுகிறது பார். எழுந்து போ'' என் றாள்.



அவன் தலைமுடியை முடிந்து கொண்டு எழுந்து வெளியே போனான்.

நான் முத்துக்காளத்திக்கு அடிபட்டதையும், அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்ததையும் சொன்னேன்.

''ஐயோ'' என்று அலறினாள் தனம்மா.

''என் கண்ணு. என் தங்கம். என் ராசா'' என்று பிரஸ்தாபிக்கத் தொடங்கினாள்.

''முத்துக்காளத்திற்கு இப்போது ஒன்றும் இல்லை தனம்மா. அவன் மயக்கமாகி இருந்தான். டாக்டர் ஊசி போட்டார். முழித்துக் கொண்டு விட்டான். டாக்டர் ஐம்பது ரூபாய் பணம் கேட்டார். என்னிடம் இல்லை. அதுதான் வாங்கிப் போகலாம் என்று வந்தேன்'' என்றேன்.

''அப்பா'' என்று நெஞ்சை நீவி விட்டுக் கொண்டாள்.

நான் அவள் செய்கையையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''என்ன மண்ணு... அப்படிப் பார்க்கிறாய்! எனக்கு ஏற் கெனவே நெஞ்சு வலி. அந்த வைத்தியன் நீவி விட்டால் சரியாகி விடும் என்று சொல்லி எனக்கு நீவி விட்டான். ஓரளவு சரியாகிக் கொண்டிருந்தது. நீ வந்து இப்படி ஒரு குண்டைத் தூக்கி என் தலையில் போட்டாய். நெஞ்சு வலி மறுபடி அதிகமாகி விட்டது. அது தான் நீவிக் கொள்கிறேன். நீ கொஞ்சம் நீவிவிடேன். பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருக்கிறாயே...''

''நான்.. நான்.. நீவி விடலாமா?''

''தாராளமாக. எனக்கும் வலி குறையும்.

நீவி விட்டேன்.

கொஞ்சநேரம் நான் ஏதோ ஒரு மலைச் சிகரத்தில் தன்னந்தனியாக மேகத்தில் காணாமல் போயிருந்தேன்.

தனம்மா எழுந்து கொண்டாள்.

“போதும். வலி குறைந்து விட்டது” என்றாள்.

நான் கொஞ்சம் தயக்கத்துடன் விலகிக் கொண்டேன்.

சுருக்குப்பையில் இருந்து இரண்டு ஐம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தாள்.

“ஐம்பது ரூபாய் டாக்டருக்குக் கொடுக்க. இன்னொரு ஐம்பது ரூபாய் இந்த குட்டி டாக்டருக்கு. வைத்தியம் பண்ணி னால் காசு கொடுக்காமல் இருக்கக் கூடாது தெரியுமா?” என்று என் உச்சிமுடி கலைத்துச் சிரித்தாள்.

நான் அதைப் பெற்றுக் கொண்டேன்.

“கெளம்பறேன் தனம்மா” என்றேன்.

“போய்விட்டு முத்துக்காளத்தியுடன் வா மண்ணு. அப் புறம் ஒரு விஷயம், இங்கே எனக்கு அந்த வைத்தியன் வைத் தியம் பண்ணினதையோ, நீ வைத்தியம் பண்ணினதையோ வெளியில் சொல்லக்கூடாது. தெரிந்ததா? அந்த ஆள் ஒரு மந்திரவாதி. நீ வெளியே சொன்னாலே அந்த ஆளுக்குத் தெரிந்து விடும். அப்புறம் அவன் மந்திரம் போட்டு விடுவான். அவன் மந்திரம் போட்டால் மூக்கிலும், வாயிலும் ரத்தம் வந்து நீ செத்துப் போய் விடுவாய்” என்றாள் தனம்மா சிரித்துக் கொண்டே.

வியர்த்துப் போய் வெளியில் வந்தேன்.

பயம். பயம். பயம்.

மூக்கில் என்னவோ வடிவதுபோல் இருந்தது.



ஐயோ! ரத்தமா? நான்தான் யாரிடமும் எதுவும் சொல்ல வில்லையே. தொட்டுப் பார்த்தேன். கொஞ்சம் பிசுபிசுப்புடன் சளிதான் வெளிப்பட்டிருந்தது.

முத்துக்காளத்தி இருக்கும் ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினேன்.

## 4

அந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் எனக்கு கரன்ஸித் தாள்களின் மதிப்புத் தெரியத் தொடங்கியது. பெண்களின் நெஞ்சுவலிக்கு நீவி மசாஜ் செய்தால் சரியாகி விடும் என்று தான் அப்போது நினைத்திருந்தேன். கூடவே அந்த வைத் தியத்திற்கு பணமும் கிடைக்கும் என்று கூட பைத்தியக் காரத்தனமாக முடிவெடுத்திருந்தேன்.

அந்த வருடம் கோயில் விழாவிற்கு ஏரி மைதானத்தில் ரெகார்ட் டான்ஸ் ஆட வந்த ரோசா என்னும் அருக்காணியை முன் வரிசையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். சின்னப் பையன் என்பதால் முன் வரிசை சலுகை.

ரோசா மேடையில் ஆடிக்கொண்டே அடிக்கடி நெஞ்சை அவள் அணிந்திருந்த ஒட்டுத்துணியோடு சேர்த்து நீவி விட்டுக் கொண்டாள். முகம் வேறு வலியில் சிரமப்படுவது போல் சுழித்துக் கொண்டு தெரிந்தது. கீழ் உதட்டை வேறு. அடிக்கடி கடித்துக்கொண்டாள்.

ஆடிக்கொண்டே அவள் மேடையை விட்டு இறங்கினாள். எனக்கு அருகில் வந்தாள். என் முகத்தைப் பார்த்தாள்.

"என்னடா அப்படிப் பார்க்கிறாய்?" என்று ஆட்டதினூடே கேட்டாள்.

"நெஞ்சு வலிக்கிறதா அருக்காணி?" என்று கேட்டேன்.

"அருக்காணியா? பல்லைத்தட்டிக் கையில் கொடுத்து விடுவேன். ரோசா என்று சொல்" என்றாள் சிரித்துக் கொண்டே.

"நெஞ்சு மிகவும் வலிக்கிறதா ரோசா?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்றாள் புருவங்களை உயர்த்தி, உதட்டுச் சிரிப்பு இன்னும் மாறவில்லை. கூட்டத்தில் விசில் பறந்தது.

"ரோசா இங்கே வா. இங்கே வாடி. இங்கே வந்து ஆடு."

ரோசா கூச்சலை, கத்தலை, வேண்டுகோளை, ஆணையை எல்லாம் புறங்கையால் உதாசீனம் செய்து விட்டு என் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

"நெஞ்சை அடிக்கடி நீவிவிட்டுக் கொண்டாயே. அதற்காகக் கேட்டேன்."

ரோசா சிரித்தாள். ரோஸ் நிற ஈறுகள் தெரிந்தன. வெற்றிலைக் கறையற்ற பற்கள் தெரிந்தன.

"ஆமாம்" என்றாள்.

"நான் நீவி விடவா? நன்றாக நீவி விடுவேன்."

"அட படவா. இத்தனை சின்ன வயதில் என்ன பேச்சு பேசுகிறாய்?"

"உண்மையாக ரோசா. நான் நன்றாக நீவி விடுவேன்."

"சரி. நாச்சியார் கோயில் மண்டபத்திற்கு வா, ஆட்டம் முடிந்த பின்னால்."



போனேன். ரோசா என்னும் அருக்காணி அங்கே தனியாகக் காத்திருந்தாள். அவள் என்னைப் பார்த்தவுடன் மல்லாந்து படுத்தாள்.

நான் நீவி விட்ட போது இரண்டு, மூன்று மின்னல் வெட்டியது. மண்டபத்தை அடுத்து இருந்த புதரில் ஏதோ சல சலப்புக் கேட்டது.

அரைமணி நேரத்திற்குப்பின் ரோசா எழுந்து ரவிக்கை அணிந்து கொண்டாள்.

"கையில் நல்ல தொழில் வைத்திருக்கிறாயே" என்றாள்.

"ஐம்பது ரூபாய் கொடு ரோசா. நான் ஐம்பது ரூபாய்க்குக் குறைந்து வாங்குவதில்லை."

"அடிசெருப்பால..." என்றாள்.

புதர்மறைவில் இருந்து ஒரு ஆள் வந்தான். அவன் கையில் ஒரு காமிரா. அதில் இணைக்கப்பட்டிருந்த வட்ட அலுமினியக் கிணத்ததுடன் கூடிய ஃப்ளாஷ்.

"அண்ணே..." என்று ரோசா அவன் மேல் விழுந்து கட்டிக் கொண்டாள். அழுதாள்.

அந்த அண்ணன் என் காதைப் பற்றினான்.

"டேய். என்ன வேலைடா செய்தாய்? அப்படியே இதில் போட்டோ பிடித்து விட்டேன். ரோசாவின் புருஷன்காரன், நீ என் தங்கச்சியின் நெஞ்சை நீவிவிட்ட கோலத்தைப் பார்த்தால் உன்னைக் கொன்றுவிட்டுத் தான் மறு வேலை பார்ப்பான்."

"ஐயோ. நெஞ்சு வலிக்கு நீவிவிட்டது ஒரு தப்பா?"

"இங்க பார்ரா. ஒன்றுமே தெரியாத பாப்பா. தம்பி, ரோசாவின் புருஷன் முரடன். சட்டைக்குப் பின்னால் எப்போதும் அரிவாள் வைத்துக் கொண்டு திரிபவன். அவன் இந்தப் போட்டோக்களைப் பார்த்தால் நிச்சயம் உன்னைக் கண்டம் துண்டமாக வெட்டிவிடுவான். அவன் உன்னைக் கொல்லாமல் இருக்க வேண்டுமானால் நான் சொல்கிறபடி நீ செய்ய வேண்டும்."

"என்ன?"

"பயப்படாதே. நான் சொல்கிறபடி செய்தால் உனக்கு ஒன்றும் நேராது."

"ஐயோ. என்ன சீக்கிரம் சொல்லித் தொலையேன்."

"நான் உனக்குப் பூட்டைத் திறக்கும் வித்தையைக் கற்றுக் கொடுக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீ நான் சொல்கிற பூட்டைத் திறந்து காட்ட வேண்டும்.என்ன?"

"சரி. சரி..."

அப்படித்தான் அவர்கள் ஊரில் உள்ள பணக்காரர்கள் வீட்டில் தேட்டை போடுவதற்கு நான் உதவத் தொடங்கினேன். பின்னணியில் உயிர்ப்பயம் என்னைச் செலுத்திக் கொண்டே இருந்தது.

எனக்குப் பூட்டுகளுடன் அப்படி ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. எந்தப் பூட்டாக இருந்தாலும் அதன் லீவர் அமைப்பு எக்ஸ்ரேவில் தெரியும் எலும்புக் கூடு போல் எனக்குத் தெரியும்.

பூட்டுகளை நான் சைக்கிள் ஸ்போக்ஸ் கம்பிகளாலேயே திறந்துவிடுவேன். புல்லாங்குழல் வித்வான் விதவிதமாக புல்லாங்குழல்கள் வைத்திருப்பது போல் நானும் விதமான வடிவங்களில் கம்பிகள் தயாரித்து வைத்துக் கொண்டேன்.



மிக மெல்லிய கம்பியில் தொடங்கி, சுண்டு விரல் தடிமனுக்கு இருக்கும் ஊட்டமான, செழிப்பான கம்பி வரை என்னிடம் இருந்தன.

லோக்கல் பூட்டுகளுக்கு சைக்கிள் ஸ்போக்ஸ் சாவி என்றால் கம்பெனிகளில் தயாரிக்கப்படும் பூட்டுகளுக்கு வேறு விதமான சாவி.

அதற்கும் ரோசாவின் அண்ணன் வித்தை கற்றுக் கொடுத்தான். தேன் மெழுகு இல்லை தேன் மெழுகு, அதைப் பூட்டு வாயில் வைத்து அடைப்பான். பூட்டு வாயில் நுழைக்கும் போது இளகிய நிலையில் இருக்கும் மெழுகு உள்ளே நுழைந்தவுடன் கொஞ்சம் இறுகி விடும். அந்த இறுகிய மெழுகை கொக்கியுடன் கூடிய கம்பி ஒன்று ஏற்கனவே துளைத்திருக்கும். கம்பியின் நுனியைப் பற்றி இழுத்தால் அது வெளியே வந்து விடும்.அந்த மெழுகில் பூட்டின் லீவர் சமாச்சாரங்கள் முழுக்கப் பதிந்திருக்கும். அவ்வளவுதான் வேண்டியது.

அதன் பின் ரோசாவின் அண்ணன் ஒரு சின்னப் பட்டறையைக் கடை விரிப்பான். சின்னச் சின்ன அறங்கள். ஊசிபோன்ற துளைப்பான் கம்பிகளைப் பொருத்தக் கூடிய ஒரு உள்ளங்கை அகல ட்ரில்லிங் மெஷின். முப்பட்டையாகவும், வட்டமாகவும் இருக்கும் மெலிதான ஃபைல்கள், யானை நிறத்தில் இருக்கும் மெட்டல் ஸாண்ட் பேப்பர், ஸ்டீல் வுல் இவற்றை வைத்துக் கொண்டு டூப்ளிகேட் சாவி தயார் செய்வான்.

மோட்டார் சைக்கிள்களுக்கும், கார்களுக்கும் டூப்ளிகேட் சாவி தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தவன் அவன்.

அவனிடம் டூப்ளிகேட் சாவி தயாரித்துக் கொண்டு போன வர்கள் எல்லாம் ரோட்டோரம் நிற்கும் மோட்டார் பைக்கு களையும், கார்களையும் திருடி ஊர் விட்டு ஊர் கடந்து சென்று பார்ட் பார்ட்டாகக் கழற்றி விற்றுவிட்டு, மளமள வென்று பணக்காரர்களாக மாறியதைப் பார்த்ததில் இருந்து ரோசாவின் அண்ணன் மனமும் மாறிவிட்டதாக என்னிடம் ஒரு முறை குடிபோதையில் சொன்னான்.

அவனுக்கும் அந்தப் பண ருசி.ஆனால் மோட்டார் பைக்குகளைத் திருடி, வாங்க, விற்க யாரை அணுகுவது, யாரிடம் போவது போன்ற அத்தியாவசியமான விவரங்கள் எல்லாம் புரிபடாமல் நேரடியாக பணப்பூட்டுகளையே திறப்பது என்ற முடிவுக்கு வந்தான். அதற்கும் தனியாகப் போகப் பயம், யாரை நம்பலாம், யாரை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று கண்களுக்கு மேல் கையை குறுக்கு வாட்டில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த போது, நான் வந்து அவனிடம் மாட்டினேன்.

ரோசாவை மசால் வடையாக அவன் உபயோகித்து என்னைப் பிடித்து விட்டான் என்பதெல்லாம் பின்னாட் களில்தான் தெரிய வந்தது.

தெரிய வந்த போது டூ லேட்.

அந்தத் தொழிலில் நான் ஒரு ஸ்கில்ட் லேபர் ஆக மாறி விட்டிருந்தேன். அந்தப் பணருசி என்னையும் பற்றிக் கொண்டுவிட்டது. ரோசாவின் அண்ணனை விட மிகத் திறமையாக டூப்ளிகேட் சாவிகளைத் தயாரிக்கும் முறையைக் கற்றுக் கொண்டு விட்டேன்.

தொழிலை கம்ப்யூட்டர் மயமாக்கும் உத்தேசம் இருந்த நேரத்தில்தான் நான் என் சொந்த ஊரை விட்டு விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.



என்னிடம் இருக்கும் வித்தையை ஒரு நாள் ஊர் கண்டு பிடித்து விட்டது.

என்னைப் பிடிப்பதற்காகவே திட்டம் போட்டு தீட்டப்பட்ட ஒரு சதி வலையில் அல்லது சதியில்லாத வலையில் விழுந்து விட்டேன்.

அன்றைக்குத்தான் ஊரைத் துறந்தேன். பெற்றவர்களை விட்டு விலகினேன். ரோசாவின் அண்ணனுடைய மிரட்ட லுக்கு எல்லாம் பயப்பட்ட காலம் போய் விட்டது. ரோசா விற்குக் கணவனும் கிடையாது. காதலனும் கிடையாது என்ற உண்மை தெரிந்துவிட்டது.

அவளுக்கு ஒரு நாளைக்கு ஒரு கணவன் அல்லது காதலன். அதனால் ரோசா பயம் விலகி. வேற்றூர் வேற்றூர் என்று தள்ளித் தள்ளி என் தொழில் பிரதேசத்தை மாற்றிக் கொண்டே வந்து இந்தப் பட்டினத்தை அடைந்து விட்டேன்.

வாழ்க்கை நிறைய திசை மாறிவிட்டது.

கலைடாஸ்கோப்பில் தெரியும் பிம்பம் போல் கன்னா பின்னாவென்று வசீகரமான பல பிம்பங்களாக மாறி நிறைய சம்பாதித்தேன். நிறைய செலவழித்தேன்.

ஒரு சமயம், அதாவது சிற்சில நேரங்களில், நான் நடந்து கொள்ளும் தோரணையைப் பார்த்தால் டாட்டா, பிர்லா, பில்கேட்ஸ் போன்ற உலகின் மிக முக்கிய கோடீஸ்வரர்கள் கூட அப்படி நடந்து கொள்வார்களா என்ற சந்தேகம் வரும்.

ஆனால் அதே நேரத்தில், சில மழைக்காலங்களில் அதா வது வறட்சியான சந்தர்ப்பங்களில் கோட்டை ரெயில்வே ஸ்டேஷனின் ஓவர்-ப்ரிட்ஜிற்குக் கீழே இருக்கும் ஒரு சிமெண்ட் திட்டு, நிராகரிக்கப்பட்ட சரக்கு ரெயில் பெட்டி என்று கூட எனது வாசஸ்தலத்தை மாற்றிக் கொள்வேன்.

ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் அறையின் ஏ.ஸி. மெத்தையி லிருந்து அந்த மாதிரி சிமெண்ட் திட்டுப் படுக்கைக்கு

வாழ்க்கையை அட்ஜஸ்ட் செய்து கொள்வதற்கு ஒரு தனி சாமர்த்தியம் வேண்டும். அந்த சாமர்த்தியம் என்னிடம் இருந்தது.

இனி என் வாழ்க்கை.

# 5

என்னைப் பார்த்தால் யாரும் ஜெயிலில் இருந்து வெளியே வந்தவன் என்றே சொல்ல மாட்டார்கள். மூக்கில் இருந்த வளையத்தை எப்போதோ கழற்றி விட்டேன்.

மூக்கில் இருந்த ஓட்டை மறைந்துவிட்டது. என் பெயரை மண்ணுச்சாமி என்பதில் இருந்து மணிகுமார் என்று மாற்றிக் கொண்டு விட்டேன்.

ரொம்ப வேண்டப்பட்டவர்களிடம்தான் அந்தப் பெயரைக் கூடச் சொல்வது வழக்கம்.

என் பெயர் பேட்டைக்கு பேட்டை மாறிக் கொண்டே இருந்திருக்கிறது.

ரங்கமணி, தர்மா, ஜெயபால், அன்சாரி, ஜோஸப் தங்கராஜ் என்று சின்ன வயது நண்பர்களின் பெயர்களை எல்லாம் என்னுடைய பெயர்களாக சுவீகரித்துக் கொண்டிருக் கிறேன்.

முத்துக்காளத்தியின் பெயரை வைத்துக் கொள்ள வில்லை.

அவன் நினைவு என் மனதின் ஒரு மூலையில் தூங்கா விளக்கு மாதிரி இருந்து கொண்டே இருந்தது.



என்னை இதுவரை பார்த்ததேயில்லையே நீங்கள்?

வர்ணிக்கவா?

நான் கதாசிரியன் இல்லை. அழகான வாக்கியங்களிலோ, மயக்கும் நடையிலோ என்னால் எதுவும் சொல்ல முடியாது.

எனக்குத் தெரிந்தவரை சொல்ல முயற்சி செய்கிறேன். ஓ.கே?

ஆறடிக்கு மூன்றங்குலம் குறைவான உயரம். அதாவது ஐந்து ஒன்பது. இந்திய சராசரிக்கு மேம்பட்ட உயரம். மார்பளவு நாற்பத்து நான்கு. நன்கு அகன்ற மார்பு. குறுகிய இடை. நான் பெண்ணாசை இல்லாதவன். கொள்ளாதவன். அதனால் பெண்கள் என்னை சைட் அடிக்கிறார்களா இல்லையா என்று எனக்குத் தெரியாது. பிறந்த போது இருந்த கருமை மாறி உடல் மாநிறத்தை அடைந்திருக்கிறது. தலை முடி மென்மையாக இருக்கும். எந்த இழுப்பிற்கும் வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டது. கொஞ்சம் ஜெல் தடவி வாரி விட்டுக் கொண்டால் அதிகாரிகளுக்குரிய மரியாதை யான தலைவாரல். அப்படியே காற்றில் பறக்க விட்டால் கல்லூரி மாணவனுக்கான ஸ்டைல். க்ளோஸாக வெட்டி விட்டுக் கொண்டால் ராணுவத்தில் இருந்து விடுமுறையில் வந்திருக்கும் ஜவான்.

பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தேன்.

பணம் இருந்தது. என் பணம் இருந்தது. சிறையில் கல் உடைத்து, பாத்தி கட்டி தண்ணீர் விட்டு, தறிநெய்து இன்னும் என்னென்னவோ செய்து சம்பாதித்த காசு.

ம.பொ.சியோ, வ.உ.சியோ செக்கிழுத்தாராமே - ஜெயிலில் இருந்த போது, அவருக்கு பிரிட்டிஷ்காரர்கள் காசு கொடுத்தார்களா இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் இப்போதெல்லாம் காசு கொடுக்கிறார்கள்.

அந்தப் பாக்கெட் பணம் எனக்கு நிறைய தன்னம் பிக்கையை அளித்தது. நடந்தேன். வால்டாக்ஸ் சாலை மிக சுறுசுறுப்பாய் இறங்கிக் கொண்டிருந்தது. ஆட்டோக்கள் வெள்ளமாய் காத்திருந்தன. டீக்கடைகளில் டீ ஆற்றப்பட்டுக் கொண்டே இருந்தது. சைக்கிள் ரிக்ஷாக்கள் டிங், டிங் என்று உடைந்த ஜால்ரா சத்தத்துடன் ஊர்ந்து கொண்டிருந்தார்கள். வெளியூர் செல்லும் கும்பல். வெளியூரில் இருந்து சென் னைக்கு வந்த கும்பல். பார்சல் ஆபீஸ் கூலித் தொழிலாளர் கள். சாலையோர சாப்பாட்டுக் கடை.

ஒன்றரையணா லாட்ஜுகள். சிகரெட் விற்கும் பெட்டிக் கடைகளுக்கு நடுவில் ஒரு சலூன் ஒளித்து வைக்கப்பட்ட மாதிரி தெரிந்தது. அதற்குள் நுழைந்தேன்.

ஈ விரட்டிக் கொண்டிருந்த சிகை அலங்கார நிபுணன் (வேறு விதமாகச் சொன்னால் யூனியன் ஆசாமிகள் வக்கீல் நோட்டீஸ் அனுப்புவார்கள்) என்னை 'வருக, வருக' என்று நோட்டீஸ் ஒட்டாத குறையாக வரவேற்றான்.

நாற்காலியில் உட்கார்ந்தேன். சாய்ந்தேன். துணி போர்த்தி னான். காதருகில், பின்னந்தலையின் கீழ்ப்பகுதியில் உபரி யாக இருந்த முடியை எல்லாம் சிசர்ஸ் போட்டு வெட்டச் சொன்னேன். மிஷின் வேண்டாம் என்று தீர்மானமாகச் சொன் னேன். மிஷின் போட்டால் போலீஸ்காரன் என்று சொல்ல வைக்கும். முடிந்தவுடன் ஷேவ் பண்ணச் சொன்னேன். மீசையை திருத்தி விடச் சொன்னேன்.

என் முகம் செ.மீட்டர், செ.மீட்டராக உருமாறிக் கொண்டே இருந்தது. யாவும் முடிந்தவுடன் கண்ணாடியில் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டேன். பாங்க் ஆஃபீஸர் என்று சொன்னால் நிச்சயம் நம்புவார்கள். அதுதான் எனக்கு வேண்டியிருந்தது.



அந்த சலூனிலேயே ஆஃப்டர் ஷேவ் லோஷன், பவுடர் எல்லாம் போடச் சொன்னேன். வாசனையாக, திருத்தமாக வெளிப்பட்டேன். நடந்தேன்.

சைனா பஜார் திருப்பத்தில் பிளாட்ஃபாரத்தில் கடை விரித்து புத்தம் புதிய ஷர்ட்களை விற்றார்கள். ஒவ்வொரு ஷர்ட்டிலும் பீட்டர் இங்லாண்ட், வான் ஹூசைய்ன், லூயி ஃபிலிப் என்று லேபிள்கள் தைக்கப்பட்டிருந்தன. இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் டூப்ளிகேட் வாஜ்பாய், டூப்ளிகேட் அஜீத், டூப்ளிகேட் ஜோதிகா எல்லாம் தயாரித்து விற்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒரு சட்டை, பேன்ட் நூறு ரூபாய்க்குக் கிடைத்தது. வாங்கினேன். பக்கத்தில் இருந்த கட்டணக் கழிப்பறைக்குள் சென்று போட்டிருந்த சட்டை, பேண்டைக் கழற்றி எறிந்து விட்டுப் புதியதை உடுத்திக் கொண்டேன். வெளியே வந்தேன்.

அதே பிளாட்ஃபாரத்தில் இன்னும் சற்று தூரம் தள்ளி அடிடாஸ் ஷூ விற்றுக் கொண்டிருந்தான். அதுவும் ஐம்பது ரூபாய்க்கு ஒரு ஜதை. என்னுடைய சைஸிற்கு ஷூ இருந்தது. அதையும் வாங்கி அணிந்து கொண்டேன். காலில் இருந்த தேய்ந்த ரப்பர் செருப்பை அங்கேயே உதறி விட்டேன்.

மெல்ல நடந்தேன்.

சாலையில் போனவர்கள் எல்லாம் என்னை ஒரு முறை திரும்பிப் பார்த்தார்கள். குறிப்பாகப் பெண்கள் ஓரக்கண் ணால் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். சிரித்துக் கொண் டேன். பெண்கள் எல்லாம் இப்படித்தான். புற அழகைப் பார்த்துவிட்டு ஏமாறத் தொடங்குகிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

சென்ட்ரல் ஸ்டேஷன் வரை நடந்து வந்தேன். உள்ளே நுழைந்தேன். எங்கேயாவது வெளியூர் போய் சம்பாதிக்கலாம் என்று தோன்றியது.

பாம்பே, டில்லி, கல்கட்டா.

மூன்று ஊர்களின் பெயர்கள் நினைவுக்கு வந்தவுடன் சின்ன வயதில் நான் பாடிய பாட்டு ஒன்று நினைவுக்கு வந்தது.

பாம்பே, டில்லி, கல்கட்டா,

உன் குடுமியைப் புடிச்சி இழுக்கட்டா...

அந்த நேரத்தில் எந்த ட்ரெய்னும் பம்பாய்க்கும், டில்லிக்கும், கல்கத்தாவிற்கும் கிளம்பிக் கொண்டிருக்கவில்லை. மேலும் பம்பாயிலும், கல்கத்தாவிலும், டில்லியிலும் போய் ஏமாற்றுவதற்கு அந்தந்த ஊர் மொழி தெரிந்திருக்க வேண்டும். அது என்னிடம் பெரிய குறை. எனக்கு ஹிந்தி, பெங்காலி, மராத்தி என்று எந்த பாஷையும் தெரியாது.

சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. சோம்பிக் காணப்பட்டது. சென்னையிலேயே சம்பாதிக்கலாம் என்று முடிவெடுத்தேன்.

எப்படிச் சம்பாதிப்பது?

இந்த முறை ஏதாவது பெரிதாய் சம்பாதிக்க வேண்டும். அகப்படக்கூடாது. செட்டில் ஆகிவிட வேண்டும். முடிந்தால் என் லட்சியத்தையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

எப்படி சம்பாதிப்பது என்பதற்குத்தான் ஒரு வழியும் தோன்றவில்லை. ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தேன். சுரங்கப்பாதையில் இறங்கி நடந்தேன்.

பிளாஸ்டிக் பொம்மைகள், பெல்ட், தலையில் வைத்துக் கொள்ளும் தங்கநிற பட்டாம்பூச்சி என்று என்னென்னவோ குப்பைகளை சுரங்கப்பாதை முழுக்க இறைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள்.



நானும் அது போல் ஒரு கடை போட்டு விட வேண்டியதுதானா?

தினம் ஐம்பது கிடைக்கும். நூறு கிடைக்கும். ஒன்றுமே கிடைக்காமலும் போகக் கூடும்.

படிகளில் ஏறினேன்.

பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தேன்.

அரசாங்கப் பொது மருத்துவமனையின் கேட்டைக் கடக்கும் போது குப்பென்று ஃபினாயில் நெடி அடித்தது.

பஸ் ஸ்டாண்ட்.

அந்த நேரத்திலும் நிறைய மக்கள்.

தியாகராய நகருக்குச் செல்லும் பஸ் ஒன்று வந்து நின்றது.

எக்கச்சக்கமான கூட்டம். ஜெயிலுக்குப் போய்த் திரும்பி வருவதற்குள் ஜனத்தொகை இரண்டாகி விட்டதா என்ன?

அந்தப் பஸ்ஸை எந்த ஒரு சுவாரசியமும் இன்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். மக்களை உதிர்த்து விட்டு, ஏற்றிக் கொண்டு பஸ் புறப்பட்டது. பஸ்ஸின் பின்னால் தற்செயலாகப் பார்த்தவன் அந்த விளம்பரத்தால் கவரப்பட்டேன்.

மிகச் சிறப்பான தங்க, வைர நகைகளுக்கு

எங்களது ஷோரூமுக்கு வருகை தாருங்கள்.

ஏவாள் தங்க அரண்மனை. தி.நகர்.

அட., இதை எப்படி மறந்தேன்?

சம்பாதிப்பது எப்படி என்று புரிந்து விட்டது.

அடுத்து வந்த தி.நகர் பஸ் ஒன்றில் ஏறி தி.நகரை நோக்கி, அங்கே எனக்காகக் காத்துக் கொண்டிருந்த எனக்குத் தெரியாத திருப்பங்கள் நிறைந்த வினாடிகளை நோக்கிப் புறப்பட்டேன்.

# 6

அந்தக் கடைக்கு மிக நல்ல பெயர்.

ஏவாள் தங்க அரண்மனை.

சென்னை மக்கள் எல்லாம் அடிக்கடி வாயில் உச்சரிக்கும் பெயர் அது. ஏவாள் அரண்மனை. நகைக் கடையின் சொந்தக் காரர்கள் மற்ற நகைக் கடைக்காரர்களை விடக் குறைவான ரேட்டுக்கு விற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஏறக்குறைய சென்னை முழுக்க ஏவாள் தங்க அரண் மனையில்தான் தன் தங்கத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறது.

தி.நகரில் பனகல் பார்க்கில் இறங்கினேன்.

தி.நகர் சென்னையின் ஷாப்பிங் சென்டராக மாறியிருந்தது. பெரிய சைஸ் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் என்றால் பொருத்த மாக இருக்கும் போலத் தோன்றியது.

ஜனத்துளிகள் நெருக்கி அடித்துக் கொண்டிருந்த உஸ் மான் ரோட்டில் நடந்தேன்.

ஐந்து மாடி, நான்கு மாடிக் கட்டிடங்களில் துணி வியா பாரம், எலக்ட்ரிக், எலக்ட்ரானிக் அப்ளையன்ஸஸ். பாதி விலைக்குப் பேன்ட்கள், ஜட்டிகள், செருப்புகள். ஸ்டேஷனரி மார்ட்கள். ஒன்றிரண்டு பதிப்பகங்கள், ஹோட்டல்கள்.

இவ்வளவு மக்களும் எங்கிருந்து உற்பத்தியானார்கள் என்று தெரியவில்லை. ஆண்களை விடப் பெண்கள் அதிக மாக இருந்தார்கள். பவுடர் வாசனையும், சென்ட் வாசனையும், வியர்வை வாசனையுமாக என்னை இடித்துக் கொண்டு கடந்தார்கள். பொருள் வாங்க வந்த உற்சாகத்தில் வேறு எந்தப் பிரக்ஞையும் இன்றி வெகு சுதந்திரமாக யாவரையும் இடித்துக் கொண்டு, யாவராலும் இடிபட்டுக் கொண்டு அவர்கள் நடக்க, பத்து ஜோடி என் மேலும் மோதின.



சிவா-விஷ்ணு கோயில். சாமி இருந்த பக்கம் பார்க்காமல் நடந்தேன். 'அடேய் பாவி' என்று சாமி என்னை விளித்து, தடுத்து நிறுத்தி ஆட்கொள்ளக்கூடும்.கோவில் வாசலில் குருக்கள் தானம் வாங்கி வந்த செம்புகளையும், வேஷ்டி களையும் ஒரு மாதிரிக் கடை பரப்பி இருந்தார்கள்.

கிருஷ்ணவேணி தியேட்டர் வந்தது. ஒரு காலத்தில் அதன் வளாகத்தில் பிளாக் டிக்கெட் விற்றிருக்கிறேன். காதல் ஜோடிகளாகப் பார்த்து ஐந்து ரூபாய் டிக்கெட்டை ஐம்பது ரூபாய்க்கு விற்றிருக்கிறேன். அப்புறம் பாக்கெட் அடித்திருக் கிறேன். தி.நகர் பஸ் டெர்மினஸில் சில பஸ்களில் எப்போதும் கூட்டம் இருக்கும். கண்டக்டர் டிக்கெட் போட்டுக் கொண் டிருக்கும் போதே முன்வாசல் வழியாக நுழைந்து பின்வாசல் வழியாக வெளிப்பட்டால் இரண்டு மூன்று பர்ஸ்களைத் தேற்றிவிடலாம்.

அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கிண்டிக்குப் போய் 'கமான் ப்ளாக் க்வீன், கமான் லைட்னிங் லேடி' என்றெல்லாம் கத்திக் குதிரைப் பந்தயத்தில் கரைத்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணிக்குப் பக்கத்தில் இருந்த சந்தில் நுழைந் தேன். பத்தாவது அடி எடுத்து வைப்பதற்குள் ஒரு கார் கிட்டத் தட்ட என்னை மோதி விடுகிற மாதிரி கடந்து சென்றது. காரை ஓட்டிச் சென்றவன் யார் என்று பார்த்துக் காறித் துப்ப வேண்டும் என்று நினைத்தேன். காரை ஓட்டிச் சென்றது ஒரு பெண் என்று தெரிந்தது.

விட்டுவிட்டேன். அவளே பயந்திருப்பாள். எனக்குச் சமமில்லாதவர்களிடம் போய் என்ன வீரத்தைக் காட்டுவது?

கார் ஏவாள் தங்க அரண்மனை நகைக்கடையை ஒட்டியிருந்த ஒரு சின்னச் சந்தில் நுழைந்தது. அந்தத் தெருவில் பார்க்கிங் இருக்கிறதோ என்னவோ. காரில் வந்தாலும், பஸ்ஸில் வந்தாலும் பெண் என்றால் தங்க நகை.

ஏவாள் தங்க அரண்மனையை அணுகினேன். வாசலில் ஒரு பெரிய மார்பிள் ஃப்ளோரிங். நன்றாக பத்தடிக்கு மேல் அகலம் இருக்கும். அதில் இரண்டு பெண்கள் பூ விற்றார்கள். கடையில் நுழைந்த அத்தனை பேரும் நகை வாங்கிக் கொண்டுதான் திரும்பி வந்தார்கள்.ஆனால் நகை வாங்கி வந்த அத்தனை பேரும் பூ வாங்கவில்லை என்பதுதான் வினோதமாக இருந்தது. பூக்காரச் சிறுமி ஒவ்வொருத்தியையும், ஆர்வமும், ஏக்கமுமாகப் பார்த்து, 'அக்கா, பூ வாங்கிக்கா.. அக்கா மொழம் ஓர் ரூபாக்கா' என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

நான் கடைக்குள் நுழைந்தேன். உள்ளே நுழையும் போதே ஏர் ஃபில்டரின் காற்று என் தலைமுடிகளையெல்லாம் பிய்த்து எடுத்துக் கீழே கொட்டிவிடப் பார்த்தது. உள்ளே ஏ.ஸி.

எடுத்தவுடன் கல்லா. கல்லாவின் பின்னால் திருப்பதி வெங்கடாசலபதி. கல்லாவில் உட்கார்ந்து ஒரு ஆள் சளைக்காமல் பணத்தை வாங்கி எண்ணி எண்ணி உள்ளேப் போட்டுக் கொண்டிருந்தார்.

க்ரீம் கலரில் சட்டை. லேசான வழுக்கை. கைவிரல்களில் மோதிரங்கள். அவருக்கு அருகே இன்னொரு ஆள் உட்கார்ந்து பணம் எண்ணினான். க்ரீம் கலர் சட்டை. கருகரு முடி. பளிச்முகம். நெற்றியில் குங்குமத் தீற்றல். கைவிரல்களில் மோதிரங்கள்.



சீனியர், ஜூனியர். அப்பா, பிள்ளை.

நான் நுழைந்ததை அந்தக் கடையில் ஒருவர் கூடக் கவனிக்கவில்லை. நல்ல விஸ்தாரமான ஹால். மோதிரம், நெக்லஸ், வளையல் என்று ஒவ்வொரு பிரிவாகப் பிரித்து விற்பனை நடந்தது. ஒவ்வொரு கவுண்டரிலும் பெண்கள் மொய், மொய் என்று மொய்த்துக் கொண்டிருந்தார்கள்.

நகைகள் பொருத்தப்பட்டிருந்த ட்ரேக்கள் இந்தக் கவுண்டர், அந்தக் கவுண்டர் என்று அல்லாடிக் கொண்டிருந்தன.

அந்தக் கடைதான்.

தீர்மானித்து விட்டேன்.

கொள்ளையடிப்பது என்றால் பட்டப்பகலில் டிஷ்யூம், டிஷ்யூம் என்று சுட்டுக் கொண்டு குதிரையில் வந்து இறங்கும் கௌபாய் ஸ்டைல் கொள்ளை இல்லை.

கத்தி கிடையாது. ரத்தம் கிடையாது. உயிர் சேதாரம் கிடையாது. கண்ணாடி உடைப்பது, பூட்டை உடைப்பது என்று அந்தக்கால ஸ்டைல் எல்லாம் எதுவும் இல்லை.

இது வேறு விதம்.

அவசரப்பட வேண்டாம். நிதானமாகவே செயல்படலாம்.

நான் அந்தக்கடையை விட்டு வெளியேறினேன்.

வெளியே வந்து எதிர்ச்சாரியில் இருந்த ஒரு ஜூஸ் கடையில் நின்றேன். ஜூஸ் கடை வாசலில் கரும்பு ஜூஸ் மெஷின் ஒன்று இடைவிடாமல் எலக்ட்ரிக் பவரில் சுற்றியது. அதன் ஏதோ ஒரு பல் சக்கரத்தில் இணைக்கப்பட்ட இரண்டு கம்பிகளின் உச்சியில் இருந்த ஒரு ஆண் பொம்மையும், பெண் பொம்மையும் தழுவித் தழுவி விலகிக் கொண்டிருந்தன.

ஒரு கரும்பு ஜூஸுக்கு ஆர்டர் கொடுத்தேன்.

ஸிப், ஸிப்பாகக் குடித்தேன்.

ஏவாள் தங்க அரண்மனையை மெல்ல நோட்டமிட்டேன். ஒரு பெரிய ரோலிங் ஷட்டர். அனேகமாக க்ரீஸ் போடப்பட்டு மெயின்டெய்ன் பண்ணப்பட்டுக் கொண்டிருக்கும். எனவே அது ஏறி, இறங்கும் போது எந்தவித சத்தமும் இருக்காது. அதன் ஓரத்தில் தாழ்ப்பாள். கான்க்ரீட் சுவருக்குள் ஒரு குழி வெட்டி அதற்குள் பதிக்கப்பட்ட பூட்டு. அந்தப் பூட்டைத் திறந்து, நாதாங்கியைத் தள்ளி, அதன் பின் ரோலிங் ஷட்டரில் இருக்கும் இரண்டு பெரிய தனித்தனிப் பூட்டுக்களைத் திறந்தால் தான் ரோலிங் ஷட்டரை மெதுவாக உயர்த்த முடியும். அதைத் தாண்டினால் ஏர்-கர்ட்டன் இருக்கும் இடத்தில் இருக்கும் சன்னிதானக் கதவுகள் போன்ற பெரிய இரட்டைக்கதவுகள். அதில் போடப்பட்டிருக்கும் இரண்டு நாதாங்கிகளில் தொங்கும் பூட்டுகள். அவற்றையும் திறந்து உள்ளே நுழைந்தபின் தான் கண்ணாடிப் பெட்டிகளை அணுக முடியும். அவற்றில் வைக்கப்பட்டிருக்கும் நகைகளை அணுக முடியும்.

அந்த நகைக்கடையில் அலாரம் அடித்து மற்றவர்களை உதவிக்கு அழைக்கும் செக்யூரிட்டி சிஸ்டம் எதுவும் இல்லை. பேங்க் போன்றவற்றில்தான் இந்த நவீன செக்யூரிட்டி சிஸ்டம்கள் எல்லாம் நுழைந்து விடுகின்றன.

அந்த நகைகளை சிணுங்காமல் அணுகுவது எப்படி என்று யோசிக்கத் தொடங்கினேன்.

தி.நகரில் இருந்து ரயில்வே லைனைக் கடந்தால் வெஸ்ட் மாம்பலம். ஒரு காலத்தில் அந்தப் பிரதேசம் தான் மாம்பலம். மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வந்து குடியேறி மூச்சுத் திணற ஆரம்பித்தவுடன் ரயில்வே லைனுக்கு இந்தப் பக்கம் தியாகராயநகர் வளரத் தொடங்கியது.

கடைகள், ஹோட்டல்கள், தியேட்டர்கள், ஃப்ளாட் சிஸ்டங்கள்.



மேற்கு மாம்பலம் கொஞ்சம் கொஞ்சமாக அதன் முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கியது. தி.நகரில் ஸோடியும் வேப்பர் லாம்ப் அது இது என்று படையெடுத்த பின்னரும் வெஸ்ட் மாம்பலத்தில் அதே பழைய மஞ்சள் விளக்குகளின் மங்கலான இருட்டு நிழலுடன் கூடிய ஒளி.

ஸ்டேஷனில் இருந்து வெஸ்ட் மாம்பலத்திற்குச் செல்லும் வரிசையான குறுகலான சந்துகளில் ஒன்றில் ஒரு லாட்ஜ் இருந்தது.

ரூம் கேட்டேன். அந்த லாட்ஜின் இருப்பிற்கு என் முக லட்சணம் அதிகமாக இருந்தது. கேள்வி கேட்காமல் ரூம் கிடைத்தது. அறையில் சுவரில் காறை பெயர்ந்து அதை மறைக்க முருகன் காலண்டர் தொங்கியது. சிகரெட் தீ சுட்ட தழும்புகளுடன் மேஜை. அதையொட்டி மூட்டைப்பூச்சிகளின் படை பதுங்கியிருந்த இடுக்குகள் நிறைந்த மர நாற்காலி.

பாத்ரூமில் மங்கலான விளக்கு. கையகல வென்டிலேட்டர்.

எனக்கு வேறு வழியில்லை. வெளியில் அனாவசிய நடமாட்டம் கூடாது.இந்த லாட்ஜில் தனியாக இருந்தால் யாரும் வந்து தொந்தரவு கொடுக்க மாட்டார்கள்.

அந்த லாட்ஜில் கட்டிலுக்கு அருகில் இருந்த தரையில் படுத்துத் தூங்கினேன். கட்டிலில் படுக்கப் பயமாக இருந்தது.

அடுத்த அறையில் இருந்து சின்னச்சின்ன சிணுங்கல் ஒலிகளும், முனகல் ஒலிகளும் கேட்டன.

தனம்மா நினைவு வந்தது. யாருக்கோ நெஞ்சுவலி போலும். எவனோ நீவி விட்டுக் கொண்டிருக்கிறான்.

எப்படியாவது போய்த் தொலைகிறான்கள்.

பதினோரு மணிக்கு மேல் எழுந்தேன். வெளியே வந்தேன். கதவைப் பூட்டினேன். இருட்டான காரிடரில் நடந்து வந்து இருட்டான படிகளில் இறங்கினேன்.

கீழே கல்லாவில் ஒரு ஆள் போர்த்திக் கொண்டு படுத் திருந்தான். அசுரவேகத்தில் ஃபேன் சுற்றியது. கொசுவத்தி யின் நாற்றம் நீக்கமற நிறைந்திருந்தது.

கிரில் கேட்டைக் கொஞ்சமும் சத்தம் எழாதபடி தள்ளித் திறந்தேன். தெருவிற்கு வந்தேன். சுதந்திரம் பெற்ற மாதிரி யான ஒரு உணர்வு. காற்று சுத்தமாக இருந்தது. மேற்கு மாம் பல வீடுகளில் மல்லிகைப் பந்தல்களிலிருந்து வாசனையைத் திருடிச் சுமந்து கொண்டு எங்கே போய் ஒளிவது என்று புரியாமல் அலைந்து கொண்டிருந்தது.

ரயில்வே பாலத்தைக் கடந்தேன். பச்சையும், சிகப்புமாக சிக்னல் விளக்குகள் எரிந்தன.

பாலத்தையொட்டி இருந்த மார்க்கெட் அமைதியாக இருந்தது. மூன்று மணி, நான்கு மணி என்று சுறுசுறுப்படை யுமோ என்னவோ.

பஸ் ஸ்டாண்ட் அருகில் கையேந்திபவன்கள் இரண்டு இருந்தன. மக்கள் இட்லியும், மிளகாய்ப்பொடி தோசையும், பரோட்டாவும், சிக்கன் கர்ரியும் சாப்பிட்டுக் கொண்டிருந் தார்கள். சாப்பிட்டவர்களில் பெரும்பாலோர் குடித்திருந்தார்கள் என்பது அவர்களின் மிகையான எச்சரிக்கை உணர்வில் தெரிந்தது.

நான் மிகச் சாதாரணமாக நடந்து ஏவாள் தங்க அரண் மனை இருக்கும் தெருவிற்கு வந்து விட்டேன். மாலையில் தேர்த் திருவிழா போல் கூட்டம் கூடியிருந்த தெரு இப்போது சஹாரா பலைவனம் போல் இருந்தது.



கடைவாசலில் இருந்த மார்பிள் ஃப்ளோரிங்கில் மல் லிகைப் பூக்கள் சிதறியிருந்தன.

கடைக்கு எதிரே இருந்த ஜூஸ் கடை வாசலில் கரும்புச் சக்கைகள் மலைபோல் குவிந்திருந்தன. காலையில் வந்து வாரிக் கொண்டு போவார்களோ என்னவோ!

கடைவாசலில் ஒரு சோடியம் வேப்பர் லாம்ப் எரிந்து கொண்டிருந்தது. விளக்கில் இருந்து கொட்டிய வெளிச்சம் கடைவாசலைப் பகலாக்கிக் கொண்டிருந்தது.

இவ்வளவு வெளிச்சத்தில் எப்படி வேலை பார்ப்பது?

இந்த வெளிச்சம்தான் எனக்குப் பெரும் எதிரி.

என்ன செய்யலாம்? அந்த விளக்கு எரியக்கூடாது. கல் லெடுத்து வீசி விளக்கைச் சேதாரப்படுத்தலாம். அது சின்னக் குழந்தையின் செய்கைபோல் இருக்கும்.

தெருவிற்குள் நுழையும் போது முனையில் எலக்ட்ரிசிட்டி ஆசாமிகள் வைத்துவிட்டுப் போயிருந்த தகரப் பெட்டி கண்ணில் பட்டது நினைவிற்கு வந்தது.

அதை நோக்கி நடந்தேன். பெட்டிக்குப் பூட்டு எதுவும் இல்லை. ஏதோ ஒரு மரத்துண்டைப் பொருத்தி மூடியிருந் தார்கள். அதைத் திறந்தேன். நான் எதிர்பார்த்த மாதிரி ஃப்யூஸ் ஸ்விட்ச் பாக்ஸ்தான் அது.

தெரு விளக்குகள் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஒரு ப்யூஸ் பொருத்தப்பட்டிருந்தது. அதைப் பிடுங்கினேன். மற்ற ஸ்விட்ச்களைத் தொடவில்லை. ஏதாவது ஒரு வரிசை வீட்டு விளக்கோ, ஏ.ஸி.யோ இயங்காமல் போனால் அவ்வளவுதான். ஆபத்த. போன் மேல் போன் போட்டு ஈ.பி. ஆசாமிகளை வேன் எடுத்துக் கொண்டு வரவழைத்து விடுவார்கள்.

தெருவிளக்குகள் அணைந்தன. தெரு விளக்குகள் எரிந்தாலும், அணைந்தாலும் சென்னையில் யாரும் கவலைப் படப் போவதில்லை. கவலைப்படமாட்டார்கள். தெரியும். அந்த ஃப்யூஸ் கட்டையைத் திருப்பிப் பார்த்தேன். செப்புக் கம்பி ஒன்று குறுக்கில் மேல் நட்டிற்கும், கீழ் நட்டிற்கும் இணைக்கப்பட்டிருந்தது. ஒரு நட்டை லூசாக்கி ஃப்யூஸ் வயரை விடுவித்தேன். மறுபடி ஸ்விட்சை அது இருந்த இடத்திலேயே பொருத்தினேன்.

பரவாயில்லை. இப்போது ஏவாள் தங்க அரண்மனை வாசலில் வெளிச்சம் இல்லை. இருட்டு இருந்தது. நிழல் இருந்தது. எனக்குப் போதும்.

கடைவாசலை அணுகினேன். அமர்ந்தேன். பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தேன். மெழுகுத்தண்டுகள் பத்திரமாக இருந்தன. அவற்றைத் தொட்டதும் ஜூரம் வருகிற மாதிரி இருந்தது. படபடப்பாய் வந்தது. இரு. இரு. இந்தத் தொழிலுக் காகத்தானே வந்திருக்கிறேன். இதைத்தானே செய்யப் போகி றேன். இதயமே இவ்வளவு ஆர்வம் வேண்டாம் உனக்கு.

என்னுடன் எப்போதும் சில தொழில் கருவிகள் நிறைந்த ஒரு சின்னக் கைப்பை இருக்கும். அந்தக் கைப்பையைத் திறந்த அதிலிருந்து ஒரு சிகரெட் பெட்டியை எடுத்தேன். மேல் பாக்கெட்டில் இருந்த மெழுகுத் தண்டுகளை எடுத்து அந்த சிகரெட் பாக்கெட்டில் போட்டேன்.

பின் இன்னொரு சிகரெட் பாக்கெட்டை எடுத்து அதி லிருந்து உண்மையிலேயே ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தேன்.

'பீ' என்று விசில் சத்தம் கேட்டது. கூடவே 'தட், தட்' என்று கழியால் தரையில் தட்டும் சத்தம் கேட்டது. கூர்க்கா! இந்தத் தெருவிற்கான கூர்க்காவா இல்லை இந்தக் கடையின் கூர்க்காவா? எவனாக இருந்தாலும் சமாளிக்க வேண்டும்.



சட்டென்று கைப்பையில் இருந்து ஒரு கூலிங்கிளாஸை எடுத்து அணிந்து கொண்டேன். பின் அதிலிருந்து ஒரு சின்ன ஓரடி அலுமினிய உருளை மாதிரி இருந்த ஒன்றை வெளியே எடுத்து வைத்தேன். அது ஒன்றும் ஜெலட்டின் ஸ்டிக்கோ, கண்ணீர்ப்புகை குண்டோ இல்லை, எனக்குத்தான் வன் முறையில் நம்பிக்கையே இல்லை என்று சொன்னேனே.

கூர்க்கா அருகில் இருக்கும் சந்திலிருந்து திரும்பினான். நோஞ்சனாகத்தான் இருந்தான். இடுப்பில் அலங்காரத்திற்கு வைத்திருக்கிற மாதிரி ஒரு கத்தி வைத்திருந்தான். வன்முறை யில் நம்பிக்கை இல்லாத எனக்கே அவனை ஒரு தட்டுத் தட்டி வீழ்த்தி விட்டு, மேலே ஆகவேண்டியதைப் பார்த்தால் என்ன என்று தோன்றியது.

கூர்க்கா என்னைப் பார்த்து விட்டான். தயங்கினான்.

நான் அவன் இருப்பதையே உணராதவன் போல் இருந் தேன். என்னை நோக்கி மெல்ல நடந்து வந்தான்.

நான் சிகரெட்டை மெல்லப் புகைத்துக் கொண்டிருந் தேன்.

"ஏய்..." என்றான் என்னை நெருங்கியதும்.

நான் சட்டென்று திகைத்துப்போனவன் போல் சிகரெட்டை வாயில் இருந்து தவறவிட்டேன். சிகரெட் நெருப்பு சுட்டது. உதறிக் கொண்டேன். கீழே உருண்ட சிகரெட்டை அப்படி கைவிரல்களைத் தரையில் பரப்பி வைத்துத் தேடிக் கண்டுபிடித்து எடுத்து கைவிரல்களுக்கிடையில் வைத்துக் கொண்டேன்.

நான் பார்வை இல்லாதவன் என்பதை கூர்க்கா தெரிந்து கொண்டால் போதும். தெரிந்து கொண்டு விட்டான்.

"யார் நீ?" என்று கேட்டான். இந்த முறை அவன் குரலில் முன்பிருந்த அதிகாரம் இல்லை.

"பே...பே..பே..பே..." என்று ஒரு மூன்று நான்கு பே, பேக்களை உதிர்த்தேன். சென்டிமென்டுகளை எப்போதும் தொடுகிற விஷயங்கள் இந்தப் பார்வை இல்லாதவன் வேஷமும், ஊமை வேஷமும்.

"ஊமையா? அடப்பாவமே, இங்கே எல்லாம் படுக்கக் கூடாது. மெயின் ரோடு போ. பஸ் டெர்மினஸ் இருக்கிறது. திறந்திருக்கும். அதில் நிறைய பெஞ்சு போட்டிருப்பார்கள். அங்கே போய்ப் படு. போ."

நான் தலையைத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தேன். அவன் பேசி முடித்தவுடன் அந்த அலுமினிய உருளையை எடுத்து ஓர் உதறு உதறினேன். பார்வையில்லாதவர்கள் உபயோகிக்கும் மடித்து வைத்துக் கொள்ளக் கூடிய அலுமினியக் கழி அது. உதறியவுடன் நீண்டது.

சட்டென்று எழுந்தேன்.

தடால் என்று நடந்தேன்.

நடந்த திசை கடையின் ரோலிங் ஷட்டர் இருந்த திசையை நோக்கி.

'ஏய்... ஏய்' என்று கூர்க்கா கத்துவதற்குள் நான் மூன்றாம் பிறை கமல்ஹாசனைப் போல், குணா கமல்ஹாசனைப் போல் அந்த ரோலிங் ஷட்டரில் நச்சென்று இடித்துக் கொண்டேன்.

என்னவோ இடி விழுந்தது போல் ஒரு சத்தம்.

'நச்' என்று என் மண்டையில் அடிபட்டது. நான் கல்லால் அடிக்கப்பட்ட குருவி போல் கீழே விழுந்தேன். உடன் கீழே விழுந்து விட்டக் கண்ணாடியைத் தடவித் தேடி எடுத்து அணிந்து கொண்டேன்.

'பே.. பே..." என்று மூச்சிரைத்தபடி சரிந்து உட்கார்ந்தேன்.



"நீ மெதுவாகப் போ. ஒன்றும் அவசரமில்லை. அவசரப் பட்டு இடித்துக் கொண்டாய் பார். நானா உன்னை அவசரப்படுத்தினேன்?" என்று கேட்டபடி அவன் நகர்ந்தான்.

அதற்கு மேல் அங்கு நிற்க அவனது குற்ற உணர்வுள்ள மனம் இடம் கொடுக்கவில்லை.

அவனால்தான் நான் அடிபட்டுவிட்டேன் என்ற குற்ற உணர்வு.

எனக்கும் அதுதான் அந்த நேரத்து நோக்கமாய் இருந்தது.

கூர்க்கா நகர்ந்து போனவுடன் நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன்.

அவசரம் அவசரமாக சிகரெட் பாக்கெட்டில் இருந்த மெழுகுக்குச்சியை எடுத்து ரோலிங் ஷட்டர்களில் இருந்த பூட்டுகளின் ஓட்டைகளில் நுழைத்துப் பதிவை எடுத்துக் கொண்டேன்.

கான்க்ரீட் சுவரில் இருந்த பூட்டிலும் அந்த மெழுகுக்குச்சியை நுழைத்து உள்ளே இருக்கும் லீவர் ரகசியங்களைப் பதிவு செய்து கொண்டேன்.

அப்படிப் பதிவு செய்த லீவர் ரகசியங்கள் கொண்ட மெழுகுக் குச்சிகளை மிக எச்சரிக்கையுடன் பத்திரப்படுத்தினேன்.

தெருமுனையில் இரண்டு ஹெட்லாம்ப்களில் இருந்து வெளிப்பட்ட வெளிச்சம் ஆர்க் மாதிரி தெருவைப் பெருக்கிய படி வளைவது தெரிந்தது. ஹெட்லாம்ப்புகள் வாகனத்தில் பொருத்தியிருந்த உயரத்தில் இருந்து அது கார் இல்லை, லாரி இல்லை. ஜீப் என்பது தெரிந்தது.

சட்டென்று பம்மிய வண்ணம் சாலையைக் கடந்தேன்.

அங்கே மலை போல் குவிந்திருந்த கரும்புச் சக்கைகளுக்குப் பின்னால் பதுங்கினேன். அந்த இடத்தில் ஒரு யானையே

கூட ஒளிந்த நிற்கலாம். அந்த அளவிற்கு இடம் இருந்தது. அதனால் நான் அங்கே நின்றது வெளியில் ஒரு ஈ., எறும்பு, தேனிக்குக்கூடத் தெரிய வாய்ப்பின்றிப் போய்விட்டது.

நான் நினைத்தது சரிதான். சாலையில் நுழைந்தது ஒரு போலீஸ் ஜீப்.

அது நகைக்கடையருகே வந்ததும் நின்றது. அது போலீஸ் பெட்ரோலிங் ஜீப். ஜீப்பிலிருந்த இரண்டு போலீஸ்காரர்கள் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார்கள். பின் ஜீப் நகர்ந்து சென்றது.

மணி பார்த்தேன். பன்னிரண்டு ஐந்து.

தினம் தினம் இந்த நேரத்திற்கு ஜீப் வந்து விட்டுப்போவது ஒரு வழக்கமாக இருக்கக் கூடும். அது ஒரு வழக்கமான பரிசோதனையாகக் கூட இருக்கலாம்.

மறுபடியும் கூர்க்காவின் கழி பூமியில் லொட், லொட் என்று தட்டப்படும் சத்தம் கேட்டது.

கூர்க்கா ஏவாள் தங்க அரண்மனைக்குப் பக்கத்தில் இருந்த சந்தில் இருந்து திரும்பினான்.

கடைவாசல் பக்கம் பார்த்துவிட்டு யாரும் அங்கே இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு தன் நடையைத் தொடர்ந்தான்.

கூர்க்கா அந்த இடத்தை ஒருமுறை கடந்து விட்டு மறு முறை திரும்பி வந்து கடப்பதற்கு குறைந்த பட்சம் பதினைந்து நிமிடங்கள் ஆகின்றன.

எனக்குப் பதினைந்து நிமிடம் என்பது வெள்ளம்.

அதுவே தாராளம்.

அன்றைக்கு இரவுக்கு என் அதிர்ஷ்டத்தை அதற்கு மேல் சோதித்துப் பார்க்க விரும்பவில்லை.



நான் புறப்பட்டேன்.

என் அறை எனக்காகக் காத்திருக்கும்.

## 7

அன்று இரவு.

நான் அறைக்குப் போய்ச் சேரும்போது கிட்டத்தட்ட மணி பன்னிரண்டு முப்பது ஆகிவிட்டது. தூக்கம் வரவில்லை. ஒரே உற்சாகமாய் இருந்தது. கையில் நான்கு சாவிகளுடைய மெழுகுப்பதிவுகள் இருந்தன.

அந்தப் பதிவுகளை வைத்துக் கொண்டு உடனே டூப்ளிகேட் சாவிகளைத் தயார் செய்து விட வேண்டும். காரி யத்தை ஒத்திப் போட்டால் அப்புறம் நான் கொண்டு வந் திருக்கும் மெழுகுகளின் மேல் வெப்பம் பட்டாலே போதும். மெழுகு உருகி விடும். காரியம் கெட்டுவிடும்.

அதனால் அப்போதே அந்தப் பழைய மேஜை அருகில் உட்கார்ந்தேன். மெழுகுப் பதிவுகளைக் கையில் எடுத்தேன். ஃபைல், டிரில்லிங் மெஷின், அறங்கள், உப்புத்தாள்கள் ஆகியவற்றை எடுத்து வைத்துக் கொண்டு வேலையைத் துவங்கினேன்.

நான்கு சாவிகளையும் தயாரித்து முடிக்க மணி கிட்டத் தட்ட நான்காகி விட்டது. நான்கு சாவிகளையும் கையில் எடுத்துத் தடவி உணர்ந்து பார்த்தேன். ஒரு பிசிறு இல்லாமல் அமைந்திருந்தது.

குப்பென்று உடலில் ரத்தம் சூடாகி விறுவிறு என்று தலைக்கு ஏறுவது போல் தோன்றியது. வேலை திருப்தியாக முடிந்து விட்ட ஆனந்தம்.

அந்தச் சாவிகளை எடுத்துப் போய் அப்போதே சோதித்துப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. 'இரு. இரு. பால்காரர்கள் எல்லாம் தத்தம் குவளைகளை எடுத்துக் கொண்டு வியா பாரத்தைத் தொடங்கியிருப்பார்கள். இப்போது வேண்டாம்' என்று மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

எழுந்தேன். யாவற்றையும் எடுத்து வைத்தேன்.

ஷேவ் செய்தேன். குளித்தேன். பல் தேய்த்தேன். ஆம். அந்த நேரத்தில்தான்.

தூங்கப் போனேன். படுக்கையில் படுத்தவுடன் தூக்கம் வந்து விட்டது. மூட்டைப்பூச்சிகளின் நடமாட்டம், மார்க் கெட்டில் வந்து இறங்கும் கறிகாய் வண்டிகளின் இரைச்சல் கள் என்று எதுவுமே என்னைப் பாதிக்கவில்லை.

கண் விழித்தபோது பகல் முழுவதும் கடந்து இருந்தது. விளக்குகள் ஆங்காங்கே ஒன்றிரண்டு எரியத் தொடங்கி இருந்தன.

எழுந்து கொண்டேன். முகம் கழுவினேன்.

கீழே இறங்கி வந்தேன்.

ரயிலை விட்டு இறங்கியவர்கள் எல்லாம் தத்தம் கூடு களை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். நிறைய களைத்த முகங்கள். ஆண்களும், பெண்களும் கற்பு, ஸ்ப ரிசம் ஆகிய அகராதிச் சொற்களுக்கு எல்லாம் எந்தவிதமான மரியாதையும் கொடுக்காமல் ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டும், இடித்துக் கொண்டும் நகர்ந்தார்கள்.

நான் நடந்தேன், மார்க்கெட்டின் சிறிய சந்து வழியாக நடந்தபோது பெண்கள் குனிந்து காய்கறி வாங்கிக் கொண் டிருந்தனர்.

பிரதான சாலைக்கு வந்து நல்லதொரு ஹோட்டலில் டிபன் சாப்பிட்டேன். காபி குடித்தேன். வெளியே வந்து ஒரு



கொல்கத்தா சாதா பீடா போட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தேன்.

சொர்க்கம்.

சிகரெட்டின் பஞ்சுநுனி பற்றிக் கொள்ளும் வரை அதைப் புகைத்துக் கீழே போட்டு மிதித்துப் பாழாக்கி விட்டு மறுபடி அறையை நோக்கி நடந்தேன்.

இப்போது மார்க்கெட்டில் கூட்டம் அதிகரித்திருந்தது. ஹேர்ப்பின் விற்பவர்கள், அந்துருண்டை, சீப்பு, ஸ்டிக்கர் பொட்டு, பிளாஸ்டிக் ஹாங்கர்கள், பெண்களின் மார்க்கச்சுகள் ஆகியவற்றை விற்பவர்கள் அந்தத் தெரு முழுக்க அங்கங்கே ஆக்கிரமித்து விற்றுக் கொண்டிருக்க, பெண்கள் கூட்டத் தின் சதவீதம் அபாரமாக எகிறியிருந்தது.

நான் அவர்களுக்கிடையில் புகுந்து புகுந்து வெளிப்பட வேண்டியிருந்தது. என் முகம் கண்ணியமான ஆண்களுக் கான முகங்களில் ஒன்றாக இருந்தபடியால் என்னை யாரும் திருடன் என்று சந்தேகிக்கவில்லை. மேலும் நான் செயின் அறுக்கும், ஹாண்ட் பேகை அடிக்கும் சின்ன லெவல் ஆபரேட்டர் இல்லையே.

அன்றைய இரவு நான் என்ன செய்ய வேண்டும் என மனதிற்குள் ஒரு மாதிரி திட்டம் வகுத்தபடி நடந்து கொண் டிருந்தபோதுதான் அது நிகழ்ந்தது.

ஒரு பெண், இளமையானவள். வாசனையானவள். என் மேல் மோதிய மாதிரி இருந்தது. என் மனதில் வெகு திடீ ரென்று அந்தச் சந்தேகம் வந்தது.

பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தேன்.

பர்ஸ் இல்லை. காலி. காணாமல் போயிருந்தது.

இதப் பார்றா! எவ்வளவு சாமர்த்தியமாக அந்தப் பெண் செயல்பட்டிருக்கிறாள்!

தன் பெண்மையில் என்னை ஒரே ஒரு கணம் செய விழக்கச் செய்து, மெய்மறக்க வைத்து, அந்த ஒரு கணத்தில் தன் வேலையை மிகக் கச்சிதமாகச் செய்து கொண்டிருக் கிறாள்.

நான் சட்டென்று திரும்பிப் பார்த்தேன்.

அவளைப் பார்த்து விட்டேன். பத்தடி தூரத்தில் தான் நடந்து கொண்டிருந்தாள்.

ஏதோ ஓர் உள்ளுணர்வு அவளையும் திரும்பிப் பார்க்க வைத்தது. பார்த்தாள். நான் பார்ப்பதை அவள் பார்த்தவுடன் அவள் கண்கள் ஒரே ஒரு செகண்ட் அச்சத்தில் விரிந்தன. பின் இயல்பு நிலைக்கு வந்தன. கூட்டத்தைப் பிளந்து கொண்டு சரசரவென்று சாரைப் பாம்பு போல் முன்னேறத் தொடங்கினாள்.

நான் என் வழியில் இருந்தவர்களையெல்லாம் மோதிக் கொண்டு முன்னேறினேன். ஒரு காய்கறிக் கூடை சாலையில் விழுந்து உருளைக் கிழங்குகள் உருண்டன. ஒரு இளம் தாயும் அவளுடன் கைகோர்த்து வந்த ஒரு சிறுவனும் பிரிய நேரிட்டது. சீப்பு விற்பவனின் சீப்புகள் சிதறின.

நான் அவளை அணுகிவிட்டேன்.

அவளது கையைப் பற்றினேன். அவள் முகம் வேதனை யில் விகாரமானது.

''ஏய், மரியாதையாக என்னிடம் இருந்து எடுத்த பர்ஸைக் கொடுத்து விடு'' என்றேன்.

''பர்ஸா?'' என்று அவள் நடிக்கத் தொடங்கினாள்.

''இந்த வேஷமெல்லாம் போடுவதாக இருந்தால் உன்னை அப்படியே தூக்கிக் கொண்டு போய் உன் புடவையை உருவி உன் உடலைப் பாகம் பாகமாகச் சோதித்து என் பர்ஸை எடுத்துக் கொள்வேன்'' என்று மிரட்டினேன்.



அவள் அதன் பின் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் என் பர்ஸை எடுத்துக் கொடுத்தாள்.

''பாவி. ஆபீஸ் போகிறவளைப் போல் ஒரு மென்மையான முகத்தை வைத்துக் கொண்டு இந்த மாதிரி வேலை செய்கிறாயே. வெட்கமாயில்லை உனக்கு?'' என்று சீறினேன்.

''என் கையை விடு. இல்லாவிட்டால் அதோ நிற்கும் அவுட் - போஸ்ட் போலீஸ்காரனைக் கூப்பிட்டு என் கையைப் பிடித்து இழுத்தாய் என்று உன் மேல் புகார் கொடுப்பேன். ஈவ் டீஸிங்கில் புக் பண்ணினால் ஒரு வருடம் கம்பி எண்ண வேண்டி இருக்கும். இங்கே இருக்கும் பப்ளிக்கிடம் 'நீ என் கையைப் பிடித்து இழுத்துவிட்டாய்' என்று கத்தினால், விழுகின்ற தர்ம அடியில் இப்போதே உயிர் போய் விடும். எது உனக்கு வசதி?'' என்று அவள் கேட்டாள்.

அவளுடைய குரல் மென்மையாக இருந்தது. ஆனால் குரலில் இருந்த அறிவிப்புகள் இரண்டும் மகா பயங்கரமாக இருந்தன. அவள் சொல்லும் இரண்டுமே நடக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. இங்கே, நம் ஊரில் பெண் என்றால் பேயும் இரங்கும். பெண், ஒருவனை கைகாட்டி, அவன் தன் கையைப் பிடித்து இழுத்தான் என்று சொன்னால் சுற்றி யிருப்பவர்கள் சந்தேகமே படாமல் ஆணைச் சூழ்ந்து கொண்டு, அவன் தப்பிக்க முடியாதபடி செய்து கன்னா பின்னா என்று மாத்து கொடுப்பார்கள்.

நான் அவள் கையை விட்டுவிட்டேன்.

அவள் இன்னொருமுறை என்னை முறைத்து விட்டு அங்கிருந்து விலகிப் போனாள்.

அடேங்கப்பா.

அறைக்குத் திரும்பி வந்தேன். என் பர்ஸ் மீண்டு விட்டது. அந்த அனுபவம் இன்னும் என் உடலில் ஜிர்ரென்று ஊர்ந்து கொண்டிருந்தது. படபடப்பாக இருந்தது.

படபடப்பைக் குறைக்க ஒரு சிகரெட் பற்ற வைத்தேன்.

''சார்'' என்று குரல் கேட்டது.

திரும்பினேன். ஹோட்டல் பையன்.

''என்ன?''

''ராத்திரி மீல்ஸ் ரூமுக்கே கொண்டு வந்து விடட்டுமா?''

''வேண்டாம்'' என்றேன்.

அவன் தயங்கி நின்றான்.

''இன்னும் என்ன?''

''சிகரெட், தண்ணி...''

''எதுவும் வேண்டாம்'' என்றேன்.

அவன் போகாமல் தயங்கினான்.

''என்னப்பா?'' என்றேன்.

''எனக்கு இன்னைக்கு நாள் நன்றாக இல்லை சார். காலையில் இருந்து கமிஷன் எதுவும் கிடைக்கவில்லை. சாப்பாடு, டீ, காபி என்று ஏதாவது ஆர்டர் கொடுத்தால் எனக்குக் கொஞ்சம் கமிஷன் கிடைக்கும். அம்மாவிற்கான மருந்துக்குப் பணத்தைப் புரட்டியிருப்பேன். அதனால் தான் நீங்கள் ஏதாவது ஆர்டர் பண்ணுவீர்கள் என்று பார்த்தேன். ப்ச். மத்தியானம் முழுக்க நல்ல தூக்கமா சார்?''

''ஆம். ஏன்?''

''அப்படியானால் இன்றைக்குத் தூக்கம் வர கொஞ்சம் நேரமாகிவிடும்.''

''அதனால் என்ன இப்போது?''



''நூற்று நான்கில் கார்ட்ஸ் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் சார். நீங்கள் வந்து கலந்து கொண்டால் ஆட்டம் இன்னும் கொஞ்ச நேரம் ஓடும். எனக்கு கமிஷன் காசு கிடைக்கும்! டீ, பன், டிபன் என்று எவ்வளவு ஆர்டர் பண்ணுவார்கள்?''

அவனைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

நான் ஒருவன் ஆடாமல் போவதால் அவன் கமிஷன் காசு ஏன் குறைய வேண்டும்? எனக்கும் உடனடியாக வேலை இல்லை. இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் தான் எனக்கு நகைக் கடையில் வேலை இருந்தது.

சீட்டில் எனக்கு அதிகப் பழக்கம் கிடையாது. நட்பு, தொடர்பு என்றெல்லாம் எதுவும் இல்லை. மிஞ்சி, மிஞ்சிப் போனால் ரம்மி ஆடத் தெரியும். அது ரொம்ப சாதாரண ஆட்டம். சீட்டைத் தொடுகிறவர்கள் எல்லாம் கற்றுக் கொள்ளும் எளிதான ஆட்டம். அதன் பின் மூணு சீட்டு, ப்ரிட்ஜ் என்று எவ்வளவோ இருக்கின்றன. க்ளப்புகளில் ஆடப்படும் ஆட்டம். அதற்கான சட்ட திட்டம் எல்லாம் வேறு தனியாக இருக்கும்!

''எனக்குத் தெரியாதே தம்பி. உன் பெயர் என்ன?''

''மணி.''

மணி. என்னைப் பொட்டில் அறைந்தது போல் இருந்தது. என் பெயரை வைத்துக் கொண்டு லாட்ஜில் ரூம்பாய் வேலை செய்து கமிஷன் காசு வருமா என சக்ரவாகப் பட்சி போல் அல்லாடிக் கொண்டிருக்கிறான்.

''மணி. எனக்கு ரம்மிதான் ஆடத் தெரியும்! இங்கே எல்லாம் த்ரீ-ஏஸஸ் தானே ஓடும்?''

''இங்கேயும் ரம்மிதான் சார்'' என்றான்.

மணி பார்த்தேன். எட்டு. என் தொழில் தொடங்க இன்னும் நான்கு மணி நேரம் இருந்தது. நிச்சயம் தூக்கம் வரப்

போவதில்லை. போய் ஆடிவிட்டு வருவோம் என்று தீர் மானித்தேன்.

எழுந்தேன்.

சீட்டாடுவதாய்ச் சொல்லப்பட்ட நூற்று நான்கிற்குப் போனேன்.

அங்கே உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாம் பண்ணையி லிருந்து எழுந்து வந்துவிட்ட பண்ணையார்களைப் போல் தோன்றினார்கள்.

என்னைப் பார்த்து விட்டுக் கொஞ்சம் இடம் செய்து கொடுத்தார்கள். உட்கார்ந்தேன்.

''இந்த கேம் முடியட்டும். அடுத்த ரவுண்டில் நீங்கள் சேர்ந்து கொள்ளலாம்'' என்றார்கள்.

"சரி" என்றேன்.

என் பக்கத்தில் உட்கார்ந்து ஆடியவரின் கையைக் கவனித்தேன். அவர் மிகவும் கற்றுக் குட்டித்தனமாக ஆடிக் கொண்டிருந்தார். பாயிண்டிற்கு ஒரு ரூபாய் ஆட்டம் அது. குறைந்த பாயிண்டாக இருந்தால் காசு கம்மியாகச் செலவழி யும் என்றோ என்னவோ சின்ன நம்பர்கள் செட்டைப் பிடி வாதமாக வைத்துக் கொண்டிருந்தார். பிரித்து ஆடியிருந்தால் எப்போதோ 'டிக்' சொல்லி இருக்கலாம்.

அந்த ஆட்டத்தில் அவர் இருபத்தாறு ரூபாய் இழந்தார்.

அதற்கு அடுத்த ஆட்டத்தில் ஐம்பத்தி மூன்று ரூபாய் காலி.

அது முட்டாள்களின் ஜமாவாக இருந்தது. அதில் விளை யாடினால் உண்மையில் ஜெயிக்கலாம் என்று தோன்றியது.

எனக்கு விளையாட சான்ஸ் கிடைத்தது.

விளையாடத் தொடங்கியது எப்போது என்று தெரிய வில்லை. ஆனால் ஆட்டம் சீக்கிரம் சீக்கிரமாக முடிந்தது.



கிட்டதட்ட ஆயிரத்து இருநூறு ரூபாய் கலெக்ஷன். ஜெயிலில் ஒரு மாதம் முழுக்கக் கஷ்டப்பட்டாலும் கூட சில பேர் இவ்வளவுக்கு சம்பாதிக்க மாட்டார்கள். பீடி, சிகரெட் பண்ட மாற்றுக்கு நிறைய பணத்தை செலவழித்து விட்டுக் கடைசியில் வெளியில் போகும்போது மிகக் கம்மியாகத்தான் எடுத்துக் கொண்டு போவார்கள்.

நான் என்னடாவெனில் இன்னும் ஒரு வாரத்தைக் கவலை யில்லாமல் ஓட்டும் அளவிற்கு சம்பாதித்து விட்டேன்.

மணி பார்த்தேன். பன்னிரண்டு.

தேவுடா! இவ்வளவு ஆகி விட்டது? ஆட்ட சுவாரசியத் தில் நேரம் போனதே தெரியாமல் ஆடிக் கொண்டிருந்திருக் கிறேன்.

அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு எழுந்தேன்.

அறைக்கு விரைந்து வந்தேன்.

பூட்டைத் திறந்து என்னைத் தவிர வேறு யாரோ நுழைந் திருக்கிறார்கள்.

மெலிதான செண்ட் வாசனை இருந்தது. தாழம்பூவை நினைவு படுத்தும் வியர்வை வாசனை இருந்தது.

யார் நுழைந்திருக்கக் கூடும்?

என் டூப்ளிகேட் சாவிக்கொத்தின் நினைவு வந்தது.

ஐயையோ!

சட்டென்று நான் அந்தச் சாவியை ஒளித்து வைத்திருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்தேன்.

மறைவிடத்தில் இருந்து அந்தப் பையை எடுத்தேன்.

திறந்தேன். பார்த்தேன். அப்பாடா!

ஒரு பெருமூச்சு என்னையறியாமல் வெளியேறியது. நான் தயாரித்திருந்த சாவிகள் மூன்றும் நான் வைத்த இடத்தில் நான் வைத்த மாதிரியே இருந்தன.

ஆனாலும் அந்தப் பையிலும் மெலிதான செண்ட் வாசனை அடித்தது போல் இருந்தது. ஒருக்கால் அது என் பிரமையோ?

அப்படித்தான் இருக்கும்.

யோசிப்பதற்கு நேரம் இல்லை.

நான் ஏவாள் தங்க அரண்மனையை நோக்கி விரைந்தேன்.

இன்றைக்கு நான் சரியான நேரத்திற்கு அந்த இடத்தை அடைந்ததால் போலீஸ் ஜீப்பின் இடையூறு இல்லை.

கூர்க்காவின் இடையூறு இல்லை.

நான் எனது கைவசம் இருந்த சாவிகளைக் கொண்டு அந்த ரோலிங் ஷட்டரில் போடப்பட்டிருந்த பூட்டுக்களைத் திறந்து பார்த்தேன்.

க்ளிக், க்ளிக் என்று எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் பூட்டுக்கள் திறந்து கொண்டன.

கான்க்ரீட் சுவருக்குள் பதிக்கப்பட்டிருந்த பூட்டும் அப் படியே.

மணிகுமார், கங்கிராஜுலேஷன்ஸ். உன் கைவிரல்களுக்கு மோதிரம் தான் மாட்ட வேண்டும்.

என்னை நானே தட்டிக் கொடுத்துக் கொண்டேன்.

ரோலிங் ஷட்டரை நான் மிக மெதுவாக உயர்த்தினேன்.

உயர்ந்தது. சபாஷ். அது சத்தமில்லாமல் உயர்ந்தது. இன்னொரு ப்ளஸ் பாயிண்ட்.

தரையில் படர்ந்து ரோலிங் ஷட்டருக்கடியில் அப்படியே நகர்ந்து உள்ளே போனதும் ஷட்டரை இறக்கி விட்டேன். அந்த ஷட்டருக்கு க்ரீஸ் எல்லாம் ஒழுங்காகப் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு இருந்ததால் ஷட்டர் வெண்ணெயில் கத்தி போல் வழுக்கிக் கொண்டு இறங்கியது.



நான் டார்ச் லைட்டை எடுத்து ஆன் செய்தேன். மிக மெல்லிய வெளிச்சத்தைத் தரும் டார்ச் விளக்கு அது. அதன் ஒளியில் உட்புறம் இருந்த கதவின் பூட்டுக்கள் இரண்டு தெரிந்தன.

ரோலிங் ஷட்டருக்கும் அந்தப் பெரிய கதவிற்கும் இடையே இருந்த இடைவெளி ஒரு ஆள் நின்று புழங்குவதற்கு அனுமதித்தது.

கையில் இருந்த மெழுகுக் குச்சிகளால் அந்தப் பூட்டுக் களின் லீவர் அமைப்பைப் பதிவு செய்து கொண்டேன். வெளியே எடுத்துப் பார்த்தேன். துல்லியம். வெகு துல்லியம்.

இரண்டாவது கட்ட வேலை முடிந்து விட்டது.

கடைசி கடைசியாக ஒரு மகத்தான வேலைதான் மிச்சம் இருக்கிறது. அதையும் வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டால் போதும்.

ஏவாள் தங்க அரண்மனையில் இருக்கும் அத்தனை நகைகளும் என் கைக்கு வந்து விடும். அதன் பின் ராஜ வாழ்க்கைதான்.



# 8



அறைக்குத் திரும்பி விட்டேன். எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. ஏவாள் தங்க அரண்மனை எவ்வளவு பெரிய நகைக்கடை. அதனருகில் இரவு நேரத்தில் ஒருவன் தனி யாகச் செல்வது என்பதே கொஞ்சம் முட்டாள் தனமான செயல். யாராவது கண்காணிக்கக் கூடும்.

ஆனால் நான் இரண்டு முறை யாருடைய சந்தேகமும் எழாத வண்ணம் கடை அருகில் போய் எல்லாப் பூட்டுக்

களுக்கும் - ரிபீட் - எல்லாப் பூட்டுகளுக்கும் உண்டான லீவர் அமைப்புகளைப் பதிவு செய்து கொண்டு வந்திருக்கிறேன்.

ஏவாள் தங்க அரண்மனைக்குக் காவல் ஏன் இவ்வளவு வீக்காக இருக்கிறது?

எது எப்படியோ.

காவல் அவ்வளவு பலவீனமாக இருப்பதால்தான் என்னால் அந்தக் கோட்டையை அவ்வளவு எளிதில் அணுக முடிந்தது.

நான் மல்லாந்து படுத்திருந்தேன். இப்போது கொண்டு வந்திருக்கும் லீவர் அமைப்புகளுக்கு உண்டான டூப்ளிகேட் சாவிகளைத் தயாரிக்கும் கடமை இன்னும் மிச்சம் இருந்தது.

அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி என்பது தீர்மானமாகாமல் இருந்ததால் கொஞ்சம் அசால்ட்டாக இருந்தேன்.

எழுந்து உட்கார்ந்தேன். கடகடவென கொண்டு வந் திருந்த மெழுகுப் பதிவுகளை வைத்துக் கொண்டு மாற்றுச் சாவிகளைத் தயாரித்தேன்.

நான் ஒரு தேர்ந்த கலைஞன். ஒரு கலைஞன் என்பவன் தனக்கு திருப்தி ஏற்படும் வரையில், தான் கற்ற கலையில் பரிபூரணமாக ஈடுபட விரும்புவான். அது பாட்டாகிலும் சரி, திருட்டாகிலும் சரி.

நானும் அப்படித்தான்.

மாற்றுச் சாவியை விளக்கு வெளிச்சத்திற்கு நேராகப் பிடித்துப் பார்த்தேன். எங்காவது பிசிறு தெரிகிறதா? எங்கே யாவது சாவியின் லீவர் தன்னிச்சையாக வேறு ஒரு உருவம் எடுத்துக் கொண்டிருக்கிறதா?

ம்ஹூம்.

வேலை திருப்தியாக இருந்தது.



எழுந்து சோம்பல் முறித்தேன். உடம்பு தள்ளியது. மணி பார்த்தேன். நான்கு முப்பது.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தேன். பொறுக்க தம் அடித்து முடித்ததும் அறை மூலையில் இருந்த பானையில் இருந்து ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து விட்டுப் படுக்கையில் விழுந்தேன்.

யானை ஒன்றின் மேல் அம்பாரி வைத்து அதில் இருக்கும் பஞ்சு மெத்தையில் நான் உட்கார்ந்து ஒரு கையில் ஸ்காட்சும், மற்றொரு கையில் சிகரெட்டுமாய் சாய்ந்து உட்கார்ந்திருக்கும் போது சாலையில் இருக்கும் சொறி நாய் ஒன்று யானை உயரத்திற்குத் தாவித்தாவி என்னைக் கடிக்க முயல்வது போல் ஒரு கெட்ட கனவு கண்டு நான் திடுக்கிட்டுக் கண் விழித்தேன்.

உண்மையிலேயே அறைக்கதவு தட்டப்பட்டுக் கொண் டிருந்தது. எழுந்தேன்.

பிற்பகல் நேரம். விடியற்காலை நான்கு முப்பதுக்குத் தூங்க தொடங்கியவன் இவ்வளவு நேரம் தூங்கியிருக்கிறேன் என்பதே கொஞ்சம் வெட்கமாகத்தான் இருந்தது.

கதவைத் திறந்தேன்.

நான் முன்பின் பார்க்காத ஓர் ஆசாமி நின்றிருந்தான்.

"என்ன?"

"அம்மா உங்களைக் கூட்டி வரச் சொன்னார்கள்" என்றான்.

"எந்த அம்மா?" என்று கேட்டேன். தலையும் புரிய வில்லை. வாலும் புரியவில்லை.

"ஸாராம்மா."

"ஸாராவா? எனக்கு அப்படி யாரையும் தெரியாது. நீ ஏதோ அறை மாறி வந்திருக்கிறாய்" என்றேன்.

''நீங்கள்தானே பூட்டு ரிப்பேர் - டூப்ளிகேட் சாவி எல்லாம் பண்ணுகிற ஆள்?''

''என்னது?''

அவன் கேட்ட கேள்வி என் இதயத்தில் ஒரு கோப்பை அக்கினி திராவகத்தை எடுத்து ஊற்றுகிற மாதிரி இருந்தது. யாரோ என் அந்தரங்கத்தைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். பூட்டு ரிப்பேரா?

முதல் நாள் அறையில் மெலிதான சென்ட் மற்றும் வியர்வை வாசனையை நுகர்ந்த மாதிரித் தோன்றியது நினைவிற்கு வந்தது.

அப்படி என்றால், யாரோ ஒரு ஸாரா இந்த அறைக்குள் நுழைந்திருக்கிறாள்.

''எங்கே இருக்கிறார்கள்?'' என்று கேட்டேன் படபடப்பை மறைத்துக் கொண்டு.

''என்னுடன் வாருங்கள்'' என்றான்.

அவனுடன் நடந்தேன். கண்ணுக்கு முன்னால் பஞ்சு தெறிப்பது போலிருந்தது. தலை கிறுகிறுத்தது. இடுப்பை நேராக வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. முதல் நாளிரவு நீண்ட நேரம் உட்கார்ந்து சாவி தயாரித்ததன் விளைவா அல்லது யாரோ ஒருத்தி என்னைப் பற்றிய ரகசியத்தை ஓரளவிற் காவது கண்டு பிடித்து விட்டாளே என்ற மன அச்சமா? தெரியவில்லை.

அந்த ஆள் லாட்ஜை விட்டு வெளிப்பட்டு நடந்தான்.

இரண்டு சிறு தெருக்களைக் கடந்தான். சிக்கலான தெருக்கள். வீடுகள் நெருக்கியடித்து நின்றன. தெருவில் நான் முந்துவேன், நான் முந்துவேன் என்று போட்டி போட்டு ஒன்றையொன்று முந்திக் கொண்டு இருப்பது போல் ஓர்



அமைப்பு. பிற்பகல் நேரம் என்பதால் எருமை மாடுகளின் நடமாட்டம். நடந்து கொண்டே அவை செய்த அசுத்தங்கள். ஒரு எருமையின் முதுகில் காகம் ஒன்று அமர்ந்து சுகமாக சவாரி செய்து கொண்டிருந்தது.

ஐயோ... ஐயோ. இங்கே என் வாழ்க்கையே கேள்விக் குறியாக மாறிவிடும் போல் இருக்கிறது. நான் என்னடா வென்றால் எருமை மாட்டையும், காக்கையையும் ரசித்துக் கொண்டு இருக்கிறேன்.

மூன்றாவது தெருவில் திரும்பியவுடன் ஒரு தனி வீடு தென்பட்டது. நுழைந்தவுடன் சின்னத் தோட்டத்துடன் அதுதான் பளிச் என்று பட்டது.

தோட்டத்தில் குட்டை குட்டையாய் பூச்செடிகள். ஆயிரத்து இருநூறு சதுர அடியிலேயே தோட்டம். வீடு எல்லாம் இணைந்தது. ஏதோ ஒரு ஆர்க்கிடெக்ட் தான் கட்டவிருக்கும் மிகப் பெரிய பங்களாவிற்கு ஒரு மினியேச்சர் மாடல் செய்து அமைத்திருந்த மாதிரி அந்த வீடு காணப்பட, என்னை அழைத்துக் கொண்டு வந்த ஆள் ''இந்த வீடுதான்'' என்று கைகாட்டிவிட்டு அவன் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந் தான்.

''ஏய். நில்லுப்பா. நில்லு'' என்று நான் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

நான் தனியாக நின்றேன். வாசல் கேட்டின் மேலிருந்த இரும்புக் கொக்கியைத் தயக்கத்துடன் நீக்கினேன். உள்ளே யிருந்து ஒரு அல்சேஷன், ஒரு டாபர்மேன், ஒரு ராஜபாளை யம் என ஏதாவது ஒன்று சிறுத்தை கணக்காகப் பாய்ந்து வரப் போகிறது என எதிர்பார்த்தேன். ஏமாந்தேன்.

உள்ளிருந்து ஒருவிதமான மயக்கும் ஊதுவத்தி வாசனை தான் வந்தது. கதவருகே போய் நின்றேன். அங்கே காலடியில்

இருக்கும் ஏதோ ஒரு ஸ்விட்சை மிதித்து விட்டது போல் கதவு தானாகத் திறந்து கொண்டது. யாரும் ஆளில்லை.

"உள்ளே வா" என்று ஒரு பெண் குரல் என்னைக் கட்டளை போல் அழைத்தது. கட்டளையாக இருந்தாலும் குரலில் மென்மையும், பெண்மையும், ஜூஸும், ஐஸும் போட்டி போட்டுக் கொண்டு வழிந்தன.

"இந்தக் குரலை எங்கோ கேட்டிருக்கிறேன்?" என்று நினைத்தபடி வீட்டினுள் நுழைந்தேன்.

உடனடியாக கதவு சார்த்திக் கொண்டது.

கதவிற்குப் பின்னால் அவள் நின்று கொண்டிருந்தாள்.

ஒரு பெண் சிறுத்தையை, ஒரு படமெடுத்த நாகப் பாம்பை அவள் நினைவு படுத்தினாள். அவள் கண்களில் இருந்த கூர்மை என்னை இரு கூறாக வெட்டிப் போட்டு விடும் போல் இருந்தது.

அவள்...

என் பாக்கெட்டில் இருந்து பர்ஸை எடுத்தவள்.

நான் கண்டுபிடித்து அவளைப் பிடித்ததும் பர்ஸைக் கொடுத்து விட்டு, 'நான் அவள் கையைப் பிடித்தேன்' என்று கத்திப் பொதுமக்களிடம் தர்ம அடி வாங்க வைத்து விடுவேன் என ப்ளாக்மெயில் செய்து என்னிடம் இருந்து தப்பித்துப் போனவள்.

இவள்தான் ஸாராவா?

நான் பிரமித்தேன். விசிலடிக்கும் ஆசையை மிகச் சிரமப் பட்டு அடக்கிக் கொண்டேன்.



# 9

"உட்கார்" என்றாள் ஸாரா.

அவள் கை காட்டிய இடத்தில் பிரம்பு நாற்காலியில் குஷன் வைத்து மூடப்பட்டிருந்தது. உட்கார்ந்தேன். ஊதுபத்தி வாசனை மிகுந்திருந்தது.

எதிரில் இருந்த பிரம்பு சோஃபாவில் அவள் உட்கார்ந்தாள்.

நான் பேசவில்லை. மகுடிசையால் மயங்கிய நாகம் போலவும் பொக்கிஷத்தைக் கண்டு விட்ட அலிபாபா போலவும் பேச்சிழந்து, மெய் மறந்து, மதிமயங்கிப் போயிருந்தேன்.

அவள் என்னைப் பார்த்தாள்.

நான் அவளை!

இப்போதுதான் முழுதாகப் பார்க்கிறேன்.

நன்றாகத்தான் இருந்தாள். மெல்லிய ரோஜா நிற உதடுகள். நல்ல மெல்லிய நீளமான ஒரு வளைசல் அற்ற மூக்கு. உடம்பில் இளமை தெறித்தது.

"என் பெயர் ஸாரா" என்றாள்.

"தெரியும். வந்து அழைத்தவன் சொன்னான்."

"உன் பெயர் என்ன?"

"மணிகுமார்."

"இப்போதைக்கா?" என்று கேட்டாள்.

'எப்படி இவ்வளவு துல்லியமாக என்னை எடை போட்டிருக்கிறாள் என்று புரியவில்லை. யார் இவள்? எப்படி நான் அந்த லாட்ஜில் இருப்பதைத் தெரிந்து கொண்டாள்?'

''ஆம். இல்லை'' என்றேன்.

''அப்படியென்றால்?''

''என் ஒரிஜினல் பெயர் வேறு. அது வேண்டாம். சொன்னால் முகம் சுழிப்பாய். அப்பா, அம்மா வைத்த பெயரை நான் குழந்தையாக இருந்தபோது நன்றாக இல்லை என மறுத்திருக்க முடியாதே. அது போகட்டும். உண்மையில் நீ யார்?''

''நானா? தெரியாது? உன் பாக்கெட்டில் இருந்து...''

''அது தெரியும். நான் அந்த லாட்ஜில் இருப்பதை எப்படித் தெரிந்து கொண்டாய்? நான் பூட்டு ரிப்பேர்க்காரன் என்று எப்படிப் புரிந்தது?''

''மணிகுமார். நமக்குள் பாசாங்குகள் வேண்டாம். நான் ஒரு திருடி. அது உனக்குத் தெரியும். நான் பாக்கெட் அடித்து மாட்டியதே இல்லை. அவ்வளவு சுத்தமான வேலை என்னுடையது என்று நான் நம்பிக் கொண்டிருந்தேன். என்னுடைய நம்பிக்கையை நீ தகர்த்து விட்டாய். நான் பாக்கெட் அடித்ததைக் கண்டுபிடித்து விட்டாய். என்னை விட நீ பெரிய கையாக இருக்க வேண்டும் என்று அப்போதே நான் தீர்மானித்து விட்டேன். அதனால் உன்னைக் கண்காணித்தேன். நானே உன்னை ஃபாலோ செய்தால் உனக்குத் தெரிந்து விடும். என்னிடம் ட்ரெயினிங் எடுத்த பெண்களில் இரண்டு பேரை உன்னை ஃபாலோ பண்ணுவதற்காக நியமித்தேன். அவர்கள் உன்னை ஃபாலோ பண்ணினார்கள். நீ எந்த லாட்ஜில் தங்கியிருக்கிறாய் என்ற செய்தி கிடைத்தது. அந்த லாட்ஜ் திருடர்கள் கூட்டம் வந்து தங்குகிற லாட்ஜ். ஒரு ஆணும் பெண்ணும் தெரு முனையில் சந்தித்து உடனடியாக கணவன் - மனைவியாக மாறி அந்த லாட்ஜிற்கு வந்து இரண்டு மணி நேரத்திற்கு ரூம் வாடகைக்கு வேண்டும் என்று கேட்டால், கேள்வி கேட்காமல் ரூம் கொடுப்பார்கள்.



நீ தங்கியிருக்கும் போது அது அந்த மாதிரி லாட்ஜ் என்பதை அறிந்து கொள்ளவில்லையா?''

''எனக்குப் பக்கத்து அறையில் அவ்வப்போது வினோத ஒலிகள் கேட்கும்.''

''வினோத ஒலிகள் என்றால்?''

''பெண்களின் முனகல்கள். அது ஆனந்தத்தாலா, வேதனையாலா என்று நான் ஆராய முற்படவில்லை.''

''வெரிகுட். நீ விவரம் தெரிந்தவன். அடுத்தவர் அந்தரங்கத்தில் எட்டிப் பார்க்காதவன். நீ ஒரு இரவுப் பறவை என்று லாட்ஜில் விவரம் தெரிவித்தார்கள். பகல் நேரங்களில் தூங்கி இரவு நேரங்களில் விழிப்பவன். நைட் வாட்ச்மேன், நைட் ஷிப்ட் வேலை செய்யும் ஃபாக்டரி ஆசாமி. திருடன் ஆகியோர்தான் இரவு நேரங்களில் விழிப்பவர்கள். உன் அறையை ஆராய்ந்தேன்...''

''என் அறைக்குள் நுழைய உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?''

''எனக்கு நானே. குறுக்கே பேசாதே. சொல்லி முடித்து விடுகிறேன். அப்புறம் நீ பேசலாம், என்ன?''

அவளது கேள்வியில் இருந்த அதிகாரம் என்னையறியாமல் என் தலையை அசைக்க வைத்தது - ஆமோதிப்பாக.

''தட்ஸ் குட், ஆராய்ந்ததில் நீ பண்ணி வைத்திருந்த டூப்ளிகேட் சாவிகளைக் கண்டு பிடித்தேன். சூட்கேஸ், கார், ரூம் போன்றவற்றைப் பூட்டும் பூட்டுகளுக்கான சாவிகள் இல்லை அவை. பெரிய பெரிய பூட்டுகளுக்கான சாவிகள். எதற்கு இது என்று கேட்டுக் கொண்டேன். பதில் கிடைக்கவில்லை. நேற்றிரவு நானே உன்னைப் பின் தொடர்வது என்று தீர்மானித்தேன். உன் அறையை நான் நிதானமாக ஆராய்வதற்காகவே உனக்கு ஒரு சீட்டாடும் குருப்பை

அறிமுகப்படுத்தினேன். எவ்வளவு ஜெயித்தாய்? ஒரு ஆயிரத்து இருநூறு ரூபாய் இருக்குமா? அப்படித்தான் எனக்குத் தகவல். அந்தப் பணம் என்னுடையது. என் முதலீடு. அதைச் செலவழித்ததால்தான் நீ 'சீட்டில் ஜெயித்துக் கொண்டே இருக்கிறோம்' என்ற மிதப்பில் தொடர்ந்து ஆடிக் கொண்டிருந்தாய்...''

அவள் பேசப்பேச எனக்கு ஸாராமேல் இருந்த பிரமிப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது. திட்டமிட்டு ஒவ்வொரு காயாக நகர்த்தி இருக்கிறாள். கொஞ்சம் கூட சந்தேகப் படாமல் நான் இவள் விரித்து வைத்திருந்த வலையில் விழுந்திருக்கிறேன்.

''அவ்வளவு பெரிய சாவிகளைப் பார்த்ததும் உன் திட்டம் வேறு ஏதோ என்று தெரிந்துவிட்டது. என்ன என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம். அதனால் நேற்றிரவு உன்னை நான் பின் தொடர்ந்தேன். முதல் நாள் உன்னை யாரும் கவனிக்க வில்லை என்ற மிதப்பில் நீ கொஞ்சம் அஜாக்கிரதையாகத் தான் ஏவாள் தங்க அரண்மனை நோக்கிப் போனாய். நான் கடைக்கு எதிரில் இருந்த கரும்புச் சக்கைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு உன்னைப் பார்த்தேன். நீ கடையின் முன்னால் இருக்கும் ரோலிங் ஷட்டரை உயர்த்தி உள்ளே நுழைந்து ரோலிங் ஷட்டரை இறக்கிக் கொண்டாய். எனக்குப் புரிந்து விட்டது. உள் கதவுப் பூட்டுகளுக்கான சாவி தயாரிக்க நீ லீவர் அமைப்புகளை மெழுகில் பதிவு செய்து கொள்ளப் போகிறாய் என்று. நான் சொன்னது சரிதானே? பொய் வேண்டாம். என் கண்களைப் பார்த்துச் சொல்.''

என் கால்களுக்குக் கீழே பஞ்சடைத்த மாதிரி இருந்தது. இந்த ஸாரா எந்த மாதிரிப் பெண். எப்படி எனக்குள் ஒளித்து வைத்திருப்பதையெல்லாம் அறுத்து எடுத்து வெளியே கொட்டுகிறாள். தலைக்கு மேல் வெள்ளம். இனிமேல் ஜான் என்ன முழம் என்ன? முழுதும் நனைந்தாகி விட்டது. இனிமேல் முக்காடென்ன, குடையென்ன?



அவளை நேருக்கு நேராகப் பார்த்தேன்.

அவள் கண்கள் என்னை ஊடுருவின. இதயத்தில் இரு ஈட்டி முனைகள் என்று கவிதை போல் ஒரு வாக்கியம் தோன்றியது. ஒரு பெண்ணுக்குரிய அத்தனை மென்மை களையும் வைத்துக் கொண்டு, இவ்வளவு கடினமாக நடந்து கொள்ளும் ஸாராவைப் பார்க்கப் பார்க்க எனக்குக் கோபம் வரவில்லை. மாறாக ஒரு விதமான மகிழ்ச்சி தான் அதி கரித்தது.

''ஆம்'' என்றேன்.

''அப்படியென்றால்?''

''அப்படியென்றால் உன் யூகம் சரிதான் என்று பொருள். நான் உள்கதவின் பூட்டுகளுக்கான லீவர் அமைப்புகளைப் பிரதியெடுத்து வந்து இன்னொரு செட் டூப்ளிகேட் சாவி தயாரித்து வைத்திருக்கிறேன்.''

''எதற்கு?''

''ஏவாள் தங்க அரண்மனையில் இருக்கும் நகைகளை அபேஸ் செய்ய.''

''செய்து?''

''உருக்கித் தங்கமாக விற்றால் எனக்குப் பின்னால் வரும் ஏழு தலைமுறையினர் வேலை செய்யாமலே உட்கார்ந்து சாப்பிட முடியும். அதற்காகத்தான். இந்த வாழ்க்கையில் எத்தனை நாளுக்குத்தான் போதும் போதாததுமாக இருந்து கொண்டிருப்பது?''

''ரைட். எனக்கும் அதே நிலைமைதான். பாக்கெட் அடிப் பதில் வருமானம் மிகக் குறைவு. மாதக் கடைசி என்றால் எந்த பர்ஸிலும், பணமும் இருக்காது. நானும் உன்னை மாதிரி கொஞ்சம் சாய்ந்து உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறேன். எனவே என்னை உனது பார்ட்ன

ராகச் சேர்த்துக் கொள். ஃபிஃப்டி. ஃபிப்டி. என்ன சொல்கிறாய்?''

''என்னது?'' என்றேன் அதிர்ந்து போய். ''உனக்கு ஃபிஃப்டி பர்சன்ட் பார்ட்னர்ஷிப்பா? தராவிட்டால்?''

''போலீசுக்கு செய்தி போகும். நீ திருடும் நேரத்தில் வந்து பார்த்து உன்னைக் கைது செய்து கொண்டு போவார்கள்.''

''நான் உன்னை இப்போதே இந்த நேரமே கொன்று விட முடியும்.''

''தாராளமாகக் கொன்று விடு. எனக்கும் ஒரு நிரந்தர விடுதலை. தற்கொலை செய்து கொள்ளத் தைரியம் போதவில்லை. சின்னச் சின்ன திருட்டுக்களைத் தவிர வேறு எந்தத் தொழில் செய்வதற்கும் நான் லாயக்கில்லை. தற்செயலாக நீ வந்து மாட்டினாய். உனக்கு உதவி செய்து விட்டு நான் வாழ்க்கையில் செட்டில் ஆகி விடலாம் என்று நினைத்தேன். நீ மறுக்கிறாய். கொன்று விடுகிறேன் என்கிறாய். அதாவது செய். கமான் கில் மீ...'' என்று அவள் நெஞ்சை நிமிர்த்திக் காட்டினாள்.

அவளுடைய வடிவம் ராஜராஜேஸ்வரியின் வடிவம் போல் இருந்தது. கையில் கரும்புக்கழி இல்லை என்பது தான் ஒரே குறை. அவளைக் கொன்று விடுவேன் என்று சொன்னால், அவள் பயந்து விடுவாள் என்று நினைத்தது எவ்வளவு முட்டாள்தனம்.

''எனக்குத் தெரியும் உன்னால் என்னைக் கொன்று விட முடியாது. என்னைக் கொல்வதால் கொலைகாரன் என்ற பட்டத்தையும் சேர்த்து நீ சுமக்க வேண்டும். அதில் உனக்குச் சம்மதமில்லை. முட்டாளே. ஏவாள் தங்க அரண்மனையைக் கொள்ளை அடித்தால் உனக்குத்தான் ஏழு தலைமுறைக்கான பணம் கிடைக்கும் என்கிறாயே. அவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்? அரசியலில்



நுழைந்து, சீட் பெற்று ஓட்டு வாங்குவதற்காக செலவழிக்கப் போகிறாயா? உன் வாழ்க்கை வரைக்கும் நீ வசதியுடன் வாழ்ந்தால் போதாது. மிச்சமிருக்கும் பணம் பாசி படிந்து இருப்பதற்குப் பதில் என்னையும் வாழ வைத்து விட்டால் நீ என்ன குறைந்து விடப் போகிறாய்?'' என்று ஸாரா நிதானமாக நிறுத்தி ஒவ்வொரு வார்த்தையாகக் கேட்டாள்.

''உதவுகிறேன், உதவுகிறேன் என்கிறாயே. எப்படி உதவப் போகிறாய்?'' என்று கேட்டேன்.

''நீ போலீசில் மாட்டாமல் இருக்க உதவப் போகிறேன்.''

''நீயா?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டேன்.

''ஆமாம். ஆமாம். ஆமாம்'' என்றாள் ஸாரா மகா தன்னம்பிக்கையுடன்.

''எப்படி?'' என்று கேட்டேன்.

''நீ பூட்டைத் திறந்து ஏவாள் தங்க மாளிகையைக் கொள்ளையடிக்கிறாய் என்று வைத்துக் கொள். என்ன ஆகும்?''

''நான் நகையை உருக்கி எங்காவது விற்றுப் பணமாக்கிக் கொண்டு இந்தியாவிலோ, ஃபாரினிலோ செட்டில் ஆகி விடுவேன்.''

''அது கடைசி அத்தியாயம். அது வரைக்கும் உன்னால் போக முடிந்தால். ஆனால் அதற்குள் எவ்வளவு தடைகள் இருக்கின்றன என்று யோசித்துப் பார். ஏவாள் தங்க அரண்மனையின் சொந்தக்காரர் நகைகள் காணவில்லை என்று தெரிந்தவுடன் போலீசுக்கு போன் செய்வார். போலீஸ் வரும். பார்க்கும். யார் வேலை என்று யோசிக்கும். உள்ளே இருப்பவர்கள் யாராவது செய்திருக்கிறார்களா என்று ஆராயும். இல்லை என்று தெரிந்தவுடன் அடுத்தபடியாக திருட்டு எப்படி நடந்திருக்கிறது என்று பார்க்கும். பூட்டைத்த திறந்து

நகையையெல்லாம் திருடிவிட்டு மறுபடியும் பூட்டிவிட்டு போயிருப்பது தெரிய வரும். அப்படித் தெரிந்தால் உடனடியாக போலீஸ்காரர்கள் கம்ப்யூட்டர் சுவிட்சைத் தட்டி விசாரிப்பார்கள். பூட்டைத் திறந்து மறுபடி மூடிவிட்டுப் போகும் திருடர்கள் யார், யார் என்று பார்ப்பார்கள். அநேகமாக உன் பெயர்தான் அதில் உன் போட்டோவுடன் ஃபிளாஷ் ஆகும். அவ்வளவுதான். அது போதும் அவர்களுக்கு. உன்னை ஜில்லா, ஜில்லாவாக, தாலுகா தாலுக்காவாகத் தேடிக் கண்டு பிடிப்பார்கள். எவ்வளவு மறைத்தாலும் உன்னை சித்திரவதை செய்து உண்மையை வரவழைத்து விடுவார்கள். நகைகளைப் பறிமுதல் செய்வார்கள். பாதி நகைகளை அவர்கள் விற்று அந்தப் பணத்தைப் பங்கு போட்டுக் கொள்வார்கள். நீ அதற்குள் அவற்றை விற்றுச் சாப்பிட்டு விட்டாய் என்று சொல்வார்கள். உனக்குப் பத்து வருஷமோ, இருபது வருஷமோ கிடைக்கும். திருப்பியும் ஜெயில் வாழ்க்கை. இது தேவையா உனக்கு? நீ அந்தத் திருட்டில் ஈடுபடவே இல்லை என்கிற மாதிரி ஒரு செட்டப்பை செய்து போலீசை நம்ப வைத்து விட்டால், நீ உள்ளே போக வேண்டிய அவசியமே இருக்காதே. உன்னைப் போலீஸ் சந்தேகப்படவே படாதே...''

''என்ன சொல்கிறாய் ஸாரா?''

''புரியும்படி சொல்கிறேன். நீ தயாரித்து இருக்கும் டூப்ளிகேட் சாவிகளை என்னிடம் கொடு. நான் நகைகளைத் திருடிக் கொண்டு வந்து விடுகிறேன். நான் புதுக்கை. என் கைரேகை போலீஸ் ரிகார்டில் இல்லை. என் போட்டோ அவர்களிடம் இல்லை. இதுவரை நான் போலீசில் சிக்கியதில்லை. எனவே என்னை அவர்களால் கண்டு பிடிக்க முடியாது. நான் ஏவாள் தங்க அரண்மனையில் திருடும் நேரத்தில் நீ அந்த ஏரியாவிலேயே இருக்கக் கூடாது. ஒன்று ஏதாவது ஒரு வியாதியைச் சொல்லிக் கொண்டு கவர்ன்மென்ட்



ஆஸ்பத்திரிக் கட்டிலில் போய்ப் படுத்துக் கொள்ள வேண்டும். அல்லது வெளியூர் எங்கேயாவது போய் தங்கி இருப்பதற்கான பக்கா ரிகார்டுகளுடன் போய்த் தங்கி விட்டு சென்னை திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் கட்சி ஆபீஸ் அது. இது என்று எங்காவது போய் எந்தத் தலைவனுக்காவது சேவை செய்ய வேண்டும்...''

''இரு... இரு'' என்றேன். என் மூளையில் ஒரு பளிச் மின்னல்.

நிறுத்தினாள்.

''என்ன?'' என்று கேட்டாள்.

''ஆஸ்பத்திரியில் போய்ப் படுத்தால் என் நோக்கம் தெரிந்தாலும் தெரிந்து போகும். எனவே சந்தேகம் விலகாது. என்னைத் துருவத் தொடங்குவார்கள். வெளியூர் போயிருந்தாலும் அதே மாதிரிதான். என் அலிபையெல்லாம் ஏதாவது ஒரு வக்கீல் உடைத்து விடுவான். எவனிடமோ வெளியூர் பஸ் டிக்கெட், லாட்ஜ் ரசீது எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு நாடகம் போடுகிறேன் என்பான். எனக்கு இங்கே எந்த கட்சித் தலைவனையும் தெரியாது. நம்பிக்கையும் இல்லை. காட்டிக் கொடுப்பதற்கு இன்றைக்கு கட்சித் தலைவர்கள் தான். அவர்களை விட்டால் வேறு ஆள் இல்லை. ஒரு சின்ன அரசியல் ஆதாயத்திற்காக பெற்ற தாய், தந்தை, கட்டிய மனைவி என்று எல்லோரையும் அவர்கள் காட்டிக் கொடுப்பார்கள். அதையெல்லாம் விட நல்ல வழி இருக்கிறது?''

''என்ன?''

''நீ இங்கே தொழிலில் ஈடுபட்டிருக்கும் சமயம் நான் போலீஸ் லாக்கப்பில் இருப்பது.''

''எப்படி?''

“ஏதாவது ஒரு சின்னத் திருட்டு. இல்லாவிட்டால் ஒரு கல்லெறி. அன்றைக்கு இரவு லாக்கப்பில் இருந்தால் அதை விட எனக்கு வேறு அலிபை தேவையே இல்லையே...”

ஸாரா முகம் மலர்ந்தாள்.

“ஃபர்ஸ்ட் கிளாஸ் ஐடியா” என்றாள்.

“சரி. எல்லாம் சரி. உன்னை நான் எப்படி நம்புவது? நீ பாட்டிற்கு நகையை எடுத்துக் கொண்டு சவாரி விட்டு விட்டால்?” என்று கேட்டேன்.

“என் ஃபோட்டோ தருகிறேன். நான்தான் அந்தத் திருட்டைச் செய்தேன் என்று போலீசிடம் சொல். ஏவாள் தங்க அரண்மனை முதலாளியிடம் சொல். அவர்களிடம் அடியாட்கள் இருப்பார்கள். அப்புறம் நான் எங்கே ஒளிந்திருந்தாலும் என்னதான் மேக்கப்பை மாற்றியிருந்தாலும் தேடிக் கண்டு பிடிப்பார்கள். என் கற்பு பறி போகும். என் வாழ்க்கை முடிந்து போகும். எனக்கும் லாக்கப் வாழ்க்கை என்று ஆகும். இல்லாவிட்டால் சாகடித்து விடுவார்கள். ஆனால் சாடிக்கும் முன் என்னை எவ்வளவு பேர் எத்தனை விதமாக முடியுமோ அத்தனை விதமாகக் கையாண்டு விடுவார்கள். நான் என்னையே பணயமாக வைக்கிறேன். போதுமா? உனக்குத் திறமை இருக்கிறது. எப்பேர்ப்பட்ட பூட்டுக்கும் சாவி தயாரிக்கும் திறமை. அதற்கு நான் தலை வணங்குகிறேன். என்னிடம் அந்தத் திறமை இல்லை. நான் வாழ்நாள் முழுக்க சந்தோஷமாக வாழ உதவப் போகிறாய். உன்னை நான் ஏமாற்றுவேனா? திருடர்கள்தான் எப்போதும் தங்களுக்குள் வாக்குத் தவறாதவர்கள். நாணயமானவர்கள். காட்டிக் கொடுக்காதவர்கள். ஏமாற்றாதவர்கள். நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஜெயிப்போம் மணிகுமார்” என்றாள்.

அவளை நம்பவேண்டும் என மனதிற்குள் ஒரு உணர்வு தோன்றியது. அவள் ஏமாற்ற மாட்டாள் என்பது அவள் கண்களைப் பார்த்தால் தெரிந்தது.



“ரைட். நான் உன்னை நம்புகிறேன்” என்றேன்.

அவள் கை நீட்டினாள்.

நானும் கை நீட்டினேன்.

ஒருவருக்கொருவர் குலுக்கிக் கொள்ளப் போகிறோம் என்று நினைத்தால் அவள் சடாரென்று என்னை அருகில் இழுத்து என் கன்னத்தில் முத்தமிட்டாள். உதட்டு ஈரம் ஜில்லென்று படிந்தது.

இன்ப போதையில் மயக்கம் வரும் போல் இருந்தது.

## 10

மறுநாள் முன் மாலை அல்லது பின் பிற்பகல் மூன்று மணிக்கு நான் இருந்த ஏரியாவில் கூட்டம் அதிகம் இல்லை. கொஞ்சம் நன்றாக உடுத்திக் கொண்டேன்.

ஸாராவின் வீட்டை நோக்கி நடந்தேன்.

ஸாராவின் சரித்திரத்தை இரண்டாகப் பிரிக்கலாம். அறிமுகத்திற்கு முன். அறிமுகத்திற்குப் பின்.

அறிமுகத்திற்கு முன் ஸாரா உடைப்பதற்கு மிகச் சிரமமான பாதாம் கொட்டையாக இருந்தாள். கண்களில் கத்தியின் கூர்மை, உதட்டில் ஒரு தன்னம்பிக்கை, ஏளனப் புன்னகை, நடையில் ஒரு அலட்சியம் எல்லாம் இருந்தது.

அறிமுகத்திற்குப் பின் மாறி விட்டாள். வெண்ணெய் போல் இழைந்தாள். ஃபிப்டி, ஃபிப்டி வியாபார ஒப்பந்தத்தின் மூலம் அவள் வெகு சந்தோஷமாகி விட்டாள். இனி தெருத் தெருவாக கொழுத்த பர்ஸைத் தேடி அலைய வேண்டாம்.

அவளுடைய அம்மா, அப்பா என்று ரிஷிமூலம் எல்லாம் கேட்டேன். தன் அம்மா, அப்பா யார் என்று என்னையே திருப்பிக் கேட்டாள். அனாதை. அதற்காகக் கண்ணீர் வடிக்கவில்லை.

ஓர் அனாதையாய் இருந்து இவ்வளவு வருடங்கள் தூய்மையான உறை பனி போல் யார் கையும் படாமல் வளர்ந்திருப்பது உலகின் எட்டாவது அதிசயம்.

என்னைக் கண்டு மயங்க வேண்டும் என்று அவள் தலையில் எழுதி வைத்திருக்கிறது. மயங்கி விட்டாள்.

என்னுடன் உலகின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் வருவதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறாள்.

வீட்டை அடைந்தேன். சுவாதீனமாக கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தேன். கதவு திறந்தது.

''வா'' என்று வரவேற்றாள் ஸாரா.

'வாவ்' என்று சொல்ல வைத்தாள்.

அமெரிக்கன் ஜார்ஜெட்டோ, ஷிஃபானோ ஏதோ ஒரு ஸாரி கட்டியிருந்தாள். இடுப்பின் சரிவிற்குக் கீழே அவளது ஸாரி பின் பக்கம் இறங்கியிருந்தது. அவள் இடுப்புப் பிரதேசம் இதுவரை ஏர் ஓடாத கன்னி நிலமாக ஒரு மாசு மருவின்றித் தெரிந்தது.

ஒரு மாதிரி அடர்பச்சை நிறத்தில் புடவை. கிளிப் பச்சை நிறத்தில் ரவிக்கை.

''போகலாமா?'' என்று கேட்டாள்.

அவளைக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும் போல் இருந்தது. கூச்சம் தடுத்தது. எங்கே போய்விடப் போகிறாள்? இன்னும் கொஞ்சம் போகட்டும். அப்புறம் அவள் உடலின் ஒவ்வொரு பாகத்தைப் பற்றியும் விரிவான, இன்ட்ரெஸ்டான கவிதை எழுதுகிறேன்.



''யெஸ்'' என்றேன்.

சாலையில் இறங்கினோம். நடந்தோம். அவளருகில் நடப்பதே எனக்கு ஒரு கிளுகிளுப்பை அளித்தது. அவ்வப்போது நானோ, அவளோ, தெரிந்தோ, தெரியாமலோ உரசிக் கொள்ளும்போது என் உடலில் குப், குப் என்று தீப்பற்றியது.

ரயில்வே ஸ்டேஷன் அருகில் புதிதாக எம்.டி.ஆர். கோன் ஐஸ்க்ரீம் ஐந்து ரூபாய்க்கு விற்றார்கள். அவளுக்கு ஒன்று வாங்கிக் கொடுத்தேன். ரொம்ப சுவைத்துச் சாப்பிட்டாள்.

பின் ஒரு ஆட்டோ பிடித்து மவுண்ட் ரோடு போய் ஒரு சினிமா பார்த்தோம். சினிமா பெயர் நினைவில்லை. யார் நடித்தது என்று கூடத் தெரியவில்லை! படம் ஓட ஓட நான் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் என் முகத்தைப் பற்றித் திருப்பி விட்டாள். அந்தக் கையைப் பற்றி நெறித்தேன். முனகினாள். படம் முடிந்தவுடன் ஏமாற்றமாக இருந்தது.

பின் அங்கிருந்து உட்லண்ட்ஸ் டிரைவ் இன் ஹோட்டலுக்குப் போனோம். மரங்களின் கீழே கார்கள் நின்றிருந்தன. மரங்களின் கிளைகளுக்கு மேல் சூரியன் போல் ஒளிர்ந்த சோடியம் விளக்கினால், கார் மண்டைகளில் மர நிழல் சிறுத்தைப் புலி போல், யானை போல், பாய்ந்து ஓடும் மான் போல் படர்ந்திருப்பது போல் எனக்குத் தோன்றியதற்குக் காரணம் என் அருகில் இருந்த ஸாராவின் மேல் எனக்கேற்பட்டிருந்த காதலா, இல்லையா என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

கார்களின் கதவுகளுடன் தட்டுக்கள் இணைக்கப்பட்டு இறங்கி வர விரும்பாத, சமூகத்திற்கு முகம் காட்ட விரும்பாதவர்கள் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சினிமா பிரபலங்களாக இருக்கலாம். அல்லது டாடா சுமோவும், செல்போனும் கொண்ட கட்டப் பஞ்சாயத்து தாதாவாக

இருக்கலாம். எங்கிருந்தோ மெலிதாக பாட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அது சத்தமாக எனக்குத் தோன்றக் காரணம் அந்தப் பாட்டில் இருந்த கன்னா பின்னா ரிதம். டடடட டட்டர டட்டர, டடடட டட்டர, டட்டர.

டிபன் சாப்பிட்டோம்.

பின் திட்டம் தயாரித்தோம்.

இந்த மாதிரியான சதி வேலைகளுக்கெல்லாம் இந்த மாதிரியான பொது இடங்கள்தான் சரிப்பட்டு வரும். அவரவர் அவரவர் உலகத்தில் மூழ்கிக் கிடக்க, மற்றவர்களின் சம்பாஷணையில் அவர்களுக்கு அவ்வளவாக ஆர்வம் இருக்காது.

''ஸாரா.''

''ம்?''

''தாங்க்ஸ்.''

''எதற்கு?''

''எனக்கு இந்த மாதிரி ஒரு ஐடியா கொடுத்ததற்கு.''

''எந்த மாதிரி?''

''தெரியாதது போல் கேட்காதே. இந்த க்ரைம் உலகில் சாவி போட்டு பூட்டைத் திறப்பவன் நான் ஒருவன்தான் என்று போலீசுக்குத் தெரியும். நான் விடுதலையாகி இருப்பதும் அவர்களுக்குத் தெரியும். இப்போது போய் ஏதாவது ஒரு கடையில் பூட்டைத் திறந்து கடையில் இருக்கும் நகையோ, வேற எதுவோ, எது காணாமல் போனாலும் போலீஸ்காரர்கள் என்னைத் தான் தேடி வருவார்கள். இந்த முறை உன் உதவியால் அவர்களை ஏமாற்றப் போகிறேன். நீ கொடுத்த ஐடியாவிற்கு தாங்க்ஸ். உனக்குப் பயம் இல்லையே?''

''பயமா? எதற்கு?''



''தன்னந்தனியாக ஒவ்வொரு பூட்டாகத் திறந்து கொண்டு உள்ளே நுழைவதற்கு?''

''இல்லை. ஒரு மாதிரி த்ரில்லிங்காக இருக்கிறது. ஆர்வத்துடன் அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''வெரிகுட். இரவு பன்னிரண்டு மணிக்கு அந்தத் தெருவில் போலீஸ் பெட்ரோலிங் ஜீப் வருகிறது. அதைத் தவிர்க்க வேண்டும். மேலும் பதினைந்து நிமிடத்திற்கு ஒரு முறை கூர்க்கா ஒருவன் இடுப்பில் முனை மழுங்கிய கத்தியுடன் வருவான். அவன் ஒரு முறை க்ராஸ் பண்ணியவுடன் உன் வேலையை ஆரம்பிக்க வேண்டும். நான் அந்தக் கடையில் புகுந்து நகைகளைத் தொட்டு எடுத்து வரும் அளவுக்கு ஏற்கனவே போய் விட்டேன். நான் கை வைத்தால் மாட்டிக் கொள்வேன் என்பதால்தான் நீ போகிறாய். பயப்படாதே. ரொம்ப சுலபமான வேலை. நீ உள்ளே நுழைந்து நகைகளை எல்லாம் கிளப்பிக் கொண்டு வரும் நேரத்தில் நான் இங்கே தி.நகர் ஸ்டேஷன் லாக்கப்பில் இருப்பேன். ஆல் ஓகே?''

ஸாரா, ''ஓகே'' என்றாள்.

அவள் முகம் நிர்மலமாய் இருந்தது. குழந்தையுடைய ஆர்வ முகம் போல் இருந்தது.

மற்ற எல்லா கொள்ளைகளுக்கும் ஏகப்பட்ட திட்டங்கள் அது இது என்று போட வேண்டும். மேலேயிருந்து வெல்டிங் காஸால் கான்க்ரீட் தளத்தைப் பெயர்த்துக் கொண்டு எல்லாம் ஒருவன் பாங்க் லாக்கருக்குள் இறங்கியதாக செய்தி படித்திருக்கிறேன்.

இது மிக மிக சிம்பிள். அவ்வளவு கஷ்டமெல்லாம் இல்லை. முதலில் ரோலிங் ஷட்டர் பூட்டுகளைத் திறக்க வேண்டியது. ஷட்டரை லேசாக மேலே தூக்க வேண்டியது. உள்ளே உருண்டு போக வேண்டியது. ஷட்டரை இறக்கிக் கொண்டு, இரண்டாவது கதவில் இருக்கும் பூட்டுகளையும் திறந்து

உள்ளே போனால் ஒவ்வொரு கவுண்டருக்கும் ஒரு பூட்டு. ஒரு சாவி. மொத்தம் இரண்டு மாடியிலுமாகச் சேர்த்து இருபது கவுண்டர்கள். அத்தனை கவுன்டர்களுக்கும் சாவி ரெடி. நகைகளை எல்லாம் எடுத்து ஒரு ப்ளாஸ்டிக் பேகில் போட்டுக் கொண்டு வந்து விடலாம். இல்லாது போனால் ஒரு கான்வாஸ் பேக். கேன்வாஸ் பேக்தான் வசதி. ஒன்றுக்கு இரண்டாக வைத்திருந்தேன்.

''வீட்டுக்குப் போலாமா ஸாரா?''

''ஓயெஸ்'' என்றாள்.

வீட்டிற்கு வந்தோம். ஏற்கனவே நான் அங்கே தயாராகக் கொண்டு வைத்திருந்த கான்வாஸ் பேகுகளைக் கொடுத்தேன். ஒவ்வொரு சாவியாக அடையாளம் சொல்லிக் கொடுத்தேன். அமைதியாக யாவற்றையும் பெற்றுக் கொண்டாள்.

பரபரப்பில், எதிர்பார்ப்பில், ஆர்வத்தில் என் கை நடுங்கியது. ரத்த அழுத்தம் தாறுமாறாகியது. அவள் ரொம்ப, ரொம்ப கூலாக யாவற்றையும் பெற்றுக் கொண்டாள்.

சாதித்து விடுவாள்.

''பெஸ்ட் ஆஃப் லக்'' என்றேன்.

''தாங்க்யூ'' என்றாள்.

அவள் கன்னத்தில் முத்த ஒத்தடம் கொடுத்துவிட்டு நகர்ந்தேன்.

## 11

'ப்ளாக்ரோஸ்' என்று நியான் விளக்கு பளிச் பளிச் என்று கண் சிமிட்டியது. அந்த ஹோட்டலின் பார்க்கிங்கில் போர்ட்



ஐகான்களும், ஹுண்டாய் சிட்டியும், ஜென்னும், எஸ்டீமும் அணிவகுத்து நின்றன.

இந்த ஹோட்டலில்தான் காபரே நடப்பதாகத் தகவல். பணக்காரர்கள் தங்களின் வக்கிரத்தையெல்லாம் தீர்த்துக் கொள்ளும் இடம். நான் அங்கே போகவில்லை.

யாரிடமாவது எதற்காகாவது தகராறு பண்ண வேண்டுமென்றால் 'பார்' தான் மிக வசதி. ஹோட்டலின் பார் எங்கே என்று தேடிக் கண்டு பிடித்தேன். பாரின் பெயர் ராஜா - ராணியாம்.

அதன் அபாரமான கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தேன். விதானத்தில் வரிசையாகப் பாட்டில்களின் அடித் தட்டுகளைப் பதித்திருந்தார்கள். அடக்கப்பட்ட வெளிச்சம். குளிர் காற்று. சிகரெட் புகை.

அந்த ஹாலில் தனியாக ஒரு ஆள் உட்கார்ந்து குடித்துக் கொண்டிருக்க நான் அவன் எதிரில் போய் அமர்ந்தேன்.

வி.எஸ்.ஓ.பி. பிராந்தி ஆர்டர் செய்தேன். ஒரு ரவுண்ட். இரண்டு ரவுண்ட். மூன்றாவது ரவுண்ட். எதிரில் இருந்தவன் பியரை வைத்து சப்பிக் கொண்டிருந்தான். இரண்டாவது பாட்டில். எனக்கு செம டைட்டாக இருந்தது. ஸாரா இருந்தால் நன்றாக இருக்கும் போல் இருந்தது. நோ. மடத்தனமாக பேசாதே. இப்போது நீ ஜெயிலுக்குப் போக வேண்டியவன். அதை ஞாபகம் வைத்துக் கொள்.

வைத்துக் கொள்கிறேன். வைத்துக் கொள்கிறேன்.

எதிரில் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்தேன். அவன் டி.வி.யில் ஓடிய ஏதோ ஒரு குப்பையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய பர்ஸ் பேன்டில் இருந்து நழுவி கீழே விழுந்து விடும் போல் இருந்தது. மேஜைக்கு அடியில்

கையை நீட்டி வெகு லாவகமாக அந்தப் பர்ஸை எடுத்து விரித்தேன்.

பிளாஸ்டிக் ஷீட்டிற்குப் பின்னால் ஒரு பெண்ணின் மார்பளவு புகைப்படம். சிரித்துக் கொண்டிருந்தாள். படத்தை உருவினேன். பின்னால் ஏதாவது எழுதியிருக்கிறதா என்று பார்த்தேன்.

**அன்பான கணவர் ராமிற்கு**

**காதல் மனைவி காயத்ரி.**

என்று எழுதியிருந்தது. வைத்து விட்டேன். பர்ஸை பழையபடி அவன் பேன்ட்டிலேயே நுழைத்து விட்டேன். இது போதாதா என்ன?

"ஏய் மிஸ்டர்" என்றேன்.

அவன் திடுக்கிட்டு என் பக்கம் திரும்பினான்.

"உன் பெயர் ராம்தானே?" என்று கேட்டேன்.

அவன் விழிகள் விரிந்தன.

"எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"தெரியும். உன்னைத் தெரிகிறதோ இல்லையோ. உன் பொண்டாட்டியைத் தெரியும். உன் பொண்டாட்டி தானே காயத்ரி. என் செல்ல காயூ. அவள் இந்நேரம் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று நினைக்கிறாய். நீ டெய்லி பாருக்கு வந்து போனாலுங்கூட உன் மனைவி உன்னை எதுவும் சொல்லிவிட மாட்டாள். ஏன் தெரியுமா? தெரியுமா, தெரியாதாடா பன்றி?"

என் தோரணை அவனை நடுங்க வைத்து விட்டது.

"நீ வீட்டில் இல்லாத போது அவள் வெளியில் செல்ல. அவள் ஜாலியாக இருந்து விட்டு வர. நீ பெண்டாட்டி எதுவும் சொல்வதில்லை என்று சந்தோஷமாக இங்கே வந்து



உட்கார்ந்திருக்கிறாய். அங்கே உன் பெண்டாட்டி ஏதோ ஒரு படுக்கையில் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை... பை தி பை. உன் பெண்டாட்டியின் மேலுதட்டின் ஓரத்தில் இருக்கும் மச்சம் சூப்பர் மச்சம்! அது அங்கேயே தானே இருக்கிறது. நான் காயுவுடன் இரண்டு தடவை..."

"ஏய்..." என்று அவன் என்மேல் பாய்ந்தான்.

நான் விலகினேன். நாற்காலியில் விழுந்து கவிழ்ந்தான். மேஜையில் காலியாக இருந்த கோப்பையை ஒரு தள்ளு தள்ளினேன். கீழே விழுந்து உடைந்தது.

பார் ஆசாமி ஒருவன் எங்களை நோக்கி ஓடி வரத் தொடங்கினான்.

அதற்குள் அந்த ராம் இன்னொரு முறை என் மேல் பாய, நான் அவனைப் பிடித்துத் தள்ள அவன் இன்னொரு மேஜையில் விழுந்து அங்கிருந்த ஒரு அயல்நாட்டுப் பயணியும் அவனுக்கு கம்பெனி(!) கொடுத்துக் கொண்டிருந்த இந்தியப் பெண்ணும் வினோதமாகக் குரல் எழுப்பினார்கள்.

மேலும் சில டம்ளர்கள் உடைந்தன. சாராயம் நுரையுடன் வழிந்தது. சில பீங்கான் தட்டுகள் கோழித் துண்டுகளுடன் கீழே விழுந்து சிதறின.

என் மேல் நான்கு பேர் பாய்ந்தார்கள்.

நான் கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்து அடிக்கத் தொடங்கினேன்.

அந்த ராம் மேனேஜரிடம் என்னைப் பற்றி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். பர்ஸில் இருந்த புகைப்படம் அவன் தங்கையுடையது. அவள் கணவன் பெயரும் ராம். சீதாராம். ஜானகிராம். நான் கதை வசனத்தைத் தப்பாக எழுதியதால் நான் வம்பை வேண்டுமென்றே விலைக்கு வாங்கியதாகக் கருதி, அவன் போலீசை அழைத்தான்.

போலீஸ் வந்து சேரும் வரை நான் இப்படியும் அப்படியுமாகப் பாய்ச்சல் காட்டி ஓடி என்னால் முடிந்த அளவு இன்னும் இரண்டு டேபிள்களைக் கவிழ்த்தேன். யாரோ அடித்தார்கள். உதட்டோரம் ரத்தம் புளித்தது. நான் ஒரு பாட்டிலை எடுத்து அதை உடைத்துக் கொண்டு நின்று சுற்றியிருந்தவர்களை அழைக்க, அவர்கள் பயந்து விலகிய போது போலீஸ் வந்து சேர்ந்தது.

போலீஸ் ஸ்டேஷன் நவீனமாக இருந்தது. அதன் ஒரு ஓரத்தில் பானைகள் உருண்டிருந்தன. சாராய நாற்றம். வெளியே போலீஸ் ஸ்டேஷனின் விலாப் பகுதியில் சைக்கிள் களும், ஸ்கூட்டர்களும் நின்றும் சாய்ந்தும் காணப்பட்டன.

சப்-இன்ஸ்பெக்டரின் அறையில் போர்டில் கை விலங்கு கள். உலக உருண்டை. போலீஸ் ஸ்டேஷனின் எல்லை எதுவரை என்பதைத் தெளிவாகக் காட்டும் மேப்.

ஒரு கான்ஸ்டபிள் என் கழுத்தின் கீழிருந்த சட்டைக் காலரைப் பற்றித் தள்ளிக் கொண்டு வந்தார். (பாவம், வயதானவர்) கூடவே ஹோட்டல் ஆசாமிகள்.

சப்-இன்ஸ்பெக்டர் சீட்டில் அமர்ந்திருந்தவர் சட்டையில் இருந்த பிளாஸ்டிக் பட்டையில் பால்ராஜ் என்று எழுதி யிருக்க, நிமிர்ந்து பார்த்தேன். இவரை எனக்குத் தெரியும். இன்ஸ்பெக்டர் எதற்கு சப்-இன்ஸ்பெக்டர் சீட்டில் உட்கார்ந் திருக்கிறார் என்ற கேள்வி எழுந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.

''ஏய்... நீ மணிகுமார் இல்லை?''

''யெஸ் ஸார்.''

''எப்போது வெளியில் வந்தாய்?''

''ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது சார்.''



''ஏன்யா இவனைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள்?''

''ப்ளாக் ரோஸ் பாரில் குடித்து விட்டு கலாட்டா சார்.''

''என்னய்யா இது? வெளியே வந்து ஒரு வாரம் கூட ஆக வில்லை. அதற்குள் மறுபடி உள்ளே போகிறேன் என்கிறாயே. ம்?''

''சார். அந்த ஆள்தான் செத்துப் போன என் மனைவி யார் யார் கூடவோ ஓடிப் போய்க் கொண்டிருப்பதாகப் பேசினான் சார். அனாவசியமாக என்னை கோபப்படுத்தினான் சார்'' என்று என் எதிர் சீட்டில் உட்கார்ந்திருந்த ஆசாமி இன்ஸ் பெக்டரிடம் கோபமாகக் கத்தினான்.

''இன்ஸ்பெக்டர். இதோ பாருங்கள் ரத்தம். என்னைப் போட்டு அத்தனை பேரும் காட்டு அடி அடித்தார்கள்.''

''பொய். இவன்தான் முதலில் எல்லாவற்றையும் ஆரம்பித் தவன்'' என்று பார் ஆசாமி ஒருவன் தன் தலை தப்புவதற்காக அவசரம் அவசரமாகப் பேசினான்.

''சார் வி.எஸ்.ஓ.பி. கேட்டால் கழுதை மூத்திரத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள் சார்.''

''கழுதை மூத்திரத்தைக்கூட நீ குடித்திருக்கிறாயா?''

''எங்கள் பாருக்கு ஏகப்பட்ட நஷ்டம் சார்'' என்றான் ஹோட்டல் மானேஜர்.

இன்ஸ்பெக்டர் அவனை முறைத்தார். ''உங்கள் ஹோட்ட லில் இல்லீகலாக என்னென்னவோ நடப்பதாக ரிப்போர்ட் வந்ததே...''

''சார்'' என்று ஹோட்டல் மானேஜர் நடுங்கினான். ''எந்தத் தப்பும் இல்லை சார். நான் எந்த கம்ப்ளெய்ன்டும் பண்ண வில்லை. நான் புறப்படவா சார்?''

"கம்ப்ளெய்ன்ட் பண்ணவில்லையா? நோ. நோ. கோர்ட்டுக்கு நீங்கள் வரவேண்டியிருக்கும். யோவ் 784. இந்த ஆளை லாக்கப்பில் போடு."

எழுநூற்று எண்பத்து நான்கை எனக்கு ஏற்கெனவே பழக்கம். வெளியில் இருக்கும்போது என்னிடம் காபி, டீ, சிகரெட், பொடி, வெற்றிலை பாக்குக்கு அடிக்கடி அடி போடுவார்.

அந்த கான்ஸ்டபிள் என்னை அழைத்துக் கொண்டு போனார்.

ஒரு லாக்-அப் அறையைத் திறந்து என்னை உள்ளே அனுப்பினார்.

நான் உள்ளே போய் நிம்மதியாக ஓர் ஓரத்தில் உட்கார்ந்தேன். நினைத்தது எல்லாமே கை கூடி வருகிறது என்ற நிம்மதி.

அங்கே ஸாரா தன் வேலையை மிக ஒழுங்காகச் செய்து கொண்டிருப்பாள்.

## 12

மறுநாள். காலை. எழுநூற்று. எண்பத்து நான்கு என்னை எழுப்பினார். பல் தேய்த்துக் கொள்ள அனுமதித்தார். டீ வாங்கிக் கொடுத்தார். குடித்தேன். தேநீர் அவ்வளவு ஆனந்தமாக இருந்தது.

பத்து மணிக்குத்தான் கோர்ட் ஆரம்பமாகும். அதன் பின் என்னை அங்கே கொண்டு போய் நிறுத்தி அபராதம் விதிப்பார்கள். ஐம்பதோ, நூறோ, இருநூறோ - தாராளமாகக் கட்டலாம். என் அலிபைக்கான விலை அது.



நான் லாக்-அப் அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கனவு காணத் தொடங்கினேன். அவ்வளவு நகைகளையும் பரிசோதித்து வைரம் பொருந்தியவற்றைத் தனியாகப் பிரிக்க வேண்டும். கல் இல்லாத நகைகளைத் தனியாகப் பிரிக்க வேண்டும். பிரித்து உருக்க வேண்டும். பிஸ்கட்டுகளாக மாற்றி மார்க்கெட்டில் விற்க வேண்டும். மும்பையில் விற்கலாம். அங்கேதான் அவ்வளவாகக் கேள்விகள் எழாது. மும்பை கறுப்பு பண முதலைகள் கரன்ஸியை எறிந்து விட்டு பிஸ்கட்டுகளை வாங்கி அடுக்கிக் கொள்வார்கள். நான் அந்தக் கரன்ஸியை வைத்துக் கொண்டு பக்கத்தில் ஸாராவையும் வைத்துக் கொண்டு -

லத்தியால், லாக் - அப் கதவுக் கம்பிகள் தட்டப்பட்டது, கனவுகளில் இருந்து மீண்டேன். நிமிர்ந்தேன். 784 பூட்டைத் திறந்து கொண்டிருந்தார்.

"கோர்ட்டுக்குப் போக வேண்டும். வா."

ஸ்டேஷன் ஹாலுக்குச் சென்றேன்.

ஸ்டேஷன் மற்றொரு புது தினத்திற்குத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டிருந்தது. கண்ணாடி டம்ளர்களில் தண்ணீர் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தது. வாசல் சென்டரி தன் துப்பாக்கியைத் தயார் செய்து கொண்டிருந்தான். வினோதமாக ஊதுவத்தி புகைந்து மணம் பரப்பிக் கொண்டிருக்க, இன்ஸ்பெக்டர் பால்ராஜ் விறைப்பான யூனிஃபார்மில் ஃப்ரெஷ்ஷாக இருந்தார். தனது முதல் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே என்னைப் பார்த்தார். சிரித்தார்.

"வாய்யா மணி. கோர்ட்டிற்குப் போகலாமா?"

"போகலாம் சார்."

"போதையெல்லாம், தெளிந்ததா?"

"தெளிந்தது சார்."

இன்ஸ்பெக்டர் மேலே பேசுவதற்கு முன் போன் ஒலித்தது. எடுத்தார். ரிசீவரைக் காதில் பொருத்திக் கொண்டார்.

"ஹலோ... இன்ஸ்பெக்டர் பால்ராஜ்" என்றார்.

எதிரிலிருந்து வந்த குரலைக் கேட்க கேட்க அவர் முகம் மாறிக் கொண்டே வந்தது.

"ஹலோ. விஷயம் என்ன என்று தெளிவாகச் சொல்லுங்கள்.. ஏம்? ஏவாள் தங்க அரண்மனையில் இருந்து பேசுகிறீர்களா? ரைட். என்ன விஷயம்? என்னது? வாட்? ஒரு நகை கூடவா இல்லை? இல்லையா... எவ்வளவு வால்யூ... ம்.. ம்."

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ரிசீவரை எறிந்தார்.

"ஏவாள் தங்க அரண்மனையை எவனோ ஒருத்தன் பூட்டைத் திருடி கொள்ளையடித்து விட்டானாம். இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் காலியாம். கவுன்டர்களையெல்லாம் துப்புரவாகத் துடைத்து விட்டுப் போயிருக்கிறானாம். 784. எஸ்.ஐயைக் கூப்பிட்டு இந்த ஆளை மாஜிஸ்ரேட் கோர்ட்டிற்கு கூட்டிப் போகச் சொல். நான் ஏவாள் தங்க அரண்மனைக்குப் போகிறேன்" என்று இன்ஸ்பெக்டர் பால்ராஜ் புயலாகப் பாய்ந்தார்.

நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன்.

ஏவாள் தங்க அரண்மனையில் கை வைத்துத் திருடிய திருடன் அவர் எதிரிலேயே இருப்பதை அறியாமல் எங்கோ, எதையோ கண்டு பிடிக்கப் பாய்ந்து ஓடும் அவரைப் பார்த்தால் சிரிப்பு வராமல் என்ன வரும்?

எழும்பூரில் இருக்கும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்கு அழைத்துப் போனார்கள். பெரிய காம்பவுண்ட் சுவர் வளைந்திருந்த பிரேதசத்தில் மரங்கள். அவை உதிர்த்த சருகு இலைகள். மண் தரை. சிறு கற்கள். ஒரு பக்கம் குவித்து வைக்கப்பட்டிருந்த ஜல்லி. வரிசையாக கார்களும்



பைக்குகளும் நிற்க வைக்கப்பட்டிருந்த அந்த இடத்தில் என்னை ஏற்றி வந்த போலீஸ் லாரியும் வந்து நின்று கிர்ரக், கிர்ரக் என பன்றிபோல் உறுமியது. லாரியில் பாதி பேர் சக கைதிகள். மீதி பேர் துப்பாக்கி தூக்கிய போலீஸ்காரர்கள். ஃபைல் வைத்திருந்த போலீஸ்காரர்கள்.

என்னை மற்றவர்களோடு நடத்திச் சென்று ஒரு ஹாலில் நிற்க வைத்தார்கள். பிரிட்டிஷ் காலத்து சாட்சிக் கூண்டு ஒன்று இருந்தது. மாஜிஸ்ட்ரேட் நாற்காலிக்குப் பின்னால் சைட் போஸில் மகாத்மா காந்தி சிரித்தார். என்னுடன் வந்த கைதிகள் தினப்படி காரியம் போல அங்கே போடப்பட்ட பெஞ்சுகளில் உட்கார்ந்து கொண்டார்கள்.

ஒரு குதிரை லாட வடிவில் இருந்த மேஜையைச் சுற்றிலும் லாயர்கள். ஒரு லாயர் கறுப்பு கவுனை மாட்டிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

பெஞ்சு கிளார்க் வந்தார். எல்லோரும் எழுந்து கொள்ள மாஜிஸ்ட்ரேட் வருகை எனக்குப் புரிந்தது. தனது இருக்கையில் அமர்ந்தார்.

பெஞ்சு கிளார்க் ஒரு பைலைப் புரட்டி, காகிதங்களை எச்சில் தொட்டுத் திருப்பிப் பார்த்து, "மணிகுமார்" என்று அழைக்க, அட நான்தான் முதல் வழக்கு.

நான் சாட்சிக் கூண்டில் ஏறினேன்.

"என்ன?"

"சார் போதையில் பாரில் கலாட்டா" என்றார் பெஞ்சு கிளார்க்.

மிலாட், யுவர் ஆனர் எல்லாம் வக்கீல்களுக்கென குத்தகை விடப்பட்ட வார்த்தைகள் போலும்.

"ஏன் கலாட்டா செய்தாய்?"

“இல்லை சார்... மிலாட்... யுவர் ஆனர்... பாரில் வந்து என்ன நடந்ததென்றால்...” என்று நான் ஆரம்பித்தேன்.

மாஜிஸ்ட்ரேட் கையமர்த்தினார்.

பெஞ்ச் கிளார்க் அபராதத் தொகையைச் சொன்னார்.

“இருநூறு ரூபாய்.”

நான் கூண்டை விட்டு இறங்கினேன். பணம் வசூல் பண்ணிக் கொண்டிருந்த ஒரு கிளார்க்கிடம் போய் பணத்தைக் கட்டினேன்.

வெளியே விடப்பட்டு விட்டேன்.

நான் ஃப்ரீ.

அங்கே ஏவாள் தங்க அரண்மனையை ஸாரா காலி செய்து விட்டாள். பால்ராஜ் இந்நேரம் கடையில் உட்கார்ந்து தடயங்களைத் தேடிக் கொண்டிருப்பார். என் வேலை என்று கம்ப்யூட்டர் சொல்லும். ஆனால் நான் ஜெயிலில், லாக் - அப்பில் இருந்ததால் என்னை யாரும் சந்தேகப்பட முடியாது. புதுக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு எளிதான வேலை இல்லை. சவாலான வேலை.

நகைகள் எல்லாம் இந்நேரம் ஸாராவிடம் பத்திரமாக இருக்கும்.

என் ஒரே வேலை. ஸாராவை நோக்கிப் போவது. அவளோடு சேர்ந்து கொள்வது. நகைகளை எல்லாம் கொண்டு போய் உருக்குவது. விற்பது. பணக்காரனாவது. கரன்ஸி வாசனையுடன் காலத்தைக் கழிப்பது.

ஹூர்ரே!

எச்சரிக்கையுடன் நடந்தேன். என்னை யாராவது பின் தொடர்கிறார்களா? இல்லை. ஜாக்கிரதை. ஜாக்கிரதை. ஒரு அடி கூட தப்பாக எடுத்து வைத்து விடாதே.



எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி டிராவலிங் அலுவலகங்களும், லாட்ஜ்களும் நிறைந்த குறுக்குத் தெரு வழியாகச் சென்று அடைந்தேன்.

ஸ்டேஷன் எதிரில் இருந்த வசந்த பவனில் திருப்தியாக டிபன் சாப்பிட்டேன். காபி குடித்தேன். ஒரு பீடாவை மென்று துப்பினேன். சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகைத்தேன். பின் சாலையைக் கடந்து எழும்பூர் ரயில் நிலைய டிக்கெட் கவுண்டரில் டிக்கெட் வாங்கி, படிகளில் ஏறி, இறங்கி எலக்ட்ரிக் ட்ரெயினின் முதல் வகுப்பு, காம்பார்ட்மென்டில் நுழைந்து வசதியாக அமர்ந்து வந்து மாம்பலத்தில் இறங்கினேன்.

பன்னிரண்டு மணி கிட்ட ஆகியிருந்தது. ஸ்டேஷனை ஒட்டியிருந்த மார்க்கெட்டில் கூட்டம் குறைந்திருந்தது. ரங்கநாதன் தெரு பாத்திர, துணிக்கடைகளை நோக்கி அத்தனை கூட்டமும் படையெடுத்துக் கொண்டிருக்க, நான் ஸாராவின் வீட்டை நோக்கி நடந்தேன்.

ஸாராவின் வீடு இருந்த தெருவில் திரும்பினேன்.

அதிர்ந்து போனேன்.

காரணம் - ஸாராவின் வீடு அங்கே இல்லை. சுத்தமாக இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டிருந்தது. சின்னச் சின்ன செடிகள் எல்லாம் காலி.

காம்பவுண்ட் சுவர் மட்டும் இருந்தது. அதன் பின்னால் ஒரு போர்டு புதிதாகச் செருகப்பட்டு, அந்த இடத்தில் கட்டப்படவிருக்கும் டீலக்ஸ் ஃப்ளாட்களை வாங்க விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியும் தொலைபேசி எண்ணும் இருந்தது.

என்ன இது?

பூதத்தின் மேலிருந்த ஆதிக்கம் போனதால் திடீரென்று மாட மாளிகை, கூட கோபுரம், அராபிய பணிப் பெண்

அழகிகள், திராட்சை ரசக் கோப்பைகள் என சகலத்தை இழந்து பாலைவனத்தின் நட்ட நடுவில் நின்ற அலாவுதீன் போல் உணர்ந்தேன்.

ஸாரா ஏமாற்றி விட்டாள்.

கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மதி மயக்கிய ஸாரா இல்லை.

என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்?

மயங்கிக் கீழே விழாமல் இருந்ததே ஒரு அதிசயம் தான்.

ஸாரா. இது நியாயமா? என்னுள் மூர்க்கம் மூண்டது.

சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒரு பப்ளிக் தொலைபேசி பூத் இருந்தது. அதன் வாசலில் பார்வையற்ற ஒருவன் உட்கார்ந்து தடவித் தடவி இரண்டு ரூபாய் நாணயங்களையும், ஒரு ரூபாய் நாணயங்களையும் பிரித்துக் கொண்டிருந்தான்.

அவன் கூட ஏமாறுவதில்லை.

நான் ஏமாந்திருக்கிறேன். ஏமாளிகளின் ராஜா.

என் வாழ்க்கை கரன்ஸி வாசனையுடன் இருக்கப் போகிறது என்று தீர்மானமே செய்து விட்ட ஏமாளிச் சக்கரவர்த்தி.

ஜெயிலின் களி வாசனையுடனும், சக கைதிகளின் மூத்திர நாற்றத்துடனும் இருந்தால் கூடப் பரவாயில்லை. போலீசில் நடந்தது யாவற்றையும் சொல்லி விடுவது தான் சரி. ஸாராவை மடக்கி அவள் கைகளிலும், கால்களிலும் செயின் கட்டி சாட்டை எடுத்து விளாசு விளாசு என்று விளாசி அவளது உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் புண்ணாக்க வேண்டும் போல் ஒரு வெறி எழுந்தது.

நான் அந்த பப்ளிக் தொலைபேசிக் கூண்டை நோக்கி நடந்தேன்.

கதவருகே அமர்ந்திருந்தவனிடம் ஒரு லோக்கல் ஃபோன் பண்ணுவதாகச் சொன்னேன். டைரக்டரியைப் புரட்டினேன்.



போலீஸ் ஸ்டேஷன்களில் தி.நகர் போலீஸ் ஸ்டேஷன் நம்பரைத் தேடினேன். கிடைத்தது.

உள்ளே நுழைந்தேன்.

கிங், கிங் என்று ஒவ்வொரு எண் அழுத்தலுக்கும் அந்தத் தொலைபேசி ஒரு எலக்ட்ரானிக் இசையை எழுப்பியது.

குக், குக், குக்.

காத்திருந்தேன்.

"ஹலோ" என்று தொடங்கி தி.நகர் போலீஸ் ஸ்டேஷன் நம்பர் சொல்லி 'தி.நகர் போலீஸ் ஸ்டேஷன்' என்று ஒரு பணிவான போலீஸ் குரல் பதில் அளித்தது.

"இன்ஸ்பெக்டர் பால்ராஜ்?" என்று கேட்டேன்.

"நீங்கள் யார் பேசுகிறீர்கள் சார்?"

"அவர் நண்பன்."

"ஐயா இப்போது ஒரு முக்கிய வேலையாக வெளியே போயிருக்கிறாரே சார். என்ன மேட்டர் சார்?"

"அவர் இப்போது எங்கே போயிருக்கிறார் என்று எனக்குத் தெரியும். ஏவாள் தங்க அரண்மனையில் நடந்த திருட்டைப் பற்றி விசாரிப்பதற்குத்தான் போயிருக்கிறார். அது பற்றி என்னிடம் ஒரு முக்கியமான தகவல் இருக்கிறது! அதைச் சொல்ல வேண்டும்..."

"சொல்லுங்கள் சார்..."

அந்த நேரம் பார்த்து பூத்தினுள் ஒரு பெண் நுழைந்தாள். கண்ணாடிக் கதவைத் திறந்து அவள் உள்ளே நுழைந்து என் எதிரிலேயே டெலிபோனைத் துடைத்தாள். அந்த வாசனை கும்மென்று பரவியது.

"நான் இன்ஸ்பெக்டர் பால்ராஜிடம்தான் பேச வேண்டும்."

''ஒரு நிமிஷம் சார். சாருக்கு ஒரு செல்போன் இருக்கிறது. அந்த நம்பரைத் தருகிறேன். அதில் நீங்கள் தொடர்பு கொள்ள லாம். கொஞ்சம் லைனிலேயே வெயிட் பண்ணுங்கள்.''

மறுமுனையில் பேப்பர்களின் சலசலப்பு கேட்டது.

இங்கே அந்தப் பெண் நான் பேசாமல் ரிசீவர் வைத்திருப் பதைப் பார்த்து விட்டு ரிசீவரைத் துடைப்பதற்குக் கேட்டாள்.

கொடுத்தேன். துடைத்தாள்.

அவள் செய்கையையே நான் பார்த்துக் கொண்டிருந் தேன்.

அவ்வளவு அருகில் அவள் வாசனையாக இருந்தது ஒரு மாதிரி கிறுகிறுப்பாய் இருந்தது. செதுக்கியது போல் உடம்பு. அந்த உடம்பை இறுக்கிப் பிடிப்பது போல் அவள் புடவை கட்டி, ரவிக்கை அணிந்திருந்தது இன்னொரு ப்ளஸ் பாயிண்ட்.

துடைத்து விட்டு ரிசீவரை நீட்டினாள். ரிசீவர் மணமாக இருந்தது. என் முகத்தின் மலர்ச்சியை அவள் கவனித்தாள்.

''வாசனை நன்றாக இருக்கிறது இல்லை?'' என்று கேட்டாள்.

''ஆம். இந்த இடத்தை வாசனையாகச் செய்து விட்டீர்கள். தாங்க்ஸ்'' என்றேன்.

''இந்த வாசனையை முகர்ந்து பாருங்கள். இன்னும் சூப்பராக இருக்கும்'' என்று சொல்லிவிட்டு ஹாண்ட் பேகில் இருந்த ஒரு சென்டட் பேப்பர் நாப்கினை எடுத்துக் கொடுத் தாள்.

அதைக் கையில் வாங்கி மூக்கருகில் வைத்து முகர்ந்தேன்.

'ஆஹா' என்று அதை அனுபவிப்பதற்குள் எதிர் முனை போலீஸ்காரர் 'ஹலோ' என்றார்.



பதில் சொல்லத்தான் முயன்றேன்.

முடியவில்லை.

அப்படியே ரிசீவரை விட்டு விட்டு அந்த பூத்தில் சரிந் தேன்.

யாரோ என்னைத் தாங்குவது போல் உணர்வதற்குள் சுத்தமாக ப்ளாக்-அவுட் ஆகி விட்டேன்.

## 13

கண்களின் பாப்பாக்கள் அசைந்தன. ஸாரா எனக்கு வெண் சாமரம் வீசி அகன்றாள். அந்த டெலிபோன் துடைக்கும் பெண் தன் மார்பில் என்னைச் சாய்த்துப் பிடித்துக் கொண் டாள். ஒரு நாய் என் முகத்திற்கு நேரே வந்து ஒரு காலைத் தூக்கி, சர்ர் என்று...

கண் விழித்தேன். சட்டென்று தெளிவாகினேன்.

என் நிலைமை புரியவில்லை. எங்கே இருக்கிறேன் என்பது தெரியவில்லை. கட்டிலில் படுத்துக் கிடந்தேன். விதானத்தில் பார்வை படிந்தது. சீலிங்கில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. உயரமான சீலிங்.

என் முகத்திற்கு நேரே ஒரு முகம் வந்தது. குனிந்து, அகன்ற விழிகளால் என்னைப் பார்த்தது. அது ஒரு போலீஸ் முகம். அணிந்திருந்த ஸ்டாரை, தொப்பியைப் பார்த்தால் சப்-இன்ஸ்பெக்டர் என்று தெரிந்தது.

விலுக் என்று எழுந்து அமர்ந்தேன்.

அது ஒரு அகலமான படுக்கை அறை. எங்கிருந்தோ ஏ.ஸியின் குளிர் காற்று கொட்டிக் கொண்டிருந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் சிரித்தான். இளைஞன்.

சிரிக்க முயன்றேன்.

''எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டான்.

தலையை அசைத்தேன் நான் எங்கே இருக்கிறேன்? இது யார் அறை? யார் வீடு? மாம்பலம் ரயில் நிலையம் அருகில் இருக்கும் ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்தில் ஏதோ ஒரு வாசனையை முகர்ந்து மயங்கி விழுந்தவன் இங்கே எப்படி வந்து சேர்ந்தேன்?

கதவு திறந்து சூடாக ஏதோ ஒரு பானம் வந்து சேர்ந்தது.

சூடான பானத்தைக் கொண்டு வந்தது ஒரு வேலைக்காரி. அது காபி என்று டம்ளர் அருகில் வரவரப் புரிந்து போனது.

''குடி.''

எனக்கு அது தேவையாக இருந்தது. அதனுள் விஷமே கலக்கப்பட்டிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. குடித் தேன். கொஞ்சம் தைரியம் வந்தது.

''மணிகுமார். என் பெயர் தேவதாஸ். சப்-இன்ஸ்பெக்டர். உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். அதிர்ச்சியாய் இருக்கும். யோசனையாய் இருக்கும். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே புரியாத புதிராக இருக்கும். யாவற்றையும் தெரிந்து கொள்ள ஆசையாய் இருக்கும். ஸாரா மேல் கோபமாக இருக்கும். அவளைச் சவுக்கால் அடிக்க வேண்டும் போல் இருக்கும். ஏவாள் தங்க அரண்மனையில் திருடிய நகையெல் லாம் எங்கே போயிற்று என்ற கேள்வி இருக்கும்...''

அந்த சப்-இன்ஸ்பெக்டர் அறையைச் சுற்றிச் சுற்றி வந்து இந்த மாதிரி அறிக்கைகளாய் விட்டு என் மனநிலையை வெளிப்படுத்தினான்.

''ஆம். ஆம். ஆம்'' என்றேன்.



''விடைகளைச் சொல்கிறேன். கேள். ஏவாள் தங்க அரண்மனை ஒரு பெரிய நகைக்கடை. அதில் சந்தேக மில்லை. என் அப்பாவும், ஸாராவின் அப்பாவும் அண்ணன் தம்பிகள். கூடவே பார்ட்னர்ஸ். ஸாராவின் அப்பா என் னுடைய சித்தப்பா. ஒவ்வொரு நாள் முடிவிலும் கடையைப் பூட்டிச் சாவிகளை எல்லாம் பக்கத்தில் இருக்கும் லாக்கர் கம்பெனியில் கொண்டு போய் வைத்து விடுவார்கள். மறுநாள் காலை இருவரும் போய் இன்னொரு சாட்சியுடன் தான் அந்தச் சாவிகளை எடுத்து வர முடியும். அப்படித்தான் ஆரம்பத்திலிருந்து ஒப்பந்தம். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் கண்டிஷன். எல்லாம் ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்த நேரத்தில் ஒரு பெரிய சிக்கல் வந்தது. சென்னையிலேயே மிகப் பெரிய அரசியல்வாதி ஒருவர் பணம் கொடுக்காமல் கிட்டத்தட்ட கடையில் பாதி நகைகளை அள்ளிக் கொண்டு போய் விட்டார். அது மட்டுமில்லாமல், சித்தப்பாவும், பெரியப்பாவும் சேர்ந்து ஒரு அமெரிக்கன் டயமண்ட் கட்டிங் ஃபாக்டரி தொடங்கினார்கள். அந்த ஃபாக்டரியிலும் நஷ்டம் வந்து விட்டது. மொத்தம் இரண்டு கோடி ரூபாய் நஷ்டம். இந்த நகைக்கடையை நம்பி பொதுமக்கள் டெப்பாஸிட் செய்திருக்கிறார்கள். மும்பை பார்ட்டி தங்கம் கொடுத்திருக் கிறார்கள். மும்பை பார்ட்டியின் பணம் மட்டும் எண்பது லட்சம். பொதுமக்கள் பணம் ஒரு எண்பது லட்சம். ஒரு கோடியே அறுபது லட்சம். பொதுமக்களுடைய பணம் பத்தாயிரம், இருபதாயிரம் என்ற வகையில் இருப்பதால் அதை எப்படியோ சமாளிக்க முடிந்தாலும் மும்பை பார்ட்டிகளின் நெருக்கடியைத் தாங்க முடியவில்லை. அரசியல்வாதியின் பணம் மட்டும் ஒரு கோடி ரூபாய் வர வேண்டும். அமெரிக்கன் டயமண்ட் ஃபாக்டரி நஷ்டம் ஒரு எண்பது லட்சம். ஒரு பக்கம் பெரிய வீடு ஒன்று கட்டி விட்டதால் அதில் ஒரு கோடி முடங்கி விட் டது. அந்த வீட்டை ஒரு கோடி கொடுத்து வாங்க ஆளில்லை. மும்பை பார்ட்டிக்கும், பொதுமக்களுக்கும் பதில்

சொல்லவேண்டும். ஒரு கோடி அறுபது லட்சம் வேண்டும். அப்பாவும், சித்தப்பாவுமாகச் சேர்ந்து மஞ்சள் நோட்டீஸ் கொடுத்து விட்டுத் தற்கொலை செய்து கொள்ளும் ஐடியாவில் இருந்தபோது ஸாரா அமெரிக்காவில் இருந்து படிப்பை முடித்து விட்டு வந்து சேர்ந்தாள்...''

எனக்கு தலை சுற்றியது. ஸாரா பிக்பாக்கெட் செய்யும் தெருப் பொறுக்கி இல்லையா? ஏவாள் தங்க அரண்மனை நகைக்கடையின் சொந்தக்காரரின் பெண்ணா? என்ன இது? என் கதையில் மட்டும் எப்படி இப்படிப்பட்ட திடீர்த் திருப்பம்.

''ஸாராவிடம் நான் யாவற்றையும் சொன்னேன். அவள் ஒரு தைரியமான பெண். உடனடியாக ஸிச்சுவேஷனைப் புரிந்து கொண்டாள். மும்பை பார்டிகளை அப்படி இப்படிப் பேசிக் கொஞ்சம் டயம் வாங்கிக் கொண்டாள். பின் ஏவாள் தங்க அரண்மனையைக் கொள்ளை அடிக்க முடிவு செய்தாள்.''

''என்னது?''

''யெஸ். அவள் மூளை கொஞ்சம் வினோதமாகத்தான் வேலை செய்யும். ஆனால் நாம் யாருமே எதிர்பார்க்க முடியாத ஒரு கோணத்தில் வேலை செய்யும். எப்படிக் கொள்ளை அடிக்கலாம் என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போது...''

''வெயிட்.. வெயிட் உங்கள் கடையை நீங்களே கொள்ளை அடிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?''

''அதற்குக் கடைசியில் வருகிறேன். ஸாரா ஒன்றும் புரியாமல் யோசித்துக் கொண்டிருந்தபோது நீ வந்து மாட்டினாய்.''

''எப்படி?'' என்று கேட்டேன், ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக.

''ஏவாள் தங்க அரண்மனையைப் பார்த்திருக்கிறாயா நீ?''

''யெஸ்.''



''ராத்திரி நேரம் ஒரு கூர்க்கா மட்டும் லத்திக் கழியால் தட்டி விட்டுப் போவான். பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறை.''

''தெரியும்.''

''போலீஸ் பெட்ரோலிங் ஜீப் இரவு 12 மணிக்கு ஒரு முறை வந்து விட்டுப் போகும். அனேகமாக அதில் நான்தான் இருப்பது வழக்கம்.''

''பெட்ரோலிங் ஜீப் வந்து விட்டுப் போகும் என்று தெரியும்.''

''அது தவிர அங்கே எந்தவிதமான காவலும் கிடையாது.''

''ஆம்! நான் கூட ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.''

''அங்கேதான் இருக்கிறது விஷயம். ஏவாள் தங்க அரண்மனைக்கு எதிரே ஒரு கரும்பு ஜூஸ் கடை இருக்கிறது.''

''பார்த்திருக்கிறேன். யானை அளவில் கரும்புச் சக்கை இருக்கும்.''

''தட்ஸிட். அந்த ஜூஸ் கடைக்கு மேல் இருக்கும் ஒரு அறையில் ஒரு வீடியோ காமிரா பொருத்தப்பட்டிருக்கிறது. இரவெல்லாம் அது விழித்திருக்கும். கடை வாசலையே ஃபோகஸ் பண்ணியிருக்கும். அந்தக் காமிராவில் நீ ஏவாள் தங்க அரண்மனைக்கு வந்தது. வாசலை ஒட்டியிருக்கும் இடத்தில் உட்கார்ந்தது, கூர்க்கா வந்தவுடன் குருடனை மாதிரி நடித்தது, அவன் பரிதாபப்பட்டுப் போனவுடன் நீ ரோலிங் ஷட்டருக்குப் போடப்பட்டிருந்த பூட்டுகளில் எல்லாம் மெழுகுக் குச்சியை நுழைத்து லீவர் அமைப்புகளைப் பதிவு செய்து கொண்டது எல்லாம் ரெகார்டு ஆகி விட்டது.''

குப்பென்று வியர்த்து விட்டது. இது பொய். ஸாரா வேறு விதமாகச் சொன்னாள். என்னிடம் பாக்கெட் அடித்துப் பார்த்து அது முடியாமல் போனதால் பெரிய கையாக இருப்பேன் என யூகித்ததாகக் கூறினாள்.

''மை டியர் மணிகுமார். உனக்கு நம்பிக்கை இருக்காது. எனக்குத் தெரியும். ஸாரா உன்னிடம் பிக்-பாக்கெட் அடித்தது. உன் இட்டெலிஜென்ஸை சோதிக்க, உன் ஐ.க்யூ லெவல் என்ன, உன் ரிஃப்ளெக்ஸ் எவ்வளவு வேகத்தில் செயல் படுகிறது போன்றவற்றைக் கண்டு பிடிக்க. இன்னும் நம்ப முடியாவிட்டால் அந்த டி.வி. திரையைப் பார்'' என்று அறை மூலையில் இருந்த ஒரு டி.வி.யைக் காட்டினான்.

பார்த்தேன்.

திரை உயிர் பெற்றது - சப்இன்ஸ்பெக்டர் தேவதாஸ் கையில் இருந்த ஒரு ரிமோட்டை இயக்கியதால்.

திரையில் ஏவாள் தங்க அரண்மனை தெரிந்தது. அதன் வாசல் தெரிந்தது. மார்பிள் ஃப்ளோரிங் தெரிந்தது. நான் தெரிந்தேன். கூர்க்கா தெரிந்தான். என் கூலிங்கிளாஸ் தெரிந்தது. குருடனாக நடித்தது தெரிந்தது. பின் கூர்க்கா விடம் ஊமை பாஷை பேசியது தெரிந்தது. கூர்க்கா நகர்ந்த வுடன் நான் மெழுகுக் குச்சிகளை பூட்டில் ஒவ்வொன்றாகப் பொருத்தியது தெரிந்தது.

வியர்த்து விட்டது. படபடப்பாய் இருந்தது. நகத்தைக் கடித்துக் கடித்துத் துப்பினேன். ஒரு சிகரெட் பிடிக்க வேண்டும் போல் இருந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் தேவதாஸ் ஒரு சிகரெட்டை எடுத்து நீட்டினான்.

''பிடிக்க வேண்டும் போலிருக்கும். பிடி'' என்றான்.

உதட்டில் பொருத்திக் கொண்டு அவனை ஒரு வெற்றுப் பார்வை பார்த்தேன். அவனே ஒரு லைட்டரை க்ளிக்கிட்டு ஜோதியை வரவழைத்து, சிகரெட்டின் நுனியைப் பொசுக் கினான்.

புகை மேகம் நுரையீரலில் பரவிய பின்னர்தான் என் படபடப்பு அடங்கியது.



''மேலே சொல்லவா? வீடியோ இருப்பது இப்போது ப்ரூவ் ஆகிவிட்டதா?''

குப்பையாகத் தலையை அசைத்தேன்.

''அந்த வீடியோவைப் பார்த்து விட்டு ஸாரா என்னைக் கூப்பிட்டாள். எனக்குப் போட்டுக் காட்டினாள். உன்னைப் பற்றி விவரங்கள் சேகரித்துத் தரச் சொன்னாள். உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டேன். சாவி தயாரிப்பதில் உனக்கு நிகர் யாருமில்லை என்பதை கம்ப்யூட்டர் ரிகார்டுகள் உறுதியோடு கூறின. நான் உன் ஃபைலைப் பார்த்தது டிபார்ட் மென்டில் யாருக்கும் தெரியாது. உன்னைப் பற்றி சேகரித்த தகவல்களைக் கூறியதும் ஸாரா அவசரம் அவசரமாக திட்டம் தீட்டினாள். உன் உதவியால் சாவிகளைத் தயாரித்துக் கொள்ள வேண்டியது. உனக்கு ஒரு அலிபையை ஏற்படுத் தித் தருவது. பின் தானே ஏவாள் தங்க அரண்மனையில் நுழைந்து நகைகளை எல்லாம் கொள்ளை அடிக்க வேண் டியது. உன்னைப் போலீஸ்காரர்கள் சந்தேகமே படக்கூடாது என்பதில் அவள் மிகத் தெளிவாக இருந்தாள். அப்போதுதான் ஸாராவை போலீசால் கண்டு பிடிக்க முடியாது. அவள் புதுக் குற்றவாளி. ஃபைல் இல்லாத குற்றவாளி என்பதால், அதற் காகத்தான் உன்னை அவள் முதலில் சோதனை செய்தாள். பின் உன்னை வரவழைத்தாள். ஐம்பது, ஐம்பது என்று பேரம் பேசினாள். நீ ஒத்துக் கொண்டாய்.''

''எல்லாம் சரி. உங்கள் கடை நகைகளை நீங்களே கொள்ளையடித்து விட்டு உட்கார்ந்திருக்கிறீர்களே. அதனால் என்ன பிரயோஜனம்?''

''நிறைய இருக்கிறது! ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல் கடையில் ஷோவுக்கு வைக்கப்பட்டிருக்கும் நகைகள் எதுவும் ஒரி ஜினல் நகை கிடையாது. மும்பையிலிருந்து இங்கே விற் பனையாகும் மாடல்களை வைத்துத் தயாரிக்கப்பட்டு வர வழைக்கப்பட்டவை. அது நடந்து ஒரு வருடம் ஆகிறது. எல்லா சைஸிலும், எல்லா வெயிட்டிலும் அந்த மாதிரி

நகைகளைப் பண்ணி வைத்து விட்டோம். ஏனென்றால் எங்களிடம் தங்கம் இல்லை என்பதால் ஒரு கஸ்டமர் வந்து பார்த்து ஒரு நகையைத் தேர்ந்தெடுத்தவுடன், கஸ்டமர் பில்லைக் கொடுத்து விட்டு வருவதற்குள் நாங்கள் மார்க் கெட்டில் இருந்து அதே போல், அதே வெயிட்டில் இருக்கும் நகையைக் கொண்டு வந்து விடுவோம். கஸ்டமர் பணம் கொடுத்தவுடன் அந்தப் பணத்தைக் கொண்டு போய் நாங்கள் நகை வாங்கிய கடையில் கொடுத்து விடுவோம். அந்த டிரான்ஸாக்ஷனில் லாபம் நிறைய இல்லை. ஆனால் நாங்கள் மார்க்கெட்டில் நிலைத்து இருக்க எங்களுக்கு வேறு வழி இல்லை. ஸோ, கவுண்டர்களில் இருந்தவை அத்தனை யும் டூப்ளிகேட் சரக்கு. ஸாரா அவற்றைக் கொண்டு வந்து விட்டாள். அவற்றை உருக்கினால் பத்தாயிரம், இருபதாயிரம், அதிக பட்சம் ஐம்பதாயிரம் கிடைத்தால் அதுவே அதிகம். ஆனால் நகை திருடு போய் விட்டது. போலீஸ் நாய்களை எல்லாம் எப்படிக் குழப்புவது என்று எனக்குத் தெரியும். அதனால் அந்த முன்னேற்பாடும் பண்ணியாகி விட்டது. இனி இன்ஷூரன்ஸ் க்ளெய்ம் ஒன்றுதான் மிச்சம். க்ளெய்ம் பண்ணுவதற்கான ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் ஆரம்பித்து விட்டோம். நான்கு கோடி ரூபாய் வரும். மும்பை பார்ட்டியை சமாளித்து விடலாம். மறுபடி ஒரிஜினல் நகைகளை வைத்துக் கொண்டு பழையபடி பிஸினஸை ஆரம்பித்து விடலாம். என் அப்பாவும், அவள் அப்பாவும் இன்ஸால்வென்ஸி நோட்டீஸ் கொடுக்க வேண்டாம். தற்கொலை செய்து கொள்ள வேண் டாம். இந்த மாதிரி ஏற்றத் தாழ்வுகளை எதிர்கொள்ள வேண் டாம் என்றுதான் நான் போலீஸ் வேலையில் சேர்ந்து விட்டேன்.

ஐ.பி.எஸ். பாஸ் செய்து ஸூப்ரடென்ட் ஆஃப் போலீஸ். ஏ.ஸி., டி.ஸி என்று என் போலீஸ் வாழ்க்கை அதிகாரத்துடன் கூடிய நிம்மதியான வாழ்க்கையாக இருக்கும். நீதான் அவசரப் பட்டு விட்டாய். ஸாரா உன்னை ஏமாற்றி விட்டதாக எண்ணி



போலீசுக்கு போன் செய்யத் தொடங்கி விட்டாய். அதனால் தான் அந்தப் பெண்ணை அனுப்பி அவளிடம் மயக்க மருந்து நனைத்த பேப்பர் நாப்கினைக் கொடுத்து உன்னை மயக்கி இங்கே அழைத்து வந்து விட்டோம். அந்த வீடு இருந்த இடம் எங்கள் இடம்தான். மார்க்கெட்டில் யாருக்கும் தெரியாது. அது நாங்கள் எல்லாம் மெட்ராஸ் வந்தப் புதிதில் வாங்கிய வீடு. அந்த வீட்டுக்கான காரியம் முடிந்து விட்டது. நாளைக்கு போலீஸ் அந்த வீட்டை மோப்பம் பிடித்து வரக்கூடாது என்பதால்தான் இரவோடிரவாக இடித்து விட்டோம். அந்த போர்டு எங்களுடைய பினாமி கம்பெனிகளில் ஒன்று. வெளியே தெரியாது. அதில் வேலை செய்யும் இன்ஜி னீயர்கள் அந்த இடத்தில் ஃப்ளாட் கட்டுவார்கள். விற்பார் கள். அது வேறு. அத்தியாயம் முடிந்து விட்டது. இனி... ப்ரஸென்டிங் மை டியர் ஸிஸ்டர் ஸாரா டு யூ'' என்று சொல்லிவிட்டு நாடகத்தனமாக குனிந்து நிமிர்ந்து ஒரு முறை கைகளைத் தட்டினான்.

அறையில் ஸாரா நுழைந்தாள் - முற்றிலும் புதிய பெண் ணாக.

நான் மறுபடியும் மயங்கினேன்.

## 14

ஸாரா மயக்கம் தெளிவித்து என்னை அணைத்துக் கொண்டபோது தேவதாஸ் அங்கே இருக்கப் பிரியமில்லாமல் அகன்று விட்டான்.

''நிறைய சஸ்பென்ஸை கொடுத்துவிட்டேன் இல்லை?'' என்று ஸாரா கேட்டாள்.

''ஆம்!'' என்றேன். ''இப்போது கூட எனக்கு ஆச்சரியம் அகலவில்லை.''

''என்ன ஆச்சரியம்?''

''இவ்வளவு பெரிய கையாக இருந்து கொண்டு என்னை நீ இன்னும் காதலிப்பது. என்னையே கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாகச் சொல்வது.''

''யெஸ். அமெரிக்காவில் கூட என்னை செக்ஸ் பார்வை யோடு தான் பார்த்தார்கள். இங்கேயும் அப்படித்தான். என்னை அந்த மாதிரி பார்க்காததால் தான் எனக்கு உன் மேல் ஆசை ஏற்பட்டது. என்னை இந்த மெட்ராஸில் யாருக்கும் தெரி யாது. எனவே ஏவாள் தங்க அரண்மனைச் சொந்தக்காரரின் பெண்ணாக ஸொஸைட்டியில் அறிமுகமாகும்போது திருடி ஸாரா நான்தான் என்று யாருக்கும் சந்தேகம் வராது. நீ என் கணவனாக மாறி விடப் போகிறாய். நீயும் சந்தேகத்திற் குட்படப் போவதில்லை... பேச்சு வேண்டாமே...''

''வேறு என்ன வேண்டும்?''

''ஒத்தடம்.''

''எங்கே?''

''என் உதடுகளில். உன் உதடுகளால்.''

அமெரிக்கன் ரிட்டர்ன் இல்லையா? அப்படித்தான் பேச்சு இருக்கும்.

ஆனாலும் மனைவி சொல்லே மந்திரம் பாருங்கள். எனவே ஒத்தடம் கொடுக்கத் தொடங்கினேன்.

# தொடரும் சதி

## 1

பஸ் குலுக்கலுடன் நின்றது.

டீசல் புகையும், செம்மண் தூசியும் அடங்குவதற்குள் இறங்கிய பயணிகளில் ரவீந்தர் உயரமாயிருந்தான்.

இருபது வயது. இளமையின் வாளிப்பு கன்னச் சதைகளில் தெரிந்தது. தோளில் போட்டிருந்த பையை அலட்சியமாக எடுத்து சுழற்றியபடி நடந்த போது அதில் வாலிபத்தின் திமிர் இருந்தது.

தார் சாலையிலிருந்து சரிந்து இறங்கிய செம்மண் பாதை யில் அவன் கிட்டத்தட்ட ஓடி இறங்கினான். மரத்தடியில் உட்கார்ந்திருந்த ஆட்டுக்குட்டியைத் தூக்கி ஒரு சுழற்று சுழற்றி இறக்கி விட்டான். எம்பிக் குதித்து ஒரு கிளையை உடைத்து மண்ணைத் தட்டிக் கொண்டே நடந்தான்.

வீடு வந்து விட்டது.

ரவீந்தர் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே, கிணற்றுக்கு நகர்ந்தான்.

* * *

கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தார் செங்கோடன்.

தோட்டத்துக் காற்று சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருந்தது. செங்கமலம் கதவு திறந்து வாசல் நிலைப்படியில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

"அப்பா, என்னவோ சொல்லப் போறேன்னு சொல்லிக் கூப்பிட்டீங்க?" ரவீந்தர் கட்டிலில் உட்கார்ந்து அவருடைய எலும்பு விரல்களை தன் உள்ளங்கைகளுக்குள் பொத்தியிருந்தான்.

செங்கோடன் தொண்டையை செருமிக் கொண்டார்.

நிமிர்ந்து கறுப்பு வானத்தையும், சிதறியிருந்த நட்சத்திரக் கண்ணாடிச் சில்லுகளையும் பார்த்தார். அவருடைய தயக்கம் ரவீந்தருக்கு ஆச்சரியமாயிருந்தது.

"சொல்லுங்கப்பா..."

"நீ அப்பா, அப்பான்னு கூப்புடறியே... நான் உன் அப்பா இல்ல தம்பி..."

"அப்பா!"

"நெசந்தான். நீ படிச்சு முடிக்கற வரைக்கும் இந்த ரகசியத்தைச் சொல்றதில்லைன்னு நெஞ்சுக்குள்ளேயே பூட்டி வச்சிருந்தேன்...."

ரவீந்தர் கண்களில் குழப்பம் வலை பின்னியது. அவருடைய கையை விட்டு விட்டு செங்கமலத்தின் அருகில் போய் மண்டியிட்டு அமர்ந்தான். குனிந்திருந்த அவளுடைய தலையை முகவாய் பற்றி நிமிர்த்தினான்.

"அம்மா, அப்பா என்னம்மா பேத்தறாரு?"



செங்கமலம் பதில் சொல்லாமல் புடவைத் தலைப்பால் வாயில் பொத்திக் கொண்டாள். மௌனக் கண்ணீர் கன்னங்களில் வரி இறக்கியது.

"அம்மா?"

"தம்பீ... நீ இங்க வா..." செங்கோடன் பிடித்து இழுத்தார். "தம்பி... உன் மனசை நோகடிக்கணும்னு எனக்கோ இவளுக்கோ ஆசையில்ல தம்பி. உன்னைப் பிரிஞ்சு இருக்கறதை நாங்க கற்பனை பண்ணிக்கூட பாத்ததில்லை. ஸ்கூல் முடிச்சவுடனே, உன்னைக் கட்டாயப்படுத்தி டவுன் காலேஜுக்குப் படிக்க அனுப்பினதே அதுக்காகத்தான் தம்பி. நாலு வருஷம் நீ விடுதில தங்கிப் படிச்சப்ப... நீ இல்லாத இந்த வீட்டுல நாங்க வாழப் பழக்கிக்கிட்டோம். எதுக்கு? நாளைக்கு நீ எப்படியும் எங்களை விட்டுட்டு மொத்தமா பிரிஞ்சு போகப் போறவன் தானேன்னு தான்..."

"என்னப்பா உளர்றீங்க?"

"உன் அப்பா பேரு ஜகன்னாதன். ரயில்வேயில வேலை பாத்திட்டிருந்தாரு..."

"விவரமெல்லாம் வக்கீலையா சொல்லட்டுங்க..." என்றாள் செங்கமலம், கனத்த குரலில்.

"வக்கீலா, யார் அது?"

"உன் அப்பாவுக்கு ஒண்ணுவிட்ட தம்பி, கோயமுத்தூர்ல இருக்காரு"'

"என்னப்பா, என்னென்னவோ புதுக்கதை சொல்றீங்க?"

"கதை மாதிரி தாம்ப்பா ஆயிடிச்சி... நாளைக்கு விடிஞ்சவுடனே மொத பஸ் பிடிச்சு நாம அங்கே போறோம்."

"'அதுவரைக்கும் சஸ்பென்ஸா?"

"செங்கமலம்...?"

"சரி சொல்லுங்க... பாவம் தம்பி... இந்த விஷயத்தை யெல்லாம் எதிர்பார்த்திருக்காது..."

செங்கோடன் தன் வற்றிய மார்பு குலுங்க இருமினார். மேல் துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டார். சொல்லத் துவங்கினார்.

"இது நடந்தப்போ உனக்கு மூணு வயசு...."

* * *

அது நடந்த போது ரவீந்தருக்கு மூன்று வயது.

ரயில் பிரயாணம் ஜாலியாக இருந்தது அவனுக்கு. ஜன்னல் வழியே விரையும் மரங்களும், மலைத் தொடர்களும் ஆச்சரிய சந்தோஷமாயிருந்தன.

"டேய், ஜன்னல்ல கையை வச்சுக்காத... நம்ம ரயிலைப் பத்தி எதுவும் சொல்ல முடியாது. திடீர்னு கதவு கையில விழுந்தாலும் விழுந்துடும்..."

இரண்டு கையிலும் ஆங்கில தினசரியைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்த அப்பா ஜகன்னாதன் சற்றே பேப்பரை இறக்கி எச்சரித்துவிட்டு மறுபடியும் பேப்பரில் மூழ்கினார்.

ஆரஞ்சு பழத்தை உரித்துக் கொண்டிருந்த அம்மா எழுந்து வந்து எதற்கு வம்பு என்று அவன் கையை, விலக்கி ஜன்னல் கதவை இறக்கித் தாளிட்டார். அவனை அப்படியே மடியில் சாய்த்துக் கொண்டாள்.

ரயிலின் தாலாட்டு, அம்மாவின் மெத்தென்ற ஸ்பரிசம், மூடாத எதிர் ஜன்னலின் காற்று எல்லாமாக சேர்ந்து இமைகளை இழுத்தன. சுருண்டு கொண்டான். தூக்கம் மெல்ல சூழ்ந்தது.

"பேப்பர் படிச்சிட்டுத் தரீங்களா?".

எதிர்சீட்டில் உட்கார்ந்திருந்தவன் கேட்டான். இருபத்தைந்து வயது இருக்கலாம். உடம்பு திண்ணென்றிருந்தது.



போட்டிருந்த மெல்லிய பனியன் சட்டை மார்பின் வீர்யத்தில் எலாஸ்டிக் போல் நீண்டிருந்தது. கொழுத்த முகம், சிறிய கண்கள், நெற்றியில் வரிவரியாய்க் கோடுகள்.

ஜகன்னாதன் பேப்பரை மடித்து அவனிடம் நீட்டினார்.

"தாங்க்ஸ்..." என்று வாங்கிக் கொண்டான்.

மனைவி மடியில் தூங்கிவிட்ட குழந்தையை மெல்ல விலக்கி மேல் பர்த்தில் படுக்க வைத்தார் ஜகன்னாதன்.

அந்த முதல் வகுப்பு கூப்பேயில் அவர்கள் மூவர் மட்டுமே இருந்தனர். இன்னொரு டிக்கெட்காரர் வரவில்லையா அல்லது அடுத்த ஸ்டேஷனில் ஏறுவாரா என்பது பற்றி சிறிது நேரம் யோசித்து விட்டு ஓய்ந்து விட்டார் ஜகன்னாதன்.

ரயில் வேகம் பிடித்திருந்தது.

யாரோ சாத்திய கதவைத் தட்டினார்கள்.

ஜகன்னாதன் எழுந்தார். கதவைத் திறந்தார். உடன் அரண்டார்.

அவர் மார்பு மீது கை வைத்து அவரை உள்ளே உந்தித் தள்ளிக் கொண்டு நுழைந்தவன் ஆறடி உயரமிருந்தான். அடர்த்தியான கருமுடி, கண்களில் சிவப்பு.

அவன் நுழைந்த வேகத்திலேயே எதிர்சீட்டு இளைஞனின் கைகளிலிருந்து, பேப்பரைப் பிய்த்து பிடுங்கி எறிந்தான்.

"விக்ரம்!" எதிர் இளைஞனின் பார்வையில் அதீத கிலி வந்தது. கைகளை ஊன்றி எழுந்திருக்க முனைந்தான்.

விக்ரம் என்று அழைக்கப்பட்டவன் அவன் தலைமுடியைப் பற்றி எழுப்பினான். "தப்பித்து விடலாம் என்று பார்த்தாயாடா ராஸ்கல்?" என்றான். அவன் கையில் எப்போது கத்தி முளைத்தது என்று யோசிக்குமுன், கத்தி அந்த இளைஞனின் கழுத்தை சீவியது.

குபுக் என்று ரத்தம் குமுறி வெளியே பாய்ந்தது. தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் மீது கூட கொஞ்சம் தெளித்தது.

ஜகன்னாதனுக்கு நடந்தது புரிய அரை வினாடி நேரம் ஆயிற்று.

விக்ரம் என்றழைக்கப்பட்டவன் கத்தியை மறுபடியும் இழுத்தான்.

எதிர்சீட் இளைஞன் அறுத்த வாழை போல் விழுந்து சீட்டை சிகப்பாக நனைக்க ஆரம்பித்தான்.

ஜகன்னாதனின் மனைவிக்கு பயத்தில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

விக்ரம் அவர்கள் பக்கம் திரும்பினான்.

''என்னைக் காட்டிக் கொடுத்தீங்க, அதோட உங்க ஃபேமிலியே க்ளோஸ்'' என்றான். கதவை இழுத்து சாத்திக் கொண்டு வெளியேறினான்.

ஜகன்னாதன் உணர்வுகளுக்கு திரும்ப இரண்டு முழு நிமிடங்கள் வீணாயின. அவருடைய மனைவி அங்கேயே சரிந்து மயக்கமாகியிருந்தாள்.

ஜகன்னாதன் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்.

* * *

இன்ஸ்பெக்டரின் மீசை முரட்டுத்தனமாய் இருந்தது.

''உங்க பேரு?''

''ஜகன்னாதன்...''

''எங்க போயிட்டு வர்றீங்க?''

''கோயமுத்தூருக்கு...''

''யார் யார் போயிருந்தீங்க?''

''நான், என் ஒய்ஃப், மூணு வயசுப் பையன் ரவீந்தர்...''

''எதுக்குப் போயிருந்தீங்க?''



''என் மகளுக்கு ஸ்கூல் முடிஞ்சு வெகேஷன் ஆரம்பிச்சிருந்தது. கொண்டு போய் அவங்க பாட்டி வீட்ல விட்டுட்டு திரும்பிட்டிருந்தோம்.''

''ரயில்ல உங்க மக வரல்லை?''

''வரலை...''

''என்ன நடந்தது, கரெக்டா சொல்லுங்க...''

''ஈரோடு கிட்ட வந்திட்டிருந்தப்போ, ஒருத்தன் கதவைத் தட்டி நுழைந்தான். என் பொண்டாட்டியும், குழந்தையும் மேல் பர்த்ல தூங்கிட்டிருந்தாங்க. நான் பேப்பர் படிச்சிட்டிருந்தேன்... நொழைந்தவன் நேரே எதிர்ல இருந்தவன் மேல பாய்ஞ்சு கத்தியால வெட்டிட்டு போயிட்டான்...''

''அவனை நல்லாப் பார்த்தீங்களா?''

பதில் சொல்லாதீங்க என்று அவருடைய மனைவி இன்ஸ்பெக்டருக்குப் பின்புறம் நின்று சைகையால் மன்றாடினாள்.

''பாத்தேன்...''

''எப்படியிருந்தான்?''

''உசரமா இருந்தான். பெரிய பெரிய கண்ணு... கன்னத்துல வெட்டுத் தழும்பு இருந்தது...''

அவருடைய மனைவி அதிர்ச்சியில் வாயடைத்து நின்றாள். ஜகன்னாதனின் தைரியம் அவளை அச்சுறுத்தியது.

''வெட்டிட்டுப் போற வரைக்கும் நீங்க பாத்துட்டிருந்தீங்களா?''

''அவன் கையில் கத்தி இருந்தது. ரொம்பக் கோபமா இருந்தான். தடுத்தா என் கழுத்தையும் இளநி சீவறப்பல சீவியிருப்பான்... கடமை தவறக் கூடாதுன்னு அவன் வெளியே போனதும் சங்கலியைப் பிடிச்சு இழுத்துட்டேன்...''

''அவன் எதுக்காக அந்தாளைக் கொன்னான் தெரியுமா?''

"பேப்பர்ல படிச்சுத்தான் செத்துப்போனவன் பேரே எனக்குத் தெரியும். வேறே எந்த விவரமும் எனக்குத் தெரியாது."

"அந்தாளை இன்னொரு தடவை பாத்தா அடையாளம் சொல்வீங்களா?"

"சொல்ல முடியும்..."

"அப்ப, இந்த ஆல்பத்துல இருக்கற போட்டோஸ்களைப் பாருங்க. நீங்க பார்த்த ஆளு இதுல இருக்கானா பாருங்க."

ஜகன்னாதன் அந்த ஆல்பத்தை வாங்கிக் கொண்டான். கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களைப் புரட்ட ஆரம்பித்தார். அவருடைய மனைவி சைகை செய்து, காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று எச்சரித்தது அவருடைய பார்வையின் ஓரத்தில் பதிந்தது. ஆனாலும் அதை அவமதித்தார்.

புரட்டிக் கொண்டிருந்த பக்கங்களை நிறுத்தி இன்ஸ்பெக்டரிடம் காட்டினார். "இவன்தான்..."

"விக்ரம் தாஸ்?"

"கரெக்ட், விக்ரம்னு தான் செத்துப் போனவன் இவனைக் கூப்பிட்டான்..." ஜகன்னாதன் டவலால் வியர்த்த முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"விக்ரம் ரவுடி, நாலு கொலைல தப்பிச்சிட்டான். அஞ்சாவதுல மாட்டிட்டிருக்கான்." என்றார் இன்ஸ்பெக்டர், எழுந்து கொண்டே. "நீங்க சாட்சி சொல்ல வருவீங்கதானே?"

"வரேன்... கொலை பண்ணினவன் தப்பிக்கிறதை என்னால ஜீரணிக்க முடியாது..." என்றார் ஜகன்னாதன்.

* * *

போலீஸ் ஸ்டேஷன்.

விக்ரம்தாஸ் கம்பிகளை இறுகப் பற்றியிருந்தான். கன்னமேட்டில் சதை தனியாக சுண்டித் துடித்தது. சிவந்த விழிகளால் ஜகன்னாதனைப் பார்த்து டென்ஷனோடு சிரித்தான். "முட்டாள்தனம் பண்ணிட்டியேம்மா" என்ற போது குரலில் ஏளனத்தை விட அபாய எச்சரிக்கைதான் கூடுதலாய் இருந்தது. "நீ காட்டிக் கொடுத்ததாலே என்னைத் தூக்குல போட்டுருவாங்களா? நெவர்! பற்கள் பளிச்சிட சிரித்தான். "நான் எப்படியும் தப்பிச்சுருவேன்... உன்னை நெனைச்சாத்தான் பாவமாயிருக்கு..."



ஜகன்னாதன் அவனிடமிருந்து விலகினார். இடையிலிருந்த இரும்புக் கம்பிகள் இருப்பதையே உதாசீனம் பண்ணி விக்ரம்தாஸ் பேசுவது போல் இருந்தது.

* * *

வீட்டில் நிம்மதி போயிற்று. பயம் கவ்விக் கொண்டது.

"தனியா எங்கியும் வெளியே போகாதே" என்று மனைவியை எச்சரித்து வைத்தார் ஜகன்னாதன்.

கதவுக்கு இரண்டு பூட்டுகள் போடப்பட்டன.

கதவு தட்டப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜன்னல் வழியே பார்த்து இரண்டு தடவைக்கு மூன்று தடவையாக ஆளைப் பார்த்து விட்டுதான் திறந்து விட வேண்டியிருந்தது.

கோர்ட்டில் கேஸ் ஆரம்பிக்க, பத்து நாள் கழித்து தேதி குறிக்கப்பட்டிருந்தது. கோயமுத்தூருக்கு லீவிற்குப் போயிருந்த மகள் மாயா திரும்பி வந்திருந்தாள்.

வீட்டில் மயான அமைதி சூழ்ந்திருந்தது.

"ஐயா...." என்றான். செங்கோடன். வீட்டோடு தங்கியிருந்த தோட்டக்காரன்.

"என்ன செங்கோடா?"

"போலீஸ் உங்களைத் தேடிட்டு வந்திருக்குங்க..."

ஜன்னல் வழியே பார்த்த போது ஜீப் தெரிந்தது. போலீஸ் உடுப்பு அணிந்து ஒரே ஒரு ஆள் ஜீப்பிலிருந்து இறங்கி வருவது தெரிந்தது.

அம்மா மடியில் உட்கார்ந்திருந்த ரவீந்தர் எழுந்து ஜன்னலுக்கு ஓடினான்.

"செங்கோடா... ரவீந்தரை தோட்டத்துக்கு எடுத்திட்டுப் போ... பேசறப்போ தொந்தரவு செய்யப் போறான்..."

செங்கோடன் ரவீந்தரைத் தூக்கிக் கொண்டு பின் கதவு வழியாக வெளியேறினான்.

பதினேழு வயது மாயாவுக்கு ஏற்கனவே விஷயங்கள் சொல்லப்பட்டிருந்ததால் போலீஸின் வருகையை ஒருவித சுவாரஸ்யத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவைத் திறந்தார் ஜகன்னாதன்.

உள்ளே நுழைந்தவன் தொப்பியைக் கழற்றிவிட்டு, "ஜகன்னாதன் யாரு, நீதானா?" என்றான்.

அவன் தொனியில் இருந்த மரியாதையின்மை அவரை சுருக்கென்று நிமிர்ந்து பார்க்க வைத்தது.

"நான்தான்..."

"விக்ரம்தாஸ் கொல்றதைப் பார்த்தது நீயும் உன் பொண்டாட்டியும்தானே"

"ஆமா..."

"ரெண்டு பேரும் இப்படி வாங்க..."

ஜகன்னாதன் மனைவியைப் பார்க்க, அவள் அவரருகில் வந்து நின்று கொண்டாள்.

"நீங்க யாரு?" என்றார். ஜகன்னாதன், போலீஸ் உடுப்பில் பெயரைப் படிக்க முனைந்து.



"என் பேரு மரியதாஸ். விக்ரம்தாஸூடைய தம்பி... நீங்க நினைக்கிற மாதிரி நான் போலீஸில்ல..."

அவன் பேசிய வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து அவர் விதிர்த்தார்.

அவன் பெல்ட்டிலிருந்து ரிவால்வரை உருவினான்.

மாயா ஓடி வந்தாள். அவன் கால்களைப் பிடித்தாள்.

"வேணாம். அவங்களை ஒண்ணும் செய்யாதீங்க. விட்ருங்க..."

அவன் இதழ்கள் கோணலாகப் புன்னகை செய்தன.

* * *

துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டு செங்கோடன் வீட்டிற்குள் ஓடி வந்து பார்த்த போது, ஜகன்னாதனும், அவர் மனைவியும் ரத்தத்தில் தோய்ந்திருந்தார்கள்.

மரியதாஸ் துப்பாக்கியை மாயாவின் நெற்றியில் பதித்து அவளை மிரட்டி ஜீப்பினுள் ஏற்றிக் கொண்டிருந்தான்.

* * *

போலீஸ் வந்தது.

செங்கோடனுக்கு வந்தவனைப் பற்றி எந்த விவரமும் தெரிந்திருக்கவில்லையாதலால் போலீஸ் ஜீப் வந்தது என்று மட்டுமே குழப்பினான். மாயாவைக் கடத்திப் போய் விட்டார்கள் என்று புலம்பினான்.

"வந்தது இவன்தானா பார்" என்று போட்டோ ஒன்று அவன் முன் நீட்டப்பட்டது.

"ஆமாம்... இவன்தான்..."

"இவன் மரியதாஸ்... விக்ரம்தாஸூடைய தம்பி. பிடிச்சுரலாம்."

* * *

ஜகன்னாதனின் சித்தப்பா பையன் வக்கீலுக்குப் படித்திருந்ததால் கேஸை மும்முரமாக்க முனைந்தான்.

இருபது நாட்கள் கேஸ் நடந்தது.

விக்ரம்தாஸ் கொலை செய்ததற்குப் போதிய சாட்சியம் இல்லை என்று அவன் விடுதலை செய்யப்பட்டான்.

மரியதாஸ் தூக்கிப் போன மாயா பற்றி எந்தத் தகவலும் கிட்டவில்லை. அப்புறம் மரியதாஸ் பேரிலும் கேஸ் போட்டு, சம்பவம் நடந்த தினத்தன்று அவன் சிம்லாவில் இருந்ததாக நிரூபித்து விடுதலையானான்.

செங்கோடன் கோர்ட்டிலேயே அழுதான். புலம்பினான். அவன் தோளில் தொற்றிக் கொண்டிருந்த ரவீந்தரை ஆதரவாகத் தட்டிக் கொடுத்தான்.

* * *

''உன் சித்தப்பா உன்னைக் கொண்டு போய் வளர்க்க றேன்னாரு...'' என்றார் செங்கோடன், நெஞ்சு நிறைய பீடிப் புகையை உள்ளிழுத்து, ''ஆனா நான்தான் வேணான்னிட் டேன்..''

ரவீந்தர் திகைத்திருந்தான். கிட்டத்தட்ட, பதினேழு வரு டங்களாக தனக்கு சொல்லப்படாத விஷயங்கள் ஒரே இரவில் சொல்லப்பட்ட போது, அத்தனை செய்தியையும் ஏற்றுக் கொள்ளும் தெளிவு அவன் மனதில் இல்லை.

செங்கோடன் சொல்லச் சொல்ல, மிக நிழலாய் எப் போதோ கனவில் வேறொரு அப்பா, அம்மா, அக்கா முகங்கள் நீரில் அலையும் பிம்பங்கள் போல் மிதந்தன.

“தம்பி...” செங்கமலம் அவனை நெருங்கி அவன் தலையை ஆதாரத்துடன் தடவிக் கொடுத்தாள். ''எங்க மேல கோபமா?''

அவளுடைய, வியர்வை கலந்த புடவை வாசம் அவனுள் பாசத்தைக் கிளர்ச்சியுறச் செய்தது.



''அக்கா அப்புறம் கெடைக்கவேயில்லையா?''

''இல்ல... பவானி ஆத்துல ஒரு பொணம் கெடைச்சுது. உங்கக்காவா இருக்கலாம்னு முடிவு பண்ணினாங்க... அடை யாளம் தெரியாத அளவுக்கு கெட்டுப் பேயிருந்திச்சு... அத னால கரெக்டா சொல்ல முடியலை'' என்றார் செங்கோடன் பீடியைக் கீழே போட்டு.

''சித்தப்பா வக்கீலு. அவர்கிட்டே நீ இருக்கேன்னு வைவி. அவரை மிரட்டறதுக்காக உன்னைத் தூக்கிட்டுப் போனாலும் போயிடுவாங்கன்னு தோணிச்சு... அதான் சொல்லலை..''

''இப்ப ஏன் சொன்னீங்க?''

''காரணம் இருக்கு. உனக்கு இருபது வயசு முடிஞ்சிருச்சு. காலேஜ் படிப்பை முடிச்சிட்ட.''

''அதனால என்ன?''

''நாளைக்கு சித்தப்பாவைப் பார்க்கத்தானே போற? அவர் சொல்வாரு எல்லாம் விளக்கமா... நிம்மதியா தூங்கு..''

தூக்கமா! அதுவும் நிம்மதியாகவா? கரையோர சமுத்திரம் தூங்க முடியுமா? காற்றடிக்கும் போது இலைகள் தூங்க முடி யுமா? வெடித்துச் சிதறிய எரிமலை உச்சிக்கு தூக்கம் வருமா?

இரவு முழுதும் மூவரும் கண்கள் எரிய விழித்திருந்தனர்.

* * *

**கா**லை பஸ் கோவையை நோக்கி விரைந்தது.

மௌனமான பயணம்.

ரவீந்தர் தன் தோளில் சாய்ந்திருந்த செங்கமலத்தை அனைத்துப் பிடித்திருந்தான். அம்மாவின் வாசனையை இவ ளிடம்தானே பார்த்திருக்கிறேன். இவள் என் அம்மா இல்லையா?

காற்றில் கண் இமைகளுக்குள் நீர் சேரும் செங்கோடனைப் பார்த்தபோது நெஞ்சில் கரித்தது. இந்த எலும்பு விரல்களைப்

பிடித்துக் கொண்டு தானே வெளியுலகை தரிசித்தேன். இவர் என் அப்பா இல்லையா?

திடீரென்று அவனிடமிருந்து அவர்களைப் பிய்த்து எறிய சதி நடக்கிறதா?

இருவர் கைகளையும் தன் கையுடன் இறுக்கிக் கொண்டான்.

கோவை வந்து விட்டது.

இரைச்சலான ஆட்டோ அவர்களை திருச்சி ரோடிலிருந்து பிரியும் சூர்யா காலனியில் கொண்டு இறக்கிவிட்டது.

* * *

உயரமான காம்பவுண்டு சுவர். வீட்டு முகப்பிலிருந்து காம்பவுண்டு சுவரில் கால் ஊன்றி நிற்கும் சரிந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரைக்குக் கீழ் வெள்ளை நிற சாண்ட்ரோ கார்.

பளிங்குக் கல்லில் குருமூர்த்தி என்று செதுக்கப்பட்டிருந்தது.

மணியடித்ததும் வந்து கதவைத் திறந்தவருக்கு ஐம்பது வயது இருக்கும்.

நெற்றி மேலேறி, முடி பின் வாங்கியிருந்தது.

"வாங்க..." என்றார்.

கதவை அகலமாகத் திறந்து விட்டார்.

செங்கோடனும், செங்கமலமும் மரியாதையாகக் கும்பிட்டார்கள். மொஸய்க் தரையில் பிரவேசித்தார்கள்.

குருமூர்த்தியின் பார்வை ரவீந்தரின் மீது படிந்திருந்தது. மேலும் கீழும் டார்ச் போல் பயணம் செய்து அவனுடைய முழு உருவத்தையும் கண்களுள் வாங்கிக் கொள்ள முனைந்தது.

"ஐயா உன்னோட சித்தப்பா..." என்றார் செங்கோடன்.



"ஹலோ" என்று நாகரீகமாக உலர்ந்த குரலில் கை குலுக்கினான்.

பைண்ட் செய்த புத்தகங்கள் அலங்கரித்த அவருடைய ஸ்டடிரூமில் குழுமினார்கள்.

"வீட்ல யாருமில்ல" என்றார், செங்கோடனிடம்.

"ஐயா, தம்பிக்கு கொஞ்சம் விஷயம் தெரியும் இப்போ..."

"சொன்னீங்களா?"

"முழுசும் சொல்லலை..."

உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் அபத்தமான மௌனம் ஊறியிருந்தது.

"ரவி..."

ரவீந்தரை அவ்வளவு சுருக்கமாக யாரும் கூப்பிட்டதில்லை. குருமூர்த்தியின் முகத்து அமைப்பைப் பார்த்தபோது அவருடைய வயதில் தானும் இந்த மாதிரி தான் இருப்போமோ என்று ரவீந்தருக்குத் தோன்றியது. வம்ச அடையாளங்கள் பொதுவாய் இருந்தன.

"உன் அப்பாவையும், அம்மாவையும் கொன்னவங்க சட்டத்திலேர்ந்து தப்பிச்சிட்டாங்க. அவங்களை எதிர்த்துகிட்டு தனியா நம்மால எதையும் சாதிக்க முடியாதுன்னு உங்கப்பாவுக்கு பயம் வந்திருக்கணும். விக்ரம்தாஸ் பத்தி போலீஸ்ல கம்ப்ளெயிண்ட் கொடுத்தவுடனேயே என்னைக் கூப்பிட்டனுப்பி உயில் எழுதச் சொல்லிட்டாரு..."

"உயிலா?"

"அப்படியொண்ணும் பெரிய சொத்தில்ல அவருக்கு. இருந்த ஒரு வீட்டையும் அவர் செத்தப்புறம் வித்தாச்சு. பணத்தையெல்லாம் பேங்க்ல வச்சிருந்து உன் படிப்பு முடிஞ்சவுடனே உன் பேருக்கு மாத்தச் சொல்லி உயில் எழுதினார். உன் அக்கா கல்யாணத்துக்காகவும் தனியா

பணம் ஒதுக்கியிருந்தாரு. ஆனா அதுக்கு தேவையில் லாமலே போயிடிச்சி. அந்தப் பணமும் இப்ப உன் பேருக் குத்தான் வருது...''

''பணத்தையெல்லாம் இவங்களுக்கு கொடுத்திடுங்க...'' என்றான் ரவீந்தர்.

''அப்படிச் சொல்லாத தம்பி... உன் படிப்புக்குக் கூட உன் பணம் தான் செலவாச்சு... இந்த ஏழைங்க உனக்கு ஒண்ணும் பெரிசாப் பண்ணிடலை...''

''அப்பா அம்மாவா இருந்திருக்கீங்களே... நாடகம் போடாம நெஜமான மகன் மேல வக்கிற மாதிரி பாசம் வச்சிருந் தீங்களே... அதுக்கு எவ்வளவு லட்சம் கொடுத்தாலும் சரியா குமா?''

''தம்பி, நாங்க சொல்றதைக் கேளு... நீ பெரிய படிப்பு படிச் சிட்டு வந்திருக்க... கோயமுத்தூர்ல ஒரு தொழில் ஆரம்பிச்சா உனக்குப் பணம் தேவைப்படும்.. அதுக்கு இதை வச்சிக்கோ... நீ நல்லா இருந்தா நாங்களும் நல்லா இருக்கற மாதிரிதான்...'' செங்கமலத்தின் குரல் தழைந்து வந்தது.

''மொத்தம் எவ்வளவு பணம் இருக்கு என் பேர்ல?'' என் றான் ரவீந்தர்.

''எட்டு லட்சத்து சொச்சம்...''

''பணத்தை என்ன வேணா பண்ண எனக்கு சுதந்திரம் இருக்கில்ல?''

''இருக்கு...''

''எனக்கு ரெண்டு நாள் டயம் கொடுங்க... யோசிச்சு சொல் லணும்...''

''எத்தனை நாள் வேணாலும் எடுத்துக்க. இது உன் பணம்... உன் இஷ்டப்படி செலவு பண்ண உனக்கு உரிமை இருக்கு... பிஸினஸ் ஆரம்பிக்கிற ஐடியா இருந்தா என்ன



ஹெல்ப் வேணுமானாலும் கேளு... ஏற்பாடு பண்றேன்...'' குருமூர்த்தி ஆதரவாகச் சொன்னார்.

''எனக்கு வேற ஒரு ஹெல்ப் செய்ய முடியுமா?''

''என்ன வேணும், கேளு...''

''என் அப்பா, அம்மாவோட போட்டோ ஏதாவது உங்க கிட்ட இருக்கா?'' ரவீந்தரின் குரல் உடைந்தது.

''தரேன்.....'' குருமூர்த்தி எழுந்தார். புத்தக அலமாரிகளை ஒட்டிப் போட்டிருந்த மேஜை இழுப்பறையைத் திறந்தார். ஒரு பழைய டைரியை எடுத்து உள்ளங்கையில் தூசு தட்டி எடுத்து வந்தார். பிரித்தார்.

பழுப்பேறிப் போன ஒரு போட்டோவை அதிலிருந்து எடுத்து நீட்டினார்.

அப்பா... அம்மா... அம்மா மடில நீ... அப்பா தோள்ல கை போட்டுக்கிட்டிருக்கிறது உங்கக்கா மாயா...''

மாயா யௌவனத்தின் அழகு விளிம்பில் இருந்தாள். கள்ளமில்லாத கண்கள் காமிராவைப் பார்த்து சிரித்தன. அக்கா! எந்த நதியில் ஊறி நீ அழுகிப் போனாய்!

''இந்த போட்டோவை நானே வச்சுக்கலாமா?''

''உன்னோடதுதான் அது...''

''தாங்க்ஸ்'' என்று மார்போடு அணைத்துக் கொண்டான்.

''புறப்படுவோமாப்பா?'' என்றான் செங்கோடனிடம்.

''உயில் பத்தி ஐயா சொன்னாங்களே தம்பி?''

''ரெண்டு நாள்ல சொல்றேன்னேனே...''

''சரி தம்பி...'' கையூன்றி செங்கோடன் எழுந்து கொண் டார்.

* * *

இரண்டு நாட்கள் கழித்து, கோயமுத்தூரில் அந்தக் கதவு மறுபடி தட்டப்பட்டது.

திறந்த குருமூர்த்தி ஆச்சரியப்பட்டார்.

"வா... ரவி... தனியாவா வந்தே?"

"ஆமாம்..." உள்ளே நுழைந்து சோபாவில் அமர்ந்தான். "எட்டு லட்சம் இருக்குன்னு சொன்னீங்களே... அதுல எனக்கு மூணு லட்சம் கேஷா வேண்டியிருக்கு..."

"பிஸினஸ் ஆரம்பிக்கப் போறியா?"

"ஆமாம். ஆனா இங்கே இல்ல. சென்னைல.... பாக்கி அஞ்சி லட்சத்துக்கு இப்பவே கையெழுத்து போட்டுத் தரேன். அது என்னை வளர்த்த செங்கோடனுக்கும், செங்கமலத் துக்கும் கொடுத்துரணும்."

"ரவி!" குருமூர்த்தியின் குரலில் மெல்லிய அச்சம் இருந்தது. "சென்னைல வேண்டாம்... இங்கேயே பிஸினஸ் பண்ணினா என்ன?"

"இல்ல சார்... எனக்கு சென்னைலதான் வேலை. எனக்கு ஏதாவது ஆயிட்டாக்கூட பணம் பூராவும் என்னை வளர்த்த வங்களுக்குத்தான்... அந்த மாதிரி எழுதுங்க.. கையெழுத்துப் போட்டுட்டு சென்னை கிளம்பறேன்..."

ரவீந்தரின் குரலில் உறுதி இருந்தது. ஏதோ ஒரு உள்ளர்த் தம் இருந்தது போலவும் குருமூர்த்திக்குத் தோன்றியது.

## 2

மஞ்சள் சூரியன், சமுத்திரத்தில் தலை குளித்து எழும்பி, மேகங்களால் தலை துவட்டிக் கொண்டிருந்தது. பட்சிகள் இளங்காலைச் சுறுசுறுப்புடன் சிறகுகளைப் படபடத்தன.



ரவீந்தர் கடல் மணலில் உட்கார்ந்திருந்தான்.

சிமெண்ட் பூசாத பல்கலைக் கழகக் கட்டிடம் சூரிய வெளிச்சத்தில் நீளமான நிழல்களை நீட்டியிருந்தது.

எழுந்தான். கை கால்களை உதறிக் கொண்டான். ஒட்டி யிருந்த சில மணல் துகள்கள் மட்டும் பிடிவாதமாக விலக மறுத்தன.

அலைகள் மோதிப் பின்வாங்கும் ஈரமணலில் ஓட ஆரம்பித்தான். நனைந்து கெட்டித்துப் போயிருந்த ஈரமண லில் ஓடுவது சுலபமாயிருந்தது. முதலில் மெதுவாக ஓட ஆரம்பித்தவன் கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகரித்து மிகத் தீவிரமாக ஓடினான். கண்ணகி சிலை வரை ஓடி வந்ததும், ஆயாசமாக அப்படியே மணலில் சரிந்தான்.

உப்பு அலைகள் அவன் கால்களையும், கான்வாஸ் ஷூக்களையும் நக்கிப் நக்கிப் பின்வாங்கின.

காலேஜ் நாட்களிலேயே நிறைய உடற்பயிற்சி செய் திருக்க வேண்டும். ரவீந்தர் மூச்சை மறுபடி நிதானித்துக் கொண்டு எழுந்தான். மறுபடி ஓடினான். மீண்டும் பல்கலைக் கழகம்.

மணல்வெளியில் சரிந்து உட்கார்ந்து, வெயிலின் இத மான வெப்பத்தில் உடலைக் காய வைத்து மூச்சை மறுபடி நிதானப்படுத்தினான். எழுந்து நிழலில் நிறுத்தியிருந்த தன் ஹீரோ ஹோண்டாவை நோக்கி நடந்தான்.

* * *

காலை ஒன்பது மணி.

சூரியன் சற்றே மேலேறியிருந்தது.

ரவீந்தரின் ஹீரோ ஹோண்டா பல்கலைக்கழக வளாகத் திற்குள் நுழைந்தது. உயரமான அசோகமரங்களின் நிழலில் ஒதுக்கப்பட்டது.

ரவீந்தர் இறங்கினான்.

நீலமும், மஞ்சளும் கலந்த டெர்ரிவுல் பேண்ட், க்ரே கல ரில் நீலக்கோடுகள் வரைந்த சட்டை. கண்களில் கறுப்புக் கண்ணாடி.

கண்ணாடியைக் கழற்றி சட்டைப்பையில் வைத்துக் கொண்டு பல்கலைக்கழக நூலகத்தினுள் நுழைந்தான்.

இடதுபுறம் இருந்த ரிஜிஸ்டரில் தன் பெயர், முகவரியைப் பதிவு செய்தான். சிறு கதவு திறந்திருக்க, நுழைந்தான்.

விஸ்தாரமான ஹால், பெரிய மேஜைகளில் தனித்தனியாக டியூப் வெளிச்சத்தில் மாணவ, மாணவியர் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தனர்.

கன்னமேட்டில் கொத்து மயிர் பாக்கி இருக்க, சரியாக ஷேவ் செய்யாத ஒருவர் (புரொபசர்?) தனக்குத்தானே ஏதோ புலம்பிக் கொண்டே பரத நாட்டிய முத்திரைகளைக் கை களில் காட்டி அங்கங்கே புத்தகம் எடுத்து புரட்டி திருப்தி யில்லாமல் எறிந்து கொண்டிருந்தார்.

இடது புறம் பெரிய அகலமான காரிடார். தண்ணீர் கூலரின் எதிர்ப்புறம் புத்தகப் பட்டியலைத் தாங்கியிருக்கும் கேட்டி லாக் அலமாரிகள். அவற்றைத் தாண்டியதும் ரெஃபரன்ஸ் செக்ஷன்.

மீசையை உதடு வரை ஒதுக்கியிருந்த ஒரு ஐம்பது வயதுக்காரர் மையமான மேஜையில் உட்கார்ந்து முட்களைத் தேய்த்துக் கொண்டிருந்தார். ரவீந்தர் அவரை அணுகினான்.

''சார்''

''ம்?''

''பழைய பேப்பர்கள் கிடைக்குமா?''

''இங்கே போடுவதில்லையப்பா...'' என்றார் நிமிர்ந்து பார்க்காமலே.



''அதில்லை சார்... பதினேழு வருடத்திற்கு முன்னால் வந்த சில நியூஸ் பேப்பர்கள் எனக்கு வேண்டும். இங்கே வந்தால் கிடைக்கும் என்றார்கள்.''

சற்றே சலிப்புடன் நிமிர்ந்து பார்த்து ''எந்த வருஷம்?'' என்றார்.

சொன்னான். உட்காரச் சொல்லி விட்டு எழுந்து உள்ளே போனான்.

இரண்டு கைகளிலும் அகலமாய்த் தாங்கிப் பிடித்தபடி கொண்டு வந்து அவன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு நேரே போட்டார். தூசு பறந்தது.

அவன் ஆவலுடன் பார்த்தான்.

ஆங்கில தினசரியின் அன்றாடத் தாள்கள் நன்றாய் பைண்ட் செய்யப்பட்டிருந்தன.

ரவீந்தர் ஒவ்வொரு தேதியாகப் புரட்டினான்.

இதோ!

விக்ரம்தாஸ் மீது கொலை வழக்கு!

போதிய சாட்சியங்கள் இல்லாமல் அவன் விடுதலையான செய்தி வெளியாகி இருந்தது. விக்ரம்தாஸிற்காக வாதாடிய வக்கீலின் பெயரைப் பார்த்தான் ரவீந்தர்.

அட்வகேட் ராமகிருஷ்ணன்!

* * *

அட்வகேட் ராமகிருஷ்ணன் கண்ணாடியில் பார்த்து தன் விபூதியை சரி செய்து கொண்டார். வேட்டி நுனியைக் கையில் ஏந்தியபடி படிகளில் இறங்கினார். காத்திருந்த க்ளை யண்ட்கள் கைகளைக் கூப்பி எழுந்திருந்தனர்.

''ஒரு நிமிஷம்...'' என்றவர் ஆபீஸ் அறைக்குள் நுழைந் தார்.

மின்விசிறியை அணைத்தார்.

ஊதுவத்தி பாக்கெட்டிலிருந்து கொத்தாக பத்திகள் எடுத்து பற்ற வைத்து மணியடித்து சாமி படங்களுக்கு காண்பித்து ஜன்னல் விரிசலில் செருகினார்.

''யெஸ்'' என்றார் கண்ணாடிக் கதவைத் திறந்து.

முதல் க்ளையண்ட் நுழைந்தார்.

ராமகிருஷ்ணனுக்கு தினங்கள் சந்தோஷமாய் விடிந்தன. சந்தோஷமாய் முடிந்தன. தினமும் கஸ்டமர்கள். இரண்டு வங்கிகளுக்கும் ஏராள கம்பெனிகளுக்கும் அவர் லீகல் அட்வைஸராய் இருந்ததால் கஜானா தானாக நிரம்பி வழிந்தது.

மனைவி இறந்து மூன்று வருடமாகிறது. ஒரே மகள். காலேஜ் படிப்பு. சமீபத்தில் அவள் வேறொரு இளைஞனின் பைக்கில் வந்து இறங்குவதை கவனித்திருந்தார். விசாரிக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்.

முதல் க்ளையண்ட் தன் கார் திருடு போனதைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கையில் டெலிபோன் மணி அடித்தது.

எடுத்தார்.

''அட்வகேட் ராமகிருஷ்ணன்?''

''யெஸ்...'' என்றார்.

''எனக்கு உங்களுடன் ஒரு அப்பாயிண்ட்மெண்ட் வேண்டும் அர்ஜன்ட்..''

''இன்றைக்கு சாயந்திரம் ஆறுமணி?'' என்றார் ராமகிருஷ்ணன்.

''தேங்க்யூ...''

''உங்கள் பெயர்?''



''ரவீந்தரன்...''

மறுமுனை வைக்கப்பட்டது.

* * *

ரவீந்தரன் ரிசீவரை வைத்து விட்டு எழுந்தான்.

சென்னை தென்பகுதியில் அவன் வாடகைக்கு எடுத்திருந்த அந்த சிறு வீடு அடையாரின் அமைதியான உள் தெருக்களில் இருந்தது.

சிறு ஹாலை எட்டியிருந்த பால்கனியில் நுழைந்தான்.

கூரையிலிருந்து தொங்கிய பிரம்புக் கூடை ஊஞ்சலில் அமர்ந்து காலைத் தரையில் ஊன்றி சுழன்றான்.

அவனுடைய எண்ணங்களும் சுழன்று கொண்டிருந்தன.

டெலிபோன் டைரக்டரியில் தேடிப் பார்த்தாயிற்று - விக்ரம் தாஸ் என்ற பெயரோ, மரியதாஸ் என்ற பெயரோ கிடைக்கவில்லை.

மாலை வக்கீலிடம் என்னென்ன கேட்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த போது கீழே புல்லட் மோட்டார் சைக்கிள் வந்து நிற்பது தெரிந்தது. பைக்கிலிருந்து மாஸ்டர் மணிவண்ணன் இறங்கிக் கொண்டிருந்தார்.

கராத்தே மாஸ்டர்.

ரவீந்தரன் இறங்கினான். ஆவலுடன் அவரை எதிர்கொள்ள ஓடினான்.

* * *

கராத்தே கிளாஸ் முடிந்து எழுந்த போது இரண்டு முழங்கால்களும் வலித்தன. வலது கையில் தோல் வழண்டு சிகப்பு உள்புறம் தெரிந்தது. குளிர்ந்த நீரில் காட்டியபோது பற்றிக் கொண்ட எரிந்தது - அந்த எரிச்சலும் அவனுக்கு ஒரு சுகமான வேதனையாய் இருந்தது.

சற்று ஓய்வெடுத்து விட்டு தோட்டத்திற்குள் பிரவேசித்தான்.

வானின் உச்சிக்கு வந்திருந்தது சூரியன்.

பின்புறக் காம்பவுண்டு சுவர் ஓரமாக இருந்த தென்னை மரங்களின் உயரத்தை அண்ணாந்து பார்த்தான் ரவீந்தர். சூரிய ஒளி கண்களைக் கூசச் செய்தது.

கைகளில் தோல் கையுறைகளை அணிந்தான். தென்னையின் சொரசொரப்பான உடலைத் தொட்டு பார்த்தான். தீர்மானத்துடன் கைகளை மரத்தில் ஊன்றினான். உடம்பை எக்கி ஏறினான். கால்களை மரத்தின் மீது வைத்ததும் அப்படியே சரிந்து கீழே விழுந்தான். பின்புறம் பூமியில் மோதிய வேகத்தில் உடம்பெங்கும் வலி அதிர்ந்தது.

தலையை சிலுப்பிக் கொண்டான். மறுபடி எழுந்தான். தென்னையின் பருமனை உத்தேசித்துப் பார்த்தபோது அவனுடைய கைகளின் நீளத்தால் அதை சுலபமாக வளைத்துப் பிடித்து விட முடியாது என்றே தோன்றியது.

வீட்டிற்குள் போய் இரண்டு மீட்டர் நீள வெள்ளைக் கயிறு எடுத்து வந்தான். மரத்தைச் சுற்றிப் போட்டு வளையமாக்கி முடிச்சிட்டான்.

கிராமத்தில் மரம் ஏறுபவர்களைப் பார்த்திருந்ததால், அதே முறையில் வளையத்திற்குள் தன் உடம்பை செலுத்தி அதன் வீர்யத்தை மரத்திற்கு எதிராக இழுத்து அதிகப்படுத்திக் கொண்டு கால்களை மரத்தில் உதைத்து ஏறினான். இரண்டு முறை வழுக்கியது. மூன்றாவது முறை பாதி மரம் ஏறியதும் பயம் வந்து இறங்கிவிட்டான்.

கைகளை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டான். கமான், ட்ரை என்று தனக்குத் தானே அழுத்தமாக சொல்லிக் கொண்டான். மறுபடியும் முயற்சி செய்தான்.



இந்த முறை தென்னை மரத்தின் உச்சி வரை ஏற முடிந்தது.

அரை நிக்கரும், ஸ்போர்ட்ஸ் பனியனும் அணிந்து, கண்ணியமாய்த் தென்படும் இளைஞன் எதற்காக தென்னை மரத்தில் ஏறிக் கொண்டிருக்கிறான் என்று பக்கத்து வீட்டுப் பெண்மணி துணி உலர்த்துவதை நிறுத்திவிட்டு அவனை கவனித்தாள்.

ரவீந்தர் அவளுக்கு கையசைத்தான்.

தூ என்று துப்பிவிட்டு அவள் துணியை மறுபடி உதறினாள்.

ரவீந்தர் சிரித்துக் கொண்டே மரத்திலிருந்து லாவகமாக இறங்கினான்.

வட்டமான கயிற்றில் ஸ்கிப்பிங் செய்து கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான்.

கண்ணாடிக்கெதிரில் நின்று தன் புஜத்தை உயர்த்திப் பார்த்தான்.

இந்தப் பதினைந்து நாட்களில் தசைகள் முறுக்கேறத் துவங்கியிருந்தது தெரிந்தது. கால் ஆடு சதைகளிலும் வலு ஏறியிருந்தது.

ரவீந்தருக்கு மெலிதான பெருமிதமும், நிறைய எதிர்பார்ப்புகளும் கண்களில் தெரிந்தன.

## 3

கடிகாரத்தில் சின்ன முள்ளும் பெரிய முள்ளும் ஒன்றையொன்று எதிர்த்துக் கொண்டு நின்றன. மாலை ஆறு மணி.

ரவீந்தர் பிளாஸ்டிக் நாற்காலியில் பதினைந்து நிமிடமாகக் காத்திருந்தான்.

காத்திருந்த நேரத்தில் கண்களை நாற்புறமும் அலைய விட்டிருந்தான்.

பழங்கால சுவர்கள், அவற்றில் புதுப்பெயிண்ட் பூசப்பட்டு அங்கங்கே சில ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்தன. ஒரு க்வார்ட்ஸ் கடிகாரம் விலுக் விலுக் என்று வலிப்பு வந்து வினாடி முள் நகர்த்தியது.

ஜன்னலுக்கு மேலே ஆணியில் தொங்கிய புகைப்படம் ரவீந்தரைக் கவர்ந்தது.

சுமார் பதினெட்டு வயதுப் பெண் டென்னிஸ் உடையில் வெயிலில் பரிசுக்கோப்பை மின்ன போஸ் கொடுத்திருந்தாள்.

அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போதே அந்த வீட்டு வாசலில் ஒரு பைக் வந்து பிரேக் அடித்தது. அதன் பில்லியனிலிருந்து இறங்கியவளைப் பார்த்ததும் ரவீந்தருக் குப் புரிந்து போயிற்று. ஹாலில் டென்னிஸ் போஸில் சிரிக்கும் பெண் இவள்தான்.

பைக்கை ஓட்டி வந்தவனிடம் ''ஹாய் பை...'' என்று ஏதோ உதிர்த்து விட்டு அவள் வீட்டிற்குள் நடந்து போனாள். அவனைக் கடந்து போகும் போது சற்றே கண்களைத் திருப்பி கவனித்து விட்டு நகர்ந்தாள். உள்ளே மாடிப்படிகளில் அவள் இளமையின் வேகத்துடன் ஏறும் ஒலி கேட்டது.

ரவீந்தர் காத்திருந்தான்.

கண்ணாடி பதித்த மரக்கதவு திடீரெனத் திறந்தது. நசுக் கிய மூக்குடன் வெளியே வந்த குள்ளமான மனிதர் கண் ணாடியை ஏற்றிக் கொண்டு, ''சார் பேர் ரவீந்தரா?'' என்றார்.

''ஆமாம்...''

''உள்ளே போங்கள்... அட்வகேட் கூப்பிடுகிறார்.''

கண்ணாடிக் கதவைத் தள்ளி நுழைந்தான்.



ஏஸி குளிர் அடக்கப்பட்டிருந்தது.

பழைய மர நாற்காலிகள் உறுதியாய் இருந்தன.

''உட்காருங்கள்'' என்றார் அட்வகேட் ராமகிருஷ்ணன்.

மெல்லிய ப்ரீமியர் வேட்டியும், மஸ்லின் ஜிப்பாவும் அணிந்திருந்தார். வாயோரம் வெற்றிலை எச்சில்.

''என் பெயர் ரவீந்தர்.''

''என்ன செய்கிறீர்கள்? பிசினஸா?''

''இனிமேல்தான் ஆரம்பிக்க வேண்டும்''

''என்னிடம் யார் அனுப்பினார்கள்?''

''விக்ரம்தாஸ்...''

அவர் முகத்தில் மெல்லிய அதிர்ச்சி படர்ந்தது. ''யார்?'' என்றார். நம்ப முடியாதவர் போல.

''விக்ரம்தாஸ்...''

அவர் டெலிபோனை அருகே இழுக்க, அவர் கையின் மீது தன் கையை அழுத்தமாக வைத்தான் ரவீந்தர்.

''போன் பண்ணிக் கேட்க வேண்டாம். விக்ரம்தாஸிற்கு என்னைத் தெரியாது...''

''விக்ரம்தாஸ் அனுப்பியதாய்ச் சொன்னாய்?''

''நான் இங்கே வந்ததற்கு காரணம் விக்ரம்தாஸ்...'' என் றான் ரவீந்தர். தன் சட்டைப் பையிலிருந்து நான்காய் மடித்த ஜெராக்ஸ் பிரதியை எடுத்து மேஜை மீது விரித்தான்.

பதினேழு வருடங்களுக்கு முந்தைய பேப்பரில் விக்ரம் தாஸ் வழக்கு பற்றி வெளியாகியிருந்த பழுப்பான செய்திப் பக்கம்.

அதை ராமகிருஷ்ணன் புரட்டிப் பார்த்துவிட்டு திருப்பித் தந்தார்.

''உனக்கு என்ன வேண்டும்?''

''விக்ரம்தாஸின் அட்ரஸ்...''

''எதற்காக வேண்டும்?''

''அது பர்சனல் விஷயம். தெரிந்து கொள்ள நீங்கள் விரும்ப் மாட்டீர்கள்...'' ரவீந்தரின் குரல் உலர்ந்திருந்தது.

''ஸாரி... என் க்ளையண்ட்களைப் பற்றிய விவரங்கள் ரகசிய மானவை. நான் யாருக்கும் அநாவசியமாக தருவதற் கில்லை...''

''எனக்கு விக்ரம்தாஸைப் பார்க்க வேண்டும்..''

''இது அவனுடைய பி.ஏ.வின் வீடு இல்லை - அப் பாயிண்ட்மெண்ட் வாங்கித் தருவதற்கு...''

''ப்ளீஸ்...'' ரவீந்தரின் குரல் திடீரென்று தழைந்தது.

''எனக்கு விக்ரம்தாஸைப் பார்த்தே ஆக வேண்டும். டெலி போன் டைரக்டரியில் கூட எனக்கு அவன் அட்ரஸ் கிடைக்க வில்லை. நீங்கள் தான் ஹெல்ப் செய்ய வேண்டும்...''

''காரணம் தெரியாமல் நான் எதையும் சொல்ல முடியாது, மிஸ்டர் ரவீந்தர்.''

''அவருடன் பிசினஸ் பேச வேண்டும்...''

''என்ன பிசினஸ்?''

''அட்ரஸ் தருவீர்களா, மாட்டீர்களா?''

''என்ன மிரட்டுகிறாய்?''

''தருவீர்களா, மாட்டீர்களா?''

''கெட் அவுட்...''

''இதற்கு நீங்கள் அனுபவிப்பீர்கள்...''

''போடா. சோட்டா பயலே... உன்னை மாதிரி எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன். வெளியே போகிறாயா, போலீஸைக் கூப்பிடட்டுமா?''



''வெளியே போகிறேன். ஆனால் உங்களிடமிருந்து அட் ரஸ் எப்படி வாங்க வேண்டுமென்று எனக்குத் தெரியும்...''

''சும்மா பூச்சாண்டி காட்டாதே. க்ளியர் திஸ் ப்ளேஸ்...''

ரவீந்தர் நாற்காலியைப் பின்னால் தள்ளி வேகமாக எழுந் தான்.

கதவை அறைந்து சாத்தி வெளிப்பட்டான்.

வெளியே வந்து ஹீரோ ஹோண்டாவை உதைத்துக் கிளப் பிய போது, வக்கீல் ஜன்னல் வழியே பார்த்து அதன் நம்பரை டைரியில் குறித்துக் கொள்வதை அவன் கவனிக்கவில்லை.

* * *

இரண்டு கைகளையும் தலைக்குக் கீழே கொடுத்து படுத்திருந்தான் ரவீந்தர். கடற்காற்று ஜன்னல் வழியே பாய்ந்து வந்து அவன் சட்டையைப் படபடக்கச் செய்தது.

தருவிக்கப்பட்ட இரவுச் சாப்பாடு தட்டில் மூடியது மூடியபடி இருந்தது. நினைக்க நினைக்க அவனுக்கு அவன் மீதே கோபம் வந்தது.

எதற்காக அவ்வளவு பதட்டப்பட்டேன்? நிதானமாக, புத்திசாலித்தனமாக முடித்து விட்டிருக்க வேண்டிய காரி யத்தை அநாவசியமாகக் குழப்பி விட்டேனே!

இரவுத் தூக்கம் பறி போயிற்று.

வெகு நேரம் சிந்தித்ததில் விடிவதற்கு சற்று முன்னதாக ஒரு ஐடியா உதயமாயிற்று.

* * *

ரவீந்தர் ஹீரோ ஹோண்டாவை ஸ்டாண்ட் போட்டு விட்டுக் காத்திருந்தான்.

அதோ, மாருதி கார்.

அந்தப் பெண்கள் கல்லூரியினுள் நுழைந்த மாருதி கார் அட்வகேட் ராமகிருஷ்ணனுடையது.

காரிலிருந்து இறங்கிக் காத்திருந்த மற்ற பெண்களுடன் அவள் கலந்து கட்டிடத்திற்குள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரவீந்தர்.

அவன் அருகில் காக்கிச் சட்டை போட்டபடி நின்றிருந்த பியூனின் தோளை அழுத்தினான்.

"நான் சொன்னது அந்தப் பெண்ணைத்தான்..." என்றான்.

"அவள் பெயர் காயத்ரி" என்றான் பியூன். "பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி படிக்கிறாள்... அட்வகேட்டின் மகள்..."

"லன்ச் டைம் எப்போது?"

"குட்.... லன்ச் டயத்திற்கு கால்மணி நேரம் முன்பாக இதே இடத்துக்கு வா. நான் சொல்கிறபடி செய்ய வேண்டும்."

"சரி..." என்றான் பியூன். அவன் கையில் திணிக்கப்பட்ட ஐநாறு ரூபாய் நோட்டை பேண்ட் பாக்கெட்டிற்குள் கசக்கி அடைத்துக் கொண்டு.

ரவீந்தர் காலேஜிற்கு எதிரில் பீச்சோரம் இருந்த புல்தரையில் உட்கார்ந்து புத்தகம் படிக்கத் துவங்கியவன் எதேச்சையாகத் திரும்பினான்.

பைக் ஒன்று காலேஜ் காம்பவுண்டை ஒட்டியிருந்த பஸ் ஸ்டாப்பில் ஒதுங்கி நின்றது. அந்த ஸ்கூட்டரை அவன் முன்பே பார்த்திருக்கிறான்.

வக்கீலின் மகள் காயத்ரியை முந்தின நாள் வீட்டுக்குக் கொண்டு வந்து இறக்கி விட்ட ஸ்கூட்டர். ஸ்கூட்டரில் இருந்த இளைஞன் எம்பி எம்பி காலேஜ் காம்பவுண்டிற்குள் எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

ரவீந்தர் எழுந்தான். ஸ்போர்ட்ஸ் தொப்பியை நெற்றி வரை இழுத்து விட்டுக் கொண்டான். கூலிங்கிளாஸ் அணிந்தான். வாயில் சூயிங்கம் அடக்கிக் கொண்டான்.



எழுந்து தெருவைக் கடந்து பஸ் ஸ்டாண்டில் போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே காம்பவுண்டிற்குள்ளிருந்து ஓட்டமும் நடையுமாக காய்த்ரி வெளிப்பட்டாள். நேரே அவனிடம் வந்தாள்.

"ரொம்ப நேரமாக வெயிட் பண்ணுகிறீர்களா, சுந்தர்?"

"பத்து நிமிஷம் ஆயிற்று. நீ காலேஜ் வந்தாயா, இல்லையா என்பதே தெரியவில்லையே..."

"முதல் பீரியட் பிரின்சிபாலே எடுக்கிறார். கட் அடித்தால் வம்பு.... போய் விட்டு அடுத்த பீரியட் ஆரம்பிப்பதற்குள் நைஸாக நழுவி வந்து விட்டேன். மத்யானம் பிராக்டிகல் கிளாஸ் இருக்கிறது. அதற்குள் வந்துவிடுவோமா?"

"தியேட்டரில் கூட்டமே இருக்கக்கூடாது என்று நீ அடம் பிடிக்கிறாயே என்றுதான் பதினோரு மணி ஷோவிற்கு புக் பண்ணினேன்..."

"கூட்டம் இருக்கிற தியேட்டரில் நடந்து கொள்கிற மாதிரியா இருக்கிறது உங்கள் விஷமம்?" அவள் கண்களில் வெட்கமும், கன்னங்களில் ரோஸத்தனமும், முகத்தில் எதிர்பார்ப்பும் கூடின.

பில்லியனில் ஏறி ஆக்ரமித்ததும், அவன் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

அதிர்ஷ்டம் அவனைத் தேடி வந்து இடிப்பதை ரவீந்தர் வியந்தான்.

இதை விட நல்ல சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

பைக்கை உதைத்துக் கிளப்பினான்.

* * *

அட்வகேட் ராமகிருஷ்ணன் டைனிங் டேபிளில் இருந்த போது, அந்தப் போன் வந்தது.

''ஹலோ, என்ன ஞாபகமிருக்கிறதா? ரவீந்தர்...''

''இடியட், போனைக் கீழே வை...''

''ஆகா, தாராளமாக. உங்களுக்குத் தான் ரிசீவரை வைக்க மனசிருக்காது என்று நினைத்தேன்.''

''என்ன உளறுகிறாய்?''

''உங்கள் மகள் காயத்ரியைப் பற்றித் தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆசையில்லையென்றால் இப்போதே ரிசீவரை வைத்து விடுகிறேன்.''

''என் மகள் காயத்ரிக்கு என்ன?'' அவர் குரலில் பதட்டம் தொற்றிக் கொண்டது.

''இதுவரை எதுவும் இல்லை. என்னுடைய பாதுகாப்பில் பத்திரமாகத் தான் இருக்கிறாள். நம்பிக்கையில்லையென்றால் காலேஜிற்கு போன் செய்து கேட்டுக் கொள்ளுங்கள். நான் பத்து நிமிடம் கழித்து மறுபடி போன் செய்கிறேன்...''

ராமகிருஷ்ணன் பரபரப்பானார். காலேஜிற்கு உடனே போன் செய்தார்.

''முதல் பீரியட் வந்திருந்தாள். ஆனால் இப்போது அவளைக் காணவில்லை....'' என்றார் பிரின்சிபால் தன் கீச்சுக் குரலில்.

ராஸ்கல். என் மகளுடனா விளையாடுகிறாய்? உன்னை... என்று பற்களைக் கடித்தவர் விரல்களை அடக்கிக் கொண்டார். போலீஸைக் கூப்பிடுவதும், போன் செய்வதும் கஷ்டமாக இருக்கப் போவதில்லை. ஆனால் அவரே எத்தனையோ கேஸ்களை கவனித்திருக்கிறார். குற்றவாளி ஒரு மூலையில் தள்ளப்பட்டு அவன் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படும் போது, அவன் மிக வன்முறையாக மாறியிருப்பதை பலமுறை கண்கூடாக கவனித்திருக்கிறார்.

காயத்ரி இளம் வயதுப் பெண். தன்னுடைய அகம்பாவத்தினால் அவளுக்கு எந்த ஆபத்தும் வந்து விட்டால், இத்தனை நாள் தொழில் செய்து சம்பாதித்ததற்கெல்லாம் அர்த்தமில்லாமல் போய்விடும்.



போலீஸிற்கு போன் பண்ணாமல் விரல்களை அடக்கியபடி, டெலிபோன் ஒலிக்கக் காத்திருந்தார்.

மீண்டும் டெலிபோன் மணி அலறியது. ராமகிருஷ்ணன் ரிசீவரை எடுத்தார். மறுமுனையில் பேச்சின் குரல்.

''காலேஜில் விசாரித்தீர்களா?''

''உனக்கு என்ன வேண்டும்?'' என்றார்.

''நான் என்ன உங்கள் சொத்தையா கேட்கிறேன்...? ஒரே ஒரு அட்ரஸ்... விக்ரம்தாஸின் அட்ரஸ்...''

''சொன்னால் என் மகளை விடுவித்து விடுவாயா?''

''நிச்சயமாக''

''விக்ரம்தாஸ், மரியதாஸ் இருவருமே இப்போது தாஸ் பிரதர்ஸ் என்ற பெயரில்தான் பிஸினஸ் பண்ணுகிறார்கள்...''

''எங்கே?''

''சென்னை பூராவிலும் தான்... ஹெட் ஆபீஸ் பீச்ரோடில் இருக்கிறது - பர்மாபஜாருக்கு எதிரில்...''

''என்ன பிஸினஸ்?''

''எல்லாம் தான் செய்கிறார்கள்...''

''நீங்கள் தான் வக்கீலா?''

''ஆமாம்.''

''நான் விசாரித்தது பற்றிச் சொல்வீர்களா?''

''சொல்லக்கூடாதென்றால் சொல்லவில்லை...''

''தேங்க்யூ...''

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பாவி, காயத்ரியைப் பற்றி எதுவும் சொல்லாமலேயே போனை வைத்து விட்டானே!

ராமகிருஷ்ணன் வெறுப்புடன் ரிசீவரை அடித்தார்.

மீண்டும் போன் மணி அடித்தது.

ரவீந்தர்தான்!

''உங்கள் மகள் இன்னும் இரண்டு மணி நேரத்தில் காலேஜிற்குத் திரும்பி விடுவாள். அதுவரை பொறுமையாய் இருங்கள்.''

* * *

ராமகிருஷ்ணனின் சாப்பாடு கெட்டு விட்டது.

பொறுமையில்லாமல் முன்னும் பின்னும் நடந்தார்.

இன்னும் இரண்டு மணி நேரங்கள். அவன் சொன்னபடி நடந்து கொள்வானா?

வேறு வழியில்லை, காத்திருக்க வேண்டியதுதான்.

இரண்டு மணி நேரங்கள் கழித்து பொறுமையைத் தொலைத்தவராக போலீஸைக் கூப்பிட்டு விடுவது என்ற தீர்மானத்துடன் அவர் போனை நெருங்கிய போது, அவரைத் தூக்கி வாரிப் போடச் செய்து அது ஒலித்தது.

எடுத்து காதில் வைத்தார்.

''டாடி... காலேஜிற்கு போன் பண்ணிணீர்களாமே? எனிதிங் இம்பார்ட்டண்ட்?'' - காயத்ரியின் குரல்தான்!

அவர் வயிற்றில் அமிலத்தை அடித்துக் கொண்டு ஒரு ஆறுதல் வந்து சூழ்ந்தது.

''அம்மா, நீ பத்திரமாக இருக்கிறாயா?''

''ஏன் டாடி?''

''அவன்... அவன்... உன்னை ஒன்றும் பண்ணவில்லையே?''

எதிர்முனையில் அவள் மூச்சை இழுத்துப் பிடிப்பது கேட்டது. ''டாடி, உங்களுக்கு... உங்களுக்கு எப்படித் தெரியும்?''



''அவன்தான் போன் செய்தான். உனக்கு ஒன்றுமில்லையே...''

''நீங்கள் நினைக்கிற மாதிரி அவர் மோசமானவரில்லை டாடி... கண்ணியமாகத்தான் நடந்து கொண்டார்...''

என்ன இவள்! அந்த அயோக்கியனுக்கு அவர் இவர் என்று மரியாதை கொடுத்துக் கொண்டு?

''காயத்ரி...'' என்று ஆரம்பித்தவர் சட்டென நிறுத்திக் கொண்டார். நான் தான் முட்டாள். பொது போனில் இதை விட அவள் எப்படிக் குறிப்பாய்ப் பேச முடியும்? காலேஜிலிருந்து பேசுகிறாள் என்பதை மறந்து விட்டேனே.''

''என்ன டாடி?''

''நானே காரை எடுத்துக் கொண்டு வருகிறேன். நீ உடனே வீட்டுக்கு வந்துவிடு...''

''ஐயோ டாடி, உங்களுக்கு என்ன ஆயிற்று? மத்யானம் எனக்கு பிராக்டிகல்ஸ் இருக்கிறது. மெயின் சப்ஜெக்டில்.. வர முடியாது.''

''சரிம்மா.. சாயந்திரம் கிளாஸிலேயே இரு. நானே வருகிறேன்.''

ராமகிருஷ்ணனின் ரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது.

டேய், ரவீந்தர் உன்னை என்ன செய்கிறேன், பார்!

டெலிபோனை இழுத்து டயல் செய்தார்.

''ஹலோ, ஐ.ஜி. ஆபீஸ்?''

# 4

ரவீந்தர் பால்கனியில் பிரம்புக் கூடை ஊஞ்சலில் உட்கார்ந்து நியூஸ் பேப்பரை மேய்ந்து கொண்டிருந்தான்.

கீழே ஜீப் வந்து டயர் தேய பிரேக் அடித்த சத்தம் கேட்டதும் குனிந்து பார்த்தான்.

போலீஸ் ஜீப்பிலிருந்து முதலில் இறங்கியவர். அட்வகேட் ராமகிருஷ்ணன்!

அவனுக்கு சுரீர் என்றது.

இவர் எப்படி தன் அட்ரஸைக் கண்டு பிடித்தார்? அதுவும் போலீஸோடு வந்து இறங்குகிறார் என்றால்...

அவனுள் எழுந்த படபடப்பை அடக்கிக் கொண்டான். மெல்லப் படிகள் இறங்கிப் போய் கதவைத் திறந்தான்.

''ஹலோ வக்கீல் சார்.. வாருங்கள்.. வாருங்கள்..''

''இவன்தான்'' என்றார் ராமகிருஷ்ணன், கூட வந்த இன்ஸ்பெக்டரிடம்.

''உட்காருங்கள் இன்ஸ்பெக்டர்'' என்றான், ரவீந்தர் புன்னகை விரித்து.

''உட்கார வரவில்லை. நான்..''

''என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?''

''இவர் பெண்ணைக் கொஞ்ச நேரம் நீ கட்த்தி வைத் திருந்ததாக இவர் புகார் கொடுத்திருக்கிறார்.''

கண்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அகல விரித்து ஆச்சரியம் காண்பித்தான் ரவீந்தர். ''இவர் பெண்ணை - நான் - கடத்தினேனா? இவருக்குப் பெண் இருக்கிறாளா? கறுப்பா, சிகப்பா, இரண்டு வயதா, பத்து வயதா? உயரமா, குட்டையா?''

''விளையாடாதே, கொன்று விடுவேன்.''

''பாருங்கள் இன்ஸ்பெக்டர். உங்கள் எதிரிலேயே என்னை மிரட்டுகிறார்.''

''வக்கீல் சார், நீங்கள் கொஞ்சம் பேசாமல் இருங்கள். நான் விசாரித்துக் கொள்கிறேன். மிஸ்டர், நீ பதினோரு மணியி லிருந்து இரண்டு மணி வரை எங்கேயிருந்தாய்?''



''நேற்றிரவா?''

''இன்றைக்குப் பகல் நேரத்தில்?''

''பதினோரு மணிக்கு... புரசைவாக்கத்தில் பஸ் ஸ்டாண டில் நின்று கொண்டிருந்தேன். பதினொன்றரைக்கு எக்மோரில் மியூசியத்தில் இருந்தேன். பஸ்ஸில் யாரோ என் பர்ஸை பிக்பாக்கெட் அடித்து விட்டார்கள். அது சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளைண்ட் கொடுக்கப் போயிருந்தேன். இன்ஸ்பெக்டர் வரும் வரை காத்திருந்து, ஒன்றரை மணிக்குத் தான் கம்ப்ளைண்ட் எடுத்துக் கொண்டார்கள். அப்புறம் கிளம்பி மெஸ்ஸிற்குப் போய் லன்ச் சாப்பிட்டு விட்டு இங்கே வந்தேன்.. ஏன், இன்ஸ்பெக்டர்?''

''பொய் சொல்லாதே ராஸ்கல். காலேஜிலிருந்து என் மகளைக் கடத்திப் போனதாய் நீ எனக்குப் போன் செய்ய வில்லை?'' வெடித்தார் ராமகிருஷ்ணன்.

''உங்கள் மகள் காலேஜ் படிக்கிறாள் என்பதே நீங்க சொல் லித்தான் எனக்குத் தெரியும்.''

''இன்ஸ்பெக்டர், இவனிடம் என்ன பேச்சு? என் மகளையே காலேஜில் போய் விசாரிக்கலாம்.''

''அப்படியானால் அவள் காணாமல் போகவில்லையா. காலேஜில்தான் இருக்கிறாளா?'' என்றான், ரவீந்தர் அப்பாவித் தனமாக.

''டேய், எனக்கு கோபமூட்டாதே.''

''இன்ஸ்பெக்டர்.. இவர் மகளிடம் விசாரித்தால் நல்லது தான். அநாவசியமாக என் மீது பழி சுமத்தியிருக்கிறார் இவர் என்று இவர் மீது கேஸ் போடக் கூட எனக்கு சாட்சி கிடைக் கும். ஆனால் ஜஸ்ட் ஒன் மினிட். நாம் எல்லோரும் போலீஸ் ஜீப்பில் போய் காலேஜில் இறங்கினால், அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு கேவலமாயிருக்கும்?'' என்றான் ரவீந்தர்.

''ஸோ?''

''ஸோ, நீங்களோ, இவரோ யாராவது ஒருவர் என்னுடன் இருங்கள். இன்னொருத்தர் காலேஜிற்குள்ளே போய் இவர் மகளைக் கூட்டி வரட்டும்.''

''ரைட்டோ.''

ஜீப்பில் ஏறினார்கள்.

காலேஜிலிருந்து நான்கு கட்டிடம் தள்ளி ஜீப் நிறுத்தப் பட்டது. ராம்கிருஷ்ணன் மட்டும் இறங்கி காலேஜிற்குள் போனார்.

பதினைந்து நிமிடத்தில் அவர் திரும்பி வந்தபோது, முகத் தில் களை இறங்கியிருந்தது. அவர் கூட வேகமாக நடந்து வந்த காயத்ரி கொஞ்சம் வெட்கமும், நிறையக் கோபமுமாக தென்பட்டாள்.

ஜீப்பை நெருங்கியதும்,

''இவரா?'' என்றாள். வாய்விட்டுச் சிரித்தாள். ''நேற் றைக்கு நம் வீட்டு வெயிட்டிங் ஹாலில் உட்கார்ந்திருந்தார். அரை செகண்டு பார்த்தேன். அவ்வளவுதான்.''

''காயத்ரி. இவன் உன்னைக் கடத்திப் போகவில்லை?''

''குட். காட்!'' காயத்ரி இரண்டு கால்களையும் தரையில் உதைத்தாள். நான் என்ன ஆட்டுக்குட்டியா, கோழிக்குஞ்சா அமுக்கிப் போட்டுத் தூக்கிக் கொண்டு போக? யாரும் என்னை எங்கேயும் கடத்தவில்லை டாடி..''

''நான் போனில் கேட்ட போது கண்ணியமாய் இருந்தான். மோசமாய் நடந்து கொள்ளவில்லை என்றெல்லாம் சொன் னாய்?''

காயத்ரியின் முகம் சிவந்தது. ''ஐயோ, அது இவர் இல்லை, டாடி.''



''வெயிட், உங்கள் அந்தரங்கமெல்லாம் எனக்கு வேண டாம்'' என்று குறுக்கில் கையை உயர்த்தினான் ரவீந்தர். ''இன்ஸ்பெக்டர், என்னைக் கேட்டீர்களே, எங்கங்கே போனே னென்று. அந்த மாதிரி இந்தப் பெண்ணைக் கேட்க வேண்டு மென்றால், அஃப்கோர்ஸ், தனியாக அழைத்துப் போய்க் கேட்டுக் கொள்ளுங்கள். என்னை அநாவசியமாக இழுத் தடித்த வக்கீலைப் பற்றி நான் ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதித் தர விரும்புகிறேன். அதற்கு என்ன ப்ரொஸீஜர்?''

''இன்ஸ்பெக்டர். இவன் என்னை மிரட்டி அட்ரஸ் வாங்கி னான்.''

''மிஸ்டர் ராம்கிருஷ்ணன், உங்கள் பெண்ணைக் கடத் தியதாக அழுத்தந்திருத்தமாக கம்ப்ளைண்ட் கொடுத்தீர்கள். அதுவே ஒரே குளறுபடியாயிருக்கிறது'' என்றார் இன்ஸ் பெக்டர்.

''எங்கேயோ தப்பு நடந்திருக்கிறது'' என்றார் ராம கிருஷ்ணன். யோசனையாக.

''தப்பு எதுவும் நடக்கவில்லை, டாடி'' என்றாள் காயத்ரி, முகத்தில் சிவப்பேற.

''இன்ஸ்பெக்டர், இவரிடம் நான் ஒரு அட்ரஸ் கேட்டது வாஸ்தவம். இவர் தர மாட்டேன் என்று மறுத்தது வாஸ்தவம். மற்றதெல்லாம் இவருடைய அழகான பொய். எனிவே, என் அட்ரஸை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்.''

''உன் வண்டியின் நம்பரை இவர் நோட் பண்ணி வைத் திருந்தார்.''

''உஷாரான பேர்வழிதான் - ஒன்றுமில்லாத விஷயத்தில் எல்லாம்...'' ரவீந்தர் சிரித்தான். ''இன்ஸ்பெக்டர், நான் போக லாமா?''

''போகலாம்.. ஸாரி ஃபார் தி ட்ரபிள்'' என்றார். இன்ஸ் பெக்டர், தொப்பியை அவிழ்த்து, தலையை சொறிந்து கொண்டே.

ஜீப்பிலிருந்து இறங்கி எதிர்சாரியில் போய்க் கொண் டிருந்த ஒரு ஆட்டோவை நிறுத்திக் கொண்டான் ரவீந்தர்.

''என்ன டாடி இதெல்லாம், போலீஸையெல்லாம் கூட்டிக் கொண்டு வந்து அசிங்கமாய்?'' என்று காயத்ரி உறுமிக் கொண்டிருந்தது காற்றோடு கேட்டது.

போலீஸையும், ராமகிருஷ்ணனையும் பைத்தியக்காரர் களாக்கிவிட்டாலும், ரவீந்தர் மிகவும் ஆடிவிட்டான்.

என் பெயர் தெரியும் அவருக்கு.

இப்போது அட்ரஸும்.

ச்சே, இந்தத் துறைக்கு நான் புதிது. எவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டும்!

முதலில் வண்டியை மாற்ற வேண்டும்.

அடுத்தது அட்ரஸை.

## 5

**வி**க்ரம்தாஸ் தன் டைரியை சரி பண்ணிக் கொண்டான். நாற்பத்தி ரெண்டு வயது அவன் நெற்றியில் இரண்டு கோடுகளை இழுத்திருந்தது. கண்ணோரங்களில் காக்கைக் கால்களை வரைந்திருந்தது.

ஏ.சி.யின் விர்ர் என்ற ரீங்காரம் காதுகளைத் தடவிக் கொண்டிருக்க, சற்றே கூடுதலான குளிரை அனுபவித்துக் கொண்டு விக்ரம்தாஸ் சுழல் நாற்காலியில் பின்புறம் சாய்ந்து மெலிதாக ஆடினான் மேஜை இழுப்பறையைத் திறந்து தயாராய் இருந்த கண்ணாடிக் கோப்பையில் ஒரு ஸ்மால் ஊற்றிக் குடித்தான். இன்டர்காம் எடுத்து, ''ஜி.எம்.மை உள்ளே அனுப்பு.'' என்றான்.



டிராயரை மூடிவிட்டு எழுந்து நின்றான்.

அவனுடைய ராஜ்யம் அவனுக்கு மிகப் பிடித்திருந்தது.

கீழே கம்பளத்தின் மெத்திற்கு அடியில் ஒளிந்திருக்கும் விலை உயர்ந்த டைல்கள், ஸ்ப்ரே சிமெண்ட் வகையில் பெயிண்ட் செய்யப்பட்ட உள் சுவர்கள், இவ்வளவு பெரிய மேஜை, அதன் மீது வீற்றிருக்கும் டெலிபோன்கள்.

விக்ரம்தாஸின் இதழ்களில் மெல்லிய பெருமிதப் புன் னகை வளைந்தது. கார்ப்பெட்டில் நடந்து கண்ணாடி சுவரை அடைந்து வெளியே பார்த்தான்.

ஆறு மாடிகளுக்கு கீழ் சென்னைப் போக்குவரத்து மௌன மாய் நகர்ந்து கொண்டிருந்தது. ஹார்பரில் உயரமான க்ரேன்கள் சோம்பல் நெறித்துக் கொண்டிருந்தன. துறை முகத்திலிருந்து பெட்ரோல் வேகன்களை இழுத்துக் கொண்டு டீசல் என்ஜின் ராயபுரம் தண்டவாளத்தில் நகர்ந்து கொண் டிருந்தது. பீச் ஸ்டேஷனில் மூன்று ரயில்கள் காத்திருந்தன.

கதவு மெலிதாக தட்டப்பட்டு ''உள்ளே வரலாமா?'' என்று குரல் கேட்டது.

''வா என் ஜெனரல் மேனேஜரே'' என்றான் விக்ரம்தாஸ்.

இருபத்திரெண்டு வயது மகன். ஜெனரல் மேனேஜர் பதவிக்கப்புறம் சற்று பொறுப்புடன் நடந்து கொள்வதாய் தோன்றியது.

''டாடி, எனக்கு வேலை இருக்கிறது, எதற்காக கூப்பிட் டீர்கள்?''

''என்ன வேலை, ஷ்யாம். என்னை விட முக்கியமான வேலையா?''

''யூனியன் லீடர் வந்திருக்கிறான்.''

விக்ரம்தாஸின் நெற்றி சுருங்கியது. ''இன்னும் தொழி லாளர் பிரச்னைக்குத் தீர்வு காணவில்லையா நீ?''

"நீங்கள் சொன்ன ஐடியா இங்கே பலிக்கவில்லை டாடி. பணம் வேண்டாமென்கிறான்."

"எவ்வளவு கொடுத்தாய்?"

"இரண்டு லட்சம் தருவதாகச் சொன்னேன். வேண்டாம் என்றான். இரண்டரை, மூன்று என்று மூணரை வரை ரேட்டை உயர்த்திப் பார்த்தேன் சிரிக்கிறான். தொழிலாளர்களுக்கு போனஸும், சம்பள உயர்வும் தான் வேண்டுமாம். நீங்கள் கொடுப்பதாகச் சொன்ன பணத்தைத் தொழிலாளர் நல நிதியில் சேர்த்து விடுங்கள் என்று கித்தாப்பாய் சொல்கிறான்."

"உன்னால் தீர்க்க முடியவில்லை?"

"முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், டாடி.."

"என்னிடம் பொறுப்பை விடு. பத்தாயிரம் ரூபாயில் காரியத்தை முடித்து விடுகிறேன்."

"எப்படி டாடி?"

"நீயும் கூட இருந்து பாரேன். அவனை அழைத்துக் கொண்டு என் ரூமுக்கு வா. ஆனால் நீ குறுக்கே பேசக்கூடாது..."

விக்ரம்தாஸ் தன் நாற்காலியில் போய் உட்கார்ந்தான்.

ஷ்யாம் அப்பாவை ஒரு சந்தேகப் பார்வை பார்த்துவிட்டு, வெளியேறினான்.

விக்ரம்தாஸ் இன்டர்காமில் பி.ஏ.வை அழைத்தான். "இன்னும் அரை மணி நேரத்திற்கு என்னை யாரும் டிஸ்டர்ப் செய்யக்கூடாது. ஜி.எம்மும் யூனியன் லீடரும் உள்ளே வரட்டும்."

மேஜை டிராயரைத் திறந்து அங்கிருந்த டேப் ரிக்கார்டரில் புது காஸெட்டைப் போட்டு ரெக்கார்ட் பட்டனை அழுத்தினான்.



ஷ்யாமும், யூனியன் லீடர் செல்வகுமாரும் வந்ததும் இருக்கைகள் காட்டினான். வணக்கங்கள் முடிந்ததும், பேச்சு துவங்கியது.

"என்ன செல்வகுமார். டீலை சீக்கிரம் முடிப்பாய் போல் தெரியவில்லையே?"

"ஜி.எம். ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாரே சார்."

"என்ன கேட்கிறாய் நீ?"

"தொழிலாளர்களுக்கு பத்து பர்ஸன்ட் போனஸ் போதாது சார். முப்பது பர்ஸன்ட் லாபம் வந்திருக்கிறது கம்பெனிக்கு. உழைத்தவர்களுக்கு இன்னும் ஐந்து பர்ஸன்ட் கூடக் கொடுத்தால் தப்பில்லை."

"நீ கேட்பது அதிகம்."

"அதிகமில்லை சார்.. இதைக் கொடுத்தால் தான் எங்கள் போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்வேன்."

"இதனால் கம்பெனிக்கு எவ்வளவு செலவாகும் தெரியுமா?"

"பத்து லட்ச ரூபாய்?"

"போனஸைக் கொடுத்து விட்டால் தொழிலாளர்கள் போராட்டம் இருக்காது? நீ சொல்வதை அவர்கள் கேட்பார்களா?"

"சார். தொழிலாளர்கள் எல்லோரும் என்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னவுடன் போராட்டத்தை வாபஸ் வாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் சம்பளம் இழப்பதில் விருப்பம் இருக்குமா சார்?"

"நாளைக்கு மறுபடியும் இன்னும் ஐந்து பர்ஸன்ட் கொடு என்று கேட்க ஆரம்பித்தால்?"

"நான் சொல்லாமல் அவர்களாக எதுவும் கேட்க மாட்டார்கள் சார். இதைக் கொடுத்தால் திருப்தியுடன் வேலை செய்ய வந்து விடுவார்கள்."

''அவர்களை நீ சமாளித்துக் கொள்வாய்?''

''நான் சமாளித்துக் கொள்கிறேன் சார்.''

''இது போதுமா, வேறு ஏதாவது கோரிக்கை இருக்கிறதா?''

''இது போதும் சார் இப்போதைக்கு, நீங்கள் இவ்வளவு சுலபமாக பேச்சு வார்த்தையை முடித்துத் தருவீர்கள் என்று தெரிந்திருந்தால் முதலிலேயே சேர்மனைப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருப்பேன். சார்.''

''இன்னொரு விஷயம். செல்வகுமார்..''

''சொல்லுங்கள் சார்.''

''நீ கேட்டபடி போனஸையும், சம்பள உயர்வையும் தருவதாக கம்பெனி ஒத்துக் கொண்டு விட்டது என்பதை நீ உடனே உன் நண்பர்களிடம் சொல்ல வேண்டாம்...''

''ஏன் சார்?''

''நாளைக்கு என் மகன் - ஸாரி, இப்போது ஜி.எம். என்றுதான் செல்ல வேண்டும். ஜி.எம். ஷ்யாமின் பிறந்த நாள். அவனுடைய பிறந்த நாள் பரிசாக இதை செய்வோம். அஃபீகோர்ஸ் உன் பெயரைச் சொல்லி, உன்னுடைய போராட்டத்தினால் தான் கம்பெனி இந்த முடிவு எடுத்தது என்று சொல்வோம். அதுவரை பொறுத்திருக்க முடியுமா?''

''எப்படி சார்?''

''இதைக்கூட நீ எங்களுக்காக செய்யாவிட்டால் எப்படி?''

''சரி சார். ஆனால் கீழே இறங்கியதுமே தொழிலாளர்கள் என்னைப் பிடித்துக் கொள்வார்களே. நான் என்ன பதில் சொல்வது?''

''ஷ்யாம், செல்வகுமாரை நம் கெஸ்ட் ஹவுஸிற்குக் கூட்டிப்போ. இன்னும் பேச்சு வார்த்தை முடியவில்லை என்று சொல்லி இன்று ராத்திரி மட்டும் தொழிலாளர்களை சந்திக்காமல் இருந்து விடேன், செல்வகுமார்.''



''நீங்கள் இவ்வளவு தூரம் தருவதாக சொல்லியிருக்கும்போது நான் எப்படி மாட்டேன் என்பேன்? சரி சார்.''

''ஷ்யாம் கெஸ்ட் ஹவுஸில் நீயும் இரு. நான் அங்கு வருகிறேன். வீ வில் ஒர்க் அவுட் எவ்ரிதிங்.''

''சரி டாடி...'' என்று ஷ்யாம் செல்வகுமாரைப் பார்த்து, ''ஒரு நிமிஷம் வெளியே வெயிட் பண்ண முடியுமா?'' என்றான்.

செல்வகுமார் வெளியேறியதும் விக்ரம்தாஸைப் பார்த்துப் பல்லை நறநறத்தான். ''இந்த மாதிரி பேசி டீலை முடிக்க வேண்டுமென்றால் நான் எப்போதோ முடித்திருப்பேன்.''

விக்ரம்தாஸ் சிரித்தான். டிராயரைத் திறந்து டேப் ரிகார்டரை அணைத்தான். கோட் பாக்கெட்டிலிருந்து ஒரு காப்ஸ்யூல் ஷீட்டை எடுத்து நீட்டினான். ''கெஸ்ட் ஹவுஸிற்குப் போனதும் இரண்டு காப்ஸ்யூலை டீயில் கலந்து அவனுக்குக் கொடுத்து விடு. நான் ஒரு மணி நேரத்தில் அங்கே வருகிறேன்.''

ஷ்யாம் வெளியேறியதும், பர்ஸனல் டெலிபோனை இழுத்து குறிப்பிட்ட நம்பரை டயல் செய்தான். ''என்னிடம் ஒரு காஸெட் இருக்கிறது. ஆடியோ காஸெட். அதை ஐம்பது பிரதி எடுக்க வேண்டும். அர்ஜண்ட். ஓ.கே. கொடுத்தனுப்புகிறேன்..'' என்று சொல்லி ரிசீவரை வைத்தான்.

தன் ரூம் கதவை உள்புறம் தாளிட்டு விட்டு வந்தான்.

* * *

தாஸ் பிரதர்ஸ் என்ற நியான் போர்டு சூரிய மறைவிற்காக காத்திருக்க, எதிர் சாரியில் தன்னுடைய புதிய டி.வி.எஸ். சுஸீகியுடன் காத்திருந்தான், ரவீந்தர்.

ஹீரோ ஹோண்டாவை ஐயாயிரம் ரூபாய் தள்ளுபடியில் விற்று விட்டு இந்த வண்டியை இன்று காலை எடுத்திருந்தான்.

'D.B.' என்று தாஸ் பிரதர்ஸின் சுருக்கத்தை ஸ்டிக்கராக முதுகில் சுமந்த சுமோ கார் வெளியேறியதும், தன் வண்டியை உதைத்து, அதைப் பின் தொடரலானான்.

## 6

ஷ்யாம்தாஸ் ஹாலில் நடை போட்டான்.

டாடியின் தந்திரம் எதுவும் அவனுக்குப் பிடிபடவில்லை. யூனியன் லீடர் கேட்டதையெல்லாம் தருவதாக ஒத்துக் கொள்வது தான் சாமர்த்தியம் என்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவர் கொடுத்த மாத்திரை விஷமாத்திரையா, மயக்க மாத்திரையா தெரியவில்லை. இதோ யூனியன் லீடர் செல்வகுமார் சோபாவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

கெஸ்ட் ஹவுஸின் முகப்பில் கார் வந்து பிரேக் அடிக்கும் ஒலி கேட்டதும் ஜன்னலுக்கு விரைந்தான்.

டாடிதான்!

கதவை திறந்து விட்டான்.

விக்ரம்தாஸ் விஷமமான புன்னகையுடன் உள்ளே நுழைந்தான். அவன் தோளில் ஒரு போலராய்ட் காமிரா தொங்கியது.

''தூக்கு நம் யூனியன் லீடரை...''

இருவருமாகத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்தார்கள்.

விக்ரம்தாஸ் ஃப்ரிட்ஜிலிருந்து பீர்பாட்டிலை எடுத்து மூடி உடைத்து கட்டிலருகே டீப்பாயில் வைத்தான். ஒரு கண்ணாடிக் கோப்பையில் விஸ்கி கொஞ்சம் ஊற்றி அதன் அருகே வைத்தான். இன்னொரு கோப்பையை விஸ்கியுடன் கவிழ்த்தான்.



செல்வகுமாரின் தலைக்குக் கீழே இன்னொரு தலையணை கொடுத்து உயர்த்தி அவன் கன்னங்களைப் பிடித்து அமுக்கி வாயைத் திறக்கச் செய்து. அதில் விஸ்கியை ஊற்றினான்.

செல்வகுமார் தாறுமாறாகப் படுத்திருப்பதை போட்டோ எடுத்தான்.

''டாடி - என்ன செய்கிறீர்கள் என்று எனக்கு சொல்லக் கூடாதா?''

''செல்வகுமார் கெட்டவன், ஷ்யாம். நம்முடன் பேசியதை டேப்பில் பதிவு செய்து ஐம்பது எக்ஸ்ட்ரா காப்பி போட்டு தொழிலாளர்களிடம் விநியோகம் செய்திருக்கிறேன். அதைக் கேட்டு விட்டுத் தொழிலாளர்கள் கொதித்துக் கொண்டிருப்பார்கள்...''

ஷ்யாம் புரியாமல் விக்ரம்தாஸைப் பார்த்தான்.

''அவன் பேசியதைக் கேட்டால் ஏன் கோபப்படப் போகிறார்கள்?''

விக்ரம்தாஸின் புன்னகையில் விஷமம் கூடியது.

''அவன் பேசிய வார்த்தைகள் தான்.. அவனுக்கெதிராக எப்படிப் பயன்படப் போகிறது என்று நீ பார்க்கிறாயா? டேப்பைக் கேள்.''

டேப் ரிகார்டரில் டேப்பைப் போட்டு இயக்கினான், விக்ரம்தாஸ்.

''என்ன செல்வகுமார், டீலை சீக்கிரம் முடிப்பாய் போல் தெரியவில்லையே?'' - விக்ரம்தாஸின் குரல்.

''ஏன் சார்?'' - செல்வகுமாரின் குரல்.

''என்ன கேட்கிறாய் நீ?''

''ஐந்து லட்சம் ரூபாய்.''

"நீ கேட்பது அதிகம்."

"அதிகமில்லை சார்... இதைக் கொடுத்தால் தான் எங்கள் போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்வேன்..."

"நீ கொஞ்சம் இறங்கி வந்தால் என்ன?"

"எப்படி சார்?"

"உனக்கு மூன்று லட்சம் தருகிறேன்.. போதுமா?"

"இது போதும் சார் இப்போதைக்கு..."

"தொழிலாளர்கள்?"

"நான் சொல்லாமல் அவர்களாக எதுவும் கேட்கமாட்டார்கள் சார்... நான் சமாளித்துக் கொள்கிறேன் சார்.. தொழிலாளர்கள் எல்லோரும் என்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்..."

"நாளைக்கு மறுபடி போராட்டம். வேலைக்கு வரமாட்டேன் என்றெல்லாம் ஆரம்பிக்க மாட்டாயே? ஒத்துழைப்பாய் தானே?"

"நீங்கள் இவ்வளவு தூரம் தருவதாக சொல்லியிருக்கும் போது, நான் எப்படி மாட்டேன் என்பேன் சார்?"

விக்ரம்தாஸ் டேப்பை அணைத்தார். "எப்படி?"

"டாடி.. எப்படி டாடி இது?"

"என் கேள்விகளை மட்டும் மாற்றினேன். அவன் சொன்ன பதில்களை தேவையான இடத்திற்கு மாற்றிப்போட்டு டேப் பண்ணிவிட்டேன். யூனியன் லீடர் மூன்று லட்சம் தனக்கு பர்ஸனலாகக் கேட்கிறார் என்று பிரச்சாரம் செய்யப் போகிறேன். போதாதற்கு இங்கு அவன் குடித்துவிட்டு படுத்துக் கிடப்பது போட்டோ வேறு எடுத்தாயிற்று..."

"டாடி யூ ஆர் கிரேட்..."



"கதை அதோடு முடியவில்லை, டியர்.. நாளைக்கு விடிந்து எழுந்ததும், செல்வகுமார் உண்மையெல்லாம் சொல்லிவிட மாட்டானா? சொன்னால் நம்முடைய ட்ரிக் அம்பலத்திற்கு வந்து விடாதா?"

"அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள், டாடி?"

"செல்வகுமாரை அவன் வீட்டுக்கருகில் அடித்துப் போடப் போகிறோம்... ஆள் எல்லாம் செட் அப் செய்தாயிற்று. தொழிலாளர்கள் அவன் மீது கோபப்பட்டு அடித்துப் போட்டு விட்டதாக கதையை மாற்றிவிடலாம். அவர்களுக்கெல்லாம் இப்போது கேட்டதில் பாதி போனாஸ் தந்தாலே திருப்தியாய் வேலைக்குத் திரும்பி விடுவார்கள்..."

"உங்களிடமிருந்து நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியது இருக்கிறது டாடி..." என்றான் ஷ்யாம், கண்கள் நிறைந்த ஆச்சரியத்துடன்.

"வா, புறப்படுவோம்..."

"இவன்?"

"இவனை நாம் தூக்கிப் போக வேண்டுமா? வேண்டாம். நாம் போனபின் அதற்கு ஆட்கள் வருவார்கள்..."

ஷ்யாம் அப்பாவின் சாதுர்யத்தை இன்னமும் ஜீரணிக்க முடியாதவனாக வியந்து கொண்டே ஆட்டுக்குட்டி போல அவர் பின்னே நடந்தான்.

அவர்களுடைய சுமோ புறப்பட்டுப் போன பத்தாவது நிமிடம் இன்னொரு அம்பாஸிடர் அந்த கெஸ்ட் ஹவுஸின் முன் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கிய நான்கு தடியன்களும், கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள். அதிர்ந்தார்கள்.

முதலாளி சொன்ன பெட்ரூம் இருந்தது. காலி விஸ்கி கோப்பை இருந்தது. படுக்கை கலைந்து கிடந்தது. ஆனால் படுக்கையில் படுத்துக் கிடப்பான் என்று சொன்ன இடத்தில் - 

செல்வகுமாரைக் காணவில்லை!

# 7

செல்வகுமாரின் விழிகள் இமைகளுக்குள் மெல்ல அசைந்தன. திடீரென்ற முடிவுடன் திறந்தன.

''குட் ஈவினிங்'' என்றான் ரவீந்தர்.

''நான்... நான்...'' செல்வகுமார் அரண்டு எழுந்தான். ''யார் நீ? நான் எங்கு இருக்கிறேன்?''

''உன் முதலாளியின் கெஸ்ட் ஹவுஸில் படுத்துத் தூங்கியது நினைவருக்கிறதா உனக்கு?''

செல்வகுமாருக்குள் நினைவு அலையடித்து திரும்பிய மாதிரி இருந்தது. ''தூங்கினேனா? முதலாளியின் மகனுடன் அங்கே போனேன். ஒரு கிளாஸ் லைம் ஜூஸ் சாப்பிட்டேன்... அவ்வளவுதான் நினைவிருக்கிறது. நீ யார்?''

''அதற்கு முன்னால் ஒரு டேப்பை கேட்கிறாயா?''

ரவீந்தர் கெஸ்ட் ஹவுஸ் ரிக்கார்டரிலிருந்து எடுத்து வந்த டேப்பைப் போட்டான்.

''என்ன செல்வகுமார், டீலை சீக்கிரம் முடிப்பாய் போல் தெரியவில்லையே?'' என்று ஆரம்பித்தது டேப்.

ஒவ்வொரு கேள்வியும், அதற்கான பதிலும் ஒலிபரப்பாக, ஆக. செல்வகுமாரின் முகம் இறுகியது.

''அநியாயம் இது! இந்த மாதிரி நான் சொல்லவேயில்லை.''

''சொன்னாய். இது உன் குரல்தான்... ஆனால் இந்தக் கேள்விகளுக்கான பதில்களாய்ச் சொல்லவில்லை.''

ரவீந்தர் விக்ரம்தாஸின் தந்திரத்தை செல்வகுமாரிடம் விளக்கினான். செல்வகுமாரின் பிளந்தவாய் பிளந்தபடி நின்றது.



''யார் நீ?''

''விக்ரம்தாஸின் எதிரி. அதனால் உன்னுடைய நண்பன். என் பெயர் ரவீந்தர்.''

''என்னை கெஸ்ட் ஹவுஸிலிருந்து நீதான் எடுத்து வந்தாயா?''

''ஆமாம்....''

''தேங்க்யூ... இப்போதே போக வேண்டும்... தொழிலாளர்களிடம் உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும்... இல்லாவிட்டால் அவர்கள் என்னையல்லவா தப்பாக நினைத்துவிடுவார்கள்!'' செல்வகுமார் பரபரப்பாக எழுந்தான்.

''இரு... அவசரப்படாதே...'' என்று கையமர்த்தினான். ரவீந்தர், ''தொழிலாளர்கள் இந்த டேப்பைக் கேட்டு விட்டு கொதிப்பில் இருப்பார்கள். உன்னைப் பேசக் கூட விடமாட்டார்கள். அடித்தே தீர்த்துக் கட்டி விடுவார்கள். தொழிலாளர்கள் அடிக்காவிட்டாலும், அந்தப் போர்வையில் விக்ரம்தாஸின் கூலியாட்கள் உன்னைத் தொலைத்துவிடுவார்கள்.''

''அதற்காக? கெட்ட பெயரோடு என்னை வாழச் சொல்கிறாயா?''

''அவசரப்படாதே என்று தான் சொன்னேன்... நீ காணாமல் போன நிலைமையில் இப்போது அவர்கள் எப்படிக் கதையைத் திரிக்கிறார்கள் என்று பார்ப்போம்...''

''வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதில் என்ன லாபம், ரவீந்தர்?''

''உனக்கு ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயரை இனிமேல் உன்னால் துடைத்து எறிய முடியாது. விக்ரம்தாஸின் வாயாலேயே அவர் செய்த திருட்டுத்தனத்தையும், தந்திரத்தையும் ஒத்துக் கொண்டால் தான் தொழிலாளர்கள் உன்னை நம்புவார்கள்...''

"அவர் ஒத்துக் கொள்வாரா?"

"ஒத்துக் கொள்ள வைக்கப்போகிறோம்..."

"எப்படி?"

"சொல்கிறேன்.. கேள்... உன்னுடைய ஒத்துழைப்பும் எனக்குத் தேவை."

ரவீந்தர் தன் திட்டத்தை விளக்க ஆரம்பித்தான்.

***

விக்ரம்தாஸ் போனை அறைந்து சாத்தினான்.

"வீட்டிற்கும் வரவில்லையாம், செல்வகுமார்..."

ஷ்யாம் - அவர் முகத்தை டென்ஷனோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"இரண்டு மாத்திரையையும் ஜூஸில் கலந்தாய்தானே?"

"ஆமாம், டாடி..."

"அப்புறம் அவன் எப்படி எழுந்து போயிருக்க முடியும்?"

"புரியவில்லை டாடி..."

"அவனுக்காக நாம் 'காத்திருக்கப் போவதில்லை. இப்போதே கட்டுக்கதையை அவிழ்த்து விடுவோம். அவனைப் பற்றி உண்மை வெளியானதும் பயந்து ஓடிப் போய்விட்டான் என்று..."

"சரி டாடி..."

"அவன் எங்கெல்லாம் போயிருக்க முடியுமோ, அத்தனை இடத்தையும் ஆள் வைத்து கண்காணிக்கச் சொல்வோம்..."

"சரி டாடி..."

"இதற்குத்தான் லாய்க்கு நீ. சரி டாடி, சரி டாடி..." என்று அவனைப் போலவே பழித்துக் காட்டினான் விக்ரம்தாஸ்.



அவனுடைய திட்டம் அவன் எதிர்பாராத கோணத்தில் திரும்பி விட்டதால் ஏற்பட்டிருக்கும் நியாயமான கோபம் காரணமாகத்தான் இவ்வளவு சூடாகப் பேசுகிறான். ஷ்யாமுக்குப் புரிந்தது. வெளியேறினான்.

ஹாலுக்கு வந்த போது, அவனுடைய பி.ஏ..." சார் உங்களுக்குப் போன்..."

ரிசீவரை வாங்கி "ஹலோ..." என்றான்.

"ஹலோ ஸ்வீட் பேபி..." என்றது மறுமுனைக் குரல்.

"யார் பேசுவது?"

"என் குரலா உனக்குப் புரியவில்லை? அதுதான் டேப், டேப்பாகக் கேட்டுக் கொண்டிருப்பாயே?"

"செல்வகுமார்!"

"ஆமாம்..."

"எங்கேயிருக்கிறாய்?"

"பத்திரமான இடத்தில், நீ தயார் செய்திருக்கும் டேப்பைக் கேட்டேன். எனக்குச் சிரிப்பு வந்தது முதலில். ஆனால் திட்டமிட்டு நீங்கள் செய்திருக்கும் கோளாறிலிருந்து நான் தப்புவது என்பது கஷ்டம் என்று புரிந்துவிட்டது. தொழிலாளர்கள் எப்படியும் இனி என் பேச்சை நம்பப்போவதில்லை. அதற்குப் பேசாமல் நீ கொடுக்கிற பணத்தை வாங்கி கொண்டு ஒதுங்கி விடலாமே என்று பார்க்கிறேன்..."

ஷ்யாமின் ரத்தம் விர்ர்ர் என்று சூடுபிடித்தது. இதோ மீனே வந்து வலையில் சிக்குகிறது.

"எவ்வளவு வேண்டும்?"

"முதலில் தருவதாகச் சொன்ன மூன்றரை லட்சம்."

"எங்கே கொண்டு தரட்டும்?"

"அதைச் சொல்வதற்கு முன்னால் ஒரு விஷயம்.. உன் அப்பாவிடம் இது பற்றி நீ சொல்லக் கூடாது..."

''ஏன்?''

''அவர் இதற்கு சம்மதிக்க மாட்டார். என்னை முட்டாளாக்கப் பார்ப்பார். நான் இப்பொழுதே பத்திரிகைகளுக்கு நியூஸ் கொடுத்து விடுவேன்...''

''சரி, அப்பாவிடம் சொல்லவில்லை. எங்கே வர வேண்டும்?''

''இன்னும் ஒரு மணி நேரத்தில் உனக்கு ஆபீஸிற்கு போன் செய்கிறேன்...''

ஷ்யாம் யோசித்தான். அப்பாவிடம் சொல்லி அவருடைய அனுமதியை வாங்கிவிடுவது தான் உசிதம் என்று உள்மனம் எச்சரித்தது. இன்னொருபுறம் அவர் உன்னை எதற்கும் லாயக்கில்லை என்றாரே, செல்வகுமாரை அவருக்கு முன்னால் கொண்டு நிறுத்தி, பார்த்தாயா என் சாமர்த்தியத்தை என்று காட்டிக் கொள்ள இதைவிட இன்னொரு சந்தர்ப்பம் அமைந்து விடாது என்று ஆசை ததும்பியது.

தனியே ரிஸ்க் எடுப்பது என்று முடிவு செய்தான்.

பணம் கொடுக்கப் போகும் போது, தன்னுடன் இரண்டு தடியன்களை ரகசியமாக அழைத்துப் போய் அந்த செல்வகுமாரை மடக்குவது என்று தீர்மானம் செய்தான்.

ஆபீஸிற்கு ஒரு மணி நேரத்தில் போன் வந்தது.

ஷ்யாம் பணத்தை ஏற்பாடு செய்தான்.

***

நேஷனல் ஹைவேயிலிருந்து பிரிந்து சரிந்து இறங்கும் மண்பாதை இருபுறமும் அடர்ந்த மரங்களுக்கிடையில் மாட்டு வண்டிகளின் சக்கரங்கள் கெட்டித்திருந்த பூமியில் அந்தக் கார் மெல்ல இறங்கியது. முன் விளக்குகளை அணைத்தது.

ஸ்டியரிங் பிடித்திருந்த ஷ்யாம் பின்புறம் திரும்பினான்.



''ஷ்.. நான் முதலில் இறங்குகிறேன். சமயம் பார்த்து நீங்கள் பின்னால் வாருங்கள்....''

பின் சீட்டில் பதுங்கியிருந்த இரண்டு தடியன்களும் கைகளில் உருட்டுக் கட்டையோடு மெல்ல முதுகு மட்டும் உயர்த்தித் தயாரானார்கள்.

ஷ்யாம் இறங்கினான். இங்கிருந்து ஏழாவது மரம் என்று தானே சொன்னான். செல்வகுமார்? மரங்களை ஒன்றன் பின் ஒன்றாக எண்ணிக் கொண்டு முன்னேறினான்.

காருக்குப் பின்புறம் இருந்த மரத்தின் பின்னிருந்து செல்வகுமார் மெல்ல வெளிப்பட்டான். சரேலென காரை அடைந்து, அதன் முன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

இருட்டில் கார் திறந்து மறுபடி நுழைந்தது. யார் என்று பார்க்க, பின் இருக்கையில் இருந்த இருவரும் தலை தூக்க, அவர்கள் முகத்தில் ஸ்ஸ்ஸ் என்ற சப்தத்துடன் ஸ்ப்ரே செய்யப்பட்ட மயக்க மருந்தில் இருவரும் உபயோகமற்றவர்களானார்கள். அவர்களின் பலவீனமான கைகளிலிருந்து உருட்டுக் கட்டைகளைப் பிடுங்கினான், செல்வகுமார். கதவு திறந்து இருவரையும் இழுத்து மரத் தொடர்ச்சியின் இருளில் மறைந்தான்.

முன்னேறிக் கொண்டிருந்த ஷ்யாம் குறிப்பிட்ட மரம் வந்ததும் சற்றுத் தயங்கினான். அவனுடன் வந்த ஆட்கள் சௌகர்யமான மரங்களின் பின்னே ஒளிந்து கொள்ள அவகாசம் கொடுத்தான். கையில் கொண்டு வந்திருந்த பெட்டியைக் கீழே வைத்தான்.

சரசர என்று சருகுகள் மிதிபடும் ஒலி பின்புறம் கேட்டது. உஷாராகித் திரும்புமுன் பின்புறமிருந்து ஒரு கை அவன் வாயைப் பொத்தியது. மற்றது அவன் கழுத்தைப் பிடித்தது.

''சத்தம் வரக்கூடாது'' என்று ஒரு குரல் காதில் எச்சரித்தது. எந்நேரமும் தன்னுடைய ஆட்கள் இடையில்

பாய்ந்து தன்னைக் காப்பாற்றக் கூடும் என்ற எதிர்பார்ப்போடு, கண்களை அகலமாய் உருட்டித் தேடிக் கொண்டிருந்த ஷ்யாம் காருக்கு தேய்த்து இழுத்துப் போகப்பட்டான்.

## 8

விக்ரம்தாஸ் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தான்.

மிகுந்த குழப்பத்தில் தள்ளப்படும்போது மட்டும், இந்த சிறு வயதுப் பழக்கம் அவனிடம் மின்னல் போல் மறுபடி மின்னுவது தெரிந்திருந்ததால், அவனுக்கு எதிரே உட்கார்ந் திருந்த மரியதாஸ் எதுவும் பேசாமல் காத்திருந்தான்.

விக்ரம்தாஸ் முதலில் தொண்டையைத் திறந்தான்.

''ராத்திரியிலிருந்து இந்தப் பயலைக் காணோம் மரிய தாஸ்.''

''எந்தப் பயல்?''

''ஷ்யாம். யூனியன் லீடர் செல்வகுமாரை அழுத்தி வரப் போவதாக அவன் பி.ஏ.விடம் சொன்னானாம். என்னிடம் எதுவும் சொல்லாமல் தனியே போயிருக்கிறான். கவலையாய் இருக்கிறது.''

''தனியாகவா?''

''தனியாக என்றால் கூட இரண்டு தடியன்களையும் அழைத்துப் போயிருக்கிறான்.. ஆனால்..''

''வெயிட், விக்ரம்..'' என்றான் மரியதாஸ், தன் கன்னத்து பருவை உருட்டிக் கொண்டு, ''சின்னப் பையன்கள் என்றாலே முட்டாள்களில்லை. அவர்களுக்கும் புத்திசாலித்தனமிருக் கும் காரியம் சாதிக்கும் குணம் இருக்கும்..''

போன் அடித்தது.



விக்ரம்தாஸ் பாய்ந்து எடுத்தான்.

''டாடி..'' ஷ்யாமின் குரல்தான். ஆனால் உற்சாகமான, வெற்றி நிறைந்த குரலில்லை. பயமும், மெலிதான அழுகை யும் கலந்து, தோல்வியின் கசப்பை ருசி பார்த்த குரல்.

''ஷ்யாம்.. எங்கிருந்து பேசுகிறாய்?''

''எனக்கே தெரியாது டாடி... செல்வகுமாரும், இன் னொருத்தனும் என்னை எங்கேயோ அடைத்து வைத்திருக் கிறார்கள். செல்வகுமார் உங்களிடம் பேச வேண்டுமாம்.''

''கொடு'' என்றான் விக்ரம்தாஸ், பரபரப்பாக.

''வணக்கம் முதலாளி...''

''செல்வகுமார்.. உனக்கு எந்தக் கோபம் இருந்தாலும் என் மீது காட்டு.. ஷ்யாமை ஒன்றும் செய்து விடாதே..''

''ஒரு சின்ன நகத்தைக் கூட வெட்டாமல் திருப்பித்தர நான் தயார். ஆனால் அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமே முதலாளி...''

''எவ்வளவு பணம் வேண்டும், சொல்..''

''ஏற்கனவே கேட்டபடி பத்து லட்சம் - எனக்கு இல்லை. தொழிலாளர்களுக்கு..''

''தருகிறேன்..''

''அத்தோடு கதை முடியவில்லை. நானும் நீங்களும் பேசிய ஒரிஜினல் டேப்பை இன்று சாயந்திரத்திற்குள் ரிலீஸ் செய்ய வேண்டும்.''

''செல்வகுமார்!''

''முடியாதென்றால் இப்போதே சொல்லி விடுங்கள்.''

''நான் யோசிக்க வேண்டும்.''

''கௌரவம் போய்விடுமே என்று பார்க்கிறீர்கள். கௌரவம் முக்கியமா, வம்சம் முக்கியமா என்று யோசித்துக் கொள்

ளுங்கள். இன்று மாலை தினசரியில் எல்லா பத்திரிகை களிலும் வரவேண்டும். உண்மையான உரையாடல் என்ன வாய் இருந்தது. அதை நீங்கள் எப்படித் திரித்து எனக்கெதிராக பயன்படுத்தினீர்கள். கெஸ்ட் ஹவுஸில் என்னை மயக்கப் படுத்தியது நீங்கள் தான் என்ற எல்லா விவரமும் பளிச் பளிச் என்று வரவேண்டும். தொழிலாளர்களின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டும்.''

''பேப்பரில் நியூஸ் வேண்டாமே, செல்வகுமார்... மற்றபடி நீ சொன்னது எல்லாவற்றிற்கும் ஒப்புக் கொள்கிறேன்.''

''நோ, இந்த விஷயத்தில் நான் பின்லேடன் மாதிரி, பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க மாட்டேன். யோசிக்க உங்களுக்கு நேரம் வேண்டுமென்றால் ஒரு மணி நேரம் தருகிறேன். ஆனால், ஒரு எச்சரிக்கை... புத்திசாலித்தனமாக நடப்பதாய் நினைத்து போலீஸையோ, வேறு ஹெல்ப் பையோ கூப்பிடாதீர்கள். நான் அழிந்தாலும் பரவாயில்லை என்று இந்த இடத்தில் ஒரு வெடிகுண்டு புதைத்து வைத்திருக்கிறேன். எங்கிருந்து நான் தாக்கப்பட்டாலும், குண்டு வெடிக்கும். ஷ்யாமை அப்புறம் கூடையிலும், முறத் திலும் தான் அள்ளிப் போகலாம்.''

ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்த விக்ரம்தாஸின் முகத்தில் உயிர் வற்றிப் போயிருந்தது.

''என்ன?'' என்றான் மரியதாஸ்.

''ஷ்யாமைக் கடத்தி விட்டார்கள்..'' விக்ரம்தாஸ் போனில் பேசியதையெல்லாம் விவரித்துச் சொன்னான். ''அவன் அம்மா உயிரோடு இருந்திருந்தால் அவ்வளவுதான், என்னைக் கொன்றே போட்டிருப்பாள்...''

''நடக்க வேண்டியதைப் பேசு, விக்ரம்.''

''இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்வது, மரியதாஸ்?''



''தாஸ் பிரதர்ஸின் பேரையேக் கவிழ்க்கும்படி நடந்து கொண்டு விட்டான், உன் முட்டாள் மகன்...''

''அவனைத் திட்டாதே...''

''எதற்கும் வக்கீலிடம் ஒரு வார்த்தை கலந்து பேசி விடுவது, நல்லது விக்ரம். ஒரு மணி நேரம் கழித்து அவன் போன் செய்யும்போது, எங்கிருந்து பேசுகிறான் என்று...''

''வேண்டாம், போலீஸ் வேண்டாம், மரியதாஸ்... நாமே எத்தனை பேரை மிரட்டியிருக்கிறோம். போலீஸ் வந்தால் சிக்கல், குழப்பம், வக்கீலிடம் கூட முழு விவரத்தையும் சொல்லாமல் இருப்பது தான் புத்திசாலித்தனம் எதற்கும் அவரை வரவழை.''

* * *

அட்வகேட் ராமகிருஷ்ணன் விக்ரம்தாஸ் விட்ட புகையைக் கையால் விரட்டி விட்டு உட்கார்ந்தார்.

''எனி பிராப்ளம்?''

''தொழிலாளர்களுக்கு எதிராக அவர்களுடைய லீடரையே திருப்பி விட நாங்கள் ஒரு ட்ரிக் செய்தோம். அதை இப்போது வாபஸ் வாங்க வேண்டிய சூழ்நிலை...''

விக்ரம்தாஸ் வக்கீலுக்கு தேவையான அளவு எடுத்துச் சொன்னான்.

''ஐ.ஸீ.. பேப்பரில் அறிக்கை வந்தால் நிச்சயம் கம்பெனி யின் பெயர் பாதிக்கப்படும். அது இல்லாமல் நெகோஷியேட் பண்ணிப் பார்ப்பது தானே?''

''அவன் பிடிவாதமாயிருக்கிறான்..''

''இதோ பார் விக்ரம். நம் ஊர் ஜனங்கள் எல்லோரும் அரை முட்டாள்கள். அவர்களுக்கு ஞாபக சக்தி ரொம்பக் கம்மி. இன்றைக்கு ஒரு கட்சியில் இருந்து கொண்டு எதிர் கட்சியை வாய்க் கூசாமல் ஏசுபவன். நாளைக்கே அந்தக் கட்சியில்

சேர்ந்து கொண்டு பழைய கட்சியை வாங்கு வாங்கு என்று வாங்கினால் கூட அதைப் பொருட்படுத்தாமல் ஏற்றுக் கொள்ளும் மக்கள் நம் மக்கள். அவரவர்க்கு ஆயிரம் பிரச்சனைகள் தினம்தோறும் இருக்கிறது. இதில் விக்ரம்தாஸ் என்ன செய்தான், ஏது செய்தான் என்று கவனித்துக் கொண் டிருக்கப் போவதில்லை. இப்போதைக்கு ஷ்யாமைக் காப் பாற்ற பேசாமல் அவன் சொன்னதைச் செய்துவிடு... அந்த யூனியன் லீடருக்கு குடும்பம் இருக்கிறதா?''

''இல்லை, தனிக்காட்டு ராஜா... அதனால் தான் இத் தனைத் திமிர் அவனுக்கு...''

''விக்ரம்.. உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத் திருந்தேன்.. மறந்து விட்டது.''

''என்ன அட்வகேட்?''

''கொஞ்ச நாள் முன்னால் என்னைத் தேடிக் கொண்டு ஒருத்தன் வந்தான். ரவீந்தர் என்று பெயர் சொன்னான். உன் அட்ரஸ் கேட்டான். நான் தராதபோது என் பெண்ணைக் கடத் தியது போல, நாடகமாடி என்னிடமிருந்து உன் அட்ரஸை வாங்கி விட்டான் - அவனுக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?''

''பெயர் என்ன சொன்னீர்கள்?''

''ரவீந்தர்!''

''மரியதாஸ்?''

''ரவீந்தர்? ரவீந்தர் என்று யாரையும் தெரியாது விக்ரம்.'' என்றான் மரியதாஸ். புருவங்களை யோசனையில் நெறித்து - ''எதற்கும் அவனிடம் கவனமாக இருங்கள்..'' என்றார் ராமகிருஷ்ணன்.

''யாருக்குத் தெரியும்? தாஸ் பிரதர்ஸில் வேலைக்கு அப்ளை பண்ணுவதற்காகக்கூட அவன் உங்களை அட்ரஸ் கேட் டிருக்கலாம்.''



''பேத்தல்! விக்ரம்தாஸ், மரியதாஸ் என்று பெயர்களைச் சொல்லிக் கேட்டான் - எதற்கும் அவனுடைய அட்ரஸும், ஹீரோ ஹோண்டா பைக் நம்பரையும் வைத்துக் கொள் ளுங்கள்'' என்று குறித்துக் கொடுத்தார், ராமகிருஷ்ணன்.

* * *

ரிசீவரில் செல்வகுமாரின் மூச்சு சத்தம் கேட்டது.

''என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?'' என்றான்.

''நீ கேட்டதற்கெல்லாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் ஷ்யாமைக் காயமின்றித் திருப்பித் தர வேண்டும்..'' என்றான் விக்ரம்தாஸ் படபடப்புடன்.

''ஒரு சின்னக்கீறல் கூட இருக்காது. அவன் மேல்... நான் உத்தரவாதம்'' என்றான் செல்வகுமார். ''அப்புறம் பேப் பருக்குக் கொடுக்க வேண்டிய அறிக்கையில் ஒரு பேராவைச் சேர்க்க வேண்டும்...''

''என்னவென்று?''

''யூனியன் லீடர் செல்வகுமாரின் பத்திரத்திற்கு நாங்கள் ஜவாப்தாரி. அவன் விபத்திலோ வேறு விதமாகவோ இறந் தாலோ, காயப்பட்டாலோ அதற்கு முழுப் பொறுப்பும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று நீயும், உன் தம்பியும் சேர்ந்து அறிக்கை விட வேண்டும்.''

''இதெல்லாம் டூ மச். செல்வகுமார்.''

''டூ மச் என்று நினைத்தால் விட்டுவிடு. ஷ்யாமை மறந்து விடு.''

''ஓகே, ஓகே.. நீ சொன்னபடி ஒப்புக் கொள்கிறேன்.''

''இன்றைக்கு டி.வி.யிலும்.. பேப்பரிலும் நியூஸைப் பார்த்த திலிருந்து முப்பது நிமிடம் கழித்து ஷ்யாம் வீடு திரும்புவான்.''

''செல்வகுமார், உன்னிடம் ஒரு சின்னக் கேள்வி..''

"என்ன?"

"உன்னுடன் ரவீந்தர் என்று யாராவது இருக்கிறானா?"

"ரவீந்தர்! ரவீந்தர் என்று யாரும் இல்லை, ஷ்யாம் தாஸ் என்று தான் ஒரு பணக்கார முட்டாள் இருக்கிறான்." என்று தொடர்பைத் துண்டித்தான். செல்வகுமார்.

## 9

மாலைப் பதிப்பு தினசரிகளில் விக்ரம்தாஸ், மரியதாஸ் இருவருடைய புகைப்படங்களும் வெளியாகியிருந்தன.

'நிபந்தனையின்றி மன்னிப்புக் கேட்கிறோம்!' என்ற தலைப்பில் தனியாகக் கட்டமிட்டு அறிக்கைகள் வெளியாகி யிருந்தன.

ரவீந்தரும், செல்வகுமாரும் கைகளை அறைந்து குலுக்கிக் கொண்டார்கள். செல்வகுமாரின் சந்தோஷத்தின் விளிம் போடு கண்ணோரங்களில் கண்ணீரும் கலந்திருந்தது. "நீ இல்லாமல் எனக்கு இந்த வெற்றி கிடைத்திருக்காது, ரவீந்தர்."

விக்ரம்தாஸ் பற்றி எனக்கு இப்போது ஓரளவு தெரிந்து விட்டது செல்வகுமார். அவனுடைய தம்பி மரியதாஸ் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்..."

ரவீந்தர் கால்களை நீட்டி சோடாவில் உட்கார்ந்திருந்தான்.

"உனக்கு எந்த ஹெல்ப் வேண்டுமானாலும் கூட இருந்து செய்கிறேன், ரவி... தாஸ் பிரதர்ஸில் தொடர்ந்து என்னால் வேலை செய்ய முடியும் என்று தோன்றவில்லை.."

"மரியதாஸ் பற்றிச் சொல், போதும்..."

"அவனுக்கு மனைவி இருக்கிறாள், பூசணிக்காய் மாதிரி, குழந்தைகள் கிடையாது. குடும்பத்தை விட அவனுக்கு



ஆர்வமெல்லாம் அண்ணனுக்கு உதவியாய் இருப்பதுதான்."

"விக்ரம்தாஸின் வீட்டிலேயே தான் அவனும் இருக் கிறானா?"

"ஆமாம்... ஆனால் வாரக் கடைசியில் மட்டும் அண்ணா நகர் போய் விடுவான்."

"அண்ணா நகரில் என்ன?"

"அங்கே அவனுக்கு ரகசியமாய் ஒரு குடும்பம் இருப்ப தாய்க் கேள்வி. ஒரு பெண்ணை ரொம்ப வருஷமாய் அங்கே வைத்திருக்கிறான்."

"சின்ன வீடா?"

"அப்படித்தான் தோன்றுகிறது."

"ஓ.கே. அவனைத்தான் அடுத்ததாக கவனிக்க வேண்டும். இப்போது ஷ்யாமைக் கொண்டு போய் விட்டு விடலாம்..."

"எங்கே?"

"இங்கே வந்தபோது அழைத்து வந்தது போலவே, இரு கண்களையும் கட்டி இது என்ன இடம் என்று புரியாதபடி அழைத்துப் போவோம். மயக்கமருந்து கொடுத்து விட்டால், அவனை பீச் ரோடில் ஒரு ஓரமாக இறக்கி விட்டு விட்டு வந்து விடலாம்..."

இருவரும் எழுந்தார்கள்.

* * *

விக்ரம்தாஸ் ஷ்யாமை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டான். உன்னை ஒன்றும் செய்ய வில்லையேடா, அந்த - என்று அச்சிட முடியாத வார்த்தையில் கேட்டான்.

"டாடி... ஸாரி டாடி.. என்னால் உங்களுக்கும், கம்பெனிக் கும் ரொம்பக் கெட்ட பெயர்."

"ஆல் இன் தி கேம்" என்றான், விக்ரம்தாஸ்.

"செல்வகுமாருடன் இரண்டாவதாக ஒரு ஆள் இருந்தானா, டியர்?"

"இருந்தான், டாடி..."

"எப்படியிருந்தான்?" என்றான் மரியதாஸ்.

"அவனை நான் ஒரு முறை கூடப் பார்க்கவில்லை. செல்வகுமார் மட்டும்தான் என்னை அடைத்திருந்த ரூமிற்குள் வந்தான். அந்த இன்னொருத்தன் எனக்கு முகம் காட்டவேயில்லை."

"எந்த இடத்தில் அடைத்திருந்தார்கள் என்று ஏதாவது ஐடியா உண்டா?"

"இல்லை, சித்தப்பா, சுத்தமாகப் புரியவில்லை. ஜன்னல்களெல்லாம் எப்போதும் மூடியே இருந்தது. பஸ் டிராபிக்கோ ஜன நடமாட்டமோ கூடக் கேட்கவில்லை.

அழைத்துப் போனபோதும் சரி, திருப்பிக் கொண்டு வந்து விட்ட போதும் சரி, என் கண்களைக் கட்டியிருந்தார்கள். என்னால் எதையும் பார்க்கக் கூட முடியவில்லை."

"விடு மரியதாஸ் - ஒழுங்கா உயிரோடு வந்து விட்டானே. அதுவே போதும், நமக்கு" என்றான், விக்ரம்தாஸ் மகனைத் தோளோடு அணைத்துக் கொண்டு.

"உங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுக்கச் சொன்னான் டாடி, அந்த செல்வகுமார்."

கடிதத்தை வாங்கிப் பிரித்த மரியதாஸ், கசக்கினான்.

"எதிர்பார்த்தது தான், செல்வகுமாரின் ராஜினாமாக் கடிதம்.." என்றான். "ரவீந்தர் என்பவன் யார், எதற்காக நம்மைத் துரத்துகிறான் என்பது புரியவில்லை. எதற்கும் எல்லோரும் ஜாக்கிரதையாய் இருப்பது நல்லது. எல்லோர் வீட்டிற்கும் செக்யூரிட்டி போடுவது கூடப் புத்திசாலித்தனம் தான்..."



"அதையெல்லாம் நீ கவனித்துக் கொள். மரியதாஸ்" என்றான், விக்ரம்தாஸ் சற்றே தெளிந்த முகத்தோடு.

* * *

ரவீந்தர் சுஸுகியை ஓரத்தில் பார்க் செய்தான்.

கோட்டூர்புரம் பாலத்தை ஒட்டியிருந்த சாலை அது. இரு புறமும் நிறைய இடைவெளிவிட்டு கட்டப்பட்ட வீடுகள். அடர்த்தியாய் வளர்ந்து, குடை போல் வளைந்து சாலையின் மீது பந்தலிட்டிருக்கும் மரங்கள்.

தாஸ் வில்லா தெரிந்தது.

வெகு உயரமான காம்பவுண்டு சுவர் கேட்டின் இரண்டு பக்கமும் இரண்டு காவலாளிகள்.

ரவீந்தர் பைக்கின் மீது ஒயிலாக சாய்ந்தபடி தன் பைனாக்குலரை எடுத்தான். கண்களில் வைத்துப் பார்த்தபோது ஆச்சரியமானான்.

வீட்டின் ஒவ்வொரு தளத்திலும் குறைந்தது இரண்டு மூன்று காவல் ஆட்கள் இருந்தனர். அவர்களில் ஒருத்தனுடைய கழுத்தில் பைனாக்குலர் தொங்கியது. தான் அவனைப் பார்த்தது போலவே, அவனுக்கும் தன்னைப் பார்க்கும் சாத்தியம் இருப்பதை ரவீந்தர் உணர்ந்தான்.

பைக்கின் பின் சீட்டில் உட்கார்ந்து வந்திருந்த செல்வகுமார், முகத்தை மூடிய ஹெல்மெட்டைத் திறக்காமலேயே நோட்டமிட்டான்.

"காவல் அதிகமாயிருக்கிறது" என்றான் ரவீந்தர்.

"எதிர்பார்க்கக்கூடியதுதானே!" என்றான் செல்வகுமார்.

"இங்கே நுழைவது என்பது நடக்காத காரியம். அண்ணா நகர் தான் நம் அடுத்த குறி..."

பைக்கைக் கிளப்பினான்.

பீச் ரோடிற்கு வந்து இருளில் நிறுத்தினான்.

"செல்வகுமார், எனக்கு ஒரு கார் வேண்டும்."

"ஏற்பாடு செய்து தருகிறேன்."

"துப்பாக்கி வேண்டும்."

செல்வகுமார் அதிர்ந்து நிமிர்ந்து இருளில் ரவீந்தரின் முகத்து உணர்ச்சிகளைப் படிக்க விரும்பினான்.

"துப்பாக்கி எதற்கு, ரவீந்தர்?"

"சில பயமுறுத்தல்களுக்குத் தேவைப்படும் - உயரங்கள் ஏறி இறங்கப் பழகியிருக்கிறேன், கராத்தே சண்டையில் சில முக்கியமான அயிட்டங்களைத் தெரிந்து வைத்திருக்கிறேன். குறி பார்த்து கத்தி எறியத் தெரியும் இப்போது... துப்பாக்கியை மட்டும்தான் இன்னும் கையாண்டதில்லை."

"என்னுடைய ராணுவ நண்பன் ஒருத்தன் இருக்கிறான். அவனிடம் - வாங்கித்தர முயற்சி செய்கிறேன்..." என்றான் செல்வகுமார்.

"கட்டாயம் வேண்டும், செல்வகுமார்."

## 10

மறுநாள் உள்ளங்கை நீளத்திற்கு ஒரு ரிவால்வர் வந்து விட்டது.

ரவீந்தர் அதை கையில் உருட்டி உருட்டிப் பார்த்தான். அவன் முகத்தில் திருப்தியும், பெருமிதமும் பளிச்சிட்டன.

அன்று மாலையே சாம்பல் நிற அம்பாஸிடர் ஒன்றும் ஓட்டி வந்தான், செல்வகுமார்.

"சலோ..." என்றான் ரவீந்தர்.



இருவரும் கம்பளிக் குல்லா போட்டு தலை காது, முக வாய்ப் பகுதியை மூடிக் கொண்டனர். கண்களை மறைக்க கறுப்புக் கண்ணாடி.

புறப்பட்டனர்.

* * *

அண்ணா நகர்.

அரசாங்க ஊழியர்களின் குடியிருப்புகள். மறுபடி குடியிருப்புக்குள் தாண்டி காமராஜர் புரம், இரண்டாவது குறுக்குத் தெரு.

நான்கு தனித்தனி கட்டிடங்கள் ஒரே ஏரியாவிற்குள் இருந்தன.

ஒவ்வொரு கட்டிடத்திலும் இரண்டு குடித்தனங்கள். மாடியில் ஒருத்தர், கீழே ஒருத்தர்.

காரை நிறுத்திவிட்டு இருட்டில் எண் தேடினான் ரவீந்தர்.

17-E

இதோ.

மூன்றாவது கட்டிடத்தின் மாடிப் போர்ஷன்.

டார்ச் வெளிச்சத்தில் கீழ் வீடு பூட்டியிருந்தது. ஆறுதல் மூச்சு பிரிந்தது. எப்பேர்ப்பட்ட வசதி! ஆனால் டார்ச் வெளிச்சத்தில் இன்னொன்றும் தெரிந்தது. மாடிக்குப் போகும் படிக்கட்டின் ஆரம்பத்திலேயே கதவு மூடி, பூட்டப்பட்டிருந்தது.

'ஷ்க்! என்று கூப்பிட்டான் ரவீந்தர்.

"என்ன?" என்றான் செல்வகுமார்.

"தயாராயிரு..." என்று சொல்லிவிட்டு, மாடி போர்ஷனுக்கான அழைப்பு மணியின் பொத்தானைக் கீழேயிருந்து அழுத்தினான், ரவீந்தர்.

மாடியில் ஜன்னல் கதவு திறந்த, பன்னிரண்டு வயதுப் பையன் ஒருவன் கம்பிகளில் முகத்தை அழுத்திக் கொண்டு ''யாரு?'' என்றான்.

''தந்தி வந்திருக்கிறது, தம்பி - தந்தி...''

''அம்மா, தந்தியாம்'' என்று உள்புறம் குரல் கொடுத்தான். சிறிது இடைவெளி கொடுத்து கதவுத்தாள் திறக்கும் சத்தம் கேட்டது.

கூந்தலைக் கொண்டையாக முடிந்து கொண்டே இருளில் ஒரு பெண் மாடிப் படிகளில் இறங்கினாள். பாதி வழியில் ஒரு ஸ்விட்சை அவள் தட்டினாள். வெளிச்சம் பின்புறமிருந்து வந்து படிகளை வழிகாட்டியது.

அவள் முகத்தில் வெளிச்சம் விழவில்லை என்பதால் அவளுடைய முகம் எப்படியிருந்தது என்று புரியவில்லை. தவிர புடவைத் தலைப்பால் நெற்றியையும், கழுத்தையும் அவள் ஒற்றிக் கொண்டு வந்ததால் முகத்தின் பெரும் பகுதியை புடவைத் தலைப்பு மூடியிருந்தது.

கீழே வந்து அவள் பூட்டப்பட்ட கதவின் கம்பிகளினூடே கையை நீட்டி ''தந்தியைக் கொடுங்க'' என்றாள்.

''கதவைத் திறங்கம்மா.. வெளிச்சம் போதலை...'' என்றான் ரவீந்தர்.

அவள் சலித்துக் கொண்டு பூட்டைத் திறந்தாள். உடன் ரவீந்தர் அவன் மீது பாய்ந்தான். வாயைப் பொத்தி அப்படியே பின்புறம் சாய்த்துப் பிடித்தான்.

''தம்பி... தண்ணி எடுத்திட்டு வா... உங்கம்மா மயக்கமா யிட்டாங்க...'' என்று மாடியைப் பார்த்து குரல் கொடுத்தான். அதற்குள் அவள் மூக்கில் பொத்தப்பட்ட மயக்க மருந்தின் காரணமாக அவள் நினைவிழந்தாள்.

பையன் படிகளில் ஓடி வந்தான். நேரே செல்வகுமாரின் கைகளில் மாட்டினான்.



இருவரையும் காரில் அடைத்தார்கள்.

செல்வகுமார் மாடிக் கதவை சாத்திவிட்டு வந்தான்.

கார் சீறிப் புறப்பட்டது.

* * *

திருவான்மியூரை அடுத்த வால்மீகி நகரில் பால கிருஷ்ணா தெருவில் இடது புறம் பிரியும் பாதையில் தனியே இருந்த வீட்டின் வாசலில் கார் நிறுத்தத்திற்கு வந்தது. இருவரையும் உள்ளே சுமந்து போனார்கள்.

படுக்கையறையின் ஜன்னலோடு கயிறு கட்டி அவ ளுடைய கைகளும், கால்களும் கட்டப்பட்டன. பையனுக்கு முற்றிலும் தூக்கம் தெளிந்திருந்தது.

''யார் நீங்கள்?'' என்றான், அடைத்திருந்த துணியை மீறி,

''உங்கள் நண்பர்கள்தான்'' என்றான், ரவீந்தர் இருட்டில். அவனையும் ஜன்னலோடு கட்டிய பின், விளக்கைப் போட்டான்.

வெளிச்சம் பரவியது. அவள் கண்களில் சலனம் வந்தது. திறந்து பார்த்தாள்.

ரவீந்தரினுள்ளே ஒரு மின்னல் பாய்ந்து வெளியேறியது.

இவள்.. இவள்... தன் பெட்டிக்கு ஓடினான். துணிகளைக் கலைத்து அந்த போட்டோவை எடுத்தான். அவனுடைய மூன்றாவது வயதில் எடுக்கப்பட்ட குடும்ப போட்டோ.

அந்த போட்டோவையும், அவளையும் மாறி மாறிப் பார்த்தான். உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

''அக்கா!'' என்றான். செல்வகுமாரின் புறம் ஆச்சரிய சந் தோஷத்துடன் திரும்பினான். ''இது என் அக்கா!'' என்றான்.

அவள் மிரள மிரள விழித்தாள். அவனுடைய கண்களில் பொங்கும் நட்பும், பாசமும் அவளைக் குழப்பின.

''யார் நீ?'' என்றாள்.

ரவீந்தர் போட்டோவை அவள் முகத்துக்கு நேரே நீட்டினான். அவள் பார்வை அதில் பதிந்தது அழுந்தியது. மீண்டது.

''யார் தெரிகிறதா இதெல்லாம்?''

அவளுடைய முகத்தில் உணர்ச்சிகள் கலிடாஸ்கோப்பின் வண்ணக் குழப்பம் போல படிந்து மாறியது.

''இந்த போட்டோ உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்றாள், அவள் உதடுகளை மெல்லப் பிரித்து.

''சித்தப்பா கொடுத்தார்.''

அவள் அவனை நம்பிக்கையில்லாமல் நிமிர்ந்து பார்த்தாள்.

''அக்கா, உன் பெயர் மாயாதானே... அல்லது பெயரும் மாறி விட்டதா?''

''மாயாதான்'' என்றாள். அவனை மேலிருந்து கீழ் பார்த்தாள். அவளுடைய அப்பாவின் அதே மூக்கு. அதே குறுகிய நெற்றி. முகவாய்ப் பள்ளம்.

''நீ ரவீந்தர்தானே?'' என்றாள், குழறிய குரலில்.

''ஞாபகம் வந்து விட்டது. உனக்கு ஞாபகம் வந்துவிட்டது!'' ரவீந்தரின் முகத்தில் சந்தோஷம் ததும்பி மத்தாப்பாய் வெடித்தது.

அந்தப் பையன் இருவர் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் கண்களில் குழப்பம் மின்னியது.

ரவீந்தர் அவளுடைய கட்டுகளை அவிழ்த்து விட்டான்.

''கிட்டத்தட்ட பதினேழு வருடம் கழித்து உன்னை இந்த மாதிரியானதொரு சந்தர்ப்பத்தில் சந்திப்பேன் என்று நான் கனவு கூட கண்டதில்லை'' என்றாள், மாயா.

''எங்கேயிருந்தாய். ரவி, இத்தனை நாளும்?''

ரவீந்தர் கயிறுகள் இறுக்கி அவள் கரத்திலும், புஜத்திலும் ஏற்பட்டிருந்த வடுக்களை ஆதுரத்துடன் தடவிக் கொடுத்தான்.



''என்னக்கா ஆயிற்று உனக்கு?''

அவள் கண்களை மூடிக் கொண்டாள். நினைவு வாகனம் பின்னோக்கி ரிவர்ஸில் விரைந்து கசப்பான காட்சிகளை அவள் கண்ணிற்குள் விரித்தது.

''அப்பாவையும், அம்மாவையும் கண்ணெதிரே கொன்றதைப் பார்த்து நான் மயக்கமாகியிருந்தேன் ரவி.. என்னை யாரோ தூக்கிக் கொண்டு போவது போல தோன்றியது அவ்வளவுதான்...''

''கண் திறந்து பார்த்தபோது, சென்னையில் இருந்தேன்.. என்னைத் தனியாக ஒரு ரூமில் போட்டு அடைத்திருந்தார்கள். வேளா வேளைக்கு சாப்பாடு, தண்ணீர், தூக்கம்...''

''கிட்டத்தட்ட இரண்டு வாரம் அப்படி இருந்திருப்பேன். அப்புறம் ஒரு நாள் மரியதாஸ் ரூமுக்குள் வந்தார்..'' அவள் நிறுத்தி விட்டு அந்தப் பையனைப் பார்த்தாள். அவனுக்கெதிரில் பேசுவதற்கு விருப்பப்படவில்லை போல் தெரிந்தது.

''வா, அக்கா.. நாம் ஹாலுக்குப் போவோம்.. அங்கே பேசுவோம்..''

மாயா அவனிடமிருந்து போட்டோவை வாங்கி மீண்டும் மீண்டும் பார்வையை அதில் பதித்து உணர்ச்சி வசப்பட்டாள். அவளுடைய முகம் சந்தோஷமும், துக்கமும், அழுகையுமாக கலந்து குழம்பியது.

ஹாலில் குழிவான நாற்காலியில் அவள் தளர்ந்து அமர்ந்தாள்.

ரவீந்தர் அவள் காலடியில் அமர்ந்தான்.

''அக்கா, உன் மடியில் நான் தலை வைத்துக் கொள்ளலாமா?'' அவன் குரல் தயங்கி வந்தது.

சற்று நேரம் முன்பு வரை அந்நிய இளைஞனாக மனதிற்குப் பட்டவன் இப்போது திடீரென்று நெருக்கமாகி விட்ட

சந்தோஷத்தோடு அவள் அவனுடைய தலையைப் பற்றி தன் மடியில் வைத்துக் கொண்டு முடியை ஆசையுடன் களைந்து கொடுத்தாள்.

''எனக்கொரு அக்கா இருக்கிறாள் என்றே கொஞ்ச நாட் களுக்கு முன்னால்தான் தெரியும், அக்கா...''

''உன் கதி என்ன ஆயிற்று என்று கூட நான் கவலைப் படவில்லை என்று உனக்கு என் மீது கோபமாய் இருக்கும்?''

''நீ செத்துப் போய்விட்டாய் என்று தான் சித்தப்பாவும், செங்கோடனும் சொன்னார்கள்...''

''செங்கோடன் ஓ... நம் வீட்டுத் தோட்டக்காரன் இல்லை?''

''இல்லை அக்கா, இப்போது என் அப்பா...''

மாயா சரேலென்று அவன் தலையை நிமிர்த்தினாள். ''என்ன சொல்கிறாய், ரவி?'' என்றாள் வேகமாக.

''செங்கோடனும், அவன் மனைவி செங்கமலமும் தான் என்னை இந்த வயது வரை வளர்த்தார்கள், அக்கா.. செங் கமலம் தான் என்னுடைய நினைவுக்குத் தெரிந்த அம்மா. பணம் இல்லாதது பெரிய குறையாகவே இல்லை. அவர் களுக்கு என் மேல் எவ்வளவு ஆசை தெரியுமா? கண்ணுக் குள் வைத்து வளர்த்தார்கள் என்று சொன்னால்கூட நியாய மாய்த்தான் இருக்கும். நான் காலேஜ் படிப்பை முடிக்காம லேயே இருந்திருக்காலாமோ என்று கூட சில சமயம் எனக்குத் தோன்றும். காலேஜ் படிப்பு முடித்தவுடன் தான் உண்மை களையெல்லாம் எனக்கு சொன்னார் அப்பா...''

''ச்சே, எப்படி வாழ்ந்திருக்க வேண்டிய குடும்பம். நம் முடையது! எப்படிச் சீரழிந்து விட்டது.''

''யார் இதற்கெல்லாம் காரணம்? விக்ரம்தாஸும், மரிய தாஸும் தானே? அப்புறமும் நீ எப்படி அக்கா அவனிடம்...''

ரவீந்தர் கேள்வியை அந்தரத்தில் நிறுத்தி விட்டான்.



''சொல்கிறேன்...'' மாயா சற்றே சாய்ந்து உட்கார்ந்து தன் பழைய நினைவுகளை அசை போடலானாள்.

''மரியதாஸ் என் ரூமுக்கு வந்தார் என்றேனே. எதற்குத் தெரியுமா? விக்ரம்தாஸ் விடுதலையாகி விட்டான் என்று சொல்வதற்காக. இதோ பார் தெரிந்தோ, தெரியாமலோ உன்னைத் தூக்கி வந்து விட்டேன். உன்னை வெளியே விட முடியாது. வெளியே விட்டால் எங்களுக்கு ஆபத்து. வருஷக் கணக்கில் இந்த ரூமில் போட்டு பூட்டி வைக்கவும் எனக்கு மனசில்லை. இல்லையென்றால், எங்கள் ரகசியம் தெரிந்தவள் என்பதற்காக உன்னைத் தீர்த்துக் கட்ட வேண்டும். உன் முகத்தைப் பார்த்தால் எனக்குக் கொலை செய்ய வேண்டும் என்று ஏனோ தோன்றவில்லை. உனக்குக் கொஞ்சம் சுதந்திரம் தருகிறேன். ஆனால் நீ ஒழுங்காக இருப்பாயா என்று கேட்டார்.

ஒழுங்காக என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டேன். போலீஸிற்குப் போகக்கூடாது. ஊரில் இருக்கும் உன் உற வினர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. அவர்கள் நீ செத்து விட்டதாய் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியே போகட்டும். என் பேச்சை மீறி நீ ஊருக்குப் போனாலோ போலீஸில் சொன்னாலோ, என்னைப் பற்றி உனக்கு இந் நேரம் புரிந்திருக்கும். உன்னை மட்டுமல்ல, உன் தம்பியை யும் சேர்த்து அழித்து விடுவேன் என்று மிரட்டினார்.''

''நான் பயந்தேன் என்னுடைய நிலைமையில் ஒரு பெண் என்ன செய்ய முடியும்? எனக்கு என் குடும்பத்தில் பாக்கி இருக்கும் ஒரே தம்பியையும் இழப்பதற்கு இஷ்டமில்லை. சாதாரணமாக இந்த மாதிரி ஆட்கள் பெண்களை ரெட்லைட் ஏரியாவிற்கு விற்று விடுவார்கள் என்று வேறு கேள்விப் பட்டிருந்ததால், அந்தக் கொடுமையிலிருந்தும் தப்பிக்க ஆசைப்பட்டேன். மரியதாஸ் போட்ட கண்டிஷன்களுக்கு ஒப்புக் கொண்டேன்.

கெட்டவர்தான். நம் அப்பா அம்மாவையே அழித்தவர் தான். ஆனால் என்னை ரொம்பப் பாசமாகவும், அன்பாகவும், மரியாதையாகவும் நடத்திக் கொண்டிருக்கிறார் ரவி.''

''அந்தப் பையன்?''

''எங்களுக்குப் பிறந்த மகன்... மங்கள்.. ஏழாவது படிக் கிறான். சென்னையிலேயே உசத்தியான ஸ்கூலில் அவனுக்கு படிப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் மரியதாஸ். அவருடைய பெண்டாட்டி மூலம் அவருக்கு குழந்தை கிடையாது. அதனால் மங்கள் மீது அவருக்கு கொள்ளைப் பிரியம். அவனுக்கும் அப்பா மீது ஏக இஷ்டம்.''

''அசப்பில் உன்னை மாதிரியே இருக்கிறான், அக்கா...''

மாயா புன்னகைத்தாள்.

''திடீரென்று எப்படி சென்னை வந்தாய்? எப்படி என்னைக் கண்டு பிடித்தாய்?''

ரவீந்தர் அவளிடமிருந்து விலகினான். ஜன்னலை அடைந்து, திரைகளை விலக்கி வெளியே இருட்டை வெறித் தான். வெகு தூரத்தில் சமுத்திரம் அவன் மனதைப் போல 'ஹோ'என்று இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தது.

''நான் சென்னை வந்தது உன்னைக் கண்டுபிடிப்பதற்காக இல்லை, அக்கா...''

''பின்னே?''

''நீ இங்கே இருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை, அக்கா...''

''வேறு வேலையாக சென்னை வந்தாயா?''

''ஆமாம்..'' அவனுடைய குரல் குறுகியது. ''எதற்காக வந்தேன் என்று அப்புறம் சொல்கிறேன். அக்கா...''

''எப்புறம்?''

''நீ தூங்கு... உன் தூக்கத்தைக் கெடுத்து விட்டேன்...''



''நீ சொல்லாமல் போனாலும் எனக்குத் தூக்கம் வரப் போவதில்லை. உன்னுடன் இருப்பது யார்?''

''செல்வகுமார்..தாஸ் பிரதர்ஸ் கம்பெனியின் யூனியன் லீடர். தொழிலாளர்களுக்காகப் போராடியவனைத் தந்திரமாக மடக்கி, தொழிலாளர்களை அவனுக்கெதிராக திருப்பிவிட்டு, அவர்கள் அடித்துப் போட்டதாக செட் அப் பண்ணி கொன்று போடத் திட்டம் போட்டிருந்தான், விக்ரம்தாஸ்... நான் நடுவில் புகுந்துவிட்டேன்...''

அவன் சொன்ன செய்தி அவளுள் அதிர்ச்சி அலைகளை எழுப்பியது.

''தாஸ் பிரதர்ஸ் கம்பெனியில் என்ன நடக்கிறது, அரா ஜகமா, அட்டூழியமா, இல்லை நாணயமான பிஸினஸா என்று எதுவும் எனக்குத் தெரியாது, ரவி. மரியதாஸ் அந்தப் பிரச் சனைகளையெல்லாம் வீட்டுக்குக் கொண்டு வருவதில்லை.''

''ஒரு சாதாரண மனைவி, ஒரு மகனுடைய தாய் இப்படித் தான் உன் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறதா, மாயா?''

''ஆமாம்... எனக்கு என்று தனி உலகம் அதில் நானும் மங்களும் மட்டும். அவ்வப்போது வந்து கலந்து கொள்ளும் மரியதாஸ் என்று திருப்திப்பட்டுக் கொள்ளக் கற்றுக் கொண்டு விட்டேன்...''

''இப்போது உன்னுடைய அந்தச் சின்ன உலகத்தில் இந்தத் தம்பிக்கும் ஒரு இடம் உண்டா, அக்கா?''

''என்ன ரவி இப்படிக் கேட்கிறாய்?'' அவள் குரல் தழு தழுத்துப் போனது. ஜன்னலை அண்டி அவனை இழுத்து தன் தோளில் அணைத்துக் கொண்டாள்.

''சொல், நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?''

''என்னுடன் வந்து உன்னுடைய மிச்ச நாட்களை வாழ நீ தயாரா, அக்கா?''

''ஏன்?'' அவள் விருட்டென்று அவன் முகத்தை நிமிர்த்தினாள். ''ஏன் ரவி இந்த விபரீத ஆசை? மரியதாஸ் இதை அனுமதிக்க மாட்டார் என்று உனக்குத் தெரியாதா?''

''தெரியும்... மரியதாஸின் குறுக்கீடு இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்...''

''எப்படி உன்னால் முடியும் ரவி?''

''மரியதாஸிறகப்புறம் உனக்கு வேறு யார் இருக்கிறார்கள், அக்கா?''

அந்தக் கேள்வியில் அவள் திடுக்கிட்டுப் போனாள். அவனுடைய நோக்கம் முழுவதும் உணர்ந்துவிட்டவள் போல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''மரியதாஸிற்கு என்ன ரவி?''

''அப்பாவையும், அம்மாவையும் கொன்றவனைச் சும்மா விடச் சொல்கிறாயா, அக்கா?''

அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

''ரவி, வேண்டாம்... ரத்தம், பழி இதெல்லாம் நம் குடும்பத்திற்கு ஒத்துவராது.''

''ஸாரி அக்கா.. நான் தீர்மானம் செய்து விட்டதை இனிமேல் மாற்றிக் கொள்ள முடியாது. விக்ரம்தாஸோ, மரியதாஸோ இத்தனை வருடங்களில் மாறி விடவில்லை. இன்னும் அடுத்தவனை அழித்து அதில் வாழ்க்கை நடத்த கூச்சப்படுவதில்லை... இதோ செல்வகுமார்.. இவனைக் கொன்றே போடத்திட்டமிட்டிருந்தார்கள்... அவர்களுக்கு மனித உயிர் ஒரு பொருட்டில்லை. அவர்களைத் தட்டிக் கேட்க ஆளில்லை என்ற திமிர்...''

''வேண்டாம் ரவி. எனக்காகவாவது நீ விட்டுக் கொடுக்க வேண்டும்'' மாயா அவன் முகத்தைப் பிடித்துக் கெஞ்சினாள்.

ரவீந்தர் மெல்ல அவளிடமிருந்து முகத்தை விலக்கிக் கொண்டான்.



''சரி... அப்படியானால் நீயும், மங்களும் கொஞ்ச நாள் இங்கேயே என் பாதுகாப்பில் இருக்க வேண்டும்...''

''மரியதாஸ் பொல்லாதவர், ரவி...''

''பொல்லாதவனுக்கும் பாசம், ஆசை எல்லாம் இருக்குமில்லையா? சொந்த மகனைப் பிரிந்து இருப்பது என்றால் எவ்வளவு கஷ்டம் என்று அவன் உணர்ந்தாலாவது நாளைக்கு இன்னொரு குடும்பத்தை அழிக்கும் போது கொஞ்சம் யோசிப்பான்...''

மாயா அவசரமாகத் தலையாட்டினாள். ''சரி.. நீ சொல்வது நியாயம்தான். ஆனால் உன் உயிருக்கு ஆபத்து வரும்படி நடந்து கொள்ளக் கூடாது நீ.. சத்தியம் பண்ணிக் கொடு...''

''சத்தியமெல்லாம் வேஸ்ட்...'' என்றான், ரவீந்தர். ''நான் கவனமாக நடந்து கொள்கிறேன்.... ஆனால் நீயோ, மங்களோ என்னைக் காட்டிக் கொடுத்து விட்டால் தான் அக்கா ஆபத்து...''

''நான் நீ சொல்லும் வரையில் இந்த வீட்டை விட்டு அசைய மாட்டேன். மங்கள் நான் சொன்ன பேச்சைக் கேட்பவன் தான்...''

''அக்கா நீ கோபித்துக் கொள்ளக்கூடாது. ஒரு ஜாக்கிரதைக்காக நாங்கள் வெளியே போகும் போது இந்த வீட்டை வெளியே பூட்டிக் கொண்டு தான் போவோம்.''

''சரி, ரவி...''

''இன்னொரு விஷயம், அக்கா...''

''என்ன?''

''என்னதான் நான் போனில் கூப்பிட்டு, உன்னையும், மங்களையும் பிடித்து வைத்திருப்பதாகச் சொன்னாலும், மரியதாஸிற்கு நம்பிக்கை வராது...''

''அதனால்?''

''உன் குரலை டேப் செய்து எடுத்துப் போக வேண்டும், அக்கா.. நான் சொல்கிறபடி டேப்பில் பேசுவாயா...?''

"இது கூட செய்ய மாட்டேனா?"

மாயா, பதினேழு நீண்ட நரக வருடங்களுக்குப் பின் புத்தனுபவம் காரணமாக படபடப்பாக உணர்ந்தாள்.

## 11

மரியதாஸ் தன் காரிலிருந்து இறங்கினான்.

விறைப்பான சல்யூட்களை ஏற்றுக் கொண்டான்.

லிஃப்ட்டில் ஏறினான். அலுவலகத்தில் தன் அறைக்குள் நுழைந்தான்.

ஏ.ஸி.யின் குளிர் மிதமாக இருந்தது. கண்ணாடி மேஜை துப்புரவாகத் துடைக்கப்பட்டு,அன்றைய தபால் அவன் பார்வைக்கு காத்திருந்தது.

சுழல் நாற்காலியில் உட்கார்ந்ததும், அவனைக் கவர்ந்தது தபால்களுக்கு மேலாக முதலில் இருந்த தடிமனான காக்கிக் கவர்.

மரியதாஸின் பர்ஸனல் பார்வைக்கு

என்று கட்டமிடப்பட்டிருந்தது.

கவரைக் கிழித்துத் திறந்தான். ஒரு ஆடியோ கேசட்.

என்ன இது?

தன் வாக்மேனை எடுத்து கேஸட்டைப் பொருத்தி ஓட விட்டான்.

"அன்புள்ள மரியதாஸ்,

உன் இரண்டாவது மனைவியும், அருமை மகன் மங்களும் இப்போது என்னிடத்தில் இருக்கிறார்கள்.

பதறாதே, உன் வீட்டிற்கும், விக்ரம்தாஸ் வீட்டிற்கும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த நீ, உன்



இரண்டாவது மனைவி மாயாதாஸைப் பற்றியோ, அவள் குழந்தையைப் பற்றியோ எந்தக் கவலையும் படவில்லை. ஸோ, என் வேலை சுலபமாய் இருந்தது.

மாயாவின் குரலைக் கொஞ்சம் கேட்கிறாயா?"

மரியதாஸின் முகம் இறுகிற்று. எத்தனை முட்டாள்தனம். என்னுடைய அஜாக்கிரதையால் மாயாவும், மங்களும் யாரிடத் திலோ மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

டேப் மேலே சுழன்றது. மாயாவின் கிசுகிசுப்பான, அவனுக் குப் பரிச்சயமான குரல் இரு காதுகளிலும் வழிய ஆரம் பித்தது.

"டியர்,

எங்களை ரவீந்தர் என்பவன் கடத்தி வைத்திருக்கிறான். இதுவரை ஆபத்து ஒன்றுமில்லை.அவனுடைய குடும்பம் உங்களால் அழிந்தது என்று என்னவோ பேத்துகிறான். அதற்கு நஷ்ட ஈடாக அவனுக்கு இரண்டு லட்ச ரூபாய் வேண்டுமாம். அதைக் கொடுத்து விட்டால் எங்கள் இருவரை யும் விட்டு விடுவானாம்."

"டாடி.. மங்கள் பேசுகிறேன்... அவன் கேட்கிற பணத்தைக் கொடுத்து விடுங்கள் டாடி.... எங்களைக் காப்பாற்றுவீர்கள் தானே?"

மரியதாஸின் உடல் விதிர்த்தது. டென்ஷன் குறைந்து ரிலாக்ஸ் ஆனது. கேவலம் பணம் தான் அவன் குறியா? இரண்டு லட்சம் என்பது எனக்கு சில்லறைக் காசு என்று அவனுக்குத் தெரிந்திருக்காது. மாயாவும் மங்களும் என் னிடத்தில் பத்திரமாக திரும்பி வந்தவுடன் அவனை எங்கிருந் தாலும் தேடிக் கண்டுபிடித்து மூட்டைப் பூச்சி நசுக்குகிற மாதிரி நசுக்கி விடமாட்டேன்?

"மரியதாஸ், ரவீந்தர் ஹியர்" என்றது டேப்.

''நான் சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொள். இன்று மதியம் மூன்று மணிக்கு உன் ஆபீஸிற்கு நான் வருவேன். கேள்விகள் கேட்காமல் என்னை உள்ளே விட வேண்டும். என்னையும், உன்னையும் தவிர ஆபீஸ் ரூமில் வேறு யாரும் இருக்கக்கூடாது.

பணத்தை ஐநூறு ரூபாய் நோட்டுகளாக நீ வைத்திரு. பணம் வாங்கிக் கொண்டு நான் வெளியேறும் போது என்னை யாரும் பின் தொடரக்கூடாது. என்னை யாராவது மடக்கினாலோ, மாட்டி விட்டாலோ உன் மயாவின் சாம் பலும், மங்களின் சாம்பலும் அதே நேரத்தில் உன் மேஜை மீது இருக்கும். நான் பத்திரமாக திரும்பாவிட்டால் அவர்கள் இருவரையும் தீர்த்துக்கட்ட என் நண்பன் காத்திருப்பான்.''

ராஸ்கல் என்று பற்களை நறநறத்தான் மரியதாஸ், விஷப்பாம்பிடம் விளையாடுகிறான், அந்த ரவீந்தர்!

இருந்தாலும் அவன் சொன்னதெல்லாம் உண்மைதானா என்று தெரிந்து கொள்ள வேண்டும்!

அண்ணாநகர் வீட்டிற்கு போன் செய்தான்.

போன் மணி அடித்துக் கொண்டேயிருந்தது. எடுத்து பதில் சொல்ல யாரும் இல்லை.

ஒரு ஆளையும் போய்ப் பார்த்து விட்டு வரச்சொல்லி ஏற்பாடு செய்தான். பி.ஏ.விடம் தன் புரோகிராம்ஸ் எல்லா வற்றையும் கேன்ஸல் செய்யச் சொன்னான்.காரில் விருட்டென்று புறப்பட்டான்.

***

''என்ன மரியதாஸ்? என்றான் விக்ரம்தாஸ், தம்பியின் முகத்தைப் பார்த்தவுடனேயே, ''எனிதிங் ராங்?''

மரியதாஸ் எதிர்நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந் தான். தனக்கு வந்த டேப்பைக் கொடுத்தான்.



டேப்பைக் கேட்க கேட்க விக்ரம்தாஸின் முகம் மாறிக் கொண்டே வந்தது ''பாஸ்டர்ட்'' என்றான் இறுகிய முகத் துடன்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்!''

''அவன் கேட்பது கேவலம் இரண்டு லட்சம்தான்.. அதைக் கொடுத்து விடுவது பற்றி பிரச்சனையில்லை, விக்ரம். ஆனால் ஏற்கெனவே யூனியன் லீடர் விஷயத்தில் அவன் தலையிட்டிருக்கிறான். நாளைக்கு மறுபடியும் இன்னொரு புதுப்பிரச்சனை கொண்டு வரமாட்டான் என்று என்ன நிச்சயம்?''

''மடத்தனமாக உன் ஆபீஸ் ரூமிற்கே வருவதாக சொல்லி யிருக்கிறான்?''

''திமிர்தான்.. அவன் பணத்தை வாங்கிக் கொண்டு வெளியேறுவதிலிருந்து அவனை நிழல் போலத் தொடர நம்முடைய ஆட்களை ஏற்பாடு செய்யப் போகிறேன், விக்ரம்...''

''ஒழுங்கான ஆட்களாகப் போடு மரியதாஸ்.. ஏனென்றால் மாட்டியிருப்பது உன் ஒரே வாரிசு மங்கள்.''

''அந்த பாஸ்டர்டை என் கையாலேயே கழுத்தை நெறித்துக் கொன்றால்தான் என் ஆத்திரம் தீரும், விக்ரம்.....''

''முதலில் மாயாவும், மங்களும் பத்திரமாகத் திரும் பட்டும், மரியதாஸ். உனக்கு ஏதாவது ஹெல்ப் வேண்டு மானால் சொல்...''

''இப்போதைக்கு ஒன்றும் வேண்டாம். நம் வீட்டில் இன்னும் செக்யூரிட்டியை அதிகப்படுத்து, போதும்...''

மரியதாஸ் எழுந்தான்.

***

மாயா ரவீந்தரின் கையைப் பற்றி அழுத்தினான்.

''ஆல் தி பெஸ்ட் ரவி.. ஆனால் பணத்தை வாங்கிக் கொண்டு உடனே வந்துவிடு. மரியதாஸின் கோபத்தைக் கிளப்புகிற மாதிரி எதையும் செய்து தொலைக்காதே...''

மாயாவிடம் பணம் செல்வகுமாருக்காக என்று சொல்லியிருந்தான்.

''செல்வகுமார், அக்காவையும், மங்களையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்...'' என்றான் ரவீந்தர். தன் சிறுபெட்டியை எடுத்துத் திறந்து அதனுள் இருக்க வேண்டியது இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான் மூடினான்.

டி.வி.எஸ். சுஸுகியில் ஆரோகணித்து புறப்பட்டான்.

* * *

மரியதாஸின் அலுவலகம்.

நேரம் மிகச் சரியாக மூன்று மணி.

சிறுபெட்டியுடன் நுழைந்த ரவீந்தர் ஹாலின் விஸ்தீரணத்தையும், அலங்கார அமைப்புகளையும் பார்த்து பிரமித்தான். பணியாளர்களின் நடுவே நடந்தான். பி.ஏ.வின் அறை வந்ததும் தயாராய் எழுதி எடுத்து வந்திருந்த சீட்டை அவனிடம் நீட்டினான்.

'ரவீந்தர்'

பி.ஏ.விற்கு ஏற்கெனவே மரியதாஸ் உத்தரவிட்டிருந்ததால், அவன் தடை சொல்லாமல் கதவைத் திறந்து விட்டான்.

பெரிய அறை.

ஏ.ஸி.யின் ரீங்காரம்.

யார் இந்த ரவீந்தர். அவன் எப்படியிருப்பான் என்று பார்ப்பதற்காகவே ஆர்வத்துடன் காத்திருந்த மரியதாஸ், இருபது வயது இளைஞனைப் பார்த்ததும் ரிலாக்ஸ் ஆனான். ச்சே, சோட்டா பயல்...



''ரவீந்தர்?'' என்றான்.

''ஆமாம்'' ரவீந்தர் அறைக்கதவின் உள்தாளைப் போட்டான்.

மரியதாஸிற்கெதிரே போய் உட்கார்ந்தான். ''பணம் ரெடியா?''

''ரெடி..'' என்றான் மரியதாஸ். ''யார் நீ? எதற்காக அன்றைக்கு ஷ்யாமைக் கடத்தினாய்? இப்போது மாயாவையும், மங்களையும் கடத்தினாய்?''

''சில பழைய கணக்குகள் தீர்க்க வந்திருக்கிறேன்...''

''டேப்பில் மாயா கூட ஏதோ சொன்னாள்.. உன் குடும்பத்தை நாங்கள் நாசம் பண்ணினோமா எப்படி?''

என்னவோ டெலிவிஷனில் பேட்டி எடுப்பவன் போல கேஷுவலாக மரியதாஸ் பேசியது ரவீந்தருள் எரிச்சலைக் கிளப்பியது.

''அதற்கு முன் உனக்கு சில பாயிண்ட்களை நான் சொல்ல விரும்புகிறேன்...'' என்றான் ரவீந்தர்.

''என்ன?''

''என்னை யாரும் பின் தொடர மாட்டார்களே?''

''ஒப்புக் கொண்டு விட்டேன்...''

''இங்கேயே மடக்க எந்தத் தந்திரமும் இல்லையே?''

''மாயாவும், மங்களும் எனக்கு முக்கியம்.அவர்கள் உயிருக்கு ஆபத்து வருகிற மாதிரி நான் எதையும் செய்ய மாட்டேன்.''

''குட். எனக்கு விக்ரம்தாஸையும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. அவனையும் இங்கே அரை மணி நேரத்திற்குள் வரச்சொல்.''

''விக்ரம் எதற்கு?''

''பாவபுண்ணியம் எதிலுமே உங்கள் இரண்டு பேருக்கும் சமபங்கு உண்டாயிற்றே. போனில் நான் சொல்கிற மாதிரி சொல்...''

மரியதாஸ் எரிச்சலுடன் ரவீந்தரை முறைத்தான். இருபது வயசுப் பையன் எனக்கு ஆணைகள் இடுகிறான். அதை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

ரிசீவரை எடுத்து டயல் செய்து, ''என்ன சொல்ல வேண்டும்?'' என்றான், ரவீந்தர் சொல்லச் சொல்ல ஒவ்வொரு வார்த்தையாக ரிசீவரில் சொன்னான்.

''விக்ரம்... ரவீந்தர் எனக்கு எதிரே அமர்ந்திருக்கிறான். பதினேழு வருடத்திற்கு முந்தைய கணக்கு ஒன்றை பைசல் பண்ணுவதற்கு வந்திருக்கிறானாம். நீயும் இங்கே இருக்க வேண்டும் என்கிறான். இன்னும் முப்பது நிமிடத்திற்குள் நீ வந்து சேர வேண்டுமாம்...''

ரிசீவரை வைத்தான்.

''தென்?'' என்றான்.

''உன் பி.ஏ.வைக் கூப்பிடு. விக்ரம்தாஸைத் தவிர வேறு யாரும் எக்காரணம் கொண்டும் இந்த ரூமிற்குள் நுழையக் கூடாது என்று சொல்...''

மரியதாஸ் இன்டர்காமில் பி.ஏ.வைக் கூப்பிட்டு உத்தர விட்டான்.

''வேறென்ன வேண்டும்?''

''பணத்தை எடுத்து மேஜை மீது வை...''

மரியதாஸ் வைத்தான்.

ஐநூறு ரூபாய்க் கட்டுகள்.

''மரியதாஸ், உனக்குப் பிரியமான கடவுள் யார்?''

''எதற்குக் கேட்கிறாய்?''



''அவரைக் கூப்பிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள். சாகும் போதாவது நல்லவனாக செத்ததாக இருக்கட்டும்...''

''என்ன உளறுகிறாய்?''

''இதன் பெயர் உளறலா?''

பணத்தை வைக்கத் தான் பெட்டியை திறந்தான் என்று நினைத்தால் அதிலிருந்து துப்பாக்கி எடுத்து நீட்டிக் கொண்டு -

''ஏய்... என்ன இது?''

''கைகளைத் தூக்கு...''

தூக்கினான்.

''எழுந்திரு''

எழுந்திருந்தான். மரியதாஸின் மனம் வெகு வேகமாக சிந்தித்தது. எழுந்தவன் சரேலென டெலிபோனை எடுத்து ரவீந்தரின் மீது வீசினான். ரவீந்தர் விலகிச் சிரித்தான்.

''நீ இந்த மாதிரி அவசரப்பட்டால் இப்போதே உன்னை சுட்டுவிடுவேன். இல்லை, நான் சொன்னதைக் கேட்பவனா யிருந்தால், விக்ரம்தாஸ் வரும் வரைக்குமாவது உன் உயிர் இருக்கும்...''

விக்ரம்தாஸ் தன்னை விடபுத்திசாலி. இந்த சந்தர்ப்பதில் அண்ணன் ஏதாவது தடாலடி செய்து காப்பாற்றி விடுவார். அவசரப்பட்டு காரியத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டா மென்று மரியதாஸ் தயங்கினான்.

''கைகளைத் தூக்கிக் கொண்டு அப்படி சுவர் பக்கம் போய் நில்... சுவரைப் பார்த்து திரும்பு...''

திரும்பியதும், ரவீந்தர் பின்புறமிருந்து மரியதாஸை நெருங்கி அவன் காதுக்குப் பின்னால் துப்பாக்கியைத் திருப் பிப் பிடித்து அடித்தான்.

மரியதாஸ் சுவரைத் தேய்த்துக் கொண்டு கீழே விழுந்தான்.

அவனுடைய இரு கைகளையும், கால்களையும் சேர்த்து பெட்டியிலிருந்த கயிற்றால் கட்டினான்.

பெட்டியிலிருந்து பெரிய சைஸ் கால்குலேட்டர் போல் இருந்த ஒரு சமாச்சாரத்தை எடுத்தான்.

வெடிகுண்டு!

அதன் ஒயரை மெல்ல சுருள் அவிழ்த்தான்.

வெடிகுண்டை மரியதாஸின் சட்டைக்குள் வைத்தான். அதன் ஒயரை உடம்பில் சுற்றி, கழுத்துப்பக்கம் கொண்டு வந்து காலருக்குள் சுற்றி வைத்தான். ஒயர் முற்றிலும் இறுக்கமாக இருந்தது.

ஒயரை சற்று இழுத்தாலும் வெடிகுண்டின் ஸ்விட்ச் இயக்கப்பட்டு இரண்டு விநாடிகளில் வெடித்து விடும். மரியதாஸ் விழிப்பு வந்து புரண்டால் கூட அவ்வளவுதான்.

தன்னுடைய அமைப்பு கச்சிதமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். திருப்தியாய் இருந்தது.

பெட்டியிலிருந்து பிளேடை எடுத்தான்.

ஐந்து நிமிடம் கழித்து அவன் வெளியே வந்தபோது, பி.ஏ. பரபரப்பா எழுந்தான்.

''விக்ரம்தாஸைத் தவிர வேறு யாரையும் கட்டாயம் உள்ளே அனுப்பக் கூடாதென்று சொல்லச் சொன்னார்'' என்றான் பி.ஏ.விடம். பெட்டியை சுமந்து கொண்டு வேகமாக நடந்தான்.

அவன் லிஃப்டிற்குள் நுழைந்ததுமே, சைகைகள் பரிமாறப் பட்டு கீழே அவன் வண்டியைத் தொடர ஆட்கள் தயாரானார்கள்.

லிப்டிலிருந்து அவன் வெளியேறியபோது, அதனுள் விக்ரம்தாஸ் நுழைந்தான்.



ரவீந்தர் தன் பைக்கை நோக்கி வேகமாக நடந்தான்.

***

விக்ரம்தாஸைப் பார்த்ததும், பி.ஏ.எழுந்து நின்றான்.

''உங்களை மட்டும் உள்ளே அனுப்பச் சொல்லியிருக்கிறார்...''

விக்ரம்தாஸ் உள்ளே நுழைந்தான்.

நாற்காலி காலியாய் இருப்பதைப் பார்த்ததும் ''மரியதாஸ்'' என்று மெல்லக் குரல் கொடுத்தான்.

பதில் இல்லை.

அப்போது தான் மேஜைக்கடியில் அந்த இரண்டு கால்கள் தெரிந்தன.

விக்ரம்தாஸ் பரபரப்பானான். மேஜைக்கு ஓடி கீழே பார்த்தான்.

தரையில் கைகளும், கால்களும் கட்டப்பட்டுக் கிடந்தான், மரியதாஸ். கன்னங்களில் ரத்தத்தால் கோடு இழுக்கப்பட்டிருந்தது.

''மரியதாஸ்.. மரியதாஸ்..''

விக்ரம்தாஸ் பரபரப்பாக கீழே உட்கார்ந்தான்.

ஒருக்களித்துப் படுத்திருந்த தம்பியைத் திரும்பினான்.

***

ரவீந்தர் தெருமுனையை அடைந்திருந்தபோது, அந்த இரைச்சலான சப்தம் கேட்டது. வெடிகுண்டு வெடித்து, கண்ணாடிகள் நொறுங்கும் அபாரமான சத்தம்.

## 12

கதவைத் திறந்தான் செல்வகுமார்.

என்ன என்றான் கண்களாலேயே.

ரவீந்தர் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் - வெற்றி என்று, உள்ளே நுழைந்தான்.

மாயா அவனைப் பார்த்ததும் எழுந்து வந்தாள்.

"ரவி.. போன காரியம் என்ன ஆயிற்று?"

ரவீந்தர் சரேலெனக் குனிந்து அவள் கால்களைத் தொட்டான். "என்னை மன்னித்து விடு அக்கா..."

"என்ன.. ஏன்.. என்ன ஆயிற்று ரவி?"

"பணத்தை மட்டும் வாங்கி வரப்போகிறேன் என்று நான் பொய் சொல்லிவிட்டேன்..."

ரவீந்தர் அவளிடமிருந்து விலகி, பெட்டியை கட்டிலில் தூக்கிப் போட்டான்.

மங்கள் உள்ளறையிலிருந்து ஆர்வம் தாளாமல் வந்து கதவருகே நின்று கொண்டான்.

"ஏன் ரவி.. ஏதாவது தப்பாக நடந்து விட்டதா?" மாயாவின் குரலில் பதட்டம் இருந்தது.

"மனிதர்களை மன்னிக்கலாம் அக்கா.. மிருகங்களை மன்னிக்கக்கூடாது..."

"என்ன சொல்கிறாய் நீ?" மாயா அவனைப் பிடித்து உலுக்கி தன்புறம் திருப்பினாள்.

"உனக்குக் கொடுத்த வார்த்தையை மீறிவிட்டேன். விக்ரம் தாஸ், மரியதாஸ் இரண்டு பேரும் க்ளோஸ்..."

"ரவீ!" மாயா அவன் சட்டையைப் பற்றி இழுத்தாள். "எப்படி.. எப்படி மனம் வந்தது உனக்கு?"

"நம் அப்பாவைக் கொன்றவனை சட்டம் தண்டிக்கவில்லை அக்கா, சட்டத்திலிருந்து தப்புகிற சாமர்த்தியமும், வசதியும், அவனுக்கு இருந்தது. அப்பா அம்மாவைக் கொன்றவனைப் பழி வாங்காமல் இருக்க முடியுமா அக்கா?"



"ரவி..." மாயா அவன் சட்டையை உதறினாள். "கொன்றே விட்டாயா?"

"இரண்டு பேருக்கும் சேர்த்து ஒரே வெடிகுண்டு..." ரவீந்தர் மெல்லத் திரும்பி மங்களைத் தன்னருகில் இழுத்தான். அவன் தலையை வருடிக் கொடுத்தான்.

"நான் செய்த தவறுக்கு தப்பித்துப் போகப் போவதில்லை. அக்கா... போலீஸில் சரண்டர் ஆகப்போகிறேன்.. மங்கள்.. அப்பா இல்லையே என்று கவலைப்படாதே.. உனக்கு செங்கேடான் என்று ஒரு தாத்தா இருக்கிறார். எனக்கு என்று தந்த சொத்தை உன் பேரில் எழுதி இன்றைக்குத்தான் வக்கீலிடம் உயிலைக் கொடுத்திருக்கிறேன். என் பணத்தை உன் படிப்புச் செலவிற்கு வைத்துக் கொள்..."

மங்கள் அவனிடமிருந்து திமிறி நகர்ந்தான்.

மாயா தரையில் உட்கார்ந்து விசித்துக் கொண்டிருந்தாள்.

"அக்கா.. ஸாரி அக்கா..."

ரவீந்தர் எழுந்தான்.

கண்கள் கலங்கியிருந்த செல்வகுமாரை அருகே இழுத்து அணைத்துக் கொண்டான். "எல்லாவற்றிற்கும் நன்றி, நண்பனே.. என் அக்காவையும், மங்களையும் நான் சொன்ன மனிதர்களிடம் ஒப்படைத்துவிடு.. குட் பை... நான் போலீஸிற்குப் போகிறேன்..."

கதவுகளை நெருங்கினான்.

"அங்க்கிள்..."

மங்களின் குரல் கதவருகே அவனை நிறுத்தியது.

திரும்பிப் பார்த்தான்.

மங்கள் பின்புறம் கைகளை வைத்திருந்தான். ''அப்பாவைக் கொன்றவனைப் பழி வாங்காமல் இருக்க முடியுமா என்று நீங்கள் தானே கேட்டீர்கள்?''

''ஆமாம்''

''நீங்கள் என் அப்பாவைக் கொன்றீர்களே.. நான் எப்படி சும்மா இருக்க முடியும்?''

அவன் எப்போது பெட்டியைத் திறந்து துப்பாக்கியை எடுத்தான் என்று யோசிக்கு முன்னரே,

மங்கள் இரண்டு கைகளாலும் துப்பாக்கியை உயர்த்திப் பிடித்தான்.

மாயா பதறி தரையிலிருந்து எழுத்திருக்கும் முன் -

அந்தப் பிரதேசத்தையே அதிரடித்துக் கொண்டு துப்பாக்கி வெடித்தது.

தோட்டாவை நடு நெஞ்சில் வாங்கிக் கொண்ட ரவீந்தர் காற்றில் எழும்பி, குப்புற விழுந்து தரையில் சற்று தேய்த்து நகர்ந்து நிறுத்தத்திற்கு வந்த போது - அவனுடைய தலை மாயாவின் கால்களைத் தொட்டிருந்தது.

மங்கள் துப்பாக்கியை மெல்ல நழுவ விட்டான்.